
★

# உதயன்




34: பக்கங்கள் சுடர் 27 கதிர் 248 வள்ளுவர் ஆண்டு 2043 ஆடி 16 செவ்வாய்க்கிழமை (31/07/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா 25.00

## துமிந்த சில்வா வீடு திரும்பினார்

கொழும்பு, ஜூலை 31

ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா வைத்தியசாலையிலிருந்து திரும்பியுள்ளார்.

முல்லேரியா துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்த துமிந்த சில்வா, சிங்கப்பூர் வைத்தியசாலையொன்றில் சிகிச்சை பெற்று வந்தார். உடல் நிலை தேறிய காரணத்தினால் சிங்கப்பூர் மவுண்ட் எலிசபத் வைத்தியசாலையிலிருந்து, அவர் வீடு திரும்பியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிங்கப்பூரில் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்த்தனவுக்குச் சொந்தமான வீடொன்றில் துமிந்த சில்வா தங்கியுள்ளார். துமிந்தவுக்குத் தொடர்ந்தும் உடற்கூற்றியல் சிகிச்சை வழங்கப்படுகின்றது.

இதேவேளை, முல்லேரியா தாக்குதல் சம்பவம் பற்றி தமக்கு எதுவும் ஞாபகமில்லை என துமிந்த சில்வா தெரிவித்தார் எனப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

பார்க்க பக்கம் 4

# புலிகளைப் போல பேச்சில் அழுத்தம் தருவது தவறு

## அரசியல் தீர்வுக்கான ஒரே வழி தெரிவுக்குழுதான் பத்திரிகை ஆசிரியர்கள் முன் சீறினார் ஜனாதிபதி



**வடக்கு, தெற்கு, கிழக்கு என்று நாட்டின் பிரச்சினையை வரையறுக்க முடியாது. இது ஒட்டுமொத்த நாட்டின் பிரச்சினை.**

கொழும்பு, ஜூலை 31

தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுகாண ஒரே சிறந்த இடம் நாடாளுமன்றத் தெரிவுக்குழுதான். புலிகளைப் போன்று பேச்சுக்கு வராமல் நிபந்தனைகளை விதித்து வேறுவிதமான அழுத்தங்களை வழங்குவது பெரும் தவறான விடயம். அதற்கு ஒரு போதும் அனுமதிக்க மாட்டேன். நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு வராத கட்சி தேசியப் பிரச்சினையைத் தீர்க்கும் பொறுப்பிலிருந்து தவறிய ஒரு தரப்பாகவே கருதப்படும்.

– இவ்வாறு நேற்று கடுந்தொனியில் கருத்து வெளியிட்டார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

பார்க்க பக்கம் 4

**2** தெரிவுக் குழுவில் பங்கேற்காமல் ஆணைக்குழு பரிந்துரைகளை நிறைவேற்றவிடாது கூட்டமைப்பு இடையூறு விளைவிக்கிறது

**8** டில்லியில் இருந்து சென்னை நோக்கி வந்த தமிழ்நாடு எக்ஸ்பிரஸ் ரயிலில் நேற்று ஏற்பட்ட தீ விபத்தில் பலர் கருகி உயிரிழந்துள்ளனர்.

**17** இஸட் புள்ளிகள் மீள அறிவிக்கப்பட்ட பின்னர் பாதிக்கப்பட்டவர்களிடம் இருந்து இதுவரை 938 முறைப்பாடுகள் மானியங்கள் ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெற்றுள்ளன.

**31** லண்டன் ஒலிம்பிக்கில் மகளிருக்கான பட்டர்பிளை நீச்சல் போட்டியில் அமெரிக்க வீராங்கனை சாதனை படைத்துள்ளார்

# தங்களைத் தாங்களே ஆளும் தீர்வே தமிழருக்குத் தேவை

### சம்பந்தன் திட்டவட்ட அறிவிப்பு



கொழும்பு, ஜூலை 31

இணைந்த வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாஷைகளை உள்ளடக்கியதும் தங்களது சொந்த மண்ணில் தங்களைத் தாங்களே ஆளக் கூடியதுமான ஒரு நிரந்தரமான, நியாயமான, நிலைத்து நிற்கக் கூடிய அரசியல் தீர்வைக் காணவேண்டும் என்பதில் நாம் உறுதியாக உள்ளோம்.

பார்க்க பக்கம் 4

## வடக்கு மாகாணத் தேர்தல் 2013 செப்ரெம்பரில்தான்

கொழும்பு, ஜூலை 31

வடமாகாணத் தேர்தலை அடுத்த வருடம் செப்ரெம்பரில் நடத்த உத்தேசித்துள்ளோம் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று பத்திரிகை ஆசிரியர்களுடன் நடத்திய சந்திப்பின்போது தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

1981 ஆம் ஆண்டின் வாக்காளர் இடாப்பின்படியே தேர்தல் நடத்தப்பட்டால் அது மக்களுக்குச் செய்யும் அநீதியாகும். நூற்றுக்கு 25 வீதமானவர்கள் மட்டும் வாக்களித்தால் பின்னர் தேர்தலில் தமிழர்களால் வாக்களிக்க முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது என்று கூறி அந்தப் பழியையும் எமது பக்கம் திருப்பிவிடுவார்கள். முதலில் வடக்கில் இயல்பு நிலைமையை ஏற்படுத்த வேண்டும்- என்றார். (சு)

## கருணாநிதி - மாவை டெசோ குறித்துப் பேச்சு

சென்னை, ஜூலை 31

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தி.மு.க. தலைவர் கருணாநிதியை சந்தித்துப் பேசியுள்ளார்.

சென்னையில் நேற்று முன்தினம் நடந்த இந்தச் சந்திப்பு சுமார் ஒரு மணி நேரம்வரை நீடித்ததாக 'ரைம்ஸ் ஒவ்' இந்தியா செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தச் சந்திப்பின் போது, வரும் ஓகஸ்ட் 12ஆம் திகதி சென்னையில் நடைபெறவுள்ள டெசோ மாநாடு குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

அதேவேளை, இந்தச் சந்திப்புத் தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள தி.மு.க தலைவர் ஒருவர்,

தமிழ்நாட்டில் உள்ள சில தலைவர்கள் இலங்கையில் இருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் டெசோ மாநாட்டுக்கு வருவதைத் தடுக்க முனைகின்றனர்.

ஆனாலும் மூத்த புலம்பெயர் தமிழர்களிடம் இருந்து சாதகமான பதில் கிடைத்துள்ளது. இந்த மாநாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கலந்து கொள்வது

பார்க்க பக்கம் 4

## மற்றொரு தமிழரை நாடு கடத்துகிறது ஆஸ்திரேலியா

கான்பரா,ஜூலை 31

ஆஸ்திரேலியாவில் இருந்து மற்றுமொரு இலங்கைத் தமிழர் விரைவில் நாடு கடத்தப்படவுள்ளார்.

துளசிதரன் சந்திரராஜா (வயது-38) என்ற இலங்கைத் தமிழர், தமிழீழ விடுதலைப் புலிகளுடன்தொடர்புடையவர் எனத் தெரிவித்து, அமெரிக்காவினால் தேடப்படும் குற்றவாளியாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தார்.

பார்க்க பக்கம் 4

## போராட்டங்களுக்கு தெற்கில் அனுமதி யாழ்ப்பாணத்தில் மட்டும் ஏன் தடை ?

### சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் கேள்வி

யாழ்ப்பாணம், ஜுலை 31

தென் பகுதியில் ஜனநாயக ரீதியான போராட்டங்களுக்குப் பாதுகாப்பு வழங்கி அதனை மேற்கொள்ள அனுமதிக்கும் பொலிஸார் யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் போராட்டங்களை மட்டும் குழப்புவது ஏன் ?

இவ்வாறு யாழ்.மாவட்ட சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் வலி.தெற்குப் பிரதேச சபைத் தலைவர் தி.பிரகாஷ் கேள்வியெழுப்பினார்.

யாழ். மாவட்ட சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டம் யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று மாலை நடைபெற்றது. யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

யாழ். மாவட்டத்தின் சகல பிரதேச செயலர்கள், உள்ளூராட்சிச் சபைகளின் தலைவர்கள், பொலிஸ் அதிகாரிகள் ஆகியோர் இதில் கலந்து கொண்ட

பார்க்க பக்கம் 4

## 3.8 பில்லியன் டொலர் செலவில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை

### இலங்கையில் நிறுவுகிறது இந்தியா

கொழும்பு, ஜூலை 31

இந்தியன் எண்ணெய்க் கூட்டுத்தாபனம் 3.8 பில்லியன் டொலர் (20 ஆயிரம் கோடி இந்திய ரூபா) முதலீட்டில் இலங்கையில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை ஒன்றை அமைக்கவுள்ளது.

இந்தியாவுக்கு வெளியே இந்தியன் எண்ணெய்க் கூட்டுத்தாபனம் அமைக்கவுள்ள முதலாவது எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை இதுவாகும்.

பார்க்க பக்கம் 4

## போர் முடிவடைந்துள்ளபோதும் ரகசியத்தை வெளியிட முடியாது

### ஊடக அமைச்சின் செயலர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 31

இலங்கையில் 2009 மே மாதமே போர் முடிவுக்கு வந்து விட்டாலும், எல்லாவற்றையும் பகிர்ந்து கொள்ள இலங்கை அரசு தயாராக இல்லை என்று ஊடகத்துறை அமைச்சின் செயலர் சரித்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

சார்க் ஊடக உள்ளகப் பயிற்சித் திட்டத்தில் பங்கேற்கும் ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக அதிகாரிகளுடனான கலந்துரையாடலில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

தகவல் உரிமைச் சட்டம் நாட்டின் தேசிய பாதுகாப்புக்குப் பாதிப்பை நெருக்கடிக்குள்ளாக அமையக் கூடாது. போர் முடிவுக்கு வந்து விட்

பார்க்க பக்கம் 4

## வடக்கு சட்டத்தரணிகள் வியாழனன்று பணிக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 31

வடமாகாண சட்டத்தரணிகள் முன்னெடுத்து வந்த பணிப்புறக்கணிப்புப் போராட்டம் இன்று முதல் இடைநிறுத்தப்பட்டுள்ளது. நாளைமறுதினம் வியாழக்கிழமை தொடக்கம் சட்டத்தரணிகள் அனைவரும் பணிக்கு திரும்புவர் என்று சட்டத்தரணிகள் சங்கம் நேற்று நடத்திய கலந்துரையாடலின் பின்னர் அறிவித்துள்ளது.

மன்னார் நீதிவான் அச்சுறுத்தப்பட்டமை மற்றும் மன்னார் நீதிமன்றக் கட்டடத் தொகுதி மீதான தாக்குதல் என்பவற்றைக் கண்டித்து கடந்த 19 ஆம் திகதி முதல் பணிப்புறக்கணிப்பில் சட்டத்தரணி

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பரிந்துரைகளைச் செயற்படுத்த கூட்டமைப்பினர் இடையூறாம்

## அமைச்சர் திஸ்ஸ விதாரண குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 31

நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இடையூறு ஏற்படுத்தி வருவதாகச் சிரேஸ்ட அமைச்சர் திஸ்ஸ விதாரண குற்றம் சுமத்தியுள்ளார்.

தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கேற்காமை பெரும் நெருக்கடி நிலையை ஏற்படுத்தியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.



**நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் கூட்டமைப்பு பங்கேற்காமை பெரும் நெருக்கடி நிலையை ஏற்படுத்தி உள்ளதாக குறிப்பிடுகிறார்.**

இதன் காரணமாக ஆணைக் குழுவின் இறுதிப் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்கில் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த அரசு அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் நோக்கிலேயே அரசு தேசிய செயற்திட்டமொன்றை முன்வைத்துள்ளதாகவும் திஸ்ஸ விதாரண குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் கூட்டமைப்பு பங்கேற்காத நிலையில் தேசிய செயற்திட்டத்தை நடைமுறைச் சாத்தியமுடையதாக செயற்படுத்த முடியாது எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

பல்வேறு காரணங்களைக் காட்டி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவுக் குழுவில் பங்கேற்க மறுத்து வருவதாகவும் குறிப்பிட்டார். (த)

# துஷ்பிரயோகக் குற்றச்சாட்டில் பொலிஸ் கான்ஸ்டபிள் கைது

கொழும்பு, ஜூலை 31

கதிர்காமத்தில் 13 வயது சிறுமி ஒருவரைத் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டின் பேரில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கதிர்காமத்தில் பெரஹரவைப் பார்வையிடுவதற்காக மொணறாகலையிலிருந்து இவர் வந்தபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திஸ்ஸமஹரம நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று சந்தேக நபர் முன்னிலைப்படுத்தப்பட்டார். இது தொடர்பில் கதிர்காமம் பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டுவருகின்றனர். (த)

# கொழும்பு மாநகர சபையில் நேற்று பெரும் அமளிதுமளி

## எதிர்க்கட்சி வசம் செங்கோல்

கொழும்பு, ஜூலை 31

கொழும்பு மாநகர சபையின் செங்கோலை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கைப்பற்றிய நிலையில் மாநகர சபையில் பதற்றநிலை ஏற்பட்டது. இதனால் சபையின் நேற்றைய அமர்வு இடைநிறுத்தப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சியினருடன் சமத்துவமான இணக்கப்பாடொன்றுக்கு மேயர் வரும்வரை எதிர்க்கட்சியினர் செங்கோலை கொண்டுசெல்ல மாட்டார்கள் என சபையின் ஐ.ம.சு.கூட்டமைப்பு உறுப்பினர் நிஸா ஸரூக் கூறினார்.

"160 மில்லியன் ரூபா பெறுமதியான பவுஸர்களை வழங்கியமைக்காக பாதுகாப்பு செயலாளருக்கு நன்றி தெரிவிப்பதற்கு நாம் முன்வைத்த யோசனையை ஏற்றுக் கொள்ள மேயர் மறுத்துள்ளார். சபை அமர்வில் இந்த விடயத்தை நாம் முன்வைத்தபோது மேயர் சர்வாதிகாரமாக எமது கோரிக்கையை நிராகரித்தார். எனவே எமக்கு வேறு வழியிருக்கவில்லை. செங்கோலைச் சபைக்கு வெளியே சபை உறுப்பினர் அநுர சுஜீவ எடுத்துச் சென்றார்" என நிஸா ஸரூக் தெரிவித்தார். (த)

# ஆஸி. செல்ல முயன்ற 103 பேர் கைது

கொழும்பு, ஜூலை 31

ஆஸ்திரேலியாவுக்குச் சட்டவிரோத குடியேற்றவாசிகளை ஏற்றிச் சென்றதாகக் கூறப்படும் மூன்று படகுகளை கடற்படையினர் நேற்றுமுன்தினம் இரவு கைப்பற்றினர். இவற்றில் இரு படகுகள் நீர்கொழும்பிலும் ஒரு படகு திருகோணமலையிலும் இடைமறிக்கப்பட்டன.

இந்தப் படகுகளிலிருந்து 103 பேர் கைது செய்யப்பட்டு மேலதிக விசாரணைக்காகப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலையில் 34 பேர் கைது செய்யப்பட்டனர். நீர்கொழும்பிலிருந்த ஒரு படகிலிருந்து 44 பேரும் மற்றொரு படகிலிருந்து 25 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். பொலிஸாரும் குற்றப் புலனாய்வுப் பிரிவினரும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சட்டவிரோத குடியேற்றவாசிகளைத் தடுப்பதற்கான படையினர், பொலிஸார் மற்றும் கரையோரக் காவல் படையினருடன் இணைந்து மேற்கொள்ளப்படும் கூட்டு நடவடிக்கை தொடரும் எனக் கடற்படை தெரிவித்துள்ளது. (த)

# பாடசாலைகளின் கட்டடப் பணிகள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ வசம்

கொழும்பு, ஜூலை 31

5,000 ஆரம்பப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்தல் தொடர்பான கட்டட அமைப்பு வேலைகளின் செயற்படுத்தும் முகவராக அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் பொறுப்பில் உள்ள பொருளாதார அபிவிருத்தி அமைச்சு நியமிக்கப்பட்டுள்ளது என அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கட்டடம் கட்டுதல், விளையாட்டிடம், செயற்பாட்டு அறைகள், தோட்டம் அமைத்தல் தொடர்பான வேலைகள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரின் நேரடி மேற்பார்வையில் நடைபெறும். ஆசிரியர் நியமனம், இடமாற்றம் என்பன தொடர்ந்தும் கல்வி அமைச்சு, மாகாண சபைகளின் கீழ் இருக்கும் எனக் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன கூறினார்.

நாம் கல்வியின் தர அபிவிருத்தியைக் கவனிப்போம். பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பௌதிக வள அபிவிருத்தி வேலைகளில் எம்மை நெறிப்படுத்துவார். அவர் திவிநெகும திட்டத்தின் கீழ்வரும் பாடசாலைத் தோட்டங்களின் அபிவிருத்தியிலும் முக்கிய பங்கு வகிப்பார் எனவும் கல்வி அமைச்சர் கூறினார்

50 மாணவர்களிலும் குறைந்த பாடசாலைகள் 1552 உள்ளன. இவற்றின் அபிவிருத்தி ஜனாதிபதி செயலகத்தின் மேற்பார்வையில் நடைபெறும். 1000 இரண்டாம் நிலை பாடசாலைகளை நவீனமயப்படுத்தும் திட்டத்தின் கீழ் வரும் பாடசாலைகளில் மஹிந்தோதய எனப்படும் நவீன விஞ்ஞான கூடங்களை அமைக்கும் வேலைகள் நடைபெறுகின்றன என அவர் கூறினார். ஏற்கனவே 40 விஞ்ஞான கூடங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டுவிட்டன எனவும் பந்துல கூறினார்.

நாம் ஓகஸ்ட் மாதத்தை ஆரம்பப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் மாதம் எனப் பிரகடனப்படுத்தியுள்ளோம். இதனால் குறைந்த மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளை மூடிவிடும் ஆபத்து அகன்றுவிட்டது எனவும் அவர் கூறினார்.(த)

# வெளிநாட்டுப் பிரஜை நேற்றுச் சடலமாக மீட்பு

கொழும்பு, ஜூலை 31

களுத்துறை பிரதேசத்தில் உள்ள பல்பொருள் வர்த்தக நிலையக் கட்டடத் தொகுதியொன்றின் கழிவறையில் இருந்து வெளிநாட்டுப் பிரஜை ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இந்த சடலம் 50 வயதான பிரிட்டன் பிரஜை ஒருவருடையது என அடையாளம் காணப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன கூறியுள்ளார்.

அவர் நீண்ட காலமாகக் குறித்த பிரதேசத்தில் வசித்து வருபவர் என்பது தெரியவந்துள்ளது.

மீட்கப்பட்ட பிரிட்டன் பிரஜையின் சடலம் நாகொடை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.(த)

# தீ விபத்தால் 23 கடைகள் எரிந்து நாசம்

கொழும்பு, ஜூலை 31

எம்பிலிப்பிட்டிய பஸ் நிலையத்துக்கு அருகில் தற்காலிகமாக அமைக்கப்பட்டிருந்த 23 கடைகள் நேற்று திங்கட்கிழமை காலை பரவிய தீகாரணமாக எரிந்து நாசமாகின.

எரிவாயுக் கசிவு காரணமாகவே இந்தத்தீவிபத்து ஏற்பட்டிருக்கலாமென்று நம்பப்படுவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். இந்தத் தீ விபத்தின்போது எவருக்கும் காயம் ஏற்படவில்லையெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீ விபத்து தொடர்பாக எம்பிலிப்பிட்டிய பொலிஸார் விசாரணை மேற்கொண்டுவருகின்றனர்.(த)

# சிவாஜிலிங்கத்துக்கு எதிரான விசாரணை ஒத்திவைப்பு

## வாக்குமூலம் அளிக்குமாறும் உத்தரவு

யாழ்ப்பாணம், ஜூலை 31

நீதிமன்றத் தீர்ப்பை அவமதித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கத்துக்கு எதிரான வழக்கு எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு யாழ்.நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது குற்றஞ்சாட்டப்பட்ட சிவாஜிலிங்கம் மன்றுக்கு சமூகமளித்திருந்தார்.

தனது சார்பில் முன்னிலையாகும் சட்டத்தரணிகள் பணிப்புறக்கணிப்புக் காரணமாக மன்றில் முன்னிலையாகாததால் தனக்குக் காலஅவகாசம் வழங்க வேண்டும் என்று அவர் கோரியதை அடுத்து வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

அவரிடம் இருந்து வாக்குமூலத்தை இன்னும் பதிவு செய்யவில்லை என்று யாழ். தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி சமன் சிகேரா மன்றில் தெரிவித்தார்.

வாக்குமூலம் பதிவு செய்வது தொடர்பாக பொலிஸார் இதுவரை எதுவும் கேட்கவில்லை. இன்றைய தினமே (நேற்று) அதுபற்றிக் கேட்கின்றனர் என்று சிவாஜிலிங்கம் தெரிவித்தார். இதனையடுத்து பொலிஸ் நிலையத்துக்குச் சென்று வாக்குமூலம் அளிக்க மன்று உத்தரவிட்டது.

இதன்பின்னர் தான் பொலிஸ் நிலையத்துக்கு நேற்றுச் சென்று வாக்குமூலம் அளித்ததாக அவர் 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

வடக்கில் காணி சுவீகரிப்புக்கு எதிராக யாழ்.பஸ் நிலையத்தில் நடத்தவிருந்த ஆர்ப்பாட்டத்துக்குத் தடை விதித்து வழங்கப்பட்ட நீதிமன்றப் பிரதியைக் கிழித்து எறிந்ததாக சிவாஜிலிங்கத்துக்கு எதிராக யாழ்.பொலிஸாரால் யாழ். நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-4)

# அரசு ஒரு மூழ்கும் கப்பல்

## சாடுகிறது ஐ.தே.க.

கொழும்பு, ஜூலை 31

ஐ.தே.க. உறுப்பினர்கள் சிலர் அரசுடன் இணையப்போவதாகக் கூறப்படுவதை ஐ.தே.க. நிராகரித்துள்ளதுடன் மூழ்கும் கப்பலில் எவரும் ஏற மாட்டார்கள் எனக் கூறியுள்ளது.

ஐ.தே.க. பேச்சாளர் கயந்த கருணாதிலக்க செய்தியாளர் மாநாடொன்றில் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-



**ஐ.தே.க. உறுப்பினரிடையே முரண்பாடுகள் இருப்பினும் அனைவரும் ஒன்றிணைந்து கட்சியின் வெற்றிக்காகப் பாடுபடுவர்.**

தேர்தல் வாக்குறுதிகளை அரசு நிறைவேற்றாததால் அரசுக்கு மக்கள் ஆதரவு இல்லை. அவர்கள் மீது மக்கள் அதிருப்தியடைந்துள்ளனர். புதிதாக என்ன வாக்குறுதிகளை வழங்கலாம் என்பது அவர்களுக்குத் தெரியவில்லை.

அரசின் வேட்பாளர்கள் பலர் பொதுச்சொத்துக்களைப் பிரசாரங்களுக்குப் பயன்படுத்தியதில் குற்றவாளிகள். நீதியான, சுதந்திரமான தேர்தலை நடத்துமாறு அரசிடம் கோரிக்கை விடுக்கிறேன்.

ஐ.தே.க. உறுப்பினர்களிடையே முரண்பாடுகள் இருப்பினும் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் இந்த முரண்பாடுகளை மறந்து கட்சியின் வெற்றிக்காகப் பாடுபடுவார்கள். ஏற்கனவே 3 மாகாணங்களிலும் நாம் பிரசாரங்களை ஆரம்பித்துள்ளோம். பல கூட்டங்களையும் பேரணிகளையும் நடத்துவதற்கு நாம் திட்டமிட்டுள்ளோம்-என்றார். (த)

# காந்தி சிலை தகர்ப்பு: இருவருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஜூலை 31

அரியாலையில் மகாத்மா காந்தி சிலையைப் பீடத்தில் இருந்து தகர்த்த குற்றச்சாட்டில் இரண்டு பேரை யாழ். பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அந்த இருவரையும் எதிர்வரும் வெள்ளிக்கிழமைவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது. கைது செய்யப்பட்ட இருவரும் அதே இடத்தைச் சேர்ந்தவர்கள். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் மூவரைப் பொலிஸார் தேடிவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரியாலை காந்திஜி சனசமூக நிலையத்துக்கு முன்பாகவுள்ள மகாத்மா காந்தி சிலையே நேற்றுமுன்தினம் பீடத்தில் இருந்து தகர்க்கப்பட்டது. இது தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு இருவரைக் கைது செய்துள்ளனர்.(த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி.கிழக்குப் பிரதேச சபையின் உப அலுவலகம் ரூ. 256 லட்சம் செலவில்

**பஸ் நிலையத்துக்கு முன்பாக கிழக்குப் பக்கத்தில் நிர்மாணிக்கப்படும் கட்டடத்தொகுதியில் ஆயுள்வேத மருந்தகம், நூல்நிலையம் என்பனவும் உள்ளடக்கப்பட்டுள்ளன.**

அச்சுவேலி,ஜூலை 31

வலி.கிழக்கு பிரதேச சபையின் அச்சுவேலி உப அலுவலகத்துக்கு 256 லட்சம் ரூபா செலவில் புதிய மாடிக்கட்டடம் நிர்மாணிக்கப்படுகின்றது.

அத்துடன் பஸ் நிலையத்துக்கு முன்பாக கிழக்குப் பக்கத்தில் நிர்மாணிக்கப்படும் கட்டடத்தொகுதியில் ஆயுள்வேத மருந்தகம், நூல்நிலையம் என்பனவும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அச்சுவேலி கிராம சபை முன்னர் செயற்பட்டுவந்த கட்டடத்தில் பிரதேச சபை உருவாக்கப்பட்ட பின்னர் வலி.கிழக்கு பிரதேச சபையின் அச்சுவேலி உப அலுவலகம் செயற்பட்டு வந்தது.

இந்தக் கட்டடம் இராணுவ நடவடிக்கையின் போது விமானக் குண்டு வீச்சுக்கு உள்ளாகி முற்றாகச் சேதமடைந்திருந்தது. குறித்த காலப்பகுதியில் உப அலுவலக பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றியவரும் உயிரிழந்தார். அதனை அடுத்து பிரதேச சபை உப அலுவலகம், ஆயுள்வேத மருந்தகம், நூல் நிலையம் என்பன தனியாருக்குச் சொந்தமான வாடகைக் கட்டடங்களில் செயற்பட்டு வருகின்றன.

புதிதாக 256 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு வரும் உப அலுவலக கட்டடத் தொகுதியில் ஆயுள்வேத மருந்தகம், பிரதேச சபை நூல் நிலையம், பிரதேச சபை அச்சுவேலி உப அலுவலக காரியாலயம் என்பன வசதியானமுறையில் செயற்படுவதற்கான அலகுகளை உள்ளடக்கியதாக நிர்மாணிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-11)

# பரீட்சை நெருங்குவதால் மின் தடையை குறையுங்கள்

## உயர்தர மாணவர்களின் பெற்றோர் கோரிக்கை

வலி.வடக்கு,ஜூலை 31

உயர்தரப் பரீட்சை ஆரம்பமாகவுள்ள நிலையில் கூட பரீட்சார்த்திகள் விடயத்தில் கவனம் எடுக்காத மின்சார சபை மின் தடையைத் தொடர்ந்தும் ஏற்படுத்தி வருகின்றது.

பரீட்சை ஆரம்பமாவதற்கு ஒருவார காலம் கூட இல்லாத நிலையிலும் மின்சார சபையினர் மின் வெட்டில் குறியாக உள்ளனர் என்று பெற்றோர் விசனம் தெரிவித்துள்ளனர். நேற்றும் வலிகாமம் தென் மேற்கு, தொட்டிலடி, பண்டத்தரிப்பு, இளவாலை ஆகிய பகுதிகளில் காலை 9 மணிமுதல் இரவு 9 மணிவரை மின் விநியோகம் நிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

உயர்தரப் பரீட்சை எதிர்வரும் 6 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையிலும் இது குறித்து அவர்கள் கவனம் எடுக்காது மின் மார்க்கத்தில் திருத்தவேலை என்று கூறி அடிக்கடி மின்தடையை ஏற்படுத்தி வருகின்றனர்.

இதனால் மாணவர்கள் பெரும் விரக்தி அடைந்ததுடன் கற்றல் செயற்பாடுகளைச் சுமுகமாக மேற்கொள்ள முடியாத நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளனர்.

மாணவர்களின் மன நிலையை உணர்ந்து மின் வெட்டு நேரத்தைக் குறைக்குமாறு பெற்றோர் கேட்டுள்ளனர். (ம-86)

# பொதுமக்கள் மதியுரைக் குழுக்கள் பொலிஸ் பிரிவு ரீதியாக உருவாக்கம்

## யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு

*யாழ்ப்பாணம்,ஜூலை31*

*யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பொலிஸ் பிரிவுகளுக்கும் உட்பட்ட கிராமங்களில் சிவில் பாதுகாப்பு பொதுமக்கள் மதியுரைக் குழுக்கள் நியமிக்கப்படவுள்ளன. இதற்கான ஏற்பாடுகளை யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரீகுகனேசன் மேற்கொண்டுள்ளார்.*

இந்த மதியுரைக் குழுக்கள் மூலம் குற்றச்செயல்கள் இடம்பெறுவதைத் தவிர்க்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக விரைவில் ஒவ்வொரு கிராமத்திலும் இந்தக் குழுக்கள் நியமிக்கப்படவுள்ளன.

ஏற்கனவே கிராமங்களில் இயங்கும் சிவில் பாதுகாப்புக் குழுக்களுடன் இணைந்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் ஆலோசனை வழங்கி குற்றச் செயல்கள் இடம்பெறாது பாதுகாக்கப்படும்.

கிராமத்தில் இடம்பெறும் குற்றச்செயல்களை உடனுக்குடன் அந்தந்த பொலிஸ் நிலையங்கள்அல்லதுமாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ள வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளது. நேற்றுமுன்தினம் யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் பொலிஸாரால் ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடலில் இந்த விடயம் கூறப்பட்டது. இதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

குடாநாட்டில் அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் விபத்துக்கள், இளம் பெண்கள் கடத்தல், திருட்டுக்கள், பாலியல் வன்புணர்வுகள் போன்ற குற்றச்செயல்களைத் தடுக்கப் பொதுமக்கள் தாராள மனத்துடன் பொலிஸாருக்கு உதவ முன்வர வேண்டும் எனவும் பொலிஸ் நிலையங்களுக்கு அறிவித்தும் நடவடிக்கை மேற்கொள்ளாவிடின் 119 இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தகவல்களைத் தெரிவிக்குமாறும் தெரிவிக்கப்பட்டது.

கிராம மட்டத்தில் தெரிவு செய்யப்படும் சிவில் பாதுகாப்பு பொதுமக்கள் மதியுரை குழுக்களின் உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்படும் எனவும் கூறப்பட்டது.

கலந்துரையாடலில் பொதுமக்களால் முன்வைக்கப்பட்ட கருத்துக்களுக்கு விரைவில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனச் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உறுதியளித்தார்.

அண்மைக்காலமாக இடம்பெறும் வீதி விபத்துக்களுக்குக் காரணம் வாகன சாரதிகள் மது அருந்திவிட்டு வாகனத்தைச் செலுத்துகின்றமையே ஆகும். நீண்ட தூர பயண வாகனங்களில் ஒரு சாரதி தொடர்ந்து வாகனம் செலுத்துகிறார். இதனால் விபத்துக்கள் அதிகரிக்கின்றன என்று பொதுமக்களால் கருத்து முன்வைக்கப்பட்டது.

இந்த விடயம் குறித்து உடனடியாகப் பொலிஸாருக்கு அறிவிக்கப்படும் பட்சத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறப்பட்டது. (ம-9)

# வாழ்வாதாரத்தை வளப்படுத்த மனைப்பொருள் கண்காட்சி



யாழ்ப்பாணம்,ஜூலை 31

நல்லூர் பிரதேச சபையின் ஏற்பாட்டில் மக்களின் வாழ்வாதாரத்தை வளப்படுத்தக் கூடியதான மனைப் பொருளாதார கண்காட்சி நேற்று திங்கட்கிழமை கொக்குவில் உப அலுவலகத்தில் இடம்பெற்றது.

நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் தலைமையில் நடைபெற்ற இந்தக் கண்காட்சியை உள்ளூராட்சித் திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர் திருமதி சி.சுஜீவா திறந்து வைத்தார்.

கண்காட்சியில் பலதரப்பட்ட வகைகளைக் கொண்ட ஐசிங் கேக், மணப்பெண்களுக்கான உடை அலங்காரம் என்பன காட்சிப் படுத்தப்பட்டிருந்தன.

நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் எஸ்.தியாகமூர்த்தி, உள்ளூராட்சி உதவியாளர் அ.கமலேஸ்வரசர்மா உட்பட பலர் உரையாற்றினர்.

பயிற்சியாளர்களுக்கு பரிசில்களை நிர்வாக உத்தியோகத்தர் திருமதி சுஜீவா வழங்கினார். பிரதேச சபை மூன்று மாதப் பயிற்சி நெறிகளை வழங்கியிருந்தது. தொடர்ந்தும் பயிற்சி நெறிகள் வழங்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-7)

# சாவகச்சேரி நகரில் உள்ள மதுபான நிலையங்களை இடம்மாற்றுக

## பிரதேச மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 31

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் காணப்படும் மதுபான நிலையங்களை நகருக்கு வெளியே கொண்டு செல்ல உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதேச மக்கள் கோரியுள்ளனர்.

ஏ-9 வீதியில் அமைந்துள்ள மதுபான நிலையங்களுக்கு முன்பாக பெரும் எண்ணிக்கையான வாகனங்கள் நிறுத்தப்படுகின்றன.

இதனால் நெருக்கடி ஏற்படுகிறது. அத்துடன் இந்த மதுபான நிலையங்களில் மது அருந்துவோர் மது போதையில் வீதிகளில் செல்வோருக்கு அசௌகரியங்களை ஏற்படுத்துகின்றனர்.

இந்த நிலையில் இங்குள்ள மதுபான நிலையங்களை நகருக்கு வெளியே மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மக்கள் தெரிவித்துள்ளனர். (ம-9)

# நிகழ்வுகள் இன்று

### விழிப்புணர்வு வழக்காடு

பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் தென்மராட்சி பிரதேச செயலகத்தினர் நடத்தும் கலாசார விழிப்புணர்வு வழக்காடு மன்றம் காலை 9 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறும்.

கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளை தலைமையில் நடைபெறும் நிகழ்வில் ''குற்றவாளிக் கூண்டில் இன்றைய இளந் தலைமுறையினர்'' என்னும் தலைப்பில் வழக்காடு மன்றம் இடம்பெறும். வழக்குத் தொடுநர்களாக வேல்நந்தகுமார், கோ.கோகுலரதன், பரா.ரமேஸ் ஆகியோரும் வாதிடுபவர்களாக சிவ.முகுந்தன், சி.கார்த்திகேயன், ஐ.கஜந்தன் ஆகியோரும் கலந்து கொள்வர். பரா.ரதீஸ் வழக்காடு மன்றின் நடுவராக கலந்து கொள்வார். (ம-9)

### சுனாமி விழிப்புணர்வு

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பின் பேரில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ இணைப்பு அலகு நடத்தும் முன்னெச்சரிக்கை கோபுரம் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கை பிற்பகல் 2 மணிக்கு மணற்காடு, உடுத்துறை, வல்வெட்டித்துறை கிராம அலுவலர் பிரிவுகளில் நடைபெறவுள்ளது. (ம-14)

# செப்ரெம்பர் முதலாம் திகதி ஆசிரியர்களுக்கு இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 31

வன்னிப் பகுதியில் சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள ஆசிரியர்களின் இடமாற்றம் எதிர்வரும் செப்ரெம்பர் முதலாம் திகதியிலிருந்து நடைமுறைப் படுத்தப்படுமென்று வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் அறிவித்துள்ளார்.

வன்னிப் பகுதியில் ஆசிரியர் சேவைக்காலத்தை நிறைவு செய்த யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 104 ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கும் விடயத்தில் இழுத்தடிப்பு மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

இதனால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். பிராந்தியக் கிளையில் கடந்த ஜூன் மாதம் 11 ஆம் திகதி முறைப்பாடு செய்திருந்தனர்.

இந்த முறைப்பாட்டின் பிரதிவாதிகளாக வடமாகாணக் கல்விப் பணிப்பாளர், கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோர் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

இந்த முறைப்பாட்டின் மீதான விசாரணை கடந்த மாதம் 29 ஆம் திகதி, இந்த மாதம் 17 ஆம் திகதிகளில் நடைபெறும் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். பிராந்தியக் கிளை பிரதிவாதிகளுக்கு அறிவித்தபோதும் அவர்கள் சமுகமளிக்கவில்லை. எதிர்வரும் 2 ஆம்திகதி விசார்ணைக்கு சமுகமளிக்க வேண்டும் என்று பிரதிவாதிகளுக்கு மீண்டும் அறிவிக்கப் பட்டிருந்தது.

இந்த நிலையில் குறித்த பாதிக்கப்பட்ட ஆசிரியர்களின் இடமாற்றத்துக்கு வடமாகாண ஆளுநர் அனுமதி வழங்கியுள்ளதால், இந்த இடமாற்றம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதியிலிருந்து நடைமுறைப் படுத்தப்படுமெனக் கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் அறிவித்துள்ளார். (த-5)

# அனலைதீவுக்கு இலவச படகுச் சேவை

அனலைதீவு,ஜூலை31

அனலைதீவு ஐயனார் கோயில் தேர்த்திருவிழா இன்று நடைபெறுவதை முன்னிட்டு ஊர்காவற்றுறையிலிருந்து அனலைதீவுக்கான பயணிகள் படகு சேவையை இலவசமாக நடத்த அனலைதீவு படகு சேவை உரிமையாளர் சங்கம் தீர்மானித்துள்ளது.

எனவே இன்று அனலைதீவு ஐயனார் கோயிலுக்குச் செல்லும் பக்தர்கள் இந்த இலவச படகு சேவையைப் பயன்படுத்திக்கொள்ளுமாறு பயணிகள் படகு உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது. (3-257)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் துஷ்பிரயோகம் புரிவோருக்கு எனது ஆட்சியில் மன்னிப்பே கிடையாது

## ஜனாதிபதி எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 31

சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் சிறுவர் எதிர்காலத்தை நாசமாக்கும் எவருக்கும் தண்டனையிலிருந்து தப்பித்துச்செல்ல இடமளிக்கப் போவதில்லை. ஆளுங்கட்சியில் இருப்பவர்களாக இருந்தாலும் இவ்வாறான குற்றங்களில் ஈடுபடுவோருக்கு எதிராக நடவடிக்கைகளை எடுக்க நான் தயங்கமாட்டேன். இதை அனைவரும் தெரிந்துவைத்துக்கொள்ள வேண்டும். நாட்டின் எதிர்காலச் சந்ததியை நாசமாக்கும் முயற்சிகளுக்கு எனது ஆட்சியில் மன்னிப்பே கிடையாது.

நேற்றுக்காலை நடைபெற்ற பத்திரிகை ஆசிரியர்களுடனான சந்திப்பின் போது, சிறுவர் துஷ்பிரயோகம் நாட்டில் அதிகரித்து வருவது குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

குற்றச்செயல்களில் ஈடுபடுவோர் அதை ஒரு பெரிய விடயமாகக் கருதாமல் ஏதோ தான்தோன்றித்தனமாகச் செய்கின்றனர். மரணதண்டனை கிடைக்காது என்ற ஒரு நம்பிக்கையில் அவர்கள் அப்படிச் செய்யக்கூடும். ஆனால் இவ்வாறான குற்றங்களில் ஈடுபடுவோர் தண்டனையிலிருந்து தப்பிவிட முடியாது. சட்டம் தனது கடமையைச் செய்யும்.

இன்று குழந்தைகளின் பாதுகாவலர்களாக இருக்க வேண்டியவர்களே அவர்களைத் துன்புறுத்தி, துஷ்பிரயோகத்துக்கு ஆளாக்கும் நிலைமை உள்ளது. அக்குரசையில் துஷ்பிரயோகத்திற்குள்ளான சிறுமி முதலில் தனது மாமனாரால் துஷ்பிரயோகத்திற்குள்ளாக்கப்பட்டிருப்பது விசாரணைகளில் தெரியவந்தது.

குற்றச் செயல்களில் சம்பந்தப்பட்டவர் எனக் கருதப்படும் எமது அரசியல்வாதியொருவர் மீது நடவடிக்கை எடுக்கப் பொலிஸார் தயங்கினர். ஆனால், உரிய நடவடிக்கை எடுக்குமாறு சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைத் தலைவரை நான் கேட்டேன். எமது கட்சியை அல்லது எமது அரசின் உறுப்பினர் ஒருவரை குற்றச்செயல்களிலிருந்து பாதுகாத்து நாட்டின் இளம் சமுதாயத்தின் எதிர்காலத்தை வீணடிக்க நான் ஒருபோதும் முன்நிற்கமாட்டேன். - என்றும் குறிப்பிட்டார் ஜனாதிபதி.

## வேட்பாளருக்கு தேர்தல் ஆணையாளர் எச்சரிக்கை

கொழும்பு,ஜூலை 31

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளருக்கு தேர்தல் ஆணையாளர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கை அஞ்சல் திணைக்களத்தின் ஏறாவூர் அஞ்சலகக் கட்டடத்தின் முதலாவது மாடியில் ஆளும் கட்சி வேட்பாளர் எம்.எஸ். சுஹைர் தேர்தல் பரப்புரைப் பணியகத்தை அமைத்துள்ளார்.

இந்தத் தேர்தல் பரப்புரை பணியகத்தை உடனடியாக அகற்றவேண்டும் என்று தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்த உத்தரவை செயற்படுத்தா விட்டால், பொலிஸ் மூலம் நடவடிக்கை எடுக்கப் படும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

உடனடியாக அரச கட்டடத்தைக் கையளிக்குமாறு ஆளும் கட்சி வேட்பாளருக்குத் தேர்தல் ஆணையாளர் உத்தரவிட்டுள்ளதாகவும், அதற்கு இன்று வரை காலஅவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும் பிரதி தேர்தல் ஆணையாளர் எம்.எம். முகமட் உறுதிப்படுத்தியுள்ளார். (த)

## போர் முடிவடைந்த...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

டாலும் எல்லா விடயங்களையும் பகிர்ந்து கொள்வதற்கு இலங்கை அரசு தயாராக இல்லை.

உணர்வுபூர்வமான தகவல்களை அறிந்து கொள்வதன் மூலம் வெளிநாட்டு சக்திகள் உள்ளிட்ட பல்வேறு ஆர்வம் கொண்ட தரப்புகளால் நாட்டின் தேசிய பாதுகாப்புக்குப் பாதிப்பை ஏற்படுத்த முடியும்.

அத்தகைய சக்திகளுக்குத் தகவல் உரிமைச் சட்டம் மிகவும் வலுவான கருவியாக மாறிவிடும்- என்றார். (த)

## வடக்கு சட்டத்தரணிகள்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

கள் ஈடுபட்டு வந்தனர். சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களில் கணிசமானோர் மன்னார் நீதிமன்றில் இன்று முற்படுத்தப்படவுள்ளனர் என்பதாலும், மன்னார் சம்ப்வம் தொடர்பில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கும் என அதன் பொதுச்சபை தீர்மானம் எடுத்துள்ளமையாலும் மேன்முறையீட்டு நீதிமன்றில் அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டதை அடுத்து அவருக்கு நீதிமன்றம் அறிவித்தல் அனுப்பியுள்ளதைக் கவனத்தில் கொண்டும் பணிப்புறக்கணிப்பை இடைநிறுத்துவது என சட்டத்தரணிகள் சங்கம் முடிவு செய்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படாதவிடத்து இடைநிறுத்தப்பட்ட பணிப்புறக்கணிப்புத் தொடர்பில் உரிய தீர்மானம் எடுக்கப்படும் எனவும் யாழ்.சட்டத்தரணிகள் சங்கம் தீர்மானித்துள்ளது. (த-4)

## கருணாநிதி...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

குறித்து மாவை சேனாதிராசா கருணாநிதியுடன் கலந்துரையாடியுள்ளார்.

இலங்கையில் இருந்து தமிழ்த் தலைவர்கள் மட்டுமன்றி, தமிழர்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கும் சிங்களத் தலைவர்களும் இந்த மாநாட்டில் பங்கேற்கிறார்கள்.விக்கிரமபாகு கருணாரட்ண போன்றவர்கள் இதில் பங்கேற்பதாக உறுதி அளித்துள்ளார்கள்" என்று குறிப்பிட்டார். (த)

## 3.8 பில்லியன்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

இந்த எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை ஆண்டுக்கு 5 அல்லது 9 மில்லியன் தொன் எண்ணெயைச் சுத்திகரிக்கும் திறன் கொண்டதாக இருக்கும் என்று இந்தியன் எண்ணெய் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. இலங்கையில் ஈரானின் உதவியுடன் சப்புகஸ்கந்தையில் அமைக்கப்பட்ட எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மட்டுமே செயற்பட்டு வருகிறது.

ஈரான் மீதான அமெரிக்காவின் எண்ணெய் இறக்குமதித் தடை மற்றும் இலங்கையின் எரிபொருள் தேவை அதிகரிப்புக் கருதி இன்னொரு எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையை நிறுவ முடிவுசெய்துள்ளது.சப்புகஸ்கந்த சுத்திகரிப்பு ஆலை 2 மில்லியன் தொன் எண்ணெயை சுத்திகரிக்கும் திறனை மட்டுமே கொண்டுள்ளது.ஆனால் இலங்கையின் தற்போதைய எரிபொருள் தேவை 4.5 மில்லியன் தொன் ஆகும்.இதனால் 2.5 மில்லியன் தொன் சுத்திகரிக்கப்பட்ட எரிபொருள் இறக்குமதி செய்யப்படுகிறது.

இலங்கையில் இந்தியன் எண்ணெய்க் கூட்டுத்தாபனம் ஏற்கனவே 157 எரிபொருள் நிரப்பு நிலையங்களை அமைத்து, சில்லறை எரிபொருள் வணிகத்திலும் ஈடுபட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (த)

## மற்றொரு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

இந்த நிலையில் அவரை நாடுகடத்தும் உத்தரவு கடந்த பெப்ரவரி மாதம் ஆஸ்திரேலியாவில் பிறப்பிக்கப்பட்டிருந்தது.

எனினும் அதனை அவரது சட்டத்தரணிகள் எதிர்த்திருந்த நிலையில், நேற்றுமுன்தினம் அவரை நாடுகடத்துவதற்கான உத்தரவை ஆஸ்திரேலிய சட்டமா அதிபர் நிக்லோ ரொக்சோன் உறுதிப்படுத்தியுள்ளார். (த)

## போராட்டங்களுக்கு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

னர். இந்தக் கலந்துரையாடலில் பங்குகொண்ட பொலிஸ் அதிகாரிகளிடமே வலி.தெற்குப் பிரதேச சபையின் தலைவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

தென் பகுதியில் பல அரசியல் கட்சிகளினால் ஜனநாயக ரீதியிலான போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அந்தப் போராட்டங்களுக்குப் பொலிஸார் பாதுகாப்பு வழங்குவதுடன் குழப்பங்கள் ஏற்படாமல் நடத்த அனுமதிக்கின்றனர்.

ஆனால் யாழ்ப்பாணத்தில் நடைபெறுகின்ற ஜனநாயக ரீதியிலான போராட்டங்களைக் குழப்புவதற்குப் பொலிஸார் துணை போகின்றனர். நெல்லியடியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் புலிக் கொடியுடன் சிலர் வந்து அதனைக் குழப்ப முயன்றதுடன், அந்தப் போராட்டம் மீது தவறான அபிப்பிராயத்தையும் ஏற்படுத்த முயன்றனர். இதனைப்பொலிஸாரும்வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர் - என்று பிரதேச சபைத் தலைவர் அங்கு மேலும் குறிப்பிட்டார்.

இதற்குப் பதிலளித்த பொலிஸ் அதிகாரிகள் அன்றைய தினம் அங்கு 91 பொலிஸார் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கடமையில் இருந்ததால் அவர்களால் புலிக்கொடியை அவதானிக்க முடியாமல் போயிருக்கும் என்று கூறினார். இதன்போது குறுக்கிட்ட வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் எஸ்.அனந்தராஜ், புலிக்கொடியுடன் வந்தவர்கள் ஆர்ப்பாட்டக்காரர்களை மூன்று தடவைக்கு மேல் வலம் வந்து விட்டே சென்றனர். அப்போதும் பொலிஸார் கவனிக்கவில்லையா என்று கேள்வியெழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த பொலிஸார், தாம் அது தொடர்பில் தற்போது விசாரணை செய்து வருவதாகக் குறிப்பிட்டனர். (த-5)

## தங்களைத் தாங்களே...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

- இவ்வாறு திட்டவட்டமாக அறிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன்.

மேலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரசு நடத்தும் பேச்சு நேர்மையானதாக இருக்க வேண்டும் எனவும் அது சர்வதேசத்தை ஏமாற்றுவதாக இருக்கக்கூடாது எனவும் அவர் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தின் திரியாய் மற்றும் கல்லம்பத்தை கிராமங்களில் நேற்றுமுன்தினம் தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் நடைபெற்றன. திரியாயில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு -

அரசியல் தீர்வு காண்பது தொடர்பான பேச்சை அரசுடன் மேற்கொள்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எப்போதும் தயாராகவே உள்ளது. ஆனால், பேச்சு நேர்மையானதாகவும் நியாயமானதாகவும் இருக்க வேண்டும். சர்வதேச சமூகத்தை ஏமாற்றுவதான பேச்சாக இருக்கக்கூடாது என்பதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விழிப்புடன் இருக்கின்றது.

அண்மையில் கொழும்பில் வெளிநாட்டுத் தூதுவர்களைச் சந்தித்து நடத்திய கலந்துரையாடல்களின் போதும் இது பற்றி நாம் தெளிவாகக் கூறியிருந்தோம்.

அரசுடன் இதுவரை நடத்திய பேச்சுகளின்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல் தீர்வு காண்பது தொடர்பான தனது அடிப்படை நிலைப்பாட்டைத் தெளிவாக எழுத்து மூலம் முன்வைத்தது. அரசு தனது பதிலைத் தருவதாகத் தெரிவித்தது. இன்னும் அதற்கான பதிலைத் தரவில்லை. அரசு தனது நிலைப்பாட்டைத் தெரிவிக்கமுடியாத நிலையில் உள்ளது.

இணைந்த வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய வாழ்விடங்களில் தமிழ் பேசும் மக்களின் நீண்டகால அரசியல் அபிலாஷைகளை உள்ளடக்கியதும் தங்களது சொந்த மண்ணில் தங்களைத் தாங்களே ஆளக்கூடியதுமான ஒரு நிரந்தரமான, நியாயமான, நிலைத்து நிற்கக்ககூடிய அரசியல் தீர்வைக் காணவேண்டும் என்பதில் நாம் உறுதியாக உள்ளோம். தமிழ் பேசும் மக்களின் பிரச்சினை இன்று நாட்டின் எல்லைகளைத் தாண்டி சர்வதேசத்தின் கூர்மையான பார்வைக்கு சென்றுள்ளது - என்றார்.

திரியாய் மற்றும் கல்லம்பத்தை கிராமங்களில் நடைபெற்ற இக்கூட்டங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## புலிகளைப் போல பேச்சில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பத்திரிகை ஆசிரியர்களுடன் நேற்றுக்காலை அலரி மாளிகையில் நடத்திய சந்திப்பின் போதே மேற்கண்ட கருத்தை வெளியிட்ட ஜனாதிபதி மேலும் கூறியவை வருமாறு:-

தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அனைத்துக் கட்சிகள் உள்ளடங்கிய நாடாளுமன்றத் தெரிவுக் குழுவே சிறந்த இடம். இதற்காக அனைத்துக் கட்சிகளும், அனைத்துத் தரப்பினரும் ஒன்றுபடவேண்டும். வடக்கு, தெற்கு, கிழக்கு என்று நாட்டின் பிரச்சினையை வரையறுக்க முடியாது. இது ஒட்டு மொத்த நாட்டின் பிரச்சினை.

புலிகள் போல நிபந்தனைகளை விதித்துக் கொண்டு பேச்சுக்கு வராமல் வேறு அழுத்தங்களைக் கொடுப்பது தவறு. உலகத் தலைவர்களுடன் நான் பேச்சுகளை நடத்தும்போது இந்த நிலைமையைத்தான் விளக்கிக் கூறுகிறேன். இது எனது தனிப்பட்ட விடயமல்ல. இது அனைவரினதும் பொறுப்பு. இதற்குமுன்வராதகட்சிபொறுப்பிலிருந்து தவறிய ஒரு கட்சியாகவே கருதப்படும்.

### தேர்தல் தேவைதான்

தேர்தலை நாங்கள் நடத்துவதால் சிவில் சமூக அமைப்புகளுக்குப் பிரச்சினை. தேர்தல் நடத்தாவிட்டாலும் சிவில் அமைப்புகள் கூக்குரலிடும். தேர்தல் வேண்டாமென்று ஓர் எதிர்க்கட்சி நீதிமன்றம் செல்வதை இங்குதான் முதற்றடவையாகப் பார்த்திருக்கின்றேன். நாங்கள் தேர்தலுக்குப் பயந்தவர்கள் அல்லர். மக்களின் கருத்தை நாம் அவ்வப்போது அறியவேண்டியிருப்பதால் தேர்தலை நடத்துவதில் தவறில்லை. தேர்தல் என்பது மக்களின் ஜனநாயக உரிமை.

### கட்டுப்பாடு

இணைய ஊடகங்களைப் பாவித்து மேற்கொள்ளப்படும் சேறுபூசும் செயற்பாடுகள் குறித்து அரசு முழுக்கவனமும் கொண்டுள்ளது. ஊடகத் தர்மத்தை மீறும் எவரும் தாம் செய்வது சரியா என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். கருத்துச் சுதந்திரம் உள்ளது என்பதற்காகத் தான்தோன்றித்தன்மாக செயற்படக்கூடாது.

எப்போதும் நாங்கள் இந்தியாவுடன் சிநேகபூர்வ முறையில் செயற்பட்டு வருகிறோம். பல்வேறு சிக்கல்கள் குறித்து நாம் இராஜதந்திர ரீதியில் பேச்சுகளை நடத்தி வருகிறோம். அண்மையில் இந்தியப் பிரதமர் மன்மோகனுடன் பேச்சு நடத்தியபோது என்னுடன் இருந்த அமைச்சர் சம்பிக்க ரணவக்க நிலைமைகள் குறித்து தெளிவாக சுட்டிக் காட்டினார்.

இரு நாடுகளுக்குமிடையிலான பாதுகாப்பு தொடர்பான விடயங்கள் குறித்து பாதுகாப்பு அமைச்சு கையாளும். எவ்வாறாயினும், எமது நாட்டின் பாதுகாப்பு, இறைமை எவருக்கும் தாரைவார்க்கப் படமாட்டாது. எந்தச் சக்திக்கும் அதற்கு இடமளிக்கப் படமாட்டாது.

தமிழ்நாட்டில் பிரச்சினைகள் இருந்தாலும் அது எங்களுக்குத் தேவையில்லை. ஏனெனில், நாங்கள் மத்திய அரசுடன்தான் தொடர்புட்டு செயற்பட்டு வருகிறோம். நாங்கள் வீணாகக் குழப்பமடையத் தேவையில்லை - என்று குறிப்பிட்டார் ஜனாதிபதி. (த-சி)

## துமிந்த சில்வா...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

கடந்த ஒக்ரோபர் மாதம் முல்லேரியாவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமசந்திர உள்ளிட்ட நான்கு பேர் கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பான வழக்கின் பிரதான சந்தேக நபராக துமிந்த சில்வா மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# சம்பந்தனின் திருமலைப் பேச்சு பேரினவாதிகளை சிந்திக்க வைக்குமா?

''நாங்கள் தனிநாடு கேட்கவில்லை ஒருமித்த இலங்கைக்குள் விசேடமாக வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் மக்கள் சுதந்திரமாக வாழ்வதற்கான அதிகாரத்தையே கேட்கிறோம்'' இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்.

திருகோணமலையில் நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலாவது பிரசாரக் கூட்டத்தில் இரா.சம்பந்தன் தொடர்ந்து பேசுகையில், போர் முடிந்த பிறகும் தமிழ் மக்களுக்கு தீர்வு வழங்கப்படவில்லை. இந்த விடயத்தில் சர்வதேச சமூகம் தொடர்ந்தும் பார்வையாளர்களாக இருக்க முடியாது என்று குறிப்பிட்டதுடன் இலங்கை தொடர்பாக பக்கச்சார்பற்ற விசாரணை வேண்டும் என்றும் வற்புறுத்தியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் வெளியிட்டுள்ள கருத்து; கூட்டமைப்பு நாட்டைப் பிரிப்பதற்காக போராடும் அமைப்பு என்ற வகையில் பிரசாரம் செய்து வரும் பேரினவாதக் கட்சிகளின் வாயை அடைப்பதாக இருக்கும் என்று கருதவேண்டும்.

இந்த நாட்டில் வாழும் தமிழ் பேசும் மக்கள் ஏனைய பெரும்பான்மை மக்களுக்கு இருக்கும் உரிமைகள் எங்களுக்கும் இருக்க வேண்டும். அந்த உரிமைகள் அரசமைப்பு வழியாக உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றுதான் கேட்கிறார்கள். நாட்டைப் பிரித்து வடக்கு கிழக்கை தமிழர்களிடம் கொடுத்துவிடும்படி அவர்கள் கோரவில்லை. இது எமது தாயக பூமி, எங்கள் மூதாதையர்கள் இங்கேயே பிறந்து வளர்ந்து சகல உரிமைகளோடும் வாழ்ந்தவர்கள். அந்த உரிமைகளை - அந்தப் பிறப்புரிமைகளைப் பறித்துவிடாதீர்கள்; எங்கள் பிரதேசத்தில் எங்கள் நிலங்களை நாங்களே பயிரிட்டு வளர்த்து அதன் பலன்களை எமது சந்ததியினரிடம் கையளிப்பதைத் தடுக்காதீர்கள் என்றுதான் கேட்கின்றோம்.

எங்கள் கலை கலாசாரங்களை, எங்கள் கோயில்களை, எங்கள் பாரம்பரிய விழுமியங்களை, எங்கள் புனிதமான நிலபுலன்களைக் கொச்சைப்படுத்தாதீர்கள், நாங்களும் உங்களைப்போல எமது பாரம்பரியங்களைப் பேணிக் கொண்டு உங்களுடன் இணைந்து வாழவே விரும்புகிறோம். இதுவா பிரிவினை, இதுவா நாட்டைப் பிரிக்கும் சூழ்ச்சி, இல்லவேயில்லை; உங்கள் தலைவர்கள் உங்களின் மூதாதையர்களின் அருமை பெருமைகளை வளர்க்கவும் அவைகளை நிலை நிறுத்திக் கொள்ளவும் பாடுபடுவதைப் போலவே எமது எதிர்கால சந்ததியினருக்காக எமது பாரம்பரியங்களை, அருமை பெருமைகளைப் பாதுகாத்து அவர்களிடம் கையளிக்க நாங்கள் விரும்புகிறோம். அதற்காகவே இத்தனைகாலமும் அகிம்சை முறையிலும் தவிர்க்க முடியாமல்போன ஆயுதப் போராட்டங்கள் மூலமும் போராடி வந்திருக்கிறோம். அதனால் ஆயிரக் கணக்கான எமது உடன் பிறப்புக்களை, எமது அரும் பெரும் சொத்துக்களை, கோயில்குளங்களையும் இழந்து போய் நிற்கின்றோம்.

இதைத்தான் அந்த முதல் பிரசாரக் கூட்டத்தில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இந்த நாட்டு பெரும்பான்மைத் தலைவர்களுக்கும் மக்களுக்கும் எடுத்துக் கூறி விளங்க வைக்க முயன்றிருக்கிறார்.

சுதந்திரம் கிடைத்ததற்குப் பிறகு தமிழ் பேசும் மக்கள் படிப்படியாக இழந்து வந்துள்ள உரிமைகளின் மிச்ச சொச்சங்களையாவது நிலை நிறுத்திக் கொள்ள இப்பொழுது மாகாணசபைத் தேர்தல் உதவுமானால் அது பெருங்காரியமாகவே இருக்கும்.

போர் முடிந்தகையோடு தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு சுமுகமான ஒருதீர்வை இந்த அரசு முன்வைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அபிவிருத்தி, அபிவிருத்தி என்ற கோஷம் பெரிதாக முழக்கப்பட்டதே தவிர மக்கள் எதிர்பார்த்த தீர்வு கிட்டவில்லை. இந்தியாவும், அமெரிக்காவும், ஐ.நா. நிறுவனமும் பல்வேறு வகையிலும் வற்புறுத்தி வந்தபோதிலும் போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்படவில்லை. வீதிகளும், கட்டடங்களும் அபிவிருத்தியின் பேரால் புதுமெருகூட்டப்படுகின்றனவே தவிர மக்களின் வாழ்க்கை அபிவிருத்தி காணவில்லை. போரினால் பாதிக்கப்பட்ட உள்ளங்கள் சீர்மை பெறவில்லை. ஆறுதல் கிடைக்கவில்லை.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்கென இப்பொழுதுதான் செயல் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருப்பதாக அறிவித்தல் வந்திருக்கிறது. இனி இது செயல் உருப்பெறுவதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்று சொல்ல முடியாது.

இந்தச் செயற்பாடுகள் எல்லாம் சர்வதேசத்தையும் ஐ.நா.வையும் திருப்திப்படுத்துவதற்காகவே மேற்கொள்ளப்படுகின்றன. பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளில் அரசு மனது வைத்து இறங்கி செயல்படும் காலம் எப்போது வரும் என்று தெரியவில்லை.

இவைகளைத் தூண்டி செயற்படுத்த வேண்டிய பொறுப்பு ஐ.நா.விடமும், சர்வதேசத்திடமுமே இருக்கிறது.

சர்வதேசத்தை மேலும் நெருக்கி பயன்பெறுவதற்கு மாகாணசபைத் தேர்தலில் த.தே.கூட்டமைப்பு வெற்றி பெறவேண்டும் என்பதையே கிழக்கு மாகாண மக்களுக்கு சம்பந்தன் உணர்த்தியுள்ளார்.



# கிழக்கில் கூட்டமைப்புக்கு வலுச் சேர்க்க அழைப்பு

## இணைந்து பணியாற்ற இளைஞர்களே வாருங்கள்

வலி.தென்மேற்கு, ஜூலை 31

கிழக்குமாகாண சபைத் தேர்தலில் கூட்டமைப்புக்கு வலுச்சேர்க்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கிழக்கில் கூட்டமைப்பின் வெற்றிக்கு பிரசாரம் செய்ய முன்வந்துள்ள தமிழரசுக் கட்சியின் யாழ்.மாவட்ட இளைஞர் அணியின் தலைவர் கா.கஜதீபன் இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

தமிழ் பேசும் மக்களின் ஒன்றுபட்ட பலத்தை உலகறியச் செய்வது மட்டுமல்லாமல், நிரூபிக்க வேண்டிய தேவையும் ஏற்பட்டுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து கிழக்கில் பணியாற்ற விரும்பும் ஆர்வமுள்ள இளையோர் இணைந்து கொள்ளலாம் என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தமிழ் பேசும் மக்களின் ஒன்றுபட்ட பலத்தை நிரூபிக்க வேண்டிய முக்கியத்துவம் வாய்ந்த தேர்தல் களத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றி என்பது அதி முக்கியத்துவம் வாய்ந்தது. அங்கு வெற்றி பெறுவோம் என்பது உறுதியானது. அதை அனைவரும் அறிவோம்.

ஏனெனில் கடந்த காலங்களில் மக்கள் அளித்த தீர்ப்புக்கள் அதற்குச் சான்று பகர்கின்றன. எனினும் அதனை மீண்டும் ஒரு தடவை நிரூபிப்பதற்கும், இனிமேல் வட கிழக்கில் மட்டுமல்ல தமிழர்கள் எங்கெல்லாம் வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் அவர்களின் ஒரு வாக்கேனும் பெரும்பான்மைக் கட்சிகளில் தேர்தலில் நிற்கும் சிங்கள வேட்பாளர்களுக்கு மட்டுமல்ல தமிழ் வேட்பாளர்களுக்கும் கிடைக்காது என்பதை அழுத்தந்திருத்தமாக இந்த தேர்தலின் மூலமாகத் தெரியப்படுத்தி விட வேண்டும். அப்படியான ஒரு செய்தியை நாம் இந்த உலகிற்கு உணர்த்திட வேண்டும்.

எனவே இந்தத் தேர்தலின் முக்கியத்துவம் கருதி, கட்சியின் இளைஞரணியினராகிய நாங்கள் கிழக்குத் தேர்தலில் கூடிய ஈடுபாடு காட்டுகின்றோம்.

அங்கு சென்று தேர்தல் கடமைகளை ஆற்றுவதற்குத் தீர்மானித்துள்ளோம். அந்த வகையில் இளைஞரணியின் நிர்வாகிகள், உறுப்பினர்கள் மாத்திரமல்லாமல் புதிதாக எங்களுடன் இணைந்து பணியாற்ற ஆர்வமுள்ள அனைவரையும் அழைக்கிறோம்-என்று கூறியுள்ளார். (ம-115)

### சாவகச்சேரி லயன்ஸ் கழக புதிய நிர்வாகிகள் பதவியேற்பு

தென்மராட்சி, ஜூலை 31

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் 36 ஆவது நிர்வாகிகள் பதவியேற்பு நிகழ்வு நாளை புதன்கிழமை மாலை 5 மணிக்கு யாழ். ஞானம்ஸ் ஹோட்டலில் இடம்பெறவுள்ளது.

கழகத் தலைவர் கே.பிரதீபன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக சர்வதேச லயன்ஸ் கழக 306 பி 1 மாவட்ட உதவி ஆளுநர் லயன் இக்னேசியஸ் கமிலஸ்ஸும் கௌரவ விருந்தினர்களாக மாவட்ட லயன்ஸ் கழக பிரதிச் செயலாளர் (வடக்கு) லயன் மருத்துவர் எஸ்.எஸ்.அருளானந்தன், மாவட்ட பிரதிப் பொருளாளர் (வடக்கு) லயன் கே.எம்.பத்மநாதன் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக மாவட்ட உதவிச் செயலாளர் லயன் கே.விக்னேஸ், பிரதி பிரதம இணைப்பாளர் மருத்துவர் வீ.தியாகராசாவும் கலந்து கொள்வர்.

கழகத்தின் புதிய தலைவராக லயன் ச.மனோகரனும் செயலாளராக லயன் க.தர்சனும் பொருளாளராக லயன் ர.சதீஸ்ஸும் பொறுப்பேற்கவுள்ளனர். (ம-9)

### வரி அறவீட்டு விவரத்தை காட்சிப்படுத்துமாறு கோரிக்கை

அச்சுவேலி, ஜூலை 31

அச்சுவேலி பொதுச் சந்தையில் அறவீடு செய்யப்படும் வரிகளின் அளவீட்டு விகிதம் பொருத்தமான முறையில் காட்சிப்படுத்தப்படவில்லை. இதனால் வரிஅறவீடுகள் குத்தகைகாரரின் விருப்பு வெறுப்புக்கு ஏற்றவகையில் மேற்கொள்ளப்படுகிறது. இந்த விடயத்தில் வலி.கிழக்கு பிரதேச சபை நிர்வாகம் அசமந்தமான போக்கை கடைப்பிடிப்பதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அச்சுவேலி பொதுச் சந்தையில் மோட்டார் சைக்கிள் பாதுகாப்புக்கு 10 ரூபாவும் சைக்கிளுக்கு 5 ரூபாவும் அறவிடப்படுகிறது. அவற்றை மழை வெய்யிலில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு ஏற்ற வகையில் தரிப்பிடமும் இல்லை.

ஆனால் மோட்டார் சைக்கிள் பாதுகாப்புக்கு ஏழு ரூபாவும், சைக்கிளுக்கு நான்கு ரூபாவும் அறவிடப்பட வேண்டும் என்று பிரதேச சபை ஒப்பந்தத்தில் வலியுறுத்தப்பட்டுள்ள போதும் இவ்வாறு அதிகரித்து அறவிடப்படுவதாகக் கூறப்படுகிறது.

இதே போன்று இடவாடகை மற்றும் விவசாயிகளிடம் அறவிடப்படும் பொருள் விற்பனை வீதமும் மாறுபட்ட விதத்தில் இருப்பதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.

பொதுச் சந்தையில் நடைமுறையில் உள்ள அறவீடுகளின் விவரம் பகிரங்கமாக மக்கள் பாவனைக்கு தெரியக் கூடியதாக பார்வைக்கு வைக்கப்பட வேண்டும். ஆனால் இந்த வகையில் எந்த விளம்பரப்பலகையும் சந்தை வளாகத்தில் பார்வைக்கு வைக்கப்படவில்லை.

வரி அறவீடுகள் தொடர்பாக பொது மக்கள் வலி.கிழக்கு பிரதேச சபையின் அச்சுவேலி உப அலுவலகத்திலும் புத்தூரில் உள்ள பிரதேச சபையிலும் நேரிலும் எழுத்து மூலமும் முறையிட்ட போதிலும் இதுவரை எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்று கவலை தெரிவிக்கின்றார். (ம-11)

### மண்ணெண்ணெய் முத்திரை வந்துசேர்ந்தது

யாழ்ப்பாணம், ஜூலை 31

சமுர்த்திப் பயனாளிகளுக்கு இரண்டாம் கட்டத்துக்குரிய மண்ணெண்ணெய் முத்திரைக்குரிய ஒதுக்கீடுகள் சகல பிரதேச செயலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று யாழ். மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் க.மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கடந்த பெப்ரவரி மாதம் எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து சமுர்த்திப் பயனாளிகளுக்கு மண்ணெண்ணெய் முத்திரை வழங்கப்பட்டு வருகின்றது. பெப்ரவரி தொடக்கம் ஜூலை மாதம் வரை ஒரு தொகுதியாகப் பிரிக்கப்பட்டு கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஏப்ரல், மே, ஜூன், ஜூலை மாதங்களுக்குரிய மண்ணெண்ணெய் முத்திரைகள் ஜூலை மாத இறுதிப் பகுதியிலேயே அரசினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவை உடனடியாக சகல பிரதேச செயலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதால், மண்ணெண்ணெய் முத்திரை பெறும் சமுர்த்திப் பயனாளிகள் அதனைப் பெற்றுக் கொள்ளலாம் என்று கூறப்பட்டது.

இதேவேளை, ஏப்ரல், மே, ஜூன் மாதங்களுக்குரிய சமுர்த்தி முத்திரைகளும் சகல பிரதேச செயலக சமுர்த்தி [illegible] அனுப்பப்பட்டுள்ளமையால் அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம-5)

### வடக்கு அரச பட்டதாரிகள் இன்று அடையாள பணிப் புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 31

வடக்கு மாகாண அரச பட்டதாரிகள் சேவைகள் சங்கத்தினர் இன்று அடையாள பணிப் புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர்.

சம்பளப்படிநிலை உயர்வு மற்றும் தமது பதவிக்குரிய சேவைப் பிரமாணக் குறிப்பு ஆகியவற்றை வலியுறுத்தி இலங்கை சுதந்திர பட்டதாரிகள் சங்கம் நாடளாவிய ரீதியில் இன்று நடத்தவுள்ள பணிப் புறக்கணிப்பில் ஈடுபடுமாறு விடுத்த வேண்டுகோளையடுத்து நேற்று முன்தினம் இடம்பெற்ற சங்கக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

வடக்கு மாகாண அரச திணைக்களங்களில் பணிபுரியும் அனைத்து நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்களையும் இன்று பணிப் புறக்கணிப்பில் ஈடுபடுமாறு வட மாகாண அரச பட்டதாரி சேவைகள் சங்கத்தினர் கேட்டுள்ளனர். (ம-9-41)

### வடக்கு சுகாதார பிரிவுக்கு 27 பரிசோதகர்கள் நியமனம்

வடக்கு மாகாண சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளுக்கு 27 பொதுச் சுகாதார பரிசோதகர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே ஒன்றரை வருட பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த 27 பேருக்கும் கடந்த 23 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் மாகாண சுகாதார அமைச்சின் செயலாளரினால் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் தீவகத்துக்கு 5 பேர் சாவகச்சேரி, கோப்பாய், சண்டிலிப்பாய் ஆகிய பிரிவுகளுக்கு தலா ஒருவரும் கிளிநொச்சி 6, முல்லைத்தீவு 5, வவுனியா, மன்னார் தலா 4 என்ற ரீதியிலும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நியமனம் வழங்கப்பட்டவர்கள் யாழ்.சுகாதார பயிற்சிப் பாடசாலை, யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடம் ஆகியவற்றில் பயிற்சி வகுப்புகளில் பங்குபற்றி ஒன்றரை வருட பயிற்சி நிறைவில் கடந்த மார்ச் மாதம் தொடக்கம் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் பயிலுநர்களாக பணியாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுக் கடன் நிறுத்தப்பட்டதால் அரச ஊழியர்கள் அவலத்தில்

நெளுங்குளம், ஜூலை 31

அரச ஊழியர்களுக்கு வீட்டுத் திட்டக் கடன் வழங்குவதை அரச ஈட்டு முதலீட்டு வங்கி இடைநிறுத்தியதால் ஆரம்பித்த வீட்டு வேலைகளைப் பூர்த்தி செய்ய முடியாத அவல நிலையில் வவுனியா அரச ஊழியர்கள் உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் கடமையாற்றுகின்ற அரச ஊழியர்களுக்கு வவுனியா பிரதேச செயலகம் ஓமந்தை வேப்பங்குளத் தில் காணிகளை வழங்கியிருந்தது. வீடமைப்பு அதிகார சபையினர் இவர்களுக்கு வீட்டுக் கடனாக 5 லட்சம் ரூபாவை வழங்கியிருந்தது.

ஆனால் வீடுகளைப் பூர்த்தி செய்வதற்கு இது போதுமானதாக இருக்கவில்லை. இந்த நிலையில் வவுனியாவில் ஆரம்பிக்கப்பட்ட அரச ஈட்டு முதலீட்டு வங்கியில் வீட்டுக் கடனாக 2 லட்சம் ரூபா வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டிருந்தது.

இதனால் மகிழ்ச்சியடைந்த அரச ஊழியர்கள் அதற்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தனர். 500 பேரின் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. அதில் 200 பேருக்கு முதல் கட்டமாக ஒரு லட்சம் ரூபா வழங்கப்பட்டது.

மேலும் பலர் கடன் பெறுவதற்கான விண்ணப்பங்களைச் சமர்பித்திருந்தனர். ஆனால் இவர்களுக்கு கடன் வழங்கப்படமாட்டாதென வங்கியால் தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் கடன் கிடைக்குமென்ற நம்பிக்கையுடன் இருந்த அரச ஊழியர்கள் பெரும் ஏமாற்றமடைந்துள்ளனர். அத்துடன் வீட்டு வேலைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலையில் பணத்துக்கு அலைந்து திரிவதைக் காண முடிகின்றது. கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னர் சகல அரச ஊழியர்களுக்கும் கடன் வழங்கப்படுமென அறிவிப்பு விடுத்துள்ள நிலையில் திடீரென அதனை இடைநிறுத்தியமை அவர்களிடையே அதிர்ச்சியைத் தோற்றுவித்துள்ளது.

இந்தக் கடன் தொகையைப் பெறுவதற்கு வவுனியாப் பிரதேச செயலர், அரச அதிபர் ஆகியோருடன் பாதிக்கப்பட்ட அரச ஊழியர்கள் தொடர்பு கொண்ட போதிலும் சாதகமான பதில் எதுவும் வங்கியிடமிருந்து கிடைக்கவில்லையெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் தமக்கு விதிக்கப்பட்ட காலக் கெடுவுக்குள் வீடுகளை அமைக்க முடியாத நிலை உருவாகியுள்ளதாகப் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர். (க-12)

## தொல்லை கொடுக்கும் பழ ஈக்கள்



புதுக்குடியிருப்புப் பிரதேசத்திலே பழ ஈக்களின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதால் தமது நாளாந்த வாழ்க்கை பாதிக்கப்படுவதாக இங்குள்ள மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். நாவல்பழம் மற்றும் பனம்பழ சீசன் ஆரம்பித்துள்ளதால் பழ ஈக்கள் பெருகிக்காணப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த ஈக்கள் வீடுகள், தேநீர்க்கடைகள் ஆகியவற்றிலுள்ள உணவுப் பண்டங்களை மட்டுமல்லாமல் மனிதர்களின் கை,கால்கள், முகம் என உடல் முழுவதும் கூட்டம் கூட்டமாக அமர்ந்திருந்து பெரியளவில் உபத்திரவம் கொடுப்பதாகக் கூறி மக்கள் எரிச்சலடைகின்றனர். இந்த ஈக்கள் பெரும்பாலும் மதியத்துக்குப் பின்னர் தமது கைவரிசையை ஆரம்பித்து இரவாகும் வரை மக்களை எரிச்சலடைய வைக்கின்றன.

பிற்பகல் வேளைகளில் மாணவர்களையும் ஆசிரியர்களையும் இவை விட்டு வைக்காமல் தொந்தரவு செய்வதாக ஆசிரியரொருவர் தெரிவித்தார்.

பாடசாலை வளாகங்களில் த்ங்கியிருந்து கடமையாற்றுகின்ற ஆசிரியர்கள் பலரும் பிற்பகல் பொழுதுகளில் தமது மாணவர்களின் பரீட்சைத் தாள்களைத் திருத்தும் பணியில் ஈடுபடும்போது நுளம்பு வலைக்குள் அமர்ந்திருந்தே தமது பணிகளைத் தொடர்வதாகவும் கூறப்படுகின்றது. இந்த அளவுக்குப் பழ ஈக்கள் தொல்லை கொடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-555)

## டெங்கு நோயைக் கட்டுப்படுத்த வவுனியாவில் துரித நடவடிக்கை

வவுனியா மாவட்டத்தில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கு சுகாதாரத் திணைக்களம் துரித நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றது.

அண்மையில் பெய்த மழையைஅடுத்துடெங்குநோய் பரவக் கூடிய இடங்களை இனங்கண்டு அவற்றை அழிக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

இது தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் குருமன்காடு, வைரவ புளியங்குளம், வவுனியா நகரப்பகுதி, பட்டானிச்சூர், வேப்பங்குளம், பண்டாரிக்குளம், திருநாவற்குளம், மற்றும் குடியிருப்பு ஆகிய பகுதிகளில் ஒலி பெருக்கி மூலமாக அறிவிக்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை பொதுச் சுகாதாரத் திணைக்களத்தினர், பொலிஸார் மற்றும் சுகாதாரத் திணைக்களத்தினர் இணைந்து வீடு வீடாகப் பரிசோதனை மேற்கொள்ளவுள்ளனர். இதன்போது டெங்கு நுளம்பு பெருகும் இடங்கள் காணப்படும் வீட்டு உரிமையாளருக்கு எதிராக சட்டநடவடிக்கையும் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதேவேளை இவ்வருடம் 22 பேர் டெங்கு நோய்த் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளனர் என்று சுகாதாரத் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(க-400)

## பழைய பஸ்களின் சேவையால் பாதிக்கப்படும் மக்கள்

புதுக்குடியிருப்பு,ஜூலை31

யாழ்ப்பாணத்திலிருந்து முல்லைத்தீவுக்குப் பழைய பஸ்களைச் சேவையிலிடுபடுத்துவதால் அவற்றில் பயணத்தை மேற்கொள்வோர் அதிக சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து முல்லைத்தீவுக்கு சேவையிலீடுபடும் அரச பஸ்கள் அடிக்கடி பழுதாகி இடைநடுவில் நின்று விடுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

கிழமை நாள்களில் காலை 5.30 மற்றும் 6மணி நேரங்களில் இந்த பஸ்கள் யாழ்ப்பாணத்திலிருந்து ஆசிரியர்கள் உள்ளிட்ட பணியாளர்கள் மற்றும் ஏனைய பயணிகளை முல்லைத்தீவுக்கு ஏற்றிச் செல்கின்றன.


பெரும்பாலான நாள்களில் இவற்றில் சில்லுகள் காற்றுப் போவதாலோ அல்லது வேறு கோளாறுகளாலோ இடைநடுவில் நிற்கின்றன. இதனால் இவர்கள் தமது வேலைத்தளங்களுக்கு உரிய நேரத்திற்குச் செல்ல முடிவதில்லை.

இந்த நிலை காரணமாக உயரதிகாரிகளின் சினத்துக்கு இவர்கள் உள்ளாகி வருகின்றனர்.

காற்றுப் போனால் மாற்றீடாக வேறு சில்லுகளோ அல்லது இவற்றைப் பொருத்துவதற்கான சாவிகளோ பஸ்ஸில் இல்லாததால் பயணிகளின் பாடுதிண்டாட்டமாகவே மாறியுள்ளது.

தற்போது வன்னியிலுள்ள வீதிகள் ஓரளவு சீர் செய்யப்பட்டுள்ளதால் புதிய பஸ்களை இந்த மார்க்கத்தில் சேவையில் ஈடுபடுத்துமாறு பாதிக்கப்பட்டுவரும் பயணிகள் தெரிவிக்கின்றனர்.

(க-555)



கால்நடைகளுக்குக் கட்டுப்பாடுகள் இல்லாததால் முத்து ஐயன் கட்டுப் பகுதியில் விளைந்து அறுவடைக்குத் தயார் நிலையிலுள்ள நெற்பயிர்களைக் கால்நடைகள் அழித்துக் கொண்டிருக்கின்றன. (க-500)

## குளங்களின் புனரமைப்பு வவுனியாவில் ஆரம்பம்

வவுனியா நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் 'என்றிப்' திட்டத்தின் உதவியுடனும், ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடனும் குளங்களை புனரமைக்கும் வேலைகளை ஆரம்பித்துள்ளனர்.

உலக வங்கியின் நிதி உதவியுடன் கனகராயன் குளம், கல்மடுகுளம், மகாகச்சிக்குளம், ஈரப்பொத்தான் குளம் என்பன புனரமைக்கப்பட்டு வருகின்றன.

கனகராயன் குளம் புனரமைக்கப்படுவதன் மூலம் 210 விவசாயக் குடும்பங்களும், கல்மடுக்குளம் புனரமைக்கபடுவதன் மூலம் 107 விவசாயக் குடும்பங்களும் மகாகச்சிக்குளம் புனரமைக்கப்படுவதன் மூலம் 210 விவசாயக் குடும்பங்களும், ஈரப்பொத்தான்குளம் புனரமைக்கப்படுவதன் மூலம் 75 விவசாயக் குடும்பங்களும் பயன்பெறுவர்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் சேமமடுக்குளம், மாளிகைக் குளம், அலியா மருதமடுக் குளம் , வேலன் குளம், கொம்பு வைத்த குளம், பெரிய தம்பனைக் குளம் என்பன புனரமைக்கப்பட்டு வருகின்றன.

சேமடுக்குளம் புனரமைக்கப்படுவதன் மூலம் 200 குடும்பங்களும் மாளிகைக் குளம் புனரமைக்கப்படுவதன் மூலம் 68 விவசாயக் குடும்பங்களும் அலியாமடுக்குளம் புனரமைக்கப்படுவதன் மூலம் 40 விவசாயக் குடும்பங்களும், வேலன் குளம் புனரமக்கப்படுவதன் மூலம் 35 விவசாய குடும்பங்களும் கொம்பு வைத்த குளம் புனரமைக்கப்படுவதன் மூலம் 40 விவசாயக் குடும்பங்களும், பெரிய தம்பனைக் குளம் புனரமைக்கப்படுவதன் மூலம் 114 விவசாய குடும்பங்களும் பயன் பெறமுடியும் என்று வவு னியா நீர்ப்பாசன திணைக்களத் தினர் எதிர்பார்க்கின்றனர்.

மேற்குறித்த குளங்களுக்கான வேலைகள் துரித கதியில் நிறைவு பெற்றால் மாரி காலத்தில் உரிய அளவில் நீர் சேமிக்கப்படும் எனப் பொதுமக்கள் நம்பு கின்றனர். (க-402)

## சேவையைப் பாராட்டி கௌரவிக்க கலைஞர்களின் விவரம் திரட்டு

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் வசிக்கும் கலைஞர்களின் விவரங்கள் பதிவு செய்யப்பட்டு வருகின்றன. இதற்கான பணியில் ஈடுபட்டுள்ள கலாசார உத்தியோகத்தர் வீ.பிரதீபன் இந்த நடவடிக்கைக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்குமாறு கோரியுள்ளார். புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் இடம்பெற்ற போர் காரணமாக அங்குள்ள ஆலயங்கள் அனைத்தும் சேதத்திற் குள்ளாகியுள்ளன. மேற்படி பிரதேசத்திலுள்ள 19 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 14 பிரிவுகளில் மக்கள் குடியமர்த்தப்பட்டுள்ளார்கள்.

மீள்குடியமர்த்தப்பட்டுள்ள இடங்களிலுள்ள இந்து, கிறிஸ்தவ ஆலயங்கள் பற்றிய விவரங்களைத் திரட்டுவதில் கலாசார உத்தியோகத்தர் ஈடுபட்டுள்ளார். இதுவரை 144 ஆலயங்களின் விவரங்களைப் பதிவு செய்துள்ள கலாசார உத்தியோகத்தர் பதிவு செய்யப்படாமல் இருக்கும் ஆலயங்களின் விவரங்களை அதற்குரிய ஆவணங்களுடன் பதிவு செய்து கொள்ளுமாறு தெரிவித்துள்ளார். இதேவேளை இப்பிரதேசத்தி லுள்ள கலைஞர்களின் விவரங்க ளும் திரட்டப்பட்டு வருகின்றன.

அறுபது வயதுக்கு மேற்பட்ட கலைஞர்களின் சேவையைப் பாராட்டிக் கௌரவிக்க விருப்பதால் இலைமறைகாயாக இருக்கும் கலைஞர்களை கலாசார உத்தியோகத்தருடன் தொடர்பு கொள்ளு மாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (க-115)

## மோசமாகச் சேதமடைந்த வீதியால் அடிக்கடி விபத்துக்கள்

வட்டக்கச்சி பிரதான வீதி மிகமோசமாகச் சேதமடைந்துள்ளதுடன் பாலங்களும் ஆபத்தான நிலையில் காணப்படுவதால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்பட்டு வருகின்றன.

கிளிநொச்சியில் இருந்து வட்டக்கச்சிக்குச் செல்லும் பிரதான வீதி கடந்த ஆண்டு இடம்பெற்ற தேர்தலின் போது புனரமைக்கப்பட்ட போதிலும் இன்று அதனூடாகப் பயணிக்க முடியாத நிலையே காணப்படுகின்றது.

**கிளிநொச்சி ஐந்தடிவான் வீதியும், இரத்தினபுரம், திருவையாறு வீதிகளும் இணையும் இடத்தில் அமைந்துள்ள பாலத்தின் இரு புறமும் உள்ள பாதுகாப்பு தூண்களும் பாதிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றன.**

இந்தவீதி குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுவதுடன் வாகனங்களும் பாதிக்கப்பட்டு வருகின்றன. இந்த வீதி சுமார் 29 கிலோ மீற்றர் நீளமானதாகும்.

மேலும் கிளிநொச்சி ஐந்தடிவான் வீதியும், இரத்தினபுரம், திருவையாறு வீதிகளும் இணையும் இடத்தில் அமைந்துள்ள பாலத்தின் இரு புறமும் உள்ள பாதுகாப்பு தூண்களும் பாதிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றன. இதைப்போன்று பன்னங்கட்டி ஆற்றுப் பாலத்தின் இரு மருங்கிலும் உள்ள பாதுகாப்பு தூண்களும் உடைந்த நிலையில் காணப்படுகின்றன.

இந்த ஆண்டின் ஆரம்பத்தில் பாலத்தின் நிலை காரணமாக சிறுவன் ஒருவன் பஸ்ஸில் அகப்பட்டு உயிரிழந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இதேபோன்று வட்டக்கச்சிச் சந்தையடியில் உள்ள பாலத்தில் பாதுகாப்பு தூண்கள் இல்லாததால் ஆபத்தான நிலையில் பாலம் இன்றும் காணப்படுகின்றது. கடந்தமாதம் வயோதிபர் ஒருவர் இங்கு தவறி வீழ்ந்து உயிரிழந் துள்ளார்.

இதைவிடப் பன்னங்கட்டிச் சந்தி, இராமநாதபுரம் சந்தி ஆகிய இடங்களிலுள்ள சிறிய பாலங்களின் நடுவில் பெரிய குழிகள் ஏற்பட்டு மிகவும் ஆபத்தான நிலையில் காணப்படுகின்றன. இந்த நிலையில் இந்த வீதியூடாகப் பயணிக்கும் மக்கள் என்றுமில்லாதவாறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் கைதிகள் மீதான குற்றப் பத்திரிகையைத் தாக்கல் செய்க

## உயர் நீதிமன்றம் உத்தரவு

யாழ்ப்பாணம், ஜூலை 31

இலங்கையின் சட்டமா அதிபர் அலுவலகத்தில் தமிழ் மொழிபெயர்ப்பாளர்கள் இல்லாததைக் காரணம் காட்டி தமிழ் அரசியல் கைதிகள் விசாரணையின்றித் தடுத்து வைக்கப்படுவது ஏற்றுக்கொள்ள முடியாதது என்று நாட்டின் தலைமை நீதிபதி கூறியுள்ளார்.

போதிய அலுவலர்கள் இல்லாத காரணத்தால் மொழிபெயர்ப்பு நடவடிக்கைகள் தாமதமாவதாக அரசு தரப்பினர் கூறுவதை அனுமதிக்க முடியாது என்று தலைமை நீதிபதி ஷிராணி பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

2010 ஆம் ஆண்டு முதல் விசாரணைகள் இன்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ள மூவர் தாக்கல் செய்த மனுவை விசாரணைக்கு ஏற்றுக் கொண்ட போதே தலைமை நீதிபதி இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

வழக்குத் தாக்கல் செய்வதற்குத் தேவையான ஆவணங்களை, தமிழில் மொழிபெயர்ப்பதில் ஏற்பட்டுள்ள காலதாமதம் காரணமாக, சந்தேக நபர்களுக்கு எதிரான குற்றப்பத்திரிகைகளை சம்பந்தப்பட்ட நீதிமன்றங்களில் தாக்கல் செய்வதற்கு முடியாமல் இருப்பதாக அரச தரப்பில் கூறப்பட்டது.

ஆனால் அரச தரப்பின் கருத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என்று தலைமை நீதிபதி திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டார்.

தேவையான தமிழ் மொழிபெயர்ப்பாளர்களை உடனடியாகப் பெற்றுக் கொண்டு, பணியில் அமர்த்த நடவடிக்கை எடுக்குமாறு அரச தரப்புக்கு தலைமை நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இந்த வழக்கின் விசாரணையை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் ஆறாம் தேதிக்கு ஒத்தி வைத்த உச்ச நீதிமன்றம், அன்றைய தினத்துக்கு முன்பு சந்தேக நபர்கள் மீதான குற்றப்பத்திரிகைகளை சம்பந்தப்பட்ட நீதிமன்றங்களில் தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவும் அரச தரப்புக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

(16)

## மரண அறிவித்தல்

### கைல்ஸ் இம்மனுவேல் குணநாயகம்

(முன்னாள் தலைமை லிகிதர் ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம்)



ஒழுவில் வீதி, கரம்பொன் கிழக்கு ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கைல்ஸ் இம்மனுவேல் குணநாயகம் (முன்னாள் ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம்), தலைமை லிகிதர் நேற்று (30.07.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிலிப்ஸ், மேரி யோசேப்பின் தம்பதியரின் அன்புமகனும், இராஜேஸ்வரியின் அன்புக்கணவரும், டர்சினியின் பாசமிகு தந்தையும், நியூமனின் மாமனும், செபரட்ணம் (ஆஸ்தி ரேலியா), செல்வரட்ணம் (ஜேர்மனி), கலாவதி (கனடா), உதயகுமார் (கனடா), றஞ்சினி (பிரான்ஸ்), காலஞ்சென்ற ஜெயக்குமார் மற்றும் செல்வக்குமார் (பிரான்ஸ்), நிலானி ஆகியோரின் அன்புச்சகோதரனும், இமெல்டாராணி (கனடா), கிறிஸ்ரி (கனடா), காலஞ்சென்ற கொலின், மற்றும் அன்ரனிராஜ் (அமெரிக்கா) ஆகியோரின் அருமை மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

ஒழுவில் வீதி, கரம்பொன் கிழக்கு,
ஊர்காவற்றுறை.

(21171)(6-7-8)

**தகவல்:**
**மனைவி, மகள்**

## வவுனியாவில் கடும் வறட்சி; வற்றுகின்றன குளங்கள்

வவுனியா, ஜூலை 31

வவுனியாவில் கடந்த சில வாரங்களாக நிலவும் கடும் வறட்சியாலும் உரிய புனரமைப்பின்மையாலும் அங்குள்ள குளங்கள் வற்றத்தொடங்கி உள்ளன. இதனால் விவசாய நடவடிக்கைகள் முடங்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதுடன், குளங்களின் அருகில் உள்ள நன்னீர்க் கிணறுகளும் வற்றத்தொடங்கி உள்ளதால் வவுனியாவில் குடிதண்ணீர் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது.

வவுனியாவில் நிலவும் வறட்சியால் இறம்பக்குளம், பட்டானீசூர் குளம், நெளுக்குளம், பம்பைமடுக்குளம், தவசிக்குளம், இராசேந்திரம் குளம், பண்டாரிக்குளம், ஓமந்தைக்குளம் உட்பட பல்வேறு குளங்கள் வற்றி விட்டன. இந்தக் குளங்கள் வற்றுவதற்கு பிரதான காரணம் கடும் வறட்சியும், கால்வாய்கள் உரியவகையில் புனரமைக்கப்படாமையுமே ஆகும்.கால்வாய்கள் உரிய முறையில் புனரமைக்கப்படாததால் தூர்வரப்பட்டு ஆழமாக்கப்படாமையாலும் மாரி காலத்தில் போதியளவு நீரை குளங்களில் சேமிக்க முடியவில்லை.

இதனால் இம்முறை ஏற்பட்டுள்ள கடும் வறட்சியால் விரைவாகவே குளங்கள் வற்றத்தொடங்கி உள்ளதால் வவுனியாவில் இந்த முறை சிறுபோகச் செய்கை தோல்வி கண்டுள்ளது. அத்துடன் கிணறுகள் முதலான நன்னீர் நிலைகளும் வற்றத் தொடங்கி இருப்பதால் சில பகுதிகளில் குடிதண்ணீருக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.இன்னும் மூன்று மாதம் இதேபோன்று வறட்சி ஏற்படுமாயின் வவுனியா மாவட்டம் முழுவதும் குடிதண்ணீருக்கு மக்கள் அலைய வேண்டிய நிலை ஏற்படும் என்று அஞ்சப்படுகிறது.

இதேவேளை, தற்போது வவுனியாவில் போத்தலில் அடைக்கப்பட்ட குடிதண்ணீர் வியாபாரம் அமோகமாக நடைபெறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ங-400)

## போக்குவரத்து சீரில்லை சிரமத்தில் ஆசிரியர்கள்

சீரான போக்குவரத்து வசதிகள் இல்லாததால் வன்னேரிக்குளம் ஐயனார்புரம் பாடசாலைக்குச் செல்லும் ஆசிரியர்கள் தமது போக்குவரத்துக்கென அதிக பணத்தைச்செலவிடுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பஸ்ஸை தவறவிட்டு காலை எட்டு மணிக்குப் பின்னர் பயணத்தை மேற்கொள்ளும் போது பஸ்ஸூக்கு 70 ரூபா கொடுத்துப் போக வேண்டிய ஐயனார்புரம் பாடசாலைக்கு ஓட்டோவுக்கு சுமார்600ரூபாகொடுத்துப்போக வேண்டிய நிலை காணப்படுவதாகப் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்திலும் ஏனைய இடங்களிலும் இருந்து கிளிநொச்சி, வன்னேரிக்குளம், ஐயனார்புரம் அ.த.க. பாடசாலைக்குச் செல்லும் ஆசிரியர்கள் என்றுமில்லாதவாறு போக்குவரத்துச் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இந்தப் பாடசாலைக்குச் செல்வதாயின் அம்பலப்பெருமாள்குளம் சந்தியில் இருந்து காலை எட்டு மணிக்குப் புறப்படும் பஸ்ஸில் பயணிக்க வேண்டும். அதன் பின்னர் முற்பகல் 11 மணிக்கு தான் பஸ் சேவையுள்ளது. இந்தநிலையில் எட்டு மணிக்கான பஸ்ஸைத் தவறவிட்டால் பஸ் கட்டணத்தைக் கொடுத் துப் போகவேண்டிய இடத்துக்கு ஓட்டோ ஒன்றை வாடகைக்கு அமர்த்திச் செல்வதுக்கு சுமார் 600 ரூபா கொடுத்துச் செல்லவேண்டிய அவலநிலைக்கு ஆசிரியர்கள் தள்ளப்பட்டுள்ளனர். (க-6)

புலமைச்சுடர் நடாத்தும்

யாழ். வடமராட்சியில்...

யா / உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

உதயன் சுடர் ஒளி
THE SUDAR OLI

நாளிதழின் ஊடக அனுசரணையுடன்

தரம் 5 மாணவர்களுக்கான இலவசக் கருத்தரங்கு

வளவாளர்கள்

திரு. T. திலீப்குமார்
(கொழும்பு முன்னணி ஆசிரியர்)

திரு. N. S. தீபன்
(வவுனியா முன்னணி ஆசிரியர்)

காலம் 05.08.2012 (ஞாயிற்றுக்கிழமை)

நேரம் காலை 9 மணி தொடக்கம் பி. ப 4.00 மணி வரை

புலமைசாலி அங்கத்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

மேலதிக தொடர்புகளுக்கு :
071 6850005,
071 6182182

அனைத்து மாணவர்களும் பங்கேற்று பயனடையுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவலையில் மக்கள்

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிலுள்ள பூந்தோட்டம் கிராமத்தில் தற்காலிக அல்லது நிரந்தர வீடுகள் வழங்கப்படாததால் அந்தப் பகுதி மக்கள் கவலையடைந்துள்ளனர்.

தறப்பாள் மற்றும் சிறு குடிசைகளில் வாழும் இந்தக் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் தற்போது சொல்லொணாத் துயரங்களை எதிர்கொண்டு வருகின்றனர். சுமார் 35 குடும்பங்கள் இவ்வாறு துயரங்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரியவருகின்றது.

தற்போது இங்கு அடிக்கடி இடம்பெற்றுவரும் திருட்டுச் சம்பவங்கள் மற்றும் விஷ ஜந்துக்களின் தாக்கம் என்பவற்றால் இவர்கள் பெரும் அச்சத்துடன் வாழ்ந்து வருவதையும் அவதானிக்க முடிகின்றது. (க-500)

# வவுனியாவுக்கு புதிய மேலதிக அரச அதிபர்

மன்னார், ஜூலை 31

வவுனியா மாவட்ட மேலதிக அரச அதிபராகத் திருமதி.மோகநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா மாவட்ட மேலதிக அரச அதிபராகக் கடமையாற்றிய எஸ். திருஞானசம்பந்தர் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து அவரது இடத்துக்கு மன்னார் மேலதிக அதிபராக இருந்த திருமதி . மோகநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் தமது கடமைப் பொறுப்புக்களை பொறுப்பேற்றுக்கொண்டார்.

இதேவேளை மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபராகத் திருமதி நந்தினி ஸ்ரான்லி டிமெல் பொறுப்பேற்றுக்கொண்டார் .

அவர் மன்னார் பிரதேச செயலராகக் கடமையாற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது.

(க-400)

## அறிவித்தல்
## சின்ன மடு மாதா யாத்திரைத்தலம்.

புளியங்கூடல், சின்னமடுப்பகுதியில் அமைந்திருக்கும் சின்னமடு மாதா ஆலயத்திருவிழா எதிர்வரும் (05.08.2012) அன்று கொண்டாடப்படுகிறது. அத்திருவிழாவையொட்டி, ஆலய வளாகத்தினுள் கடைகள் போடுவதற்கான அனுமதி வழங்கப் படவுள்ளது. எனவே நாளை (01.08.2012) காலை 10 மணிக்கு சின்னமடுமாதா ஆலயத்தில் கடைகள் போட விரும்புபவர்கள் எம்மைச் சந்தித்து அதற்கான அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். நன்றி.

(21155) (3.14) *இரு பரிபாலகர்கள், நாரந்தனை.*

## வாடகை அடிப்படையில் வான் பெறுவதற்கான கேள்வி விலை

**மாகாணப் பணிப்பாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், வட மாகாணம் யாழ்ப்பாணம்**

பிரதம எந்திரி அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், வவுனியா, கிளிநொச்சி ஆகியவற்றின் பாவனைக்கு வாடகை அடிப்படையில் வான் பெற்றுக்கொள்வதற்கான கேள்வி கோரலை இல.40, றக்கா லேன் சுண்டிக்குளியில் அமைந்துள்ள எமது அலுவலகத்தின் விளம் பரப்பலகையில் பார்வையிட்டு கேள்விப்பத்திரத்தினைப் பெற்று 2012.08.10 ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு முன்னராக அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்

எந்திரி .செ. மோகனதேவன்
தலைவர்,
பெறுகைக் குழு, கட்டடங்கள் திணைக்களம், வடக்கு மாகாணம்,
இல.40, றக்காலேன், யாழ்ப்பாணம்.
தொலைபேசி இலக்கங்கள் 021 - 3202638, 021 2228091

(சி/2019)(8-14)

## ஓராண்டு நினைவு நாள்



மலர்வு 27 06 1944 — உதிர்வு 11 07 2011

*அமரர் பெரியார் பரமு*

அன்பின் பிறப்பிடமே! அறிவின் சிறப்பிடமே
ஆண்டு ஒன்று ஆனாலும் ஆறவில்லை எம் துயரம்
இப் புவியில் உம்மை நாம்
இழந்த துயரை ஈடு செய்ய முடியாமல்
தவிக்கின்றோம் இன்று வரை........

முதலாம் ஆண்டு நிறைவையொட்டி அவரின் இல்லத்தில் இன்று (31.07.2012) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெறும் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

கைதடி வடக்கு,
கைதடி.

(21174) (3.14)

*தகவல்*
*குடும்பத்தினர்*

## ஸ்ரீ பரமானந்தா சிறுவர் முதியோர் இல்லம் பதவி வெற்றிடம்

மேற்படி இல்லத்திற்கு கீழ்காணும் பதவிக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது.

நிர்வாக உத்தியோகத்தர்

**தகைமைகள்**

1. ஆண் 50 வயதிற்கு மேல்
2. சைவசமய பற்றுடைய ஒழுக்கசீலராக இருத்தல் வேண்டும்
3. அரச அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களில் நிர்வாகப்பகுதியில் அல்லது அதிபர், ஆசிரியராக கடமையாற்றி ஓய்வு பெற்றவர்கள் விரும்பத்தக்கது.

**பெண் மேற்பார்வையாளர்**

1. பெண் - வயது - 40 - 55
2. G.C.E. (O/L)
3. குடும்ப பொறுப்புகளற்ற இல்லத்தில் தங்கியிருந்து பணியாற்றக்கூடியவராக இருத்தல் வேண்டும்
4. சைவசமய கலை கலாசாரத்தை பின்பற்றி சிறுவர்களை நல்வழியில் நெறிப்படுத்தக்கூடியவராக இருத்தல் வேண்டும்

முன் அனுபவம் உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப் படும் சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்

விண்ணப்பம் முடிவு திகதி : 15.08.2012

தர்மகர்த்தா சபை,
ஸ்ரீபரமானந்தா சிறுவர் முதியோர் இல்லம்,
வதிரி - கரவெட்டி

(C/2024)(8-14)

## விற்பனையாளர் தேவை

நல்லூர் உற்சவகாலத்தில் புடவை விற்பனைக்கு விற்பனையாளர் உடன் தேவை.

(21160) (3.14) தொடர்பு-0757984969

## மணல் விற்பனைக்கு

நாகர் கோயில் மணல் கண்டாவளை மணல் , பூநகரி மணல் என்பன மிகவும் குறைந்த விலையில் டிப்பர்கள் மூலம் நேரடியாக உங்கள் இடங்களுக்கே விநியோகிக்கப்படும் (21181)(8-14) தொடர்பு :077 1988980

## வீடு வாடகைக்குத் தேவை

கச்சேரி, சுண்டுக்குளி, நகரை அண்டிய பகுதிகளில் சிறிய நடுத்தர குடும்பம் ஒன்றுக்கு வீடு வாடகைக்குத் தேவை (அவசரம்) உடன் தொடர்பு கொள்ளவும்

(21135) (3.6) **0752897908**

## உடன் தேவை

கணினியில் **Pagemaker, Coreldraw, Photoshop** தெரிந்த நல்ல அனுபவம் உள்ளவர் தேவை.
திறமைக்கேற்ப 12000-15000 வரை சம்பளம் வழங்கப்படும்.

**T.P- 0772174751**

(21141) (3.6)

## ஜேர்மன், சுவிஸ் மொழிகள்

தமிழ் மொழி பெயர்ப்புடன் நடைபெறுகிறது.
இம்முறை பரீட்சையில் 15 மாணவர்கள் சித்தியடைந்துள்ளார்கள் முதல் தடவையில். அடுத்த புதிய வகுப்புக்கள் (06.08.2012) திங்கட்கிழமை ஆரம்பம்.

**German institute, miss.kajenthini.**
**10, Palaly road, Jaffna.**
**T.P-0771604823**

(21178) (3.14)


யாழ்.நகரில்........!
மல்டிமீடியா கல்வி
நேரடி ஸ்கொலர்ஷிப்
65% வரை கட்டணக்கழிவுடன்



கிராபிக்ஸ்
அனிமேஷன்
ஸ்பெஷல் எபெஃக்ஸ்
மல்டிமீடியா

CSC-ASIAN COMPUTER EDUCATION
AN ISO 9001 : 2008 CERTIFIED TRAINING INSTITUTION

India's No.1 Animation Academy
JOB ASSISTANCE 100% CREATIVITY

Audio & Film Editing
Web Design & Development
Web & Cartoon Animation
Graphics Design
2D & 3D Animation
Digital Pre-Press
Mastering Multimedia

யாழ்.நகர் 2G, ஸ்ரான்லி வீதி, 021-2225677


## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 03 10 1968 — உதிர்வு 08 08 2008

*திருமதி அருணாதேவி பரமேஸ்வரன்*

(கோப்பாய் மத்தி கோப்பாய்)

திதி.31-07-2012

நீங்கள் மறைந்தாலும்
உங்கள் நினைவுகள்
எம்மை விட்டு மாறாது

எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசன விருந்துபசாரத்தில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தொ.பே- 0750740073 (21170) (3.14)

*தகவல்*
*திரு.திருமதி*
*செல்லத்துரை-இராசமணி*

## கண்ணீர் அஞ்சலி

எமது ஆலய பரிபாலன சபைத் தலைவர்
திரு. ந. கந்தையா அவர்களின் மருமகன்
*இரத்தினம் பாலேஸ்வரன்* அவர்களின் பிரிவால்
துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களினை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீ கண்ணகை அம்பாள்
தேவஸ்தானம்
ஆனைக்கோட்டை.

(சி/2023) (3.14)

*பரிபாலன சபையினரும்*
*இந்து இளைஞர் மன்றத்தினரும்*
*இந்து மகளிர் மன்றத்தினரும்.*

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிவமலர் இராஜரட்ணம்



சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவமலர் இராஜரட்ணம் (29.07.2012) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா-சற்குரு தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான சின்னையா முத்துவேலு தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற முத்துவேலு இராஜரட்ணத்தின் அன்பு மனைவியும், சண்முககுருவின் (லண்டன்) அன்புச் சகோதரியும், இரட்ணமாலா (மலேசியா), வசந்தன் (டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தாயும், சிவனேசன் (மலேசியா), உமாதேவி (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மாமியும், சிவசூரியர் (மலேசியா), குமாரசூரியர் (மலேசியா), டென்சன் (டாக்டர், டென்மார்க்), டென்சனி (டென்மார்க்) ஆகியோரின் அன்பு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.07.2012) செவ்வாய்க் கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எற்றுக் கொள்ளவும்.

*சுழிபுரம்,*
*பராளாய வீதி, சுழிபுரம்.*

(21184) (3.14)

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

### திருமதி சரஸ்வதி இராசையா



கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், கனடாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி இராசையா கடந்த (28.07.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா- முத்தம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நாகமுத்து- இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த நாகமுத்து இராசையாவின் (சுப்பிரமணியம்-ஒவசியர்) அன்பு மனைவியும், மனோரஞ்சிதம் (குணம்-கனடா), ஸ்ரீகாந்தன் (இலங்கை), ஸ்ரீராம் (பெல்ஜியம்), காலஞ்சென்ற ஸ்ரீநாதன், ஸ்ரீஜெயந்தன் (அமெரிக்கா), சுகந்தினி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், மகேஸ்வரன், பாக்கியலெட்சுமி, கிருஷ்ணதேவி, தவரத்தினம் ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான குமாரசாமி (சிங்கப்பூர்), வல்லிபுரம் (மலேசியா), ராமநாதன் (PWD Overseer) ஆகியோரின் அன்புத் தங்கையும், வாகீசன் அனுஷா, பிரதீபன் கிருஷாந்தி, பிரபாகரன் சிந்துஜா, சஞ்ஜீவன், சுதாகர் துஷாந்தினி, தக்கஷினி, செல்வகுமார் சோபனா, கமலதாசன் கல்பனா, ஜெனனி, ஜெகனி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அஸ்வினி, வாஷினி, சேயோன், லக்ஷியன், ஆருஷி, லகீஷா, தனுஷா ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (30.07.2012) திங்கட்கிழமை பி.ப.5 மணி தொடக்கம் மாலை 9 மணிவரை Ogdon Funeral Home இல் பார்வைக்கு வைக்கப்படும்.

இறுதிக்கிரியை இன்று (31.07.2012) செவ்வாய்க்கிழமை காலை கனடாவில் நடைபெற்று நல்லடக்கம் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கொக்குவில், பிரக்ஞ, கொக்குவில்.
தொலைபேசி: 001 - 4162837426 (கனடா)

தகவல்:
க. செல்வரத்தினம் (பேரமகன்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அத்துமீறிய குடியேற்றங்களால் பறிபோகிறது பொது மைதானம்

## பளை, இத்தாவில் மக்கள் முறையீடு

பளை, ஜூலை 31

அத்துமீறிய குடியேற்றங்களால் பொது விளையாட்டு மைதானம் சூறையாடப்படும் அபாயம் காணப்படுகிறது.

பளைப் பிரதேசத்தில் அண்மையில் மீளக் குடியமர்வு இடம்பெற்ற இத்தாவில் பகுதியில் இத்தகைய சம்பவங்கள் இடம்பெறுவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

1980 களில் இத்தாவில் பகுதியில் காணப்பட்ட காணியை மக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட வேளையில் பிரிவு மக்களால் வேம்பொடுகேணி சீ.சீ.த.க.பாடசாலைக்கும் பிரதேச விளையாட்டுக் கழகங்களால் பொது விளையாட்டு மைதானத்துக்கும் நிலம் ஒதுக்கீடு செய்ய வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இதனை அடுத்து பாடசாலைக்கு 10 ஏக்கர் நிலமும், பொது விளையாட்டு மைதானத்துக்கு 10 ஏக்கர் நிலமும் ஒதுக்கீடு செய்யப்பட்ட பின்னர் மிகுதிக் காணி காணியற்றோருக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது.

இந்த விளையாட்டு மைதானத்தில் 1980 ஆம் ஆண்டு தொடக்கம் 1999 ஆம் ஆண்டு வரை பிரதேச செயலக விளையாட்டுப் போட்டிகளும் பாடசாலை விளையாட்டுப் போட்டிகளும் நடத்தப்பட்டன.


2000 ஆம் ஆண்டு இடப்பெயர்வின் பின்னர் அண்மையில் இத்தாவில் பிரிவின் ஒரு பகுதி மீள் குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்டது.

ஏற்கனவே இந்தப் பகுதியில் குடியிருந்தவர்கள் தமது காணியில் மீளக் குடியமர்ந்த வேளையில் ஒரு சிலர் மைதானத்துக்கு ஒதுக்கப்பட்ட காணியில் அத்துமீறி குடியமர்ந்து கொட்டில்களை அமைத்துள்ளனர்.

இந்தக் காணிகளில் அத்துமீறிக் குடியமர்ந்துள்ளவர்களுக்கு அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றால் மலசலகூடங்கள் அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட வேளை இத்தாவில் கிராம அபிவிருத்திச் சங்கம் இதனைத் தடுத்து நிறுத்துமாறு கோரியுள்ளது. இருந்தும் மலசலகூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாகப் பளை பிரதேச செயலர் பிரிவு, கிராம அலுவலர் ஆகியோருக்கு முறைப்பாடுகள் செய்யப்பட்டும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

# கட்டாக்காலி கால்நடைகள் அரியாலையில் அட்டகாசம்



யாழ்ப்பாணம், ஜூலை 31

அரியாலை பிரதேசத்தில் கட்டாக்காலி மாடுகளால் பொதுமக்களும் விவசாயிகளும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதனைக் கட்டுப்படுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்ட போதும் அதற்கான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

கட்டாக்காலிக் கால்நடைகள் பகல், இரவு வேளைகளில் பிரதான வீதிகளில் நடமாடுவதால் அந்தப் பகுதியில் அடிக்கடி வாகன விபத்துக்களும் ஏற்படுகின்றன. வாகனங்களில் மோதுண்டு கால் நடைகளும் இறக்கின்றன. அத்துடன் செம்மணி வெளிப் பிரதேசத்தில் நடமாடும் கால்நடைகள் அங்கே கொட்டப்படும் கழிவுப் பொருள்களைத் தமது உணவாகக் கொள்வதனால் பொலித்தீன் பைகள் உணவுடன் சேர்த்து உட்செல்வதால் சமிபாடு அடையாமல் அவை இறக்கும் நிலையும் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் குடி மனைகளுக்குள் நுழையும் இந்தக் கட்டாக்காலிகள் பயன்தரு மரங்கள் மற்றும் பயிர்களையும் வேட்டையாடிப் பெரும் அழிவை உண்டு பண்ணுகின்றன.

இது குறித்து உடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-17)

### நடமாடும் குருதிக்கொடை முகாம்

யாழ்ப்பாணம், ஜூலை 31

யாழ்.போதனா வைத்தியசாலை இரத்தவங்கிப் பிரிவினரின் நடமாடும் இரத்ததான முகாமில் நேற்று இணுவில், அளவெட்டி மற்றும் சுண்டுக்குளியைச் சேர்ந்த 47 பேர் இரத்த தானம் செய்துள்ளனர்.

அளவெட்டி, கும்பழாவளைப் பிள்ளையார் கோயில் தொண்டர் சபையைச் சேர்ந்த 16 பேரும், இணுவில் ஸ்ரீராம் பவஜிம் நிறுவனத்தைச் சேர்ந்த 15 பேரும், சுண்டுக்குளி சென்.ஜோன்ஸ் தேவாலயத்தைச் சேர்ந்த 16 பேருமாக மொத்தம் 47 பேர் நேற்று முன்தினம் இரத்ததானம் செய்துள்ளனர் என்று இரத்தவங்கிப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை சமூகத்தவர் நேற்றும் அரியாலை, நெடுங்கேணி சர்வோதயம் அமைப்பைச் சேர்ந்தவர்கள் இன்றும், இலங்கை வங்கி திருநெல்வேலிக்கிளை உத்தியோகத்தர்கள் நாளை மறுதினம் வியாழக்கிழமையும் இரத்ததானம் செய்யவுள்ளனர் என்று இரத்தவங்கிப் பிரிவு தெரிவித்தது. (ம-4)

### இரவிரவாக வீதி புனரமைப்பு

யாழ்.நகரின் பிரதான வீதிகளின் புனரமைப்புப் பணிகள் இரவிரவாக இடம்பெற்றுவருகின்றன.

யாழ்.ஆஸ்பத்திரி வீதிக்கும் 'காப்பெற்' போடும் பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதனை விட கே.கே.எஸ். வீதியில் வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்பாகச் செல்லும் பிரதான வீதியும் அகலிக்கப்பட்டுப் புனரமைப்புச் செய்யப்படுகின்றது.

இந்த வீதிப் புனரமைப்புப் பணிகள் இரவிரவாக இடம்பெறுகின்றன. பகலில் வாகனப் போக்குவரத்து இந்த வீதிகள் ஊடாக அதிகமாகக் காணப்படுகின்றது. இதன் காரணமாகவே புனரமைப்புப் பணிகள் இரவில் நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-17)



சாவகச்சேரி நகராட்சி மன்றச் செயலாளர் சு.புத்திசிகாமணி எழுதிய 'சுவடிகள்' நூல் வெளியீட்டு அறிமுக விழா அண்மையில் புலோப்பளை றோ.க.த.க. பாடசாலையில் இடம்பெற்றது. நூல் அறிமுக உரையை கிளிநொச்சி கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் கணேசலிங்கம் நிகழ்த்துகிறார். (ம-9)

# வீதிச் சுத்திகரிப்புக்கு பணியாளர் நியமனம்

## நல்லூர் பிரதேச சபை முன்னெடுக்கிறது

யாழ்ப்பாணம், ஜூலை 31

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட வீதிகள் மற்றும் பொது இடங்களைச் சுத்திகரிக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று நல்லூர் பிரதேச சபையின் தலைவர் ப.வசந்தகுமார் தெரிவித்தார்.

வீதிகளின் சுத்திகரிப்பு பணிக்கென மேலதிகமாக 9 சுகாதாரத் தொழிலாளர்கள் தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தத் தொழிலாளர்களை கொண்டு பிரதேசத்தில் அதிக குப்பைகள் தேங்கியுள்ள பகுதிகள் சுத்திகரிக்கப்பட்டுவருகின்றன என்றும் பொது இடங்களும் சுத்திகரிக்கப்படுகின்றன என்றும் தலைவர் மேலும் தெரிவித்தார். (த-17)

# குடிதண்ணீருக்காக அலையும் கொழும்புத்துறை எழிலூர் மக்கள்

## யாழ்.மாநகரசபை கவனிக்குமா?

யாழ்ப்பாணம், ஜூலை 31

கொழும்புத்துறை எழிலூர் கிராமத்துக்குக் குடிதண்ணீர் வசதியை ஏற்படுத்தித் தருமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாநகர உறுப்பினர் அருளம்பு கொர்ணலியஸ் யாழ்.மாநகர சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொழும்புத்துறை எழிலூர்க் கிராமத்தில் மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் தமக்குரிய குடிதண்ணீர் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கொழும்புத்துறையின் ஏனைய பிரதேசங்களுக்கு விநியோகிக்கப்படும் குடிதண்ணீர் வசதியைப் போன்று எழிலூர் கிராமத்துக்கும் குடிதண்ணீர் வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு மாநகர சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் -என்றார்.

இந்தக் கிராம மக்கள் குடிதண்ணீரைப் பெறுவதற்குப் பல மைல் தூரம் செல்ல வேண்டிய நிலை உள்ளதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (த-17)

# ஒதுக்கப்பட்ட இடத்தில் கழிவைப் போட அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜூலை 31

நல்லூர் ஆலய சுற்றாடலில் கழிவுப் பொருள்களை அதற்கென ஒதுக்கப்பட்ட கொள்கலன்களில் போடுமாறு சுகாதார பகுதியினர் அறிவுறுத்தி வருகின்றனர்.

ஆலயத்தைச் சூழ உள்ள பகுதிகளில் கழிவுப் பொருள்கள் கொட்டுவதற்கென விசேட கொள்கலன்கள் வைக்கப்பட்டுள்ளன.

ஆலயத்துக்கு வருகை தரும் பக்தர்கள் கழிவுப் பொருள்கள் மற்றும் பொலித்தீன் பைகளை ஆலயச் சுற்றாடலில் போட்டு வருவதால் சுகாதாரக் கேடு நிலவுகின்றது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே பக்தர்கள் இந்த விடயத்தில் கவனம் எடுத்துச் செயற்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளனர். (ம-17)

# பாவனையில் இல்லாத கிணற்றுக்குள் குண்டு

தென்மராட்சி, ஜூலை 31

நீண்ட காலம் பாவனையில் இல்லாத கிணற்றை இறைத்து துப்புரவு செய்த போது வெடிகுண்டு காணப்பட்டது. நேற்று முன்தினம் மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயத்துக்கு அருகில் உள்ள கிணற்றிலேயே குண்டு மீட்கப்பட்டது.

போர் வேளையில் அழிவடைந்த வீட்டை புனரமைப்பதற்காகக் கிணறு இறைத்து துப்புரவு செய்யப்பட்ட போது அதனுள் வெடிகுண்டு காணப்பட்டது.

இது தொடர்பாக அருகில் உள்ள படை முகாமுக்கு அறிவித்திருந்ததையடுத்து அங்கு வந்த வெடிப் பொருள்கள் அகற்றும் பிரிவினர் வெடிகுண்டை மீட்டுச் சென்று செயலிழக்க வைத்தனர். (ம-9)

# கருச்சிதைவுடன் தொடர்புடைய சந்தேகத்தில் இருவர் கைது

சாவகச்சேரி வைத்தியசாலை பிரசவ விடுதியில் கடந்த வாரம் இடம்பெற்ற இரண்டு குறைப்பிரசவங்கள் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின் பயனாக இரண்டு பெண்களுக்கும் கருச்சிதைவை மேற்கொண்டனர் என்ற சந்தேகத்தின் பேரில் மூவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த மூவரையும் நீதிவான் முன்னிலையில் முற்படுத்திய போது அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரண்டு பெண்கள் ஒரே நேரத்தில் வைத்தியசாலையில் குறைப்பிரசவம் ஏற்பட்டமை தொடர்பாக பொலிஸார் நீதிமன்றின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர்.

குறைப்பிரசவத்தில் பிறந்த 5 மாதம், 7 மாதம் கொண்ட சிசுக்களை யாழ்.போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி மூலம் உடற்கூற்றுப் பரிசோதனை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளை அடுத்து கருச்சிதைவுகளுக்குக் காரணமாக இருந்தவர்களைக் கைது செய்து முற்படுத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரியார் திராவிடர் கழகம் பிளவு

பெரியார் திராவிடர் கழகம் உடைந்ததைத் தொடர்ந்து அதன் தலைவர் கொளத்தூர் மணி மற்றும் பொதுச் செயலாளர் கு.ராமகிருஷ்ணன் தலைமையில் புதிய அணிகள் ஆரம்பிக்கப்பட உள்ளன.

தமிழகம் முழுவதும் 15 மாவட்டங்களில் பெரியார் திராவிடர் கழகம் செயற்பட்டு வருகிறது. தற்போது பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் மணி மற்றும் பொதுச் செயலாளர் கு.ராமகிருஷ்ணன் ஆதரவாளர்களிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டதால் கழகத்தில் பிளவு ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து அந்தக் கட்சியின் தலைவர் கொளத்தூர் மணி கூறுகையில், பெரியார் கொள்கையின் படி இணைந்து செயற்பட்டு வந்தோம். தற்போது பிரிவது என்று முடிவு செய்துள்ளோம். நடைமுறையில் முன்னுரிமை கொடுக்க வேண்டிய பிரச்சினைகளுக்கு முன்னுரிமை கொடுக்காததால் கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது.

இதில் பெரியார் திராவிடர் கழகம் என்ற பெயரை இருவரும் பயன்படுத்துவதில்லை என்று முடிவு செய்து, எதிர்வரும் 12 ஆம் திகதி ஈரோடு மாவட்டத்தில் கூடி ஆலோசனை நடத்தி புதிய அமைப்பு குறித்து அறிவிப்பு வெளியிடவுள்ளோம் - என்றார்.

இதேவேளை, பொதுச் செயலாளர் கு.ராமகிருஷ்ணன் கூறுகையில்,

எதிர்வரும் 18 ஆம் திகதி ஆலோசனை நடத்தி புதிய அமைப்பு ஆரம்பிப்பது தொடர்பாக அறிவிப்பு வெளியிடப்படும்-என்றார். (வ)

# கொழுந்துவிட்டு எரிந்தது ரயில்

### 50 பேர் கருகிச் சாவு



நெல்லூர், ஜூலை 31

டில்லியிலிருந்து சென்னைக்குப் பயணித்த தமிழ்நாடு எக்ஸ்பிரஸ் ரயிலில் நேற்று அதிகாலை ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 50 பயணிகள் உடல் கருகி பரிதாபமாக உயிரிழந்தனர். 20 இற்கும் மேற்பட்டோர் காயமுற்ற நிலையில் நெல்லூர் அரச மருத்துவ மனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். இந்தச்சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

டில்லியிலிருந்து கடந்த சனிக்கிழமை இரவு 10.30 மணிக்கு தமிழ்நாடு எக்ஸ்பிரஸ் ரயில் சென்னைக்குப் புறப்பட்டது. ஆந்திர மாநிலம், நெல்லூருக்குச் சென்று பின்னர் அதிகாலை 4.30 மணிக்கு அங்கிருந்து புறப்பட்ட சிறிது நேரத்தில், சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் எஸ்-11 ஆவது பெட்டியில் தீ விபத்து ஏற்பட்டது.

இந்தத் தகவல் அறிந்ததும் தீயணைப்புப் படையினர் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று தீயை அணைக்கப் போராடினர். அப்போது தீயில் கருகிய நிலையில் 25 பேரின் உடல்கள் இதுவரை மீட்கப்பட்டன. காயம் அடைந்தவர்கள் நெல்லூர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

எஸ்- 11 ஆவது பெட்டியில் 89 பயணிகள் பயணித்துள்ளதால் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என்று அஞ்சப்படுகிறது.

இந்த ரயில் தீ பிடித்து எரிந்துள்ளதால் இதில் உயிரிழந்தவர்களை அடையாளம் காண்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. எனினும் உயிரிழந்தோரில் 22 பேர் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் என்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். ஏனையோரின் விவரம் குறித்த தகவல்கள் இன்னும் வெளியிடப்படவில்லை. (வ)

## தீவிரவாதிகள் 10 இடங்களில் தாக்கத் திட்டம்

இந்தியாவில் லஷ்கர்-இ- தொய்பா இயக்கத்தைச் சேர்ந்த தீவிரவாதிகள் பத்துக்கும் மேற்பட்ட இடங்களில் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருந்தது தற்போது தெரியவந்துள்ளது.

மும்பைத் தாக்குதலில் தொடர்புடைய முக்கிய குற்றவாளியான அபு ஜுண்டாலிடம் தற்போது மும்பை பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

விசாரணையின்போது அபு ஜுண்டால் கூறுகையில், இந்தியா வில் லஷ்கர்-இ- தொய்பா தீவிர வாத இயக்கத்தைச் சேர்ந்த தீவிரவாதிகள் 10 வெவ்வேறு இடங்களில் தாக்குதல்களை மேற்கொள்ளத் திட்டம் தீட்டியிருக்கின்றனர்.

அதுகுறித்து விரிவாகத் திட்டமிடப்படுவதற்குள் நான் கைதாகி விட்டதால், எந்த இடங்களில் தாக்குதல் நடத்தப்பட உள்ளது என்று தெரியவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் தாக்குதலில் அபு ஜுண்டால் தனது பங்களிப்பை அளிக்க இருந்ததால், அது பற்றி சில தகவல்களை அவர் அறிந்துள்ளார் என்றும், மும்பைத் தாக்குதலுக்கு கராச்சியில் உள்ள கட்டுப்பாட்டு மையத்தில் இருந்து அவர் தீவிரவாதிகளை வழிநடத்தியிருப்பதும் உறுதியாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (வ)

## பழமையான 'அணா' நாணயம் ஏலத்துக்கு



இந்தியாவின் 132 ஆண்டுகள் பழைமையான அரை ரூபா நாணயம் (அணா) ரூ.1.70 லட்சத்துக்கு ஏலம் விடப்பட்டது.

தமிழ்நாட்டின் கோயம்புத்தூரில் பழங்கால நாணயம் மற்றும் தபால் தலைகளுக்கான கண்காட்சி நடைபெற்று வருகின்றது.

இந்தக் கண்காட்சியில் மும்பை, புதுடில்லி, கோவை, கொல்கத்தா, பெங்களூர், ஹைதராபாத், கான்பூர், நாக்பூர், கேரளா, புதுச்சேரி, கர்நாடகா ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த நாணயம்- தபால் தலை சேகரிப்பாளர்கள் தங்களிடம் உள்ள அரிய வகை சேகரிப்புகளை பார்வைக்கும், விற்பனைக்கும் வைத்துள்ளனர்.

இந்தநிலையில் மும்பையின் புகழ் பெற்ற ஓஸ்வால் ஒன்டிக்ஸ் நிறுவனம் சார்பில் தலைவர் கிரீஸ் தலைமையில் நேற்று முன்தினம் மாலை ஏலம் நடந்ததில் 343 பொருள்கள் மொத்தம் ரூ. 25 லட்சத்துக்கு ஏலம் விடப்பட்டன. (வ)

### 'குஜராத்தின் புலி மோடி'

## புகழாரம் சூட்டிய காங்கிரஸ் எம்.பியின் கருத்தால் சர்ச்சை



குஜராத் முதல்வர் நரேந்திர மோடி 'ஒரு புலி'' என்று காங்கிரஸ் கட்சியின் மாநிலங்களவை நாடாளுமன்ற உறுப்பினர். விஜய் தர்தா புகழாரம் சூட்டியிருப்பது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கிறது.

ஜெயின் சமூகத்தினர் சார்பில் விருது வழங்கும் விழா குஜராத் மாநில தலைநகர் அகமதாபாத்தில் நடைபெற்றது. இந்த விருதுகளை முதல்வர் மோடி வழங்கினார். மஹாராஷ்டிராவைச் சேர்ந்த பத்திரிகையாளரும் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜய் தர்தாவுக்கும் மோடி விருது வழங்கினார். விருதைப் பெற்றுக் கொண்ட காங்கிரஸின் விஜய் தர்தா, நரேந்திர மோடியின் நிர்வாகத் திறமைகளைப் பாராட்டியதுடன் அவரை 'குஜராத்தின் புலி' என்றும் புகழாரம் சூட்டினார்.

விழா மேடையிலேயே விஜய் தர்தாவின் பாராட்டு குறித்து கருத்துத் தெரிவித்த நரேந்திர மோடி, அவர் என்னைப் பாராட்டிப் பேசியதற்கான விலையைச் செலுத்த நேரிடும். நிச்சயம் ஊடகங்களில் பெரிய செய்தியாக வெளிவரும். அவரது கட்சி மேலிடம் விளக்க நோட்டீஸ் அனுப்பும்- என்றார்.

மோடியை காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் புகழ்ந்துள்ளது காங்கிரஸ் கட்சிக்கு அதிர்ச்சியளித்துள்ளது. (வ)



கேரள மாநிலம் இடுக்கி மாவட்டத்தில் இரண்டு மலைகளை இணைத்து இடுக்கி அணை கட்டியதன் நினைவாக, ராமக்கல் மெட்டில் அமைக்கப்பட்டுள்ள கலைநயம் மிக்க மிகப் பிரம்மாண்டமான குறவன் குறத்தி சிலை.

## தொழுநோயாளர் எண்ணிக்கை இந்தியாவில் அதிகரிப்பு

### ஐ.எல்.யு. அமைப்பு எச்சரிக்கை

உலகிலேயே இந்தியாவில் தொழுநோய் பாதித்தவர்களின் எண்ணிக்கை 55 சதவீதமாக அதிகரித்துள்ளது. தொழுநோயாளிகள் இல்லாத நாடாக இந்தியா 2005 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டாலும் தற்போது இங்குதான் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

கடந்த 5 ஆண்டுகளில் தொழுநோயாளிகளின் எண்ணிக்கை ஓரளவாக அதிகரித்து, தற்போது இந்தியா முழுவதும் இந்த நோய் பாதித்தவர்கள் எண்ணிக்கை ஒரு லட்சத்து 26 ஆயிரத்து 800 பேராக உயர்வடைந்துள்ளது.

உலகம் முழுவதும் தொழுநோயாளர்களின் எண்ணிக்கை 2 லட்சத்து 28 ஆயிரத்து 474 பேராக உள்ளது. இதன்படி பார்த்தால், உலகிலேயே இந்தியாவில் மட்டும் தொழுநோயால் 55 சதவீதம் பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக வெளியாகியுள்ள தகவல் அதிர்ச்சியை ஏற்படுத்துகின்றது.

இதுபற்றி, சர்வதேச தொழுநோய் ஒழிப்பு அமைப்பின் (ஐ.எல்.யு.) இந்தியாவுக்கான தலைவர் எஸ்.டி. கோகலே கூறுகையில், இந்தியாவில் தொழுநோயால் பாதித்தவர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது.

இந்தத் தகவலை மத்திய சுகாதாரத் துறை அமைச்சகம் உறுதி செய்துள்ளது. எனவே இந்தப் பிரச்சினையில் மத்திய மற்றும் மாநில அரசுகள் உடனடியாக நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் பெரும் விளைவுகளைச் சந்திக்க நேரிடும்.(வ)

### பிரான்ஸிலும் இந்தியர்களின் கறுப்புப்பணம்

ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான சுவிற்ஸர்லாந்தில் மட்டு மல்லாது, பிரான்ஸிலும் இந்தியர்கள் அதிகளவு கறுப்புப் பணத்தை பதுக்கியிருப்பது தற்போது தெரியவந்துள்ளது. வருமான வரித்துறை அதிகாரிகள் வெளியிட்டுள்ள தகவலில், பிரான்ஸில் மட்டும் ரூ.565 கோடி கறுப்புப்பணம்பதுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தனர்.

ஐரோப்பிய நாடுகளுடன் இந்திய அரசு இரட்டை வரிவிதிப்பு தவிர்ப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது.

## சேதுசமுத்திர திட்டத்தைச் செயற்படுத்தக் கூடாது

### பா.ஜ.க. உறுப்பினர் உமா பாரதி

இராமர் பாலத்தைச் சேதப்படுத்தும் சேதுசமுத்திரத் திட்டத்தை நிறை வேற்றக் கூடாது என்று பாரதீய ஜனதாக்கட்சியின் மூத்த தலைவர்களுள் ஒருவரான உமா பாரதி தெரிவித்தார்.

இதுகுறித்து சென்னையில் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்ததாவது:-

ராமர் பாலத்தைச் சேதப்படுத்தும் சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றக் கூடாது. தமிழக முதல்வர் ஜெயலலிதா அப்போதே இந்தத் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தார். இப்போதும் எதிர்ப்பு தெரிவிப்பார் என்று நம்புகிறேன். அப்படி அப்போது ராமர் பாலத்தை இடித்து சேது சமுத்திரத் திட்டம் நிறைவேற்றுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததை ஜெயலலிதா மறந்திருந்தால், இப்போது நான் கண்டிப்பாக அவருக்கு நினைவு படுத்துவேன்.

நான் மத்தியப் பிரதேச முதல்வராக இருந்தபோது, நதிநீர் இணைக்கும் திட்டத்தை வலியுறுத்தினேன். இப்போது அந்தத் திட்டம் கிடப்பில் போடப்பட்டுவிட்டது. கங்கையின் புனிதத்தைக் காப்பாற்றும் முயற்சியில் தீவிரமாகச் செயற்படப் போகிறோம். இதை மூன்று கட்டமாகப் போராட தீர்மானித்துள்ளோம். முதற்கட்டப் போராட்டமாக யாத்திரையும், 2ஆம் கட்டமாக கருத்தரங்கும், 3ஆம் கட்டப் போராட்டமாக மனித சங்கிலி இயக்கமும் என்று மூன்று கட்டப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம். - என்றார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மெக்ஸிக்கோவில் பூகம்பம்

மெக்ஸிக்கோவில் நேற்று 6.0 ரிச்டர் அளவிலான பூகம்பம் ஏற்பட்டுள்ளது என அமெரிக்க புவிச்சரிதவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. கௌதமாலாவின் எல்லைக்கருகிலுள்ள சியாபாஸ் மாநிலத்தில் இந்தப் பூகம்பம் ஏற்பட்டுள்ளது.

இந்தப் பூகம்பம் 5.7 ரிச்டர் அளவிலானது என மெக்ஸிக்கோ அதிகாரிகளும் 5.0 ரிச்டர் அளவிலானது என கௌதமாலா அதிகாரிகளும், தெரிவித்துள்ளனர்.

## சீனாவில் வெடி விபத்து

பீஜிங், ஜூலை 31

சீனாவில் இருவேறு இடங்களில் நடந்த வெடிவிபத்துச் சம்பவங்களில் 4 பேர் உயிரிழந்தனர்; 10 பேர் காயமடைந்தனர். சீனாவின் குவாங்டாங் மாகாணத்தில், லிஷூயி தொழிலகப் பகுதியில், இசைக்கருவிகள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையில் நேற்றுமுன்தினம் இரவு ஏற்பட்ட வெடிவிபத்தில் மூன்று பேர் உயிரிழந்தனர்; 6 பேர் காயமடைந்தனர்.

இந்த வெடிவிபத்தால் ஏற்பட்ட தீ உடனடியாக அணைக்கப்பட்டது.

வெடிவிபத்துக்கான காரணம் குறித்து ஆய்வு செய்து வருவதாகவும் அந்த மாகாண அரசு தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், ஷான்ஜி மாகாணத்தில் உள்ள சுற்றுலா நகரமான ஜியானில், 24 மாடிகள் கொண்ட அடுக்குமாடிக் குடியிருப்பின் 13ஆவது தளத்தில் ஏற்பட்ட வெடிவிபத்தில் ஒருவர் உயிரிழந்தார்; 4 பேருக்கு சிறிய அளவில் காயமேற்பட்டது. அந்தத் தளத்தில் உள்ள சில வீடுகள் சேதமடைந்தன.

சமையல் எரிவாயுவை முறையாகக் கையாளப்படாததே விபத்துக்குக் காரணம் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## 5 வருட கடல் பயணத்தை ஆரம்பித்துள்ள தம்பதியர்



வெனிஸ், ஜூலை 31

17 மாத வயதான தமது குழந்தையுடன், ஐந்து வருடகாலம் படகில் உலகை சுற்றிவருவதற்குத் இத்தாலியத் தம்பதியொன்று திட்டமிட்டுள்ளது.

இந்தப் பயணத்துக்காக 12 மீற்றர் நீளமான படகொன்றை வாங்குவதற்காகத் தமது சொத்துக்கள் முழுதையும் இந்தத் தம்பதியர் விற்பனை செய்துள்ளனர்.

இத்தாலியைச் சேர்ந்த சிகையலங்கார கலைஞரான ஜோஸப் டெல்லா வோல்பேவும் , குரோஷியாவைச் சேர்ந்த மார்ட்டினா டெல்லா வோல்பேவுமே இவ்வாறு குழந்தையுடன் படகுமூலம் உலகைச் சுற்றிவரவுள்ளனர்.

தமது குழந்தை பாடசாலைக்குச் செல்லும் வயதை அடையும் முன் தமது பயணத்தை நிறைவுசெய்யவுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இத்தாலியிலிருந்து புறப்பட்டுள்ள இந்தத் தம்பதியர் மத்திய தரைக்கடல் வழியாக அட்லாண்டிக் சமுத்திரத்தை அடைந்து, அதன்பின் பசுபிக் சமுத்திரத்துக்கூடாக ஆஸ்திரேலியாவை அடைவதற்குத் திட்டமிட்டுள்ளனர்.

''சிலர் எம்மை விமர்சிப்பார்கள். ஆனால் நாம் அனைத்தையும் கவனமாகத் திட்டமிட்டுள்ளோம். நான் கடலுக்கு அருகில் பிறந்தேன். எப்போதும் கடலை நேசிக்கின்றேன். எனது கணவரும் அப்படித்தான். கடலானது சுதந்திரத்தின் சின்னமாக வுள்ளது. தரையில் அதை ஒருபோதும் காண முடியாது.

எனவே எமது மகள் பாடசாலை செல்ல ஆரம்பிப்பதற்கு முன்னர் நாம் அந்தச் சுதந்திரத்தை அனுபவிக்க விரும்புகிறோம்'' என மார்ட்டினா தெரிவித்துள்ளார்.

# யப்பானில் போராட்டம்

### அணு உலைத் திறப்புக்கு எதிராகத் திரண்டனர் மக்கள்



டோக்கியோ, ஜூலை31

யப்பானில் மீண்டும் அணு மின் நிலையங்கள் திறக்கப்படுவதைக் கண்டித்து, நாடாளுமன்றம் முன்பாக, ஆயிரக்கணக்கான மக்கள் நேற்றுமுன்தினம் மனிதச் சங்கிலிப் போராட்டம் நடத்தினர்.

யப்பானில், கடந்த ஆண்டு மார்ச்சில் ஏற்பட்ட சுனாமியால் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர். புகுஷிமா அணு மின் நிலையத்தில் கடல் நீர் புகுந்ததில், அணு உலைகள் சேதமடைந்தன. இதனால், அங்கு கதிர்வீச்சு ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து, யப்பானில் பல்வேறு இடங்களில் உள்ள, 50 அணு உலைகளின் இயக்கம் நிறுத்தப்பட்டது. இதனால், யப்பானில் கடும் மின் பற்றாக்குறை ஏற்பட்டது. விசைத்தறி ஆலைகள் மூடப்பட்டன. வேறுவழியில்லாத காரணத்தால், மீண்டும் அணு மின் நிலையங்கள் செயல்படத் தொடங்கின.

புகுஷிமா அணு மின் நிலைய விபத்துக்கு சுனாமி காரணமல்ல. மனித தவறுகள் தான் காரணம் என, நாடாளுமன்றக் குழு, சமீபத்தில் அறிக்கை சமர்ப்பித்தது.

அரசு, அணு மின் நிலையங்களின் செயல்பாட்டை முழுவீச்சில் செயல்படுத்துவதைக் கண்டித்து, டோக்கியோவில் ஆயிரக்கணக்கான மக்கள் நாடாளுமன்றத்தை நேற்று முன்தினம் முற்றுகையிட்டனர். நாடாளுமன்றத்தைச் சுற்றிலும் அவர்கள் மனிதச் சங்கிலி அமைத்துப் போராட்டம் நடத்தினர். ''அணு உலைகள் பாதுகாப்பானவை'' என, யாரோ சொல்வதைக் கேட்டு அரசு செயல்படுகின்றது என, போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் குற்றம் சாட்டினர்.

## லெபனானில் 34 ஆயிரம் சிரிய அகதிகள் தஞ்சம்



சிரியாவில் இடம்பெற்று வரும் வன்முறைகள் காரணமாக இதுவரை 34 ஆயிரம் பேர் லெபனானை நோக்கிப் படையெடுத்துள்ளனர் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனிடையே வெளிநாடுகளில் இருந்து ஆயுத உதவியை சிரிய எதிர்த் தரப்புக் கிளர்ச்சியாளர்கள் கோரியுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.


அலெப்போ நகரிலுள்ள பல பகுதிகளிலும் கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக படை நடவடிக்கைகளை சிரிய அரச படையினர் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் அலெப்போ நகரில் குறிப்பிடத்தக்க இரத்தம் சிந்தும் செயற்பாடுகள் இடம்பெறக் கூடுமென மேற்குலக நாடுகள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

## கறுப்பினத்தவரின் திருமணத்தை நடத்த அமெ. தேவாலயம் மறுப்பு

அமெரிக்கத் தேவாலயத்தில், கறுப்பின சோடிக்குத் திருமணம் செய்ய மறுப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் மிசிசிபி மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் சார்ள்ஸ், டி ஆன்ட்ரீயா. கறுப்பினத்தைச் சேர்ந்த இவர்கள் திருமணம் செய்து கொள்ள முடிவு செய்தனர். இதற்காக இந்த மாகாணத்தின் கிறிஸ்டல் ஸ்பிரிங் பகுதியில் உள்ள, தேவாலயத்தின் பாதிரியாரைத் தொடர்பு கொண்டனர்.

''இந்தத் தேவாலயம், 1883இல் கட்டப்பட்டது முதற்கொண்டு, கறுப்பினத்தவருக்குத் திருமணம் செய்தது கிடையாது. எனவே, உங்களுக்கும் திருமணச் சடங்கை இங்கே செய்ய முடியாது'' என, பாதிரியார் ஸ்டேன் வெதர்போர்ட் தெரிவித்துள்ளார். இந்தத் தேவாலயத்தில் சார்ள்ஸ் உறுப்பினராக இல்லை. ஆனால், ஆன்ட்ரியாவின் தந்தை மற்றும் உறவினர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். திருமணத்துக்குப் பின்னர் இந்தத் தேவாலயத்தில் உறுப்பினராக சார்ள்ஸ் திட்டமிட்டிருந்தார். ஆனால், இவர்கள் திருமணம் செய்ய முடியாது என, கூறப்பட்டதால் பிரச்சினை எழுந்துள்ளது.



ஸ்பெயினில் நடைபெற்று வரும் ஷான் வேமின் கொண்டாட்டங்களின்போது காளை அடக்கும் விளையாட்டில் அந்த நாட்டு இளைஞர்கள் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறார்கள்.

### காபூலின் மாவட்ட ஆளுநர் சாவு

ஆப்கானிஸ்தானில் இடம்பெற்றவன்முறைகளில் மாவட்ட ஆளுநர் ஒருவரும், தலிபான் அமைப்பின் உறுப்பினர்கள் 17 பேரும் உயிரிழந்துள்ளனர் என ஆப்கானிஸ்தான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தலைநகர் காபூலிலிருந்து 30 கிலோமீற்றர் தூரத்திலுள்ள சாக் மாவட்டத்தின் ஆளுநரான மொஹமட் இஸ்மாயில் வபா, தனது அலுவலகத்தை நோக்கி சென்றுகொண்டிருந்தபோது, தலிபான் ஆயுததாரிகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்தில் இஸ்மாயில் வபா உயிரிழந்தார்.

இதேவேளை, வேறு பிராந்தியங்களில் நேட்டோ ராணுவத்தினர் கடந்த 24 மணித்தியாலங்களில் நடத்திய தாக்குதல்களில் தலிபான் உறுப்பினர்கள் 17 பேர் உயிரிழந்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்தனர். ஆயுததாரிகள் 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் பெரும் எண்ணிக்கையான கிறனேட்டுகள், இயந்திரத் துப்பாக்கிகள், கைத்துப்பாக்கிகள் என்பன கைப்பற்றப்பட்டன எனவும் ஆப்கானிஸ்தான் உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

## ஒக்ஸ்போர்ட்டில் ஆண்கள் பாவாடை அணியலாம்

ஆண்கள் பாவாடை அணியவும், பெண்கள் கோட் அணிந்து கொள்ளவும் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் அனுமதியளித்துள்ளது.

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் கற்கும் மாணவர்கள், கறுப்பு நிற கோட் மற்றும் ஜீன்ஸ் , கறுப்பு நிற சப்பாத்து அணிய வேண்டும்.

மாணவிகள் கறுப்பு நிற பாவாடையும், வெள்ளை நிற மேலாடையும் அணிய வேண்டும். பல்கலைக்கழகத்தில் இந்த விதிமுறை கடுமையாகப் பின்பற்றப்படுகிறது.

அரவாணிகள், பாலின மாற்றம் செய்து கொண்டவர்கள் தாங்கள் விரும்பும் ஆடையை அணிய அனுமதிக்கும்படி, நீண்ட நாள்களாகக் கோரி வந்தனர். இதன்படி, ஆண்கள் பாவாடை அணியவும், பெண்கள் கோட் மற்றும் ஜீன்ஸ் அணியவும் பல்கலைக்கழக நிர்வாகம் தற்போது அனுமதியளித்துள்ளது.

## சீன தேசபக்தி வகுப்புகளுக்கு எதிர்ப்பு

ஹொங்கொங் பாடசாலைகளில், சீன தேசபக்தி வகுப்புகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, ஏராளமானவர்கள் நேற்று முன்தினம் போராட்டம் நடத்தினர். பிரிட்டன் கட்டுப்பாட்டில் இருந்த ஹொங்கொங், குத்தகைக் காலம் முடிந்ததையொட்டி, 1997ஆம் ஆண்டு, சீனாவிடம் ஒப்படைக்கப்பட்டது. சீனாவின் கட்டுப்பாட்டில் இருந்தாலும், ஹொங்கொங், தன்னாட்சி அதிகாரத்துடன் செயல்படுகிறது. ஹொங்கொங் உள்விவகாரத்தில், சீனா அதிகம் தலையிடுவதாக, மக்கள் பலரிடம் அதிருப்தி நிலவுகிறது. இந்த நிலையில், ஹொங்கொங் பாடசாலைகளில், எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதல், சீன தேசபக்தி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன. ஹொங்கொங் மாணவர்களை மூளைச் சலவை செய்ய, இதுபோன்ற வகுப்புகள் திணிக்கப்படுவதாகக் கூறி, ஏராளமானவர்கள் நேற்று முன்தினம், அரசு அலுவலகங்கள் முன்பாகப் போராட்டம் நடத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரான் மீது தாக்குதல்


## பேச்சு தோற்றால் நடக்கும் என்று அமெ., இஸ்ரேல் எச்சரிக்கின்றன

ஜெருசலேம்,ஜூலை.31

ஈரான் அணு குண்டு தயாரிப்பில் ஈடுபட்டு இருப்பதாக அமெரிக்கா, இஸ்ரேல் உள்ளிட்ட நாடுகள் குற்றஞ்சாட்டி வருகின்றன. ஆனால் இதை ஈரான் மறுத்து வருகிறது. இந்தப் பிரச்சினையைச் சுமுகமாக முடிவுக்குக் கொண்டு வர பேச்சுவார்த்தை நடைபெற்று வருகின்றது. ஈரான் அணுகுண்டு தயாரிப்பதை நிறுத்தா விட்டால் அணு உலை மீது குண்டு வீசுவோம் என்று இஸ்ரேல் ஏற்கனவே மிரட்டல் விடுத்திருந்தது.

இதற்கிடையில் ஈரானுடன் பேச்சுவார்த்தை தோல்வி அடைந்தால் அமெரிக்காவும், இஸ்ரேலும் சேர்ந்து ஈரானுக்கு எதிராக இராணுவ நடவடிக்கையில் ஈடுபட திட்டமிட்டு இருப்பதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன. அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் தூதராக அந்த நாட்டின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் தோமஸ் டோனிலான் 2 வாரங்களுக்கு முன் இஸ்ரேல் சென்றார். ஜெருசலேம் நகரில் அவர் இஸ்ரேல் பிரதமர் பெஞ்ஜமின் நெடன்யாஹூவைச் சந்தித்து இது பற்றி ஆலோசனை நடத்தியதாகத் தெரிய வருகின்றது.

இதேபோல அமெரிக்காவின் வெளியுறவுத் துறை செயலர் ஹிலாரி கிளின்ரனும் பேச்சு நடத்தியதாகவும் கூறப்படுகிறது. ஆனால் அமெரிக்கா, இஸ்ரேல் அதிகாரிகள் இது பற்றி நேரடியாகக் கருத்து தெரிவிக்க மறுத்து விட்டனர். இது தூதுவர் இடையிலான



முக்கிய பேச்சுவார்த்தையாகும். அதில் இடம்பெற்ற விவரத்தை வெளிப்படையாகக் கூற இயலாது என இஸ்ரேல் அதிகாரி கூறி விட்டார். இது போல அமெரிக்க அதிகாரி கூறுகையில், சுமுகமாகப் பேசித் தீர்க்க இன்னும் காலம் இருக்கிறது. ஈரானுக்கு எதிராக இராணுவ நடவடிக்கை மேற்கொள்ள வாய்ப்பு ஏற்படாது எனக் கருதுகிறோம் என பதில் அளித்தார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் ஒபாமாவும், மிட்ரோம்னியும் யூதர்களின் வாக்குகளைப் பெறு வதில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்கள். மிட்ரோம்னி இஸ்ரேல் பிரதமரை சந்திக்க அந்த நாட்டுக்குச் சென்றுள்ளார். எனவே ஒபாமா இந்தப் பிரச்சினையில் தீவிரம் காட்டி வருவதாகக் கூறப்படுகிறது

# தென்கொரியாவின் "அழைப்பை நிராகரித்தது வடகொரியா

வடகொரியா, தென் கொரியாவின் பேச்சுவார்த்தைக்கான வாய்ப்பொன்றை நிராகரித்துள்ளது. இரு நாடுகளினதும் எல்லைத் திறப்பு உள்ளிட்ட கொள்கை மாற்ற குறித்த பேச்சுவார்த்தைக்கு, தென்கொரியா அண்மையில் வடகொரியவை அழைத்திருந்தது.

எனினும் இந்த வாய்ப்பினை வடகொரியா நிராகரித்துள்ளது. வடகொரியாவின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ள கிம் ஜாங் உன், பாரம்பரியத்தை மீறி, புதிய மீளமைப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன. அவரால் அண்மையில் வடகொரியாவின் தலைமை இராணுவ அதிகாரி பதவி நீக்கம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, அந்த நாட்டில் அதிகார ரீதியான குழப்பங்கள் தோன்றியுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்த நிலையில் நாட்டின் பொருளாதார நிலையை கருத்தில் கொண்டு, தென்கொரியாவுடன் சமரசப் பேச்சுவார்த்தைகளை வடகொரியா ஆரம்பித்திருப்பதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன. எனினும் இந்தத் தகவல்களை வடகொரியா நிராகரித்துள்ளது.

## தொலைந்தே... போனவர் 34 வருடங்களின் பின் மீட்பு



இறந்து போனதாகக் கருதப்பட்ட பெண், 34 ஆண்டுகளுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டு மீட்கப்பட்டதால் அவரது குடும்பத்தினர் மகிழ்ச்சியில் உள்ளனர். பிரிட்டனின் சவுத் யார்க்ஷைர் மாகாணத்தில் உள்ளது ரோத்தர்ஹாம் நகரம். இங்கு வசித்தவர் சூசன் அப்ரான். இவரது கணவர் சித். கணவன், மனைவி இருவரும் அடிக்கடி பல விடயங்களில் முரண்பட்டு வந்தனர். இந்த நிலையில் 1975 ஆம் ஆண்டு குறித்த தம்பதியினர் தென் ஆபிரிக்காவுக்குக் குடி யேறினர். 3 ஆண்டுகள் கழிந்த நிலையில் 1978 ஆம் ஆண்டு ஒரு கார் விபத்தில் சூசன் சிக்கிப் படுகாயம் அடைந்தார். அம்னீஷியாவில் பாதிக்கப்பட்டதால் அவருக்குப் பழைய சம்பவங்கள் எதுவும் நினைவில் இல்லை. அவருடைய பெயர் என்னவென்பதே தெரியவில்லை.

ஏற்கனவே மனைவி மீது வெறுப்பில் இருந்த சித், அவருடைய அடையாள அட்டை உட்பட எல்லா ஆதார ஆவணங்களையும் எடுத்துக் கொண்டு 4 குழந்தைகளுடன் பிரிட்டனுக்குச் சென்று விட்டார். எந்த நினைவும் இல்லாமல் சுற்றித் திரிந்த சூசனை, தென் ஆபிரிக்காவின் ஜோகனஸ்பேர்க்கில் உள்ள ஒரு குடும்பத்தினர் மீட்டு காப்பாற்றி வந்தனர். இதற்கிடையில் சூசனைக் கண்டுபிடித்துக் கொடுக்கும்படி பிரிட்டனில் உள்ள அவரது குடும்பத்தினர் செஞ்சிலுவைச் சங்கம் உட்பட பல்வேறு தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை வேண்டிக் கொண்டனர். பல ஆண்டுகள் கழிந்தும் அவர் கிடைக்காததால், சூசன் இறந்து விட்டார் என முடிவு செய்தனர். இந்த நிலையில் சூசனை அவருடைய குடும்பத்தினருடன் சேர்க்க தென் ஆபிரிக்கக் குடும்பத்தினர் தொடர்ந்து முயற்சி மேற்கொண்டனர். பேஸ்புக்கில் அறிமுகமாகும் எல்லா நண்பர்களுக்கும் சூசனின் படத்தை அனுப்பினர்.

இந்த நிலையில் புகைப்படத்தைப் பார்த்த சூசனின் சகோதரர் கோலின், சகோதரிகள் டொன், ஜூலி, கெய்ல் ஆகியோர் ஆச்சரியம் அடைந்தனர். இறந்திருப்பார் என்று நினைத்த சகோதரி உயிருடன் இருப்பது அதிசயம் என்று அனைவரும் ஆனந்தக் கண்ணீர் விட்டனர். இதையடுத்து சூசனுக்கு விசா வழங்கினால், அவர் நாடு திரும்ப வசதியாக இருக்கும் என்று பிரிட்டன் உள்துறை அமைச்சகத்துக்கு சூசன் குடும்பத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர். இப்போது சூசனுக்கு 61 வயதாகிறது. சூசனின் கணவர் சித் கடந்த ஆண்டு இறந்து விட்டார். 4 குழந்தைகளும் சூசனின் குடும்பத்தினர் பராமரிப்பில் உள்ளனர்.


## பிறந்தநாளில் பாராட்டி வாழ்த்துகின்றோம்



### திரு . கந்தன் கணபதி J.P

(உதவிக்கல்விப் பணிப்பாளர் NFE, தீவகம்)

B.A (Geog), Dip.in Edu, M.Ed (Merit)

இன்று எமது அன்பிற்கும், பாசத்திற்கும் உரியவரின் பிறந்தநாளில் நீடூழி வாழ வாழ்த்துவதுடன் 26.06.2012 அன்று யாழ் மாவட்ட நீதிவான் மதிப்பிற்குரிய திரு. A.A. ஆனந்தராஜா அவர்களின் முன்னிலையில் யாழ் மாவட்ட நீதி நிர்வாகப் பிரிவின் சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டமையையும், யாழ் பல்கலைக்கழகத்தின் 26வது பட்டமளிப்பு விழாவின்போது கல்வி முதுமாணி பட்டம் பெற்றமையையும் பாராட்டுவதுடன் பல நலன்களும், சிறப்புக்களும் பெற்று தேவைக்கான சேவைகள் பல புரிந்து சகல சௌபாக்கியங்களும் பெற்று வாழ இன்று தேரேறிவரும் வேலணைப் பெருங்குளத்து மாரியம்மனின் அருட்கடாட்சமும், ஸ்ரீஆதிவைரவரின் ஆசியும் வேண்டி பிறந்தநாளில் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



வாழ்த்துவோர்

மருமகள்
திருமதி. கேசவன் சிவரூபிணி
திருநாவற்குளம், வவுனியா
0244588375

சகலன்–மைத்துனி
ஸ்ரீஸ்கந்தராஜா அருள்வாணி குடும்பம்
வேலணை
0212225607

(20919)(2,6,7)


## ஏலமிடப்பட்டது டைட்டானிக் உணவு?

மூழ்கிய டைட்டானிக் கப்பலில் இருந்து கிடைத்த உணவு 'மெனு' (உணவு வகைகளின் பெயர் பட்டியல்) ரூ.40 லட்சத்துக்குப் பிரிட்டனில் ஏலம் விடப்பட்டுள்ளது.

கப்பல் மூழ்கி 100 ஆண்டுகள் நிறைவடைந்ததை முன்னிட்டு, கப்பலில் இருந்து கைப்பற்றப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வந்த 100-க்கும் அதிகமான பொருள்கள் ஏலம் விடப்பட்டன என 'பி.பி.சி செய்தி' வெளியிட்டுள்ளது.

டைட்டானிக் கப்பலின் முதல் வகுப்பில் பயணித்த பயணிகளுக்குப் பரிமாறப்பட்ட உணவு வகைகள் அடங்கிய 'மெனு' ரூ.40 லட்சத்துக்கு ஏலம் விடப்பட்டது. மெனுவில் 1912 ஆம் ஆண்டு ஏப்ரல் 12 ஆம் திகதியிடப்பட்டிருந்தது.


## பணியாளர்கள் தேவை

திட்ட உத்தியோகத்தர், வெளிக்கள உத்தியோகத்தர் பதவிக்கான பணியாளர்கள் தேவை.
**கல்வித் தகைமை:** A/L
**அனுபவம்:** அரச சார்பற்ற நிறுவனப் பணியிலிருந்து குறைந்தது 2 வருட அனுபவம்
**திறன்கள்:** அறிக்கையிடும் திறன், தமிழ் மொழியில் சரளமாகவும் ஆங்கிலத்தில் ஓரளவும் தொடர்பாடும் திறன்.
**வயது:** 22-45 வரை
மோட்டார் சைக்கிள் வாகன அனுமதிப்பத்திரம் அவசியம்.
அர்ப்பணிப்பு சமூகப்பற்றுடையோர் சுயவிவரக்கோவையுடன் விண்ணப்பிக்கலாம்.
முடிவு திகதி: 05.08.2012
விண்ணப்பங்களை SOND, இல.60, அரசடி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
தலைவர்.
(21159)(6-8-7)

## கோழிக்குஞ்சு விற்பனை

தடுப்பு மருந்து போடப்பட்ட "A" தரமான பிறிமா புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் மற்றும் சிவப்பு சேவல் குஞ்சுகள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். முன் கூட்டியே பதிவுசெய்யவும்.

நல்லூர் பாம் சென்ரர்
#19, முருகேசர் ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம்
தொ.பே: 021 2226944

நல்லூர் பாம் சென்ரர்
கனகபுரம் வீதி,
கிளிநொச்சி
தொ.பே: 077 6225944

சுட்டி பாம் சென்ரர்
வட்டுக்கோட்டை
தொ.பே: 077 8996085

(21061)(6-7-8)

## நீர்ப்பாசனத் திணைக்களம் வடமாகாணம் - கிளிநொச்சிப் பிராந்தியம்
## நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலக யாழ்ப்பாணப் பிரிவிலுள்ள பழைய இரும்புகளை விற்றுத் தீர்ப்பதற்கான
## ஏல விற்பனை அறிவித்தல்

எமது திணைக்களத்திற்கு சொந்தமான கீழ் வரும் இடங்களில் உள்ள குறிப்பிட்ட அளவுடைய பழைய இரும்புகள் ஏல விற்பனை முறை மூலம் விற்றுத் தீர்க்கப்படவுள்ளன. அந்த ஏல விற்பனையில் பங்கு கொள்ள விரும்புவர்கள் குறித்த தினத்தில் சமுகமளித்து இரும்பினைக் கொள்வனவு செய்து கொள்ளலாம்.

| இல | இடம் | அண்ணளவான நிறை | ஏல விற்பனைத் திகதி | நேரம் |
|---|---|---|---|---|
| 01 | தொண்டமனாறு உப அலுவலகம், சந்நிதி | 7.5 தொன் | 08.08.2012 | மு.ப. 10.00 |
| 02 | சி.பொ.ம.க. முதலியார், தலைவர், தேசவள விவசாயிகள் சம்மேளன அலுவலகம், மானிப்பாய் | 1.5 தொன் | 09.08.2012 | மு.ப. 10.00 |

01. மேற்படி இடங்களில் குறித்த இரும்புகளை 01.08.2012 தொடக்கம் பார்வையிட்டுக் கொள்ளலாம்
02. ஏல விற்பனையில் கோரப்பட்ட விலையினை குறித்த தினத்தில் குறித்த இடத்தில் முழுமையாக செலுத்துதல் வேண்டும்
03. ஏல விற்பனையில் கொள்வனவு செய்யப்பட்ட இரும்பினை, விற்பனைத் திகதியில் இருந்து ஏழு (07) வேலை நாள்களினுள் குறித்த இடத்தில் இருந்து அகற்றிவிடல் வேண்டும், அதற்குப் பின்னர் குறித்த இரும்பிற்கு திணைக்களம் பெறுப்பேற்கமாட்டாது.
04. எல விற்பனை தொடர்பான மேலதிகமான ஏற்பாடுகளை திணைக்களத்தால் நியமிக்கப்பட்ட ஏல விற்பனைக் குழுவே தீர்மானிக்கும்

எந்திரி ந. சுதாகரன்
பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர்,
கிளிநொச்சிப் பிராந்தியம்

(C/2006)(6-7-8)

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ். மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் சிறிய குடும்பம் (நடுத்தர குடும்பம்) ஒன்றுக்கு வீடு வாடகைக்குத் தேவை
தொடர்பு:
077 0591119
(21158)(6-7-8)

## 18 ஆம் ஆண்டு நினைவுகள்



தோற்றம்
07.01.1936

மறைவு
21.07.1994

### அமரர் தம்பு துரைராசா

திதி: சதுர்த்தி (31.07.2012)

அன்பு அரவணைப்பு இரண்டும் எமக்களித்த எங்கள் ஐயா!
ஆசியுரை அறிவுரை முறையே எமக்குரைத்த தெய்வமே!
நீங்கள் எமைவிட்டுப் பிரிந்து ஆண்டுகள் பதினெட்டானதையா!
உங்கள் உடல் எமை விட்டுப் பிரிந்ததும் - ஐயா!
எங்கள் கண்முன் நிழல் படமாக உள்ளீர்கள் - ஐயா!
உங்கள் ஆத்மா சாந்தியடையத் தினமும் பிரார்த்தித்து நிற்கும்

அன்பு மறவாத
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,

சங்கானை கிழக்கு,
பண்டத்தரிப்பு,
பிரான்பற்று.

21106) (45.6.7)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சோதனைகள் சாதனைகள் ஆகட்டும்

(11)

ஒவ்வொரு மனிதனும் தனக்கு ஏற்படும் சோதனைகளைத் தானே தான் சந்திக்க வேண்டும். அந்தச் சோதனையில் மற்றவர்கள் பங்குபெற முன்வர வேண்டுமென எதிர்பார்க்கக் கூடாது. அப்படி வருகின்றவர்களும் குறைவாகவே தான் இருப்பார்கள்.

இதனால்தான் கவிஞர் கண்ணதாசன் ஒரு பாடலில், சோதனையில் பங்கு வைத்தால் சொந்தமில்லை, பந்தமில்லை என்று பாடினார்.



நம்முடைய வசதிகளில் பங்கேற்க பலரும் முன்வருவார்கள். ஆனால் நமக்குக் கஷ்டங்கள் ஏற்படுகின்ற போது, அதைப் பகிர்ந்து கொள்ள எவரும் முன்வர மாட்டார்கள். இது உலக நியதி.

எனவே நமக்கு ஏற்படும் சோதனைகளை நாம் மட்டுமே தான் சந்திக்க வேண்டி இருக்கும். அதனால் சோதனைகளைத் தனியாக நின்று சமாளிக்க நாம் எப்போதும் தயாராக இருக்க வேண்டும்.

ஒவ்வொரு மனிதரிடமும் தற்காப்பு உணர்வு தான் மேலோங்கி இருக்கும். அதனால் நம்முடைய சோதனைகளில் பங்கு கொண்டால், தங்களுடைய தற்காப்புக்குப் பங்கம் வந்துவிடுமோ என்றுதான் பலரும் பயப்படுவார்கள். அதைப்போல சோதனைகளின்போது, நம்முடைய தற்காப்பு உணர்ச்சி செயல்பட நாமும் அனுமதிக்க வேண்டும்.

நான் முன்னே குறிப்பிட்டுள்ளதைப் போல நெருக்கடிகளின்போது நம்மிடம் உள்ள தற்காப்பு உணர்ச்சி தானாகவே செயற்படத் தொடங்குகிறது. நம்முடைய மனவலிமையின் மூலம் அதற்கு நாம் பலமூட்ட வேண்டும். நாம் மனவலிமை இழந்தவர்களாக இருந்தால் நம்முடைய தற்காப்பு உணர்ச்சி செயற்பட முடியாமல் ஸ்தம்பித்துப் போகும்.

தற்காப்பு உணர்ச்சி என்பது எல்லா உயிரினங்களிடமும், காணப்படுகின்ற ஒன்றுதான். பழைய தமிழ்ப்பாடல் ஒன்றில் ஒரு கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. குளத்தில் நீர் வற்றி விட்டால், இரை தேடி குளத்துக்கு வரும் பறவைகள் அந்தக் குளத்தை விட்டு நீங்கிப் பறந்து போய்விடும். அதே சமயம் அந்தக் குளத்திலேயே முளைத்து வாழும் தாமரை, அல்லி போன்ற கொடிகள் நீர் வற்றினாலும் அந்தக் குளத்திலேயே விழுந்து கிடக்கும்.

நீர் வற்றினால் பறந்து விடும் பறவைகளைப் போல உறவு இருக்கக் கூடாது. குளத்தில் வளரும் கொடிகளைப் போல உறவு இருக்க வேண்டுமென அந்தப் பாடல் சொல்கிறது.

உவமை பொருத்தமாக இருக்கிறது என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் பறவைகள் உயிர்வாழ வேண்டும் என்றால், நீர் உள்ள வேறு குளத்தைத் தேடிச் செல்வதைத் தவிர வேறு வழியில்லை. கொடிகள் அப்படிச் செய்ய முடியாது. அவை அந்தக் குளத்தின் நீரை நம்பித்தான் வாழவேண்டும். அடிப்படையில் பார்த்தால் பறவைகளும் சரி, கொடிகளும் சரி உயிர் வாழ்வதற்குத் தேவையான சூழ்நிலைகளைத் தான் தேர்ந்தெடுத்துக் கொள்கின்றன.

பழம் பாடலில் கருத்தைக் குறை கூறுவதற்கு நான் இதைச் சொல்லவில்லை. எல்லா உயிரினங்களும், அவை பறவைகளானாலும், தாவரங்களானாலும் தற்காப்பு உணர்ச்சியுடன் செயல்படுவது தவிர்க்கமுடியாதது என்பதை உணர்த்துவதற்காகவே மேலே உள்ள விளக்கத்தை கூறியிருக்கிறேன்.

இந்த தற்காப்பு உணர்ச்சி மனிதரிடமும் இருக்கிறது. ஆனால் அவை தற்காப்புக்கு போராடுகின்ற போது அவன் அமைத்துக் கொண்டுள்ள வாழ்க்கைச் சூழ்நிலைகளுக்கு ஏற்றபடி போராட வேண்டியவனாக இருக்கின்றான்.

இதில் மற்றவர்களின் உதவியை அவன் நாடக் கூடாது என்று நான் சொல்லவில்லை. சோதனைகளைச் சமாளிக்க மற்றவர்களின் உதவி தேவையாக இருக்கலாம். அதை அவன் பயன்படுத்திக் கொள்ளத் தான் வேண்டும். மற்றவர்களின் உதவி கிடைக்காத நிலையில் அவன் சோர்ந்து போய் விடக்கூடாது.

இயற்கையாக வெளிப்படுகின்ற தன்னுடைய ஆற்றலை முழுமையாகப் பயன்படுத்திச் சோதனைகளை சமாளிக்கக் கற்றுக் கொள்ளவேண்டும்.

மனிதனைப் பொறுத்த வரையில் உயிர் வாழ்வது மட்டும் அவனுடைய நோக்கமல்ல. சிந்திக்கின்ற திறமை மனிதனுக்கு இருப்பதால் ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய சிந்தனைக்கு ஏற்றபடி வாழ்க்கையை அமைத்துக் கொள்கிறான். அப்படி அமைத்துக் கொள்கின்ற வாழ்க்கையில் அவனுக்குப் பல சோதனைகள் ஏற்படுகின்றன. அந்தச் சோதனைகளைச் சமாளிக்கும் போது தான் நினைத்ததற்கு ஏற்றபடி வாழ்க்கையை அவனால் அமைத்துக் கொள்ளமுடிகிறது.

அதே சமயம் சோதனைகளைக் கண்டு அவன் அஞ்சுகின்ற போது, நினைத்தபடி வாழ்க்கையை அமைத்துக் கொள்ள முடியாமல் போய்விடுகிறது.

(தொடரும்)

-பி.சி.கணேசன்-

# அடைவு மட்டம் உயர்வடைந்தால்தான் கல்வித் தரத்தைப் பேண முடியும்

## வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

வடமராட்சி,ஜூலை 31

வடமராட்சிப் பிரதேசம் கல்வியில் முன்னணியில் திகழும் பிரதேசம் என்பதை எல்லோரும் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். இந்த நிலை தொடர்ந்து பேணப்பட வேண்டும்.

கல்வியின் அடைவு மட்டங்கள் உயர்வடைய வேண்டும். அடைவு மட்டம் உயர்வடையும்போது கல்வியின் தரநிலையைப் பேண முடியும் என்று வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்தார்.

புலோலி புற்றளை மகாவித்தியாலய வருடாந்தப் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சத்தியசீலன் இவ்வாறு தெரிவித்தார்.

அதிபர் ந.அனந்தேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சத்தியசீலன் மேலும் தெரிவித்ததாவது:-

இன்றைய மாணவர்கள் கல்வியில் தலைசிறந்து விளங்க வேண்டும். கல்வி உயர்வினால் தான் மாணவர் ஒருவர் சமூகப் பற்றுள்ள நற்பிரஜையாக உருவாகமுடியும்.

**மாணவர்கள் கல்வியில் ஆர்வம் கொண்டு இறை பக்தியோடு பெரியோர்களை மதித்து வாழ வேண்டும். பெற்றோர்களினதும், ஆசிரியர்களினதும் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளும் மாணவர்கள் எதிர்காலத்தில் மேல் நிலையடைந்து உயர்வான வாழ்க்கையைப் பெற்றுக் கொள்வார்கள்**

எதிர்கால சந்ததியினர் சமய அறிவுடன் கல்வியில் மேன்மையடைய வேண்டும் என்பதற்காகவே கோயில்களுடன் பாடசாலைகளையும் ஆரம்பித்தார்கள். அவ்வாறே இந்தப் பாடசாலையான புற்றளை மகாவித்தியாலயமும், புற்றளைப் பிள்ளையார் ஆலயத்துடன் கட்டப்பட்டுள்ளது. இதனால் இந்த பாடசாலைக்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு.

இந்தப் பாடசாலை பல அறிஞர்களையும், கல்விமான்களையும் உருவாக்கியுள்ளது. இந்த நிலை தொடர்ந்து நீடிக்க வேண்டும். கல்வியே எமது அழியாச் சொத்து என்பதை நாமனைவரும் மறந்து விடக்கூடாது. இந்தக் கிராம மக்களுடன் புலம் பெயர் வாழ் மக்களும் இந்தப் பாடசாலை அபிவிருத்திக்கு உதவி வருவதையறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். இந்தப் பாடசாலை சமூகத்தின் தேவைகளை மேம்படுத்துவதில் முன்னிலையில் செயற்பட வேண்டும்.

மாணவர்கள் கல்வியில் ஆர்வம் கொண்டு இறைபக்தியோடு பெரியோர்களை மதித்து வாழ வேண்டும். பெற்றோர்களினதும், ஆசிரியர்களினதும் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளும் மாணவர்கள் எதிர்காலத்தில் மேல் நிலையடைந்து உயர்வான வாழ்க்கையைப் பெற்றுக் கொள்வார்கள் என்பதில் ஐயமில்லை - என்றார்.

(எ-8)



பருத்தித்துறை பிரதேச சபை புலோலி பொது நூலகத்தில் நடைபெற்ற வாசகர் வட்டக் கருத்தரங்கில் இளைப்பாறிய நூலகர் இ.தெய்வேந்திரம் உரையாற்றுவதையும், அருகில் பிரதேச சபைத் தலைவர் பூ.சஞ்சீவன், யாழ். மாவட்ட சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி பரமேஸ்வரி யோகராஜா ஆகியோர் அமர்ந்திருப்பதைக் காணலாம். (எ-8)

## பாவோதல் போட்டியில் முதலாமிடம்



யாழ்ப்பாணம், ஜூலை 31

தேசிய மட்டத்தில் நடத்தப்பட்ட தமிழ்த்தினப் போட்டியில் மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவி அ.அமிர்தவர்சினி பிரிவு IV பாவோதல் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்டார். (எ-14)

# கூட்டுறவாளர்கள் போட்டிகளில் பங்குபற்றினால் விளையாட்டு நிகழ்வுகளை அதிகரிக்க முடியும்

## அபிவிருத்தி உதவி ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை 31

சர்வதேச கூட்டுறவு தின விழாவின் விளையாட்டுப் போட்டிகளில் கூட்டுறவாளர்கள் மிகவும் ஆர்வத்துடன் கலந்து கொள்வதன் மூலம் எதிர்காலத்தில் கூட்டுறவின் விளையாட்டு நிகழ்வுகளை அதிகரிக்க முடியும் என்று மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கும் சமாசம் நடத்திய சர்வதேச கூட்டுறவாளர் விளையாட்டு நிகழ்வு யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அருந்தவநாதன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இந்த கூட்டுறவாளர் தின நிகழ்வில் சகல கூட்டுறவாளர்களும் விளையாட்டு நிகழ்வுகளில் கலந்து கொள்வதன் மூலம் கூட்டுறவாளர் விளையாட்டு அணிகளும் அகில இலங்கையில் சிறந்த அணியாக மாறிவருகின்றன.

எமது கூட்டுறவு அமைப்புக்களிலேயே சிறந்த விளையாட்டு வீரர்கள் உள்ளனர். அவர்களை மேலும் ஊக்குவித்து வருகின்றோம்.

அவர்களை அகில இலங்கை ரீதியாக ஏனைய கூட்டுறவு அணிகளுடன் விளையாடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

நிகழ்வில் தலைமைதாங்கி உரையாற்றிய மாவட்ட சிக்கன கடன் வழங்கும் சமாசத் தலைவர் எஸ்.இலகுநாதன் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

எமது சமாசம் விளையாட்டு நிகழ்வுக்கு முக்கிய பங்கு வகிக்கவுள்ளது.

இதற்காக கூட்டுறவாளர்கள் என்ற மகிமையை நிலை நிறுத்த கூட்டுறவு விளையாட்டுக்களை அபிவிருத்தி செய்யவும் சிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கவும் இந்த சமாசம் உரிய நடவடிக்கை எடுக்கும். இதற்கு சகல கூட்டுறவாளர்களும் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும்- என்றார். (எ-17)

## வெற்றி பெற்றோர்



சுன்னாகம்,ஜூலை 31

மாகாண மட்டத் தமிழ்த் தினப் போட்டியில் பிரிவு 5 பேச்சுப் போட்டியில் இணுவில் மத்திய கல்லூரி மாணவன் த.மதுஜனன் முதலாமிடத்தைப் பெற்றுள்ளார்.

அத்துடன் மாகாண மட்ட மெய்வன்மைப் போட்டியில் இதே பாடசாலை மாணவன் பி.பிரசாத் 19 வயது ஆண்களுக்கான குண்டெறிதலில் முதலாமிடம் பெற்றுள்ளார். இவருடன் மோ.மோகன்ராஜ், கு.சர்மில் ஆகிய மாணவர்களும் தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்றத் தகைமை பெற்றுள்ளனர். (எ-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வீதி, முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' -மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' - பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' - கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' - தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' - பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' - மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைச்சிற்றி' - முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' - சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹாரவல்ஸ்' - 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

# சொல்ஹெய்ம் காட்டிய இலங்கையின் மெய்முகம்

பொதுவாக ராஜதந்திரிகள் வெளிப்படையான கருத்துக்களை வெளியிடுவதில்லை. சொல்ல நினைப்பதை வேறு விதத்தில், ஆராய்ந்து கருத்தறியும் வகையில் வெளிப்படுத்துவர். அண்மையில் இதற்கு உதாரணமான சம்பவம் ஒன்று பரபரப்பாகப் பேசப்பட்டது. அதனை இலங்கையில் இருந்து செயற்படுகின்ற அனைத்து ஊடகங்களும் முக்கியத்துவப்படுத்தி பிரகாசமிட்டிருந்தன.

2002 ஆம் ஆண்டுகளில் நோர்வேயின் சமாதானத் தேவனாக வலம்வந்தவர் எரிக் சொல்ஹெய்ம். இவர் விடுதலைப்புலிகளின் மௌனிப்பு வரையிலும் ''செயலூக்கமிக்க செயற்பாடுகளை'' இலங்கை யில் மேற்கொண்டிருந்தார். இவர் பற்றிய பல்வேறான விமர்சனங்கள் பரவலாக முன்வைக்கப்பட்டாலும், இலங்கையோடும், தமிழ் மக்களோடும் நேசம் மிகுந்த உறவைப் பேண விரும்புபவராகவே வலம் வந்தார்; வருகின்றார்.

அப்படியான வலம் வருதலின்போதே சர்ச்சைமிகு கருத்தை சர்ச்சை வெளிப்படாதவகையில் கூறியிருந்தார். இலங்கையில் தனக்கு உயிர் அச்சுறுத்தல் இருப்பதாக குறிப்பிடலாமோ எனத் தெரியாது என்ற கருத்தை வெளிப்படுத்தியிருந்தார். இதனூடாக சொல்லப்பட்ட மறைமுகச் செய்தி என்னவெனில் தனக்கும் இலங்கையில் ஆபத்து இருக்கிறது என்பதே ஆகும்.

இலங்கை மக்களுக்காகவும், இலங்கையின் அரசியல் மாற்றங்களுக்காகவும் ''பல்வேறு வகையான சித்து விளையாட்டுக்களை'' ஆடியவர் சொல்ஹெய்ம் அவர் தமிழர்களுக்கு சாதகமாக செயலாற்றினார் என்பதைவிட இலங்கை அரசுக்கே அதிக இலாபங்களைச் சர்வதேச ரீதியிலும் உள்நாட்டளவிலும் ஏற்படுத்திக் கொடுத்திருந்தார். புலிகளின் பின்வாங்கலுக்கும் அவரின் பங்கு கடைசிவரையில் கணிசமானதாக இருந்தது.

இவ்வாறு இலங்கை அரசோடும், சிங்களவர்களோடும் நெருக்கமானவராக வெளித்தெரியும் எரிக் இலங்கையிலேயே உயிரச்சத்தை எதிர்கொண்டிருப்பது விந்தையானது. ஒரு வெளிநாட்டவர், அதிக நன்றிக்குரியவர், முன்னாள் சமாதானத் தூதர் ஒருவருக்கே இந்தநிலை என்றால் இங்குவாழும் சாதாரண மக்கள் உயிர்வாழ்வதற்கு எவ்வளவு துயரங்களை எதிர்கொள்வர்?

இந்த வினாவுக்கான பதில் இலங்கையில் வாழும் சகலருக்கும் இலகுவாகத் தெரியும். ஏனெனில் இங்கு இருப்பவர்களின் வாழ்வு அனுபவம் என்பது சாவோடும், அச்சுறுத்தலோடும், பீதியோடும் நிறைந்தது தான். ஆகவே அவர்களின் அனுபவத்தை சொல்ஹெய்மின் கருத்து மேலிடப்போவதில்லை. அவரின் கருத்து முற்றுமுழுதாக இலங்கையைக் கவனிக்கும் மனித உரிமையாளர்களுக்கும், வெளிநாட்டு கொள்கை வகுப்புகளைத் தீர்மானிக்கும் கொள்கை வகுப்பாளர்களுக்கும், நாடுகளுடன் உறவுகளை மேம்படுத்தும் இராஜதந்திரிகளுக்கும் உரியதே. அவர்கள் இலங்கையின் மெய்முகத்தை சொல்ஹெய்ம் போன்றவர்களின் கருத்துகளில் இருந்தே கற்றுக்கொள்ள முடியும்.

இலங்கை அரசு வழங்கும் அறிக்கைகளையும், அரச ஊடகங்கள் வழங்கும் செய்திகளையும் கணிப்பிட்டு இலங்கையின் முகத்தைத் தெளிவாக அடையாளம் காண நினைத்தால் அது முட்டாள்தனமே. எப்போதும் உண்மைகள் அனுபவத்துள் வாழ்வதால் அனுபவப்பட்டவர்களின் கருத்துகளுக்கே முதன்மை கொடுக்க வேண்டும். இலங்கை எதிர்வரும் நவம்பர் மாதத்திலும் ஒரு 'கண்டத்தை' சந்திக்க இருக்கிறது. அந்தச் சந்திப்பில் இதுபோன்ற அனுபவக் கதையாடல்கள் சாட்சியாகப் பதிவுசெய்யப்படுமாக இருந்தால் இலங்கையின் மெய்முகம் வெளிச்சத்துக்கு வரும்.

# பலப்பரீட்சையில் பலாலி

## இந்தியா– இலங்கைக்கிடையிலான சிக்கல் நிலம்

*மூலம்: சிலோன் ருடே*

இந்தியத் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன், இலங்கைக்குப் பயணம் மேற்கொள்வதற்குச் சில நாள்கள் முன்னதாக, உள்ளூர் பத்திரிகை ஒன்று, தாக்கங்கள் பல நிறைந்த செய்தி ஒன்றை வெளியிட்டிருந்தது.

பலாலி விமான நிலையத்தைப் புனரமைப்பதற்கான இந்திய உதவியை இலங்கை நிராகரித்தது பற்றியதே அந்தச் செய்தி. இலங்கையின் குடியியல் விமானப் போக்குவரத்து அமைச்சும், இலங்கை விமானப்படையும் இணைந்து, அந்தத் திட்டத்தைக் கூட்டுமுயற்சியாக மேற்கொள்ள முடிவு செய்ததால்தான், இந்தியாவின் உதவி நிராகரிக்கப்பட்டது.

பலாலி விமான நிலையம் மற்றும் காங்கேசன்துறை துறைமுகம் ஆகியவற்றை அபிவிருத்தி செய்வதற்கு, இந்தியாவிடம் இலங்கை உதவி கோரியுள்ளது என 2010 ஏப்ரல் 30ம் நாள், உள்ளூர் ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது.

2011 ஜனவரி 21ஆம் திகதி, யாழ்ப்பாணத்தில் அனைத்துலக வர்த்தக கண்காட்சி திறப்பு நிகழ்வில் உரையாற்றிய இந்தியத் தூதுவர் அசோக் கே காந்தா, அதை உறுதிப்படுத்தியிருந்தார்.

பலாலி விமான நிலையத்தை குடியியல் விமான நிலையமாக மாற்றுவதற்கு இந்தியா உதவும் என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.

இருதரப்பிலும் இருந்தும் இதுபற்றிப் பல அறிக்கைகள் வெளியிடப்பட்டபோதிலும், மேனனின் வருகைக்கு முன்னதாக, பலாலி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்வதற்கு இந்தியாவின் உதவி தேவையில்லை என்று இலங்கை அரசு உறுதியான அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

பலாலி விமான நிலைய அபிவிருத்தியை யார் கையாள்வது என்ற கேள்வி நீண்டகாலத்துக்கு முன்னரே எழுந்து விட்டது. இந்த விவகாரம் தொடங்கியது, 2002, 2004க்கு இடைப்பட்ட ரணில் விக்கிரமசிங்கவின் அரசின் காலத்தில்தான். பலாலி விமானதளத்தைப் புனரமைப்புச் செய்யவும், ஓடுபாதையைத் தரமுயர்த்தவும், இந்தியாவின் உதவியை ரணில் விக்கிரமசிங்க கோரியிருந்தார்.

அப்போதைய பாதுகாப்புச் செயலர் ஒஸ்ரின் பெர்னான்டோ தனது புத்தகத்தில், இலங்கை அரசு சில பொறுப்புகளை நிறைவேற்றினால் நிபந்தனையுடன் உதவ இந்தியா முன்வந்ததாக குறிப்பிட்டுள்ளார். எனினும், இந்தியாவின் மூன்று நிபந்தனைகளும் இலங்கையின் இறையாண்மையை மீறும் வகையில் அமையக்கூடும் என்றுதான் தெளிவாகப் புரிந்து கொண்டதாக அவர் தனது புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

''இந்தியர்கள் ஓடுபாதையின் அபிவிருத்தி தொடர்பில் பணியாற்ற ஆர்வம் கொண்டிருந்தார்கள் என்றும் குறிப்பிட்டுள்ள அவர், அது சார்ந்த எந்தவொரு வேலையும் இந்தியாவின் நம்பிக்கைக்கு உரியதாக இருக்க வேண்டும் என்றும், எந்தவொரு அரசையும் பரிசீலிக்க முன்னர் இந்தியாவே முதலாவது தெரிவாக இருக்க வேண்டும் என்றும் அவர்கள் விரும்பியதாகக் கூறியுள்ளார். இந்தியாவின் இரண்டாவது வேண்டுகோள், பலாலி ஓடுபாதையை இராணுவ நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்த எந்தவொரு மூன்றாவது நாட்டுக்கும் அனுமதி அளிக்கக் கூடாது என்பதாகும்.

அடுத்த நிபந்தனை, கோரிக்கை விடுத்தால் ஓடுபாதையைப் பயன்படுத்துவதற்கு இந்தியாவுக்கு அனுமதி அளிக்க வேண்டும் என்பது. எனினும், மூன்றாவது நிபந்தனை நாட்டின் இறையாண்மைக்குத் தீங்கு விளைவிக்கும்'' என்று கூறியுள்ள முன்னாள் பாதுகாப்புச்செயலர் ஒஸ்ரின் பெர்னான்டோ, அதற்கான காரணங்களையும் விளக்கியுள்ளார்.

''முதலாவது நிபந்தனைகளின் அடிப்படையில் இந்தியர்களிடம் எந்த மேலதிக வேலையையும் ஒப்படைப்பதில் எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை என்று நான் எனது அமைச்சரிடம் குறிப்பிட்டிருந்தேன். நான் அவருக்கு இரண்டாவது மூன்றாவது நிபந்தனைகள் குறித்து விளக்கமளித்தேன். அமைச்சரின் ஆலோசனையின் பேரில், நான் இந்த விடயம் தொடர்பாக நிருபம் சென்னுடன் தொலைபேசியில் கலந்துரையாடினேன்''

''அப்போது பிராந்திய பூகோள நிலைமைகளின் அடிப்படையில் இரண்டாவது நிபந்தனையின் தன்மை குறித்த கவலையை அவரிடம் வெளிப்படுத்தினேன். மூன்றாவது தரப்பு ஒன்று ஓடுபாதையைப் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டால், அது இந்தியாவின் நலன்களை மறைமுகமாகப் பாதிக்கும் என்று அவர் சொன்னார். அது உண்மையான நிலைமையே. அவரது கருத்தை நான் ஏற்றுக்கொண்டேன். அதற்குப் பதிலாக அவர் இன்னொரு வேண்டுகோளை விடுத்தார்''

''இலங்கை மூன்றாவது நாட்டின் மீது மேற்கொள்ளும் ராணுவ நடவடிக்கைகளுக்குப் பலாலியைப் பயன்படுத்துவதற்கு தமது தரப்பில் எந்த எதிர்ப்பும் இல்லை என்றும், கூட்டு நடவடிக்கைக்கு இந்தியாவுக்கு முதலில் சந்தர்ப்பம் வழங்க வேண்டும்'' என்றும் அவர் கூறினார்.

''இந்த நிபந்தனை விடயத்தில் முடிவெடுக்கும் நிலைக்கு அப்பால் நான் இருந்தேன். இந்த விவகாரத்தில் புவியியல் கரிசனைகள், வெளிநாட்டு உறவுகள் ஆகியவற்றின் அடிப்படையில் இலங்கை அரசு எப்படிப்பட்ட கருத்தை வெளியிடும் என்று எனக்குத் தெரியவில்லை. நிபந்தனைக்கு இணங்குவது எமது பூகோள அரசியல் நிலைப்பாடுகளுக்கு எத்தகைய பாதிப்பை ஏற்படுத்தும் என்று நான் கவலை கொண்டிருந்தேன்''

''இந்த விவகாரம் எனது அதிகாரத்தின் கீழ் இல்லாததால், அது பற்றிப் பிரதமர் இந்தியத் தூதுவருடன் கலந்துரையாட வேண்டும் என்று அமைச்சரிடம் பரிந்துரை செய்தேன். இந்தக் கோப்பைக் கையளித்து விட்டு, எனது மேசைக்கு மீண்டும் வரும் என்று சில நாள்கள் காத்திருந்தேன்'' பாதுகாப்புச் செயலர் திலக் மாரப்பனவின் குறிப்புத்தான் கிடைத்தது. நான் அதிர்ச்சியடைந்தேன்.

அதில் பின்வருமாறு எழுதியிருந்தது.

''இந்த விடயம் தொடர்பாக பிரதமருடன் கலந்துரையாடியுள்ளேன். இந்தியா இந்த ஓடுபாதைப் புனரமைப்பில் ஈடுபடவேண்டும், பலாலி விமான நிலையத்தை இலங்கை மட்டும் பயன்படுத்த வேண்டும் என்பதே அவரது கருத்தாக இருந்தது. இல்லாவிட்டால், இலங்கையின் நிதியிலேயே அந்தப் பணியை மேற்கொள்ளலாம் என்றார். எவ்வாறாயினும், அவர் இதுபற்றி அமெரிக்காவில் இந்தியப் பிரதமருடன் கலந்துரையாடுவார். அவர் திரும்பும் வரை நாம் காத்திருப்போம்'' என்று குறிப்பிட்டிருந்தார் திலக் மாரப்பன.

''வேறு வகையில் சொல்வதானால், இந்த நிபந்தனைகளுடன் பலாலி விமான நிலைய புனரமைப்புப் பணியை இந்தியாவிடம் வழங்க முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தயாராக இருக்கவில்லை. சிலகாலம் கழித்தும்கூட பிரதமரிடம் இருந்து எந்தப் பதிலும் வரவில்லை''

''நான் அவருடன் பேசினேன். ஆனால் அவரிடம் உறுதியான முடிவு இல்லை. ஓர் இறையாண்மையுள்ள நாட்டினால் ஏற்றுக்கொள்ள முடியாததாக - இந்தியாவின் கோரிக்கை இருந்தது என்பதை அந்தக் கலந்துரையாடலில் இருந்து என்னால் விளங்கிக் கொள்ள முடிந்தது''

இந்தப் பிரச்சினை தொடர்பிலான உடன்படிக்கையை ராஜீவ் காந்தி- ஜே.ஆர். ஜெயவர்த்தனா காலத்தில் செய்திருந்தனர். அதில் இந்தியப் பாதுகாப்புக்கு இலங்கை எப்போதும் கரிசனையுடனேயே எந்தவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் பூகோள அரசியலில் மாற்றம் நிகழ அதிலும் மாற்றம் ஏற்பட்டது. இப்போது ''மறைமுகமாகச் சொல்வதானால் பிரதமர் 5 மில்லியன் டொலர்களுக்காக இலங்கையின் இறைமையை விற்கத் தயாராக இல்லை.

2003 நவம்பர் 3ஆம் திகதி அப்போதைய இலங்கை ஜனாதிபதியால் நான் பதவி நீக்கப்பட்டதை அடுத்து, ரணில் விக்கிரமசிங்க அரசின் பலாலி விமான நிலையத்தைப் புனரமைக்கும் நடவடிக்கைகள் முடிந்து போயின.

தன்னிடம் இருந்து பாதுகாப்பு அமைச்சை சந்திரிகா குமாரதுங்க எடுத்துக் கொள்வதில், இந்திய அரசு செல்வாக்குச் செலுத்தி, தூபம்போட்டிருக்கலாம்'' என்கிறார் முன்னாள் பாதுகாப்புச் செயலர். பாதுகாப்பு அமைச்சை சந்திரிகா பொறுப்பேற்றதும் 2004 ஜனவரி 1ஆம் திகதி இலங்கை ராணுவத் தளபதி லயனல் பலகல்ல இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டு பலாலி விமானதளத்தை தரமுயர்த்துவது குறித்து கலந்துரையாடினார்.

இந்தியாவும் உதவுவதாக இணங்கியுள்ளது என 2004 ஜனவரி 2ஆம் திகதி வெளியான டெய்லி நியூஸ் செய்தி வெளியிட்டிருந்தது.

இந்த நிலையில், மீண்டும் ஒருமுறை பலாலி விமானதள அபிவிருத்தி விவகாரம் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான ஒரு இடைவிடாத சிக்கலாக உருவெடுத்துள்ளது. அப்போது இந்தியாவின் கையில், இனப்போர் என்ற துருப்புச்சீட்டு இருந்தது.


இப்போது இந்தியா பலமான நிலையில் இல்லை. அதன் ஆதரவுடன் இலங்கையில் இடம்பெற்ற போர் முடிந்து விட்டது. இதனால், இந்தியா இப்போது பேரம்பேசும் கருவிகள் ஏதுமின்றி வெறும் கையுடன் நிற்கிறது.

(நன்றி புதினப்பலகை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறையொன்றும் இல்லாதிருக்க...

■ சோபனா





யாழ். போதனா வைத்திய சாலையில் 5 ஆம் இலக்க விடுதிக்கு முன்னால் மாற்றுத் திறன் கொண்ட சிறுவர்களை பெற்றோர் சுமந்தபடி நிற்பதை நான் அவதானித்த போது ஏன் இவர்கள் இப்படி நிற்கிறார்கள் என்பதை அறிய எனக்கு ஆவல் ஏற்பட்டது.

குழந்தையைச் சுமந்தபடி நின்ற ஓர் தாயிடம் ஏன் நிற்கிறீர்கள் எனக் கேட்டேன் கிளினிக்குக்கு வந்திருப்பதாகக் கூறினார் .

"நான் பருத்தித்துறையில் இருந்து வந்திருக்கிறேன் பிள்ளைக்கு 7 வயது பிறப்பில் இருந்து கைகால் செயல் இழந்து சுயமாக நடக்க முடியாமல் இருக்கிறான் அதுதான் இங்கை சிகிச்சை பெற வந்தேன் " என்றார்

நின்ற நிலையில் மணிக்கணக்காக காத்திருந்து மாற்றுத்திறன் கொண்ட சிறுவர் சிகிச்சைப் பிரிவுக்குள் அவர்கள் உள் நுழைவதை அவதானிக்க முடிந்தது.

யாழ். மாவட்டத்தில் மாற்றுத் திறன் கொண்டவர்களுக்கென ஓர் தனிப்பட்ட வைத்தியசாலை இல்லாவிட்டாலும் மாற்றுத்திறன் கொண் சிறுவர்களுக்கான ஓர் சிகிச்சை நிலையம் யாழ். போதனா வைத்திய சாலையில் அமைந்திருப்பது பலருக்கு தெரியாது .

ஒரு சிறிய அறை அங்கு 3 சிகிச்சையாளர்களும் ஒரு உதவியாளரும் மட்டுமே காணப்பட்டனர். வெளியிலே இப்படிக் காவல் நிற்பதற்கு இதுதான் காரணம் சிகிச்சை வழங்கப்படும் இடத்தில் 5 பேருக்கு அதிகமாக நிற்க இடம்இல்லை. அங்கு சிகிச்சை வழங்கிக்கொண்டிருந்த தொழில் வழிச் சிகிச்சையாளர் என்.கணேசலிங்கத்துடன் சிறிது கலந்துரையாடிய போது தொழில் வழி சிகிச்சைப் பிரிவு மாற்றுத்திறன் கொண்ட சிறுவர்களின் குறிப்பாக அங்ககங்கள் பலவீனமடைந்த சிறுவர்களின் உடல் ஆரோக்கியத்துக்காக இந்தச் சிகிச்சைப் பிரிவு ஆரம்பித்து வைக்கப்பட்டது. வடமாகாணத்தில் ஒரோயொரு தொழில்வழி சிகிச்சைப்பிரிவு யாழ்.போதனா வைத்தியசாலையில் மட்டுமே உள்ளது. 2005 ஆம் ஆண்டு முதல் இந்தச் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது. யாழ்.போதனா வைத்தியசாலையில் இப்படியொரு சிகிச்சைப் பிரிவு இருப்பதே பலருக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை. ஏனெனில் இது இருக்கும் இடம் மிகச் சிறிய கட்டடத் தொகுதி. அத்துடன் ஒரே நாளில் அதிகமானவர்களுக்கு சிகிச்சை வழங்கக் கூடிய ஆளணிகளோ, இடவசதிகளோ, பௌதிக வளங்களோ இல்லை.

யாழ்.போதனா வைத்தியசாலையில் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதும் தனிப்பட்ட ஒரு சிகிச்சைப் பிரிவுக்கு அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படவில்லை. எனினும் வைத்தியசாலையின் 24 ஆம் விடுதியுடன் இணைந்ததுடன் தொழில் வழி சிகிச்சைப் பிரிவுக்காக ஒரு சிறிய இடம் ஒதுக்கப்பட்டுள்ளபோதும் (அதாவது கட்டி முடிக்கப்பட்டுள்ள போதும்) அது செயற்பாட்டில் இல்லை. பெயர்ப் பலகை பொருத்தப்பட்டு தற்போதும் காட்சியறையாகவே காணப்படுகிறது. இது தொடர்பாக தொழில் வழிசிகிச்சையாளர் தெரிவிக்கும் போது -

2011 ஆம் ஆண்டு இந்தக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டது. ஆனால் சிகிச்சைப் பிரிவு இயங்குவதற்கான உபகரணங்கள் கிடைக்கப்பெறததால் அவை வைத்தியசாலை நிர்வாகத்தால் எம்மிடம் ஒப்படைக்கவில்லை. சிகிச்சைப் பிரிவுக்குத் தேவையான உபகரணங்களை சேகரிக்கும் முயற்சியை வைத்தியசாலை நிர்வாகம் மேற்கொண்டு வருகின்றது என்றார்.

வடமாகாணத்தில் ஒரேயொரு சிகிச்சைப் பிரிவாக இயங்கிக்கொண்டிருக்கும் இந்த சிகிச்சைப் பிரிவுக்கு தேவையான உபகரண வசதிகள், தொழில்நுட்ப உபகரணங்கள் என்பன கிடைக்கப்பெறாததால் மாற்றுவலுவுடைய சிறுவர்கள் பலர் சிகிச்சை பெற முடியாமல் உள்ளனர்.

நிற்க முடியாமல், உட்கார முடியாமல் , நடக்க முடியாமல் என பிறப்பிலிருந்து அவதிப்படும் சிறுவர்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு அவர்களை ஆரோக்கியமானவர்களாக மாற்றி அமைக்க வேண்டிய பொறுப்பு இருப்பதால் இந்தச் சிகிச்சைப் பிரிவுக்கான அடிப்படை வசதிகள் பெற்றுக்கொடுக்கப்பட்டால் மட்டுமே முடியும்.

வடமாகாணத்தில் மட்டும் அல்லாது வெளிமாவட்டங்களில் இருந்தும் இங்கே சிகிச்சை பெற வந்த வண்ணம் உள்ளனர். இவர்களுக்கான தங்கிமிட வசதிகள் எம்மிடம் இல்லாத பட்சத்தில் அவர்கள் வெளியிடங்களில் தங்கியிருந்தே சிகிச்சை பெற வருகிறார்கள். ஒரு மாதத்தில் குறைந்தது 14 பேருக்கு எம்மால் சிகிச்சை வழங்கக் கூடியதாக உள்ளது. இவை சிறுவர் பிரிவில் மட்டுமே இதைத் தவிர மற்றைய விடுதிகளில் தங்கி நின்று சிகிச்சை பெறும் அங்கவீனம் அடைந்தவர்களுக்கு சிகிச்சை வழங்கப்படுகின்றது.

இவ்வாறு பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டு வரும் தொழில் வழிச் சிகிச்சைப் பிரிவில் மாற்றுத் திறன் கொண்ட சிறுவர்களும் பயன் பெற்று எதிர்காலத்தில் ஆரோக்கியமானவர்களாக உருவாக வைத்திய சாலை நிர்வாகம் உரிய உபகரணங்களையும் வசதிகளையும் நிதி ஒதுக்கீட்டையும் ஏற்படுத்தி கொடுத்து, மாற்றுத்திறன் சிறுவர்கள் வாழ்வில் ஒளியேற்றுமா?

# காளான் செய்கை

## ஒரு அறிமுகக் குறிப்பு



■ உ.அர்ச்சனா
விவசாயபீடம், யாழ்ப்பாணம்.

காளான் எனப்படும் உணவு வகையானது, உயர் பூஞ்சணங்கள் எனும் பாகுபாட்டில் அடங்குகின்றது. இற்றைக்குப் பல வருடங்களுக்கு முன்பிருந்தே மக்கள் காளானை உணவுக்காகப் பயன்படுத்தி உள்ளனர். இது தற்போது மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு உணவாக மாறி வருகின்றது.

உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வது மட்டுமல்லாது, காளான் வருமானத்தை ஈட்டித் தருகின்ற நல்லதொரு முயற்சியும் ஆகும்.

காளானில் நீர், சக்தி, புரதம், கொழுப்பு, கல்சியம், இரும்பு, தயமின், ரைபோபிளேவின், நியாசின், விற்றமின் சி என்பன காணப்படுகின்றன.

இவற்றில் மாமிசத்துடன் ஒப்பிடும்போது, காளானில் காணப்படுகின்ற கொழுப்பின் அளவானது மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. எனவே கொலஸ்ரோல் அதிகமாகக் காணப்படுகின்றவர்கள் இந்தக் காளானைத் தயக்கமின்றி தமது உணவில் சேர்த்துக் கொள்ளலாம்.

இலங்கையில் பிரதானமாக இரு வகைக் காளான்கள் செய்கை பண்ணப்படுகின்றன.

1. சிப்பிக் காளான்
2. வைக்கோல் காளான்

### காளான் செய்கைக்குரிய அடிப்படைத் தேவைகள்

1. ஈரப்பதன் மற்றும் குறைந்த வெப்பநிலையைப் பேணக்கூடிய வகையில் அமைக்கப்பட்ட சிறிய கொட்டில்
2. ஆரோக்கியமான காளான் வித்திகள்
3. காளான் வளர்ப்பு ஊடகங்கள் (மரத்தூள் மற்றும் வைக்கோல்) என்பவற்றை நீராவியில் அவிப்பதற்கு பொருத்தமான பீப்பாய்.

### கொட்டில் அமைக்கும் முறை

குறைந்த வெப்பநிலை, ஈரப்பதன் மற்றும் காற்றோட்ட வசதி கூடிய கொட்டில் அமைக்க வேண்டும். கொட்டிலின் கூரையானது கிடுகினால் (தென்னை ஓலை) வேயப்பட வேண்டும். நில மட்டத்திலிருந்து 3-4 அடி உயரம் வரை செங்கற்களினாலும் மற்றும் சுவரிலிருந்து கூரைவரையுள்ள பகுதிகளைத் திறந்து மூடத்தக்கவாறு உள்ள சாக்கினாலும் தயார் செய்யலாம்.

கொட்டில்களை நிழலான பகுதியில் அமைப்பது சாலச் சிறந்தது.

கொட்டிலில் 2 பகுதிகள் காணப்படும்.

1. அடைகாக்கும் அறை (Incubation Room)
2. அறுவடை அறை (Cropping Room)

அடைகாக்கும் அறை சிறிய பகுதியாகக் காணப்பட வேண்டும். இருள் அதிகமாக காணப்பட வேண்டும். இந்தப் பகுதி பூஞ்சணங்களை வளர்ப்பதற்குரிய மரத்தூள் அல்லது வைக்கோல் அடங்கிய பைகள் அடைகாப்பதற்காக வைக்கப்படும்.

காளானை அறுவடை செய்யும் தருணத்தில் அறுவடை அறைக்கு மாற்றப்படும். இந்த அறையானது விசாலம் கூடியதாகவும் வெளிச்சம் மற்றும் காற்றோட்டம் சற்று அதிகமானதாகவும் இருக்க வேண்டும்.

### காளான் வித்துக்களைப் பெறல்

தரமான காளான் வித்துகளை பெறுகின்றபோது காளான் செய்கையின் வெற்றியானது அதிகமாகக் காணப்படும்.

வித்துப் பைகளை வாங்குகின்ற போது சீராக வெள்ளை நிறம் பரவியுள்ள வித்துப்பையைக் கவனித்து வாங்க வேண்டும். காளான் வளர்ப்பு ஊடகத்தை தொற்று நீக்கம் செய்வது மிக முக்கியமான ஒன்றாகும். இதற்காக பீப்பாய்களைப் பயன்படுத்தலாம்.

### செய்கை பண்ணும் முறை

1. மரத்தூள் கொண்ட பைகளை ஆயத்தம் செய்தல்.

### தேவையான மூலப்பொருள்கள்

7 அங்குல அகலமும், 13 அங்குல நீளமும் உடைய 200 கேஜ் தடிப்புடைய பொலித்தீன் பைகள், பஞ்சு, இறப்பர் பட்டி, மரத்தூள் (மா மரத்தூள் பொருத்தமானது)

2. ஊடகத்தை தயார் செய்தல்
மரத்தூள்-100 Kg
அரிசித் தவிடு-10 Kg
கல்சியம் காபனேற்/தொலன மற்று/நீர் சுண்ணாம்பு-2 Kg
சோயா மா/ பாசிப் பயற்றம் மா/1 Kg
மக்னீசியம் சல்பேற்று-200g

சுத்தமான பொலித்தீன் மேல் மரத்தூளை இட்டு அதனுடன் அரிசித் தவிடு, சோயா மா, கல்சியம் காபனேற்று சேர்த்து கலக்கவும். பின்பு மக்னீசியம் சல்பேற்றை நீரில் கரைத்து மேற்குறிப்பிட்ட கலவையுடன் சேர்த்து நன்றாக கலக்க வேண்டும்.

இந்தக் கலவையை உருண்டையாக பிடிக்கும் போது கை விரல்களுக்கிடையே நீர் கசியாத மட்டில் இந்தக் கலவையில் நீர் இருக்க வேண்டும். பின்பு ஆயத்தம் செய்யப்பட்ட பொலித்தீன் பையின் முக்கால் பாகம் (3/4) உயரம் வரை இறுக்கமாக நிரப்ப வேண்டும்.

இதன் பின்பு பைகளின் திறந்த பக்கத்தை பி.வி.சி (P.V.C) குழாயினுள் புகுத்திப் பஞ்சினால் அடைத்தபின் கடதாசித் துண்டால் மூடி இறப்பர்பட்டி இடவும். இவ்வாறு தயார் செய்யப்பட்ட ஊடகத்தைப் பீப்பாயினுள் வைத்து 2 மணித்தியாலம் வரை அவிக்க வேண்டும். 1 நாள் வைத்திருந்த பின் குளிர்வடைந்த பைகளின் பஞ்சினை அகற்றவேண்டும்.

இதன் பின்னர் 1 தேக்கரண்டிக் காளான் வித்துகளை 1 பையினுள் இட்டு பஞ்சினால் மீண்டும் இறுக்கமாக மூடவும். இந்தப் பைகளைக் கொட்டிலின் இருளடைந்த அடைகாக்கும் பகுதியில் 25-30 நாள்கள் வரை வைக்கவும்.

இந்தக் காலப்பகுதியில் வளர்ச்சியடைந்த வெண்ணிறமான இழைகள் காணப்படும். இந்தச் சந்தர்ப்பத்தில் வளர்ப்பு ஊடகத்துக்கு மேல் காணப்படும் பொலித்தீனை வெட்டி அகற்றிய பின்பு அறுவடை கொட்டிலிற்கு இந்தப் பைகளை மாற்றவும்.


இந்த அறுவடை கொட்டிலில் பைகளைக் கிடையாக அடுக்கி வைக்கவும். பின்பு சரியான ஈரப்பதனை பேணுவதற்காகக் காலையிலும் மாலையிலும் தெளி கருவியினால் நீரை விசிற வேண்டும்.

7-10 நாள்களின் பின் தரமான காளான் தயாராகிவிடும். இவ்வாறு ஒரு பையிலிருந்து 8-10 தடவைகள் அறுவடையை மேற்கொள்ள முடியும்.

காளான் செய்கையானது குறைந்த முதலீட்டுடனும் அனைவரினாலும் மேற்கொள்ளக்கூடிய ஒரு தொழில் முயற்சியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அட்டதிக்கும் ஆட்சி புரியும் நல்லூர் சட்டநாத சிவன்


நல்லூரானின் 6 ஆம் நாள் வீதி உலாக் காட்சி


விரும்பியோர் மாருதி சுசுகி கார்களில் பயிற்சியினைப் பெறலாம்.
L ESTY LEARNERS L
REGISTERED "A" GRADE,
DRIVING TRAINING, SCHOOL (Reg.no.402)
உரிமையாளர்:-சொக்கலிங்கம் - பாஸ்கரன்.
தொ.பே.0771749387


## வரலாற்று தனித்துவத்துடன்



ஆதிச்சைவம், சமணம், பௌத்தம்
நாயன்மார்களின் மறுமலர்ச்சிச் சைவம்
சோதியாய் நிற்கும் இறையை
அருவம், அருவுருவம், உருவமுமாய்
ஆதியிலிவை ஒன்றாயுமில்லை
ஒன்றுடன் ஒன்று கலவாமலுமில்லை
மேதினி போற்றும் அறுவகைச் சமயமும்
தொன்மையருள் மாறாத நல்லைக் குமரனும்
பல்லவர்காலச் சிற்பங்களை ஏற்றும்
ஏற்காமலும் வரலாற்றுத் தனித்துவத்துடன்!



இராம ஜெயபாலன்,
கொக்குவில்.

## விழுந்து கும்பிட்டால் வில்லங்கம் வராது



நல்லூரை வலம் வந்தே ஞானத் தங்கமே
நாங்கள் எல்லோரும் விழுந்து கும்பிட்டால்
வில்லங்கம் வராதடி ஞானத்தங்கமே!
விடிவெமக்குத் தோன்றுமடி ஞானத்தங்கமே
எல்லாமே தருவானடி முருகன் ஞானத்தங்கமே
எங்களுக்கு நல்லூரான் தஞ்சமடி ஞானத்தங்கமே!
பொல்லாப் பொன்று மில்லையடி ஞானத்தங்கமே!
பொற் கோயில் வலம் வந்து கும்பிட்டால் ஞானத்தங்கமே

மதுரகவி எம்.பி.அருளானந்தன்.


ஹொட்டல் றொலக்ஸ்
ஓடர்கள் குறித்த நேரத்தில் செய்துகொடுக்கப்படும்.
340, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 2808
360, காலி வீதி, கொழும்பு-06, தொ.பே: 2360462





## தேர்த் திருவிழா

சித்திகள் எட்டும் சிறக்கவருள் செங்கற்படைத் தேவன்
முத்திகள் நான்கும் முன் பணியும் முனிவர்களுள் முதல்வன்
பக்திகள் பல பேசி பரவி வரும் அடியார் வெள்ளம் மீதே
தெப்பமாய் மிதந்து வந்தான் முகபத்திர சித்திரத் தேரில்

ஆக்கம்: சங்கை – சிவம்

சிறப்புற வாழ்த்துவோர் :
சின்னத்துரை குணரத்தினம் அன்னலட்சுமி நினைவாக
ஆஸ்பத்திரி வீதி, சங்கானை.



எஸ்.யேசுதாஸ்

ஆலயங்கள் என்பது சமய வழிபாட்டிடங்கள் என்பதற்கு அப்பால் ஒரு இனத்தின் தொன்மையையும் பூர்வீக வரலாற்று, கலை, பண்பாட்டு சான்றாதாரங்களையும் சுமந்த மரபுரிமைச் சொத்துக்களாகவும் விளங்குகின்றன.

இந்துக்களது பண்பாட்டையும், சமயப்பற்றையும், இருப்பையும் நாகரிகத்தையும் புராதன காலந்தொட்டு பாதுகாத்து வரும் ஆவணக் காப்பகங்களாக இந்து ஆலயங்களின் தோற்றுகையும், வளர்ச்சியும் இருந்து வருகின்றன.

எமது பகுதிகளில் உள்ள ஒவ்வொரு இந்து ஆலயமும் எங்கள் மூதாதையரின் பரம்பரைச் சொத்தாகும். சைவத் தமிழ் மக்களின் உன்னதமான சமய விழுமியங்களையும் உலகியல் வாழ்க்கை மதிப்பீடுகளையும், அரிய கலைச் சின்னங்களையும் கட்டிக் காத்து வரும் கலாசாரப் பொக்கிஷங்களாகும்.

இவ்வாறான ஆலயங்களின் வரலாறுகளானது பெரும்பாலும் ஆவணப்படுத்தப்படாது, ஐதீகங்களாகவும் மரபு வழிச் செய்திகளாகவும் பின்பற்றப்பட்டு வருவனவாகவே காணப்படுகின்றன.

எனவே அவற்றின் தொன்மையான வரலாறுகளைத் தேடித் தொகுத்து, பேணிக் காப்பாற்றி, அடுத்த தலைமுறையினரிடம் கையளிக்க வேண்டியது காலத்தின் இன்றியமையாத தேவையாக அமைகிறது. அந்த வகையில் யாழ்ப்பாண அரசின் இராசதானியாக நல்லூர் விளங்கிய காலத்தில் சிறப்புடன் துலங்கிய ஆலயங்களில் ஒன்றான நல்லூர் சட்டநாதசிவன் ஆலயத்தின் வரலாற்றினைச் சற்று நோக்குவோம்.

நல்லூரில் உள்ள மந்திரிமனை, யமுனாஏரி, பூதத் தம்பிவளவு, முத்திரை மண்டபம், புராதன அரண்மனையின் முகப்பாகிய சங்கிலித் தோப்பு ஆகியவற்றை அண்மித்த சூழலில் யாழ்-பருத்தித்துறை வீதியின் மேற்குப்புறமாக சட்டநாதர் சிவன் வீதிச் சந்திப் பகுதியில் பழம் பெரும் ஆலயமான சட்டநாதர் சிவன் கோயில் அமைந்துள்ளது.

இந்தக் கோயிலின் தோற்றுகை இரண்டு விதமான ஐதீக, வரலாற்று ஆதாரங்களைக் கொண்டு கூறப்படுகிறது. ஐதீக கதைகளின் படி, சட்டை முனி என்னும் சித்தர் ஒருவர் பள்ளி கொண்ட சமாதி, பின்நாளில் சிவன் ஆலயமாகி-சட்டநாதர் என மருவி வந்ததாக எண்ணப்படுகிறது.

முற்காலத்தில் பழந்தமிழ் நூல்களில் இறந்தவர்களைச் 'துஞ்சினோர், பள்ளி கொண்டார்' எனக் குறிப்பிடப்படுகிறது. பள்ளி கொண்ட இடத்தில் அமையும் ஆலயங்கள் பள்ளிப்படை ஆலயங்கள் என அழைக்கப்படும். இவ்வாறு தமிழகத்தில் சோழ மன்னர்கள் சிலரை அடக்கம் செய்த சமாதிகளிலும் சிவாலயங்கள் காணப்படுகின்றன. விஜயாலச் சோழீஸ்வரம், இராஜராஜேஸ்வரம் போன்ற சில ஆலயங்கள் உதாரணமாகும்.

உடல் அழியக் கூடியது. ஆன்மா அழிவில்லாதது என்னும் இந்துக் கோட்பாட்டுக்கமைய சக்திபடைத்தவர்கள் இறந்தால் அவர்கள் ஞாபகமாக புதைத்த இடத்தில் சமாதிக் கோயில் அமைத்து, அவர்களது ஆத்மாவின் ஆற்றல் உறைவதாக நம்பி வழிபடும் வழக்கமும் உண்டு.

இவ்வாறு சித்தர், யோகியரையும் வழிபடும் மரபில் தமிழகத்தில 10 ஆம், 12 ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் வாழ்ந்ததாகக் கருதப்படும் பாம்பாட்டிச் சித்தரின் குருவாகிய சட்டைமுனி இங்கு பள்ளி கொண்டதாகவும் கூறப்படுகின்ற போதிலும், இந்தச் சிவாலயத்திற்கும், சட்டைமுனிக்கும் உள்ள தொடர்பு இன்னும் உறுதிப் படுத்தப்படாத நிலையில் உள்ளது.

அதே வேளை புராண வரலாற்று ஐதீகங்களின் படி சிவன் இரணியன் என்னும் அரக்கனைக் கொன்று, அவனது எலும்பினைக் கதாயுதமாகவும், தோலினைச் சட்டையாகவும் தரித்தமையால் சட்டைநாதர் ஆனார் என்னும் விளக்கமும் தரப்படுகிறது.

இந்த ஆலயத்தின் தோற்றத்தினை யாழ்ப்பாண வைபவ மாலையை ஆதாரமாகக் கொண்டே எழுத்து மூலம் ஆவணப்படுத்தப்பட்ட வரலாறாக அறியமுடிகிறது. நல்லூர் இராசதானியின் நான்கு காவற்கோயில்களின் வடதிசைக் கோயிலாக சட்டநாதேஸ்வரர் கோயில் குறிப்பிடப் பட்டுள்ளது.

பாண்டிய மன்னனால் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட ஆரியச் சக்கர வர்த்தியான விஜய கூழங்கைச் சக்கரவர்த்தியும், கெங்காதர ஐயரும், மனைவி அன்ன பூரணியும் நல்லூர்ப் பகுதியில் கோயில் எழுப்பி அருகே அக்கிரகாரமும் உண்டாக்கி, வாழ்ந்து காவல் தெய்வங்களுக்கு கோயில்கள் அமைத்ததாகவும் கூறப்படுகிறது.

"பாண்டிய மன்னனால் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட ஆரியச் சக்கர வர்த்தியான விஜய கூழங்கைச் சக்கரவர்த்தியும், கெங்காதர ஐயரும், மனைவி அன்ன பூரணியும் நல்லூர்ப் பகுதியில் கோயில் எழுப்பி அருகே அக்கிரகாரமும் உண்டாக்கி, வாழ்ந்து காவல் தெய்வங் களுக்கு கோயில்கள் அமைத்ததாகவும் கூறப்படுகிறது.

சட்டநாதர் கோயிலானது விஜய கூழங்கைச் சக்கர வர்த்தியினால் ஸ்தாபிக்கப்பட்டது எனவும், நல்லூரை இராசதானியாகக் கொண்டதால் மூலவர் நல்லநாதர் எனவும், அம்மன் கல்லை நாயகி எனவும் அழைக்கப்பட்டது. இந்த ஆலயம் சட்டநாதர் சிவன் என அழைக்கப்பட்டதெனவும் இன்னோர் இடத்தில் யாழ்ப்பாண வைபவமாலையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவை இவ்வாறு தெரிவிக்கின்ற போதிலும், இறை பக்திமிக்க கனகசிங்கையாரியன் நல்லூர் இராசதானியின் நாற்றிசையும் ஆலயங்களைக் கட்டுவித்த போது, வடக்கே சட்டநாதர் சிவாலயம் அமைந்தது என்பது பொதுவாகப் பலரும் ஏற்றுக் கொள்ளும் கருத்தாக அமைகிறது. இது ஏறக்குறைய 13 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டிருக்கலாம் என நம்பப் படுகிறது.

மேலும் இந்த ஆலயத்தின் மூல மூர்த்தியானது சங்கிலி மன்னனால் இந்தியாவில் இருந்து கொண்டு வரப்பட்டதென்ற ஐதீகக் கதையும் மக்களிடையே நிலவுகிறது. போர்த்துக்கீசர் காலத்தில் இந்த ஆலயம் சிதைவுற்று, பின் வந்த மன்னர்களால் புனரமைப்புச் செய்யப்பட்ட போது லிங்க மூர்த்தி இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்டிருக்கலாம்.

இந்தக் கோயிலுக்கு அருகிலே மீனாட்சி சொக்கநாதர் ஆலயமும், மேற்கு வீதியிலே பாலகதிர்காமக் கந்தன் ஆலயமும் அமைந்திருக்கின்றன. ஆதியில் சட்டநாதர் ஆலயத்தில் வழிபடப்பட்ட தட்சணாமூர்த்தி வடிவம், மீனாட்சி சொக்கநாதர் ஆலயத்தில் பிர்திட்டை செய்யப்பட்டுள்ளது. இவை அனைத்தும் ஒரே குருபரம்பரையினரால் பூசை வழிபாடுகளுடன் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கஹவத்தை பிரதேசத்தில் விசேட பாதுகாப்பு ஏற்பாடு

## தாய், மகள் எரிந்ததை அடுத்து நடவடிக்கை

கஹவத்தை பிரதேசத்தில் விசேட பாதுகாப்பு திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு பொலிஸ் தலைமையகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கஹவத்தையில் கடந்த தினங்களில் இடம்பெற்ற சம்பவங்களை அடிப்படையாக கொண்டே இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

கஹவத்தை, கொட்டகெத்தன பகுதி வீடொன்றில் கடந்த வாரம் தாயும் மகளும் தீக்கிரையாகி உயிரிழந்த சம்பவத்தையடுத்தே இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்று அவர் கூறினார்.

சப்ரகமுவ மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரின் யோசனைக்கமைய இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்று அவர் தெரிவித்தார்.



சப்ரகமுவ மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரின் யோசனைக்கமைய இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது

கொட்டகெத்தன பொலிஸ் காவலரணில் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், பொலிஸ் ரோந்து சேவைகளும் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படவுள்ளன என்று அவர் கூறினார். அத்துடன் பிரதேசத்தின் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கு சிவில் உடையிலான உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (ச)

## சிகிரியா காட்டுப் பகுதியில் தீ

சிகிரியா பிரதேசத்தில் ஏற்பட்ட காட்டுத் தீ காரணமாக 15 ஏக்கர் வனப் பகுதி எரிந்துள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு ஏழு மணிக்கு குறித்த காட்டுத் தீ பரவ ஆரம்பித்துள்ளது.

இந்தக் காட்டுப் பகுதியில் யானைகளின் நடமாட்டம் அதிகமாகக் காணப்படுவதாக மக்கள் தெரிவித்தனர்.

எனினும் நேற்றுமுன்தினம் இரவு பரவிய தீயின் காரணமாக யானைகளுக்கு உயிர்ச் சேதமோ, காயமோ ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (ச)

## வெலி ஓயாவுக்குள் லொறி விழுந்து 14 பேர் காயம்

பலாங்கொடை,ஜூலை31


பலாங்கொடை - கல்தோட்டை, வெலிஓயாவுக்குள் லொறி ஒன்று விழுந்ததில் 14 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை இரவு இடம்பெற்றுள்ளதாக கல்தோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்களில் இருவரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகப் பொலிஸார் கூறினர்.

இந்த விபத்தில் காயமடைந்தவர்கள் பலாங்கொடை மற்றும் கல்தோட்டை வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ச)

## பெரஹராவுக்குத் தயார்...



வரலாற்றுப் புகழ்மிக்க கண்டி தலதா மாளிகையின் ரந்தோலி பெரஹரா கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகியது. பெரஹராவில் கலந்துகொள்ளும் யானை அதன் பாகனால் குளிப்பாட்டப்படுகின்றது. இலட்சக்கணக்கான மக்கள் கலந்துகொள்ளும் இறுதிப் பெரஹரா நாளை புதன்கிழமை இரவு நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ் மக்களின் வாக்குப் பலத்தால் தமிழ்க் கூட்டமைப்பு வெற்றிபெறும்

## மட்டு.வேட்பாளர் பிரசன்னா தெரிவிப்பு

எருவில்,ஜூலை31

தமிழ் மக்களின் வாக்குப் பலத்தின் மூலம் கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றிபெறும். மஹிந்த அரசால் எமக்கு வழங்க மறுக்கின்ற அரசியல் தீர்வை சர்வதேசம் தலையிட்டு எமக்குப் பெற்றுத்தருவதற்கான ஆணையாக இந்தத் தேர்தல் அமையும் என்று கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் கூட்டமைப்பின் சார்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடும் பிரசன்னா இந்திரகுமார் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, ஓந்தாச்சிமடம் பிரதேசத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசு, தமிழ் மக்களுக்கு வழங்கப்படும் எந்தவொரு தீர்வும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடாக வழங்கப்படக் கூடாது என்று ஒரு நிகழ்ச்சித் திட்டத்தை வகுத்து அதன்படி செயற்படுகின்றது.

ஆனால், சர்வதேச நாடுகள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக அங்கீகரித்து பேச்சு மேடைகளுக்கு அழைக்கின்றன.

எமது இனத்தை ஆயுத ரீதியில் அச்சுறுத்தி அடிபணிய வைத்து அவர்களுக்கு உடல், உள ரீதியான பாதிப்புகளை ஏற்படுத்தி எமது கல்வி, பொருளாதாரம், அபிவிருத்தி ஸ்திரத்தன்மையையும், இருப்பு அத்தனையையும் தகர்த்து எம்மை சின்னாபின்னமாக்கிச் சிதறடித்து எம்மை அழிவுப் பாதையிலே தொடர்ந்து வைத்திருக்க அரசு விரும்புகின்றது.

எமது உரிமையை வென்றெடுக்க ஆரம்பிக்கப்பட்ட ஆயுதப் போராட்டத்தை நசுக்கிய இலங்கை அரசு, எமது அரசியல் பலத்தையும் அழிக்க முற்படுகின்றது.

தமிழ் மக்களின் வாக்குகளைச் சிதறடிப்பதற்கு அரசு பலரை விலைக்கு வாங்கி சுயேச்சைக் குழுக்களாகக் களம் இறக்கியுள்ளது.

தமிழ்த் தேசியத்தின் மீது பற்றுறுதி கொண்ட தமிழ் மக்கள் எவரும் சுயநலவாதிகளின் போலி வாக்குறுதிகளுக்கு ஒருபோதும் சோரம் போகமாட்டார்கள் என்பதை இந்தக் கூலிக்காரக் கும்பலுக்கு எடுத்துக்காட்டும் தேர்தலாக இது அமையவேண்டும்.

நாட்டில் போர் ஓய்ந்து சமாதானமும், அமைதியும், அனைவருக்கும் பாதுகாப்பும் ஏற்பட்டு நாட்டில் நல்லிணக்கம் ஏற்பட்டுவருகிறது என அரசு கூறுகின்றது.

ஆனால், நடைபெறவுள்ள கிழக்கு மாகாணசபைத் தேர் தல் வன்முறையற்ற தேர்தலாக அமையுமா? சுதந்திரமாக வாக்களிக்க முடியுமா? என்ற அச்சம் மக்கள் மத்தியிலுள்ளது.

தமிழ்மக்களுக்கான தீர்வு கிடைக்கவேண்டுமானால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற அரசியல் பலம் தொடர்ந்து உறுதிப்படுத்தப்படல் வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழருக்கு ஒரு விமோசனத்தைப் பெற்றுத் தரும் என்று எமது மக்கள் கூட்டமைப்பின் மீது நம்பிக்கை வைத்துள்ளார்கள் - என்றார். (ச-31)

## மட்டக்களப்பில் ஆயுதங்கள் மீட்பு: பொலிஸ்

எருவில்,ஜூலை31

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முறுத்தானை மற்றும் பேத்தாழை ஆகிய பிரதேசங்களில் இருந்து ஆயுதங்கள் சில மீட்கப்பட்டுள்ளதாக வாழைச் சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை, முறுத்தானையில் உள்ள காட்டுப் பகுதியில் உரப்பையினால் சுற்றப்பட்ட நிலையில் மரமொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த துப்பாக்கிகளை பொலிஸார் மீட்டுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையிலேயே இந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதேவேளை வாழைச் சேனை, பேத்தாழை, விநாயகபுரம் பகுதியில் உள்ள வீட்டின் கிணறு ஒன்றில் இருந்து இரு கைக்குண்டுகள் மீட்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

நீண்ட நாள்களாக பாவிக்காதிருந்த கிணறு ஒன்றை துப்புரவு செய்யும்போது பையினால் சுற்றப்பட்டிருந்த நிலையில் குண்டைக் கண்ட வீட்டின் உரிமையாளர்கள் பொலிஸாருக்கு அறிவித்துள் ளதையடுத்து வாழைச்சேனை பொலிஸார் மற்றும் குண்டு. செயலிழக்கச் செய்யும் பிரிவினர் குண்டை செயலிழக்கச் செய்துள்ளனர்.

இந்தச்சம்பவங்கள் தொடர்பிலான விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-31)

## மக்களுக்குச் சேவை...



கல்முனை பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் சாய்ந்தமருது அல்- ஹிலால் வித்தியாலயத்தில் பொலிஸ் நடமாடும் சேவை இடம்பெற்றது. இந்நிகழ்வில் அதிகளவு மக்கள் கலந்துகொண்டு பயனடைந்துள்ளனர். (31)

# மண்எண்ணெய் நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கவும்

## கொத்மலை பிரதேச சபை உறுப்பினர் கோருகிறார்

நுவரெலியா,ஜூலை31

நுவரெலியா , குயின்ஸ் பெரி தோட்டத்தில் மின்சார வசதியற்ற நிலையில் உள்ள 86 குடும்பங்களுக்கு இதுவரை மண்ணெண்ணெய் நிவாரண அட்டைகள் வழங்கப்படவில்லை. இவர்களுக்கு மண்ணெண்ணெய் நிவாரணத்தை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் கொத்மலை பிரதேச சபை உறுப்பினர் காளிதாஸ் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மின்சார வசதியற்ற குடும்பங்களுக்கு மாதாந்தம் 200 ரூபா மண்ணெண்ணெய் நிவாரண அட்டைகள் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஊடாக வழங்கப்படுகின்றன. எனினும் குயின்ஸ்பெரி தோட்டப் பகுதியில் உள்ள 86 தொழிலாளர் குடும்பங்களுக்கு

குயின்ஸ்பெரி தோட்டப் பகுதியில் உள்ள 86 தொழிலாளர் குடும்பங்களுக்கு இதுவரை மண்ணெண் ணெய் நிவாரண அட்டைகள் வழங்கப்படவில்லை.

இதுவரை மண்ணெண்ணெய் நிவாரண அட்டைகள் வழங்கப்படவில்லை. இதனால் பல்வேறு பிரச்சினைகளை அவர்கள் எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்தவிடயம் குறித்துப் பொறுப்பு வாய்ந்தவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உங்களுக்கு உற்சாகம் தரக்கூடிய பலன்கள் ஏற்படும். இல்லறத் துணையின் ஆலோசனை மிகுந்த பயனுள்ளதாக இருக்கும். கையில் உள்ள தொகை ஒன்றை மற்றொருவருக்குக் கொடுத்து விட்டு, நீங்கள் காத்திருக்க வேண்டியிருக்கும்.

**இடபம்:** வீட்டில் மெத்தனமாக இருந்து விட்டு, பணியை முடிப்பதற்காக வாகனத்தில் வேகத்தைக் காட்டுவீர்கள். நண்பர் ஒருவர் உங்களின் ஆலோசனைக்காக காத்திருப்பார். உடல் நலத்தில் சற்றுக் கூடுதல் அக்கறை தேவை.

**மிதுனம்:** நீங்கள் மேற்கொள்ளும் சகல முயற்சிகளிலும் நன்மைகள் பெறுவீர்கள். பண வசதி போதியளவு இருக்கும். நண்பர்களின் பக்க பலம் அதிகரிக்கும். தொழிலில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்காக தீவிர சிந்தனை கொள்வீர்.

**கடகம்:** எதிர்ப்புக்கள் விலகும் வகையில் உங்களின் செயற்பாடுகள் இருக்கும். பெற்றோர்கள், பெரியோர்களின் ஆலோசனைகளை எடுத்துக் கொள்வதும் நல்லது. புதிய பணிகளுக்காக அலைச்சல் இருக்கும்.

**சிங்கம்:** நண்பர்களின் செயல்கள் அதிகம் யோசிக்க வைக்கலாம். இருப்பினும், எதையும் பெரிதுபடுத்திக் கொள்ளாதீர்கள். சில விவகாரங்களில், உங்களின் யோசனைப்படி நடப்பது நல்லது. உறவினர் ஒருவர் கொடுத்த வாக்கைக் காப்பாற்றாததால், மனக்கஷ்டம் ஏற்படும்.

**கன்னி:** எந்த ஒரு விவகாரங்களிலும் தக்க நபர்களின் ஆலோசனையைப் பெறுதல் நலம். உறவினர் ஒருவர் உங்களை பாராட்டி சில காரியங்களைச் சாதித்துக் கொள்வார். உத்தியோக ரீதியாக சக ஊழியர்களின் மனநிலையையும் கருத்தில் கொள்ளுங்கள்.

**நாளை**

ஆடி 17 புதன்கிழமை 01.08.2012
திதி: சதுர்த்தசி மு.ப 10.59 வரை
நட்சத்திரம்:உத்தராடம்மு.இ.11.55வரை அமிர்தசித்தம்
சுபநேரம்: 04.33 - 06.03 வரை
ராகு காலம்: .12.03- 01.33 வரை

**துலாம்:** உங்களின் பொறுப்பான, பொறுமையான செயற்பாடுகள் பிறரால் பாராட்டப்படும். நீண்ட நாளைய பிரச்சினை ஒன்று தீர்வாகும். இல்லறத் துணையின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பயணத்தால் சில ஆதாயங்களும் கூடுதலாகும்.

**விருச்சிகம்:** வெளிவட்டாரப் பழக்க வழக்கங்களில் உங்களின் மதிப்பு மரியாதை அதிகரிக்கும். மனக்குறையும் அகலும். அலுவலகப் பணிகளில் சக ஊழியர்களின் தவறுகளைப் பெரிதுபடுத்திக் கொள்ளாதீர்கள்.

**தனுசு:** சில விவகாரங்களில் தயக்கமான செயற்பாடுகளை நீங்கள் கொண்டிருந்த போதும் நண்பர்களிடம் கேட்ட உதவிகள் கிடைக்கும். இல்லத்தில் சிறுசிறு சச்சரவுகள் ஏற்பட்டு மறையும். கடன் ஒன்றை மாற்றியமைத்துக் கொள்வீர்கள்.

**மகரம்:** கடந்த கால செயல்களால் மனதில் இனம் புரியாத கவலையும் பயமும் விட்டுவிட்டு வந்து பின் மறையும். எடுத்துக்கொண்ட காரியங்களில் அலைச்சல் சற்று அதிகம் என்ற போதும் நன்மையும் உண்டு.

**கும்பம்:** மனநிலை உற்சாகம் கூடிய போதும் உடல் நிலையில் திடீர் தொந்தரவு ஏற்படலாம். திடீர் தன வரவு உண்டு. நண்பர்களின் தொடர்புகள் ஓரளவுக்கு உதவிகரமாக இருக்கும். கூட்டு முயற்சிகளில் தொழில் தொடங்குவதற்காகத் திட்டமிடுவீர்கள்.

**மீனம்:** சில காரணங்களால் சிந்தனைகள் தீவிரமானபோதும் செயற்பாடு சற்று தாமதமாகும். கோபத்தைக் குறைத்துக் கொள்வது பிரச்சினையைக் குறைக்கும். குடும்ப காரியங்களை சிறு போராட்டங்களுக்கு பின் செய்து முடிப்பீர்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 3 | | | 7 | | | | |
| 7 | 8 | | 2 | 1 | 6 | 9 | 4 | |
| 1 | 4 | 2 | | | 3 | | | |
| 6 | | | 7 | 9 | | | | |
| | 7 | | | | | | 8 | |
| | | | | 6 | 2 | | | 1 |
| | | | 8 | | | 5 | 6 | 7 |
| | 6 | 7 | 1 | 5 | 4 | | 3 | 9 |
| | | | | 3 | | | 1 | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 8 | 6 | 7 | 1 | 5 | 2 | 4 | 3 |
| 2 | 1 | 5 | 4 | 6 | 3 | 7 | 9 | 8 |
| 4 | 3 | 7 | 2 | 8 | 9 | 6 | 1 | 5 |
| 8 | 6 | 1 | 5 | 3 | 7 | 9 | 2 | 4 |
| 3 | 2 | 4 | 1 | 9 | 8 | 5 | 6 | 7 |
| 7 | 5 | 9 | 6 | 4 | 2 | 3 | 8 | 1 |
| 1 | 4 | 3 | 9 | 5 | 6 | 8 | 7 | 2 |
| 5 | 9 | 2 | 8 | 7 | 1 | 1 | 3 | 6 |
| 6 | 7 | 8 | 3 | 2 | 1 | 4 | 5 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 29 * 01 * 1929
மறைவு 01 * 07 * 2012

அமரர் **நாகலிங்கம் இலட்சுமணன்**
(இளைப்பாறிய இலங்கை போக்குவரத்து சபை சாரதி -(C.T.B))

கடந்த 01.07.2012 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் இறுதிக்கிரியை நிகழ்வில் கலந்து கொண்டோருக்கும் பல வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும் தொலைபேசி மற்றும் தந்தி மூலமாக ஆறுதல் கூறியோருக்கும் எமது நன்றிகளை தெரிவிப்பதோடு, இன்று (31.07.2012) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

7ஆம் கட்டை,
கோவில் வீதி,
மல்லாகம்.

(21112)(5-6-7)

குடும்பத்தினர்.

# 17 ஆம் மாத நினைவஞ்சலி — முதலாம் ஆண்டு நினைவஞ்சலி





தோற்றம் 27★07★1930
மறைவு26★02★2011
**பொன்னையா கந்தையா**
திதி : நவமி

தோற்றம் 16★01★1939
மறைவு 12★08★2011
**கந்தையா பூமணி**
திதி : சதுர்த்தசி

31.07.2012

அன்பும் பரிவும் அளப்பரிய காதலுமாய்
இன்பப் பெருக்கில் இதயத்தே எமைச்சுமந்து
துன்பச் சுமைக்கு வேலியிட்டு வேரறுத்து
பண்பிற்குரிய பாசக் கயிற்றுருவாய்
எண்ணிச் சுமந்த எம் வாழ்வின் ஒளிக்கீற்று
புண்ணியமாய் விண்ணில் பறந்த கையோடு
நன்னி யழைத்த விதமறியாது தவிக்கின்றோம்
கண்ணீர் மழைக்கு வரம்பிடவே முடியவில்லை

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர் (ரஜீவன் மோட்டோர்ஸ்)

செட்டிசோலை,
அளவெட்டி வடக்கு, அளவெட்டி.

[21156][6-7-8]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் ஆகியோரை அலரி மாளிகையில் சந்தித்த போது...

## தேர்தல் கலந்துரையாடல்: அதிகாரிகளுக்கு அழைப்பு

கொழும்பு,ஜூலை31

கலைக்கப்பட்டுள்ள கிழக்கு, வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபைகளுக்கான தேர்தல் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவால் தேர்தல் அதிகாரிகள் கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளனர். தேர்தல் அதிகாரிகளுக்கும் ஆணையாளருக்கும் இடையிலான கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் தேர்தல் அதிகாரிகள், சிரேஷ்ட தேர்தல் அதிகாரிகள் உட்பட தேர்தல் கடமையில் ஈடுபடும் அனைத்து அதிகாரிகளும் கலந்து கொள்ளவுள்ளனர் என்று தேர்தல்கள் திணைக்கள பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் 2012 ஆம் ஆண்டு தேர்தல் பெயர்ப் பட்டியல் மற்றும் குறித்த மாகாண சபைகளுக்கான தேர்தல் தொடர்பீல் இதுவரை எழுந்துள்ள பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்படவுள்ளதாக அவர் மேலும் கூறினார். (ச)

## ஓமானில் குற்றங்களில் ஈடுபடும் இலங்கையர்கள்; கறுப்புப் பட்டியலில்

### இணைப்பதற்கு தூதரகம் நடவடிக்கை

கொழும்பு,ஜூலை31

தொழிலாளர் சட்ட நியமங்களை மீறி ஓமானில் செயற்படும் இலங்கை தொழிலாளர்களை கறுப்புப் பட்டியலில் சேர்ப்பதற்கு இலங்கை தீர்மானித்துள்ளது.

ஓமானிலுள்ள இலங் கைத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இது தொடர்பான தகவல்கள் இடம்பெற்றுள்ளன.

விசா முடிவடைந்த பின்னர் குற்றச் செயல்களில் ஈடுபடும் மற்றும் ஓமான் தொழிற் சட்டங்களை கடைப்பிடிக்காத தொழிலாளர்கள் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்படவுள்ளனர்.

இவ்வாறாக கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்படும் தொழிலாளர்கள் எதிர் காலத்தில் எந்தவொரு வெளிநாடுகளுக்கும் தொழில் வாய்ப்பை பெற்றுச் செல்லமுடியாது என்று தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 1.5 மில்லியன் இலங்கைத் தொழிலாளர்கள் மத்திய கிழக்கு நாடுகளில் பணிபுரிகின்றனர். ஓமானில் 2010ஆம் ஆண்டில் 6ஆயிரம் தொழிலாளர்கள் பணிபுரிந்தனர். இவர்களில் 3ஆயிரம் பேர் வீட்டுப் பணிப் பெண்கள் ஆவர்.

கறுப்புப்பட்டியல் தீர்மானத்தின் மூலம் கடுமையான சட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலமாக சாதகமான முடிவுகளை எட்ட முடியும் என்று தூதரக அறிக்கை தெரிவிக்கிறது. (ச)

# பட்டதாரிகள் நியமனத்தில் தேர்தலுக்குத் தொடர்பில்லை

## அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த உறுதி

கொழும்பு,ஜூலை31

பட்டதாரிகள் நியமனத்துக்கும் நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தலுக்கும் எந்தவித தொடர்புகளும் இல்லை என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த திட்டவட்டமாக தெரிவித்தார்.

மகாவலி கேந்திரத்தில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பட்டதாரிகளின் நியமனத்தைப் பயன்படுத்தி சில பட்டதாரிகளை ஆர்ப்பாட்



டத்தில் ஈடுபடுத்த எதிர்க் கட்சிகள் முயற்சிக்கின்றன.

பட்டதாரிகளின் நியமனத்தைப் பயன்படுத்தி சில பட்டதாரிகளை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுத்த எதிர்க் கட்சிகள் முயற்சிக்கின்றன.

தற்பொழுது வழங்கப்படும் பட்டதாரிகள் நியமனங்களானது தேர்தலுக்காக வழங்கப்படும் நியமனம் அல்ல. வடக்கு, கிழக்கு உட்பட நாடு முழுவதிலும் 15 ஆயிரம் பட்டதாரிகளை நியமிப்பதற்கு அரசு ஏற்கனவே அமைச்சரவையிலும், நாடாளுமன்றத்திலும் அறிவித்து அனுமதிபெற்றுள்ளது.

இந்த நியமனத்தை பல்வேறு துறைகளில் வழங்கிக் கொண்டிருக்கும் நிலையிலேயே மாகாண சபைத் தேர்தல் அறிவிக்கப்பட்டது. எனவே இந்த நியமனத்திற்கும் தேர்தலுக்கும் எந்த வித தொடர்புகளும் இல்லை - என்றார். (ச)

## பாரதவின் உயிரிழப்புக்கு துமிந்தவே காரணகர்த்தா

### ஹிருணிகா மீண்டும் குற்றச்சாட்டு

கொழும்பு,ஜூலை31

முல்லேரிய சம்பவத்தின் போது சுட்டுக்கொல்லப்பட்ட பாரத லக்ஷ்மன் பிரேமசந்திரவின் மரணத்துக்கு துமிந்த சில்வாவே பிரதான காரணகர்த்தா என்று மகளான ஹிருணிகா பிரேமசந்திர குற்றம்சாட்டியுள்ளார்.

இது குறித்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தந்தையின் கொலை வழக்கு நிறைவடைந்த பின்னர் நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதற்குத் தீர்மானித்துள்ளேன்.

எதிர்காலத்தில் அரசின் சார்பாகவோ அல்லது மக்கள் கட்சியுடனோ இணைந்து தேர்தலில் போட் டியிடவுள்ளேன்.

தற்போதைய நிலையில் அரசியலில் இறங்குவது எனக்குப் பாதகமான விளைவு



களைத் தோற்றுவிக்கும்.

நீதிமன்ற உத்தரவு வரும் வரையும் காத்திருப்பதாகவும், அதன் பின்னர் தமது தந்தையின் உயிரிழப்புக்குக் காரணமானவர்களைத் தண்டிக்க நடவடிக்கை எடுக்கப்படும்- என்றார். (ச)

## இசற் புள்ளி பிரச்சினை தொடர்பில்

## சட்டமா அதிபரின் உதவியை நாட மானிய ஆணைக் குழுவுக்கு பணிப்பு

கொழும்பு,ஜூலை31

மீள் திருத்தப்பட்ட 'இஸற்' புள்ளி வெளியிடப்பட்டதை அடுத்து ஏற்பட்ட நிலைமை தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து சட்ட மா அதிபரின் ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளுமாறு பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஆலோசனை வழங்கியுள்ளது.

கல்வித்துறை அதிகாரிகளுடன் நடைபெற்ற விசேட கலந்துரையாடலின்போது இந்த ஆலோசனை வழங்கப் பட்டுள்ளது என்று மனித

'இஸற்' புள்ளிகள் மீள விநியோகிக்கப்பட்ட பின்னர் மாணவர்களிடமிருந்து இதுவரை 938 முறைப்பாடுகள்.

உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் கலாநிதி பிரதிபா மஹாநாமஹேவா தெரிவித்தார்.

'இஸற்' புள்ளிகள் மீள விநியோகிக்கப்பட்ட பின்னர் மாணவர்களிடமிருந்து இதுவரை 938 முறைப்பாடுகள் மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்குக் கிடைத்துள்ளன என்று அவர் தெரிவித்தார்.

மீள திருத்தப்பட்ட 'இஸற்' புள்ளிகள் மூலம் அசௌகரியங்களுக்கு உள்ளான மாணவர்களுக்காக சட்ட மா அதிபரின் ஆலோசனையுடன் உயர்நீதிமன்றத்தில் விடயங்களைத் தெளிவுபடுத்துமாறே ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

அடுத்த வாரம் இந்த ஆலோசனை நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு இணக்கம் தெரிவித்துள்ளது. (ச)

## 'பட்ஜெட்' கலந்துரையாடல்

அம்பாறை, ஜூலை.31

ஜனாதிபதி தலைமையில் இன்று செவ்வாய்க்கிழமை கொழும்பில் நடைபெறவிருக்கும் 2013ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட கலந்துரையாடல் கூட்டத்தில் அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கமும் கலந்துகொள்கின்றது.

அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத் தலைவர் எஸ்.லோகநாதனுக்கு ஜனாதிபதி செயலகத்திலிருந்து இந்தக் கலந்துரையாடல் கூட்டத்துக்கான அழைப்புக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை அர ச பொது ஊழியர் சங்கம் சார்பில் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளும் தலைவர் லோகநாதன், அரச ஊழியர்களுக்கான சம்பள உயர்வு மற்றும் தொழிலாளர் வர்க்கத்தினருக்கான நலன் குறித்து கோரிக்கைகளை முன்வைக்கவுள்ளதாகத் தெரிவித்தார்.

அகில இலங்கை அர ச பொது ஊழியர் சங்கம் கிழக்கிலிருந்து பங்குகொள்ளும் முக்கிய தொழிற்சங்கம் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-30)

## கொழும்பு துறைமுகத்தில் சீன கிரேன்கள் செயலிழப்பு

கொழும்பு,ஜூலை31

கொழும்புத் துறைமுகத்தில் ஜயா இறங்குதுறையில் கொள்கலன்களை இறக்கி ஏற்றும் 17 அசையும் கிரேன்கள் செயலிழந்திருக்கின்றன.

அண்மைக்காலமாக அந்த கிரேன்கள் அடிக்கடி செயலிழந்து மீள்திருத்தப்பட்டன என்று துறைமுக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவ்வாறு செயலிழந்த கிரேன்கள் அண்மையில் சீனாவில் இருந்து கொண்டு வரப்பட்டவை என்று தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு துறைமுகத்தில் ஜயா இறங்குதுறையில் தற்போது 70 அசையும் கிரேன்கள் வரை செயற்பாட்டில் உள்ளன.

இதற்கு மேலதிகமாகவே, சீனாவில் இருந்து 30 அசையும் கிரேன்கள் கொண்டு வரப் பட்டிருந்தன.

எனினும், அசையும் கிரேன்களுக்கு பயன்படுத்தப்படும் எரிபொருள்களில் ஏற்பட்ட பிரச்சினையாலேயே இந்த நிலை ஏற்பட்டிருக்கலாம் என்று துறைமுக தொழிற் சங்க உறுப்பினர்கள் குற்றம் சுமத்துகின்றனர். (ச-சி)

## கதிர்காம யாத்திரிகர் 6 பேர் கிரிந்த ஆஸ்பத்திரியில்

கொழும்பு,ஜூலை31


கிரிந்த கடற்பரப்பில் நீராடுவதற்குச் சென்று தத்தளித்துக் கொண்டிருந்த 6 பேர் பாதுகாப்பு அதிகாரிகளினால் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

இவர்கள் ஆறு பேரும் புத்தளத்திலிருந்து கதிர்காமம் நோக்கிப் பயணித்த யாத்திரிகர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

காப்பாற்றப்பட்ட ஆறு பேரும் கிரிந்த வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை திஸ்ஸமகாராம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சங்கானை செங்கற்ப...

# தேர்த்திருவி...

## இன்று (31.07.2012) செவ்வாய்க்கிழ...

### அருளாசிச் செய்தி



உலகெலாம் செழிக்க உயிரினங்கள் வாழ எல்லாம் வல்ல விநாயகப் பெருமான் திருவருள் நிச்சயம் வேண்டும். சங்கானையிலே செங்கற்படை மகாதேவப் பிள்ளையார் எல்லோருக்கும் அருள்புரியும் வகையிலேய எழுந்தருளி வீற்றிருந்து அருட்காட்சி தருகின்றார்.

வந்த வினை தீர்க்கும் விநாயகருக்கு இன்று தேர்த்திருவிழா. அநியாயங் களையும் அக்கிரமங்களையும் இன்னல்களையும் இடுக்கண்களையும் அழித்து ஒழிப்பதற்காக இன்று தேரேறி வரும் விநாயகப் பெருமானின் கோலாகலத் தோற்றம் வர்ணிக்க முடியாதது. வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுத்து வரும் என்றபடி இன்று சித்திரத்தேரிலே ஆரோகணித்து வரும் ஆனைமுகத்தான் வழிபடும் அடியார்கள் அனைவருக்கும் அருள்புரிந்து அவர்களுக்கு நல்வாழ்வு தரவேண்டுமென்று உளமாரப் பிரார்த்தித்து அருளாசி நல்கி வாழ்த்துகின்றோம். மேலும் நல்லைக் குருமணியின் பாதம் பணிந்து எழில்மிகு நல்லையிலுறையும் விநாயகர் சகோதரர் கந்தப் பெருமானின் கழல் பணிந்து எல்லோரும் மகிழ்ச்சியுடன் வாழ வேண்டுமென ஆசிகூறி வாழ்த்தி மகிழ்கின்றோம்.

*'என்றும் வேண்டும் இன்ப அன்பு'*

ஆதீன முதல்வர், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞான சம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்.

### முன்னைக்கும் பின்னைக்கும் முகிழ்த்த முழுமுதல்



முன்னைப் பழம் பொரு ளாய் பின்னைப் புதுமையாய் எம் வேண்டுதலுக்கு இயைந்த இறை வடிவம் கொள்பவர் வேழ முகத்து விநாயகக் கடவுள். ஐந்து கரத்தானாகி ஐந்தொழிலுக்கும் அதிபதியாய் ஐந்து தெய்வமாகி அனைத்தையும் தன் ஜென்ம வடிவில் வகுத்துக்காட்டுவர். இந்துச் சடைமுடி இறைவனாம் கண பதிக் கடவுள். காலம் கடந்த கற்பகப் பொருளான அப் பெருமான் இன்று ஆறாவது ஆண்டு தனது விந்து ரூப மான் சித்திரத்தேரில் ஆரோகணித்து எமக்கெல்லாம் பேர ருள் புரிகின்றார். சங்கானை செங்கற்படை மகா தேவப் பிள்ளையார் என்ற சொல்லிலேயே சகல வினைகளும் சிதையும். சித்திகள் எட்டும், கைகிட்டும். அனைவர்க்கும் கைகொடுக்கும் தெய்வமாக விளங்கும் எமது தும்பிக்கை யான் தேரேறி திருக்காட்சி தரும் இத்திருநாளில் அவன ருளால் அவன்தாள் வணங்கி அனைவரும் சிந்தை மகிழ இன்பம் சிறக்க நல்லாசி கூறி வாழ்த்துகின்றேன்.

சிவஸ்ரீ கிருஷ்ண குமாரக் குருக்கள்
மஹோற்சவக் குருவும்,
தேவஸ்தான பிரதம குரு, செங்கற்படை
மகாதேவப் பிள்ளையார்.

### செங்கற்படையானுக்கு இன்று ...



அத்தி முகவனை நித்தம் நினைப்பவர் ... மகிழ்வோடு வாழ்ந்து முத்தி ... வரே.

சங்கானைத் திருவூரில் குடி... டிருக்கும் செங்கற்படை மகா... பிள் ளையாரின் திருத்தேர் ... குறித்து ஆசிச் செய்தி வழங்கு... மிகவும் ஆனந்தமடைகிறேன். பிக்கையானைத் தொழுபவர்க்கு... பிக்கையான நல்வாழ்வு கிட்டும். மக்களை மாசற்ற... யில் வழிநடத்துவதற்கு திருக்கோயில்கள் ... வேண்டும்.

இளைய தலைமுறை கோயில்களுக்குச் ... வழிபாடு செய்யவும் தொண்டு செய்யவும் ஊக்குவி... காலத்தின் கட்டாயமாகும். சங்கானை படி... மிளிர்ந்து நகரமாகப் பெரு வளர்ச்சி பெற்று வருகிற... திருவூரில் ஞானமுதல்வனாக மக்களை ஆற்றுப்படு... மகாதேவப் பிள்ளையாரின் திருவருள் மேலும் ... நன்மைகள் பெருக்க வேண்டி வாழ்த்தி வணங்கி... கிறேன்.

'யாவர்க்குமாம் என்றும் இன்னுரை தானே''

கலாநிதி ஆறு.திருமுருகன், தலை...
ஸ்ரீதுர்க்கா தேவி தேவஸ்தா...
சிவபூமி அறக்கட்ட...

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★ விழா சிறப்புற வாழ்த்துவோர் ★★★★★

பிள்ளையார் மணல் சல்லி
விற்பனை நிலையம்
அன் ரான்ஸ்போட்
பிள்ளையார் கிறேசர்
பிரதான வீதி,
சங்கானை.
புத்தூர் கிழக்கு, புத்தூர்.

வெற்றி விநாயகர்
பல்பொருள் வாணிபம்
ஆஸ்பத்திரி வீதி, சங்கானை.

கணினிப் பிரதியாக்கம், போட்டோப் பிரதிகள் கவரிடுதல் மற்றும் அனைத்து அச்சு வேலைகள் செய்வதற்கு நாடவேண்டிய ஒரே இடம்
சாயிராம்
பிறின்டேர்ஸ்
பிரதான வீதி, சங்கானை.

சிறப்பு மலர் வடிவ...
தேரேறிவரும் செங்க...
எங்கள் வாழ்வில் உந்தன் அ...

தேர்த்திருவிழாச் சிறப்புற பிரார்த்திப்போ...

பலசரக்குப் பொருள்கள், குளிர்பான வகைகள்மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள
கிருஸ்ணா ஸ்ரோர்ஸ்
அன் ரான்ஸ்போட்
பிரதான வீதி, சங்கானை.

வள்ளியம்மை
பல்பொருள் வாணிபம்
நிற்சாமம், சங்கானை.

பலசரக்குப் பொருள்கள், குளிர்பான வகைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள
இலட்சுமி ஸ்ரோர்ஸ்
பிரதான வீதி, சங்கானை.

மின்சார உதிரிப்பாகங்க... வகைகளைப் பெற்று...
பாக்கியரத்தினம் கட்...
விற்பனை நிலை...
கிளை: தரன் ரே...
பிரதான வீதி, சங்...
ஸ்ரான்லி வீதி, யாழ்...

தொலைத்தொடர்பு சேவைகள், ஓவ் செற் பதிப்பு, போட்டோப் பிரதி, கிளீன்காட் வேலைகள் செய்து தரப்படும்.
Flash net
நிகர வீதி, சங்கானை.
ஐங்கரன் ரான்ஸ்போட் சேவிஸ்
சிலம்புப்புளியடி, சங்கானை.

ஆசைப்பிள்ளை அன்சன்
நகைமாடம்
22 கரட் தங்க நகைகள் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.
K.T.பிளாஸா, பிரதான வீதி, சங்கானை.
தொ.பே.021 321 2399

றஞ்சன் ஸ்ரோர்ஸ்
பலசரக்குப் பொருள்கள், குளிர்பான வகைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
பிரதான வீதி, சங்கானை.

காலை, மதியம், மாலை உணவு வகைகள் ஓடருக்குப் பெற்றுக் கொள்ள
நாச்சிமார்
சைவ உணவகம்
பிரதான வீதி, சங்கானை.

சகலவிதமான உண... குறித்த கால நேரத்தி... கொள்ள
கல்சியா உ...
பிரதான வீதி, சங்...

திருமண வைபவங்கள், விசேட நிகழ்வுகளுக்கு குறித்த நேரத்திற்கு ஒழுங்கு செய்துகொள்ள
விஜிந்தன் ரவல்ஸ்
உரிமையாளர்: சிறி
ஆஸ்பத்திரி வீதி, சங்கானை.

பலசரக்குப் பொருள்கள்,குளிர்பான வகைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள
கா.வைத்திலிங்கம் அன்சன்
பிரதான வீதி, சங்கானை.

சோமசுந்தரம் சைக்கிள் வேக்ஸ்
சைக்கிள் திருத்தும் வேலைகள், சேவிஸ்வேலைகள் குறித்த நேரத்தில் செய்து தரப்படும்.
நிகரை வீதி, சங்கானை.

பலசரக்குப் பொருள்கள், மரக் கறிவகை, விவசாய உள்ளீடுகள், உரவகைகள் பெற்றுக் கொள்ள
சோதி ஸ்ரோர்ஸ்
நிற்சாமம், சங்கானை.

சகல விதமான நுட்ப வே...
தர்சின...
மரத்தளபாட இயந்திரத் ...
காளிகோயிலடி, ச...
உரிமையாளர்: வ.தி...
0779576 7...

(சி/2001) (2-6-7)

நெல் உடைத்தும் தீட்டியும் மற்றும் தானிய வகைகள், ஈர அரிசி அரைத்தும் கொடுக்கப்படும்.
யோகா அரைக்கும் ஆலை
பிரதான வீதி, சங்கானை.

திருமண வைபவங்கள், கலைவிழா நிகழ்வுகளுக்குக் குறித்த நேரத் திற்கு ஒழுங்கு செய்துகொள்ள
சேயோன் ரவல்ஸ்
உரிமையாளர் : புஸ்பசோதி
ஆஸ்பத்திரி வீதி,சங்கானை.

பிறந்த நாள் திருமண வைபவங்களுக்கான பிஸ்கட் வகைகள், கேக் வகைகள் குறித்த நேரகாலத்தில் செய்து தரப்படும்.
லீலா பேக்கவுஸ்
பிரதான வீதி, சங்கானை.

திருமண வைபவங்கள், கலை விழாக்கள் நிகழ்வுகளுக்கு ஒழுங்கு செய்ய
கிசான் ரவல்ஸ்
வல்லை வீதி, சங்கானை.

பலசரக்குப் பொருள்கள், அர்ச்சனைப் பொருள்கள் ... பெற்றுக்கொ...
பிள்ளையார் ...
பிள்ளையார் கோ...
நிற்சாமம், சங்...

இந்து இளைஞர் மன்றம்
மாதர் சங்கம்,
சிறுவர் மன்றம்.
சங்கானை


ஞானவைரவர்
விளையாட்டுக் கழகம்
நிற்சாமம், சங்கானை.

தொட்டிலடி
சனசமூக நிலையம்
சங்கானை.

திருமண வைபவங்கள், கலை விழாக்கள் நிகழ்வுகளுக்கு ஒழுங்கு செய்ய
பானு ரவல்ஸ்
காரைநகர் வீதி, மூளாய்.

திருமண வைபவங்கள், க... நிகழ்வுகளுக்கு ஒழுங்...
கீர்த்தன் ர...
வல்லை வீதி, ச...
உரிமையாளர் : ச.சோதி...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ற்படை மகாதேவப் பிள்ளையார் ஆலய

# விழா சிறப்புமலர் – 31.07.2012

## க்கிழமை நண்பகல் 12 மணி

த இன்று தேர்
நினைப்பவர் சித்த
ழ்ந்து முத்தி பெறு

ருவூரில் குடிகொண்
ற்படை மகாதேவப்
திருத்தேர் விழாக்
சய்தி வழங்குவதில்
மடைகிறேன். தும்
தொழுபவர்க்கு நம்
க்களை மாசற்ற வழி
கோயில்கள் சிறக்க

களுக்குச் சென்று
யவும் ஊக்குவித்தல்
கானை படினமாக
பெற்று வருகிறது. இத்
ளை ஆற்றுப்படுத்தும்
ருள் மேலும் மேலும்
த்தி வணங்கி அமை

ரை தானே''
முருகன், தலைவர்
வி தேவஸ்தானம்,
அறக்கட்டளை.

### சிங்காரத் தேரினிலே அருட் காட்சி தாருமையா!



சங்கானைப்பதி உறையும் சங்கரனின் திருமகனே!
சாரங்கபாணியின் மருமகனே! ஆனைமுகனே!
செங்கற்படை மகாதேவப் பிள்ளையாரே தேரேறி வந்து
அருட்காட்சி தாருமையா ஆறுமுகன் சோதரனே!
எங்கள் குறை தீர்க்கும் எலிவாகனனே! ஏரம்பனே!
ஏழைகளெமக்கருள ஏன் இன்னும் தாமதமோ?
மங்களமாய் நாம் வாழ்ந்து மாண்புடன் திகழ்ந்திடவே
மனதாரத் துதிக்கின்றோம் திருவடிகள் சரணமையா!

சிங்காரப் பவனிவரும் சிவபெருமான் திருமகனே!
சீரான வாழ்வு தர இன்று தேரேறி வாருமையா!
மங்காத புகழுடனே மாநிலத்திலே நாம் வாழ
மாபெருந்தேரினிலே ஆரோகணித்து வாருமையா!
கெங்காதரன் புத்திரனே ஆனைமுகனே
பானைவயிற்றோனே கேடுகளை அழித்திட தேரேறிவாருமையா!
லங்காபுரி மக்களெல்லாம் மகிழ்ச்சியுடன் வாழ்ந்திடவே
சிங்காரத் தேரினிலே நல்ல அருட்காட்சி தாருமையா!

சிவநெறிக்கலாநிதி இராசையா ஸ்ரீதரன்

### தேர் ஏறித் திருக்காட்சி தரும் தெய்வதகளிறு



எங்கும் தன் அருளாட்சி புரியும் சங்கை செங்கற்படை மகாதேவப்பிள்ளையாரின் தேர்த்திருவிழா இன்று துன்பவினையகற்றி தன் அன்பர்க்கு ஆத்மீக இன்பமும் லௌகீக இன்பமும் அனுக்கிரகிக்க விநாயகப் பெருமான் அழகிய முகபத்திர சித்திரத் தேர் ஏறி அடியாரைத் தேடிவந்து திருவருள் புரிகின்றான். ஆதலால் நாம் அனைவரும் அவன் முன்னோடிச் சென்று பெருமானின் தேர்வடம் பிடித்து தெய்வதம் பராவி கிடைத்தற்கரிய பதம் பெற்று விநாயகக் கடவுளின் ஆனந்த புவனம் எனப்படும் அருள் இராச்சியத்தில் இடம் பிடிப்போம். இப்பணி சிறக்க வேழமுகவனின் திருவடி பணிந்து இரு கரம் கூப்பி அவன் பதம் பணிகின்றேன்.

அன்புடன் அடிசாரும் அடியன்

தி.சிவதட்சணாமூர்த்தி
ஓய்வுநிலை மாகாணப்பணிப்பாளர் (வடக்கு)
தே.கி.சே.ம.இளைஞர் விவகார அமைச்சு

### முன்னவர்க்கு முதல்வனாகிய மகாதேவ கணபதி



செங்கற்படை மகாதேவப்பிள்ளையார் சங்கை நகரில் கோயில் கொண்டு அருளியமை எமது முன்னைத் தவத்தின் முழுமைப்பேறு. ஆதி புராதன ஆலய மாக சோழர் காலம் தொட்டு யாழ்மண்ணில் அருள்வளம் பெருமளவில் குவிந்த புண்ணிய பூமியாக மகாதேவப்பிள்ளையாரின் திருச்சந்நிதி விளங்கி வருகின்றது. இன்று இம் மகத்தான தலத்தில் மூர்த்தியாகி வீற்றிருந்து அருளாட்சி புரிய வேழமுகவனுக்கு வியத்தகு அழகு மிகு சித்திரத்தேரில் பவனி வரும் தேர்த்திருவிழா. இவ் விழாவில் தேர்வடம் பிடிப்போர், தேடிவந்து அவன் திருவுரு வைத் தரிசிப்போர் தேடினும் கிடைக்காத பெருநிதி படைத்தோர் ஆவார். ஆகையால் இத்தினம் ஆனைமுகன் பதம் பணிந்து அவன் அருள் கொண்டு இகபரசுகத்தில் இன்புறுவோமாக!!!

அன்புடன் வாழ்த்தும்

திருமதி செல்வநாச்சியார் நாகராசா
ஆலய பரம்பரை தர்மகர்த்தா.

### செங்கற்படையான் தேர்வடம் பற்றிட எங்கள் வாழ்வு மலரும்



செங்கற்படை மகாதேவப் பிள்ளையார் இன்று (31.07.2012) அழகிய சித்திரத்தேரில் ஏழவாது ஆண்டாக பவனி வரும் திருக்காட்சி அற்புதமானது. யாழ்ப்பாணத்தை ஆண்ட சங்கிலி மன்னன் காலத்தில் சோழமண்டலத்திலிருந்து வந்து யாழ்ப்பாணத்தில் குடியேறிய மூதாதையர்களால் அரச பிரதானிகள் என்ற வகையில் சங்கை நகரில் நிலைநிறுத்தப்பட்டபோது அவர்களின் குலதெய்வமாக விளங்கியவர் மகாதேவப்பிள்ளையார்.

சங்காரத் தொழிலை நிறைவேற்ற சங்கானையில் தேரேறும் வேழமுகத்தவன் பாதங்களை பற்றுவோர்க்கு நற்கதி கிடைக்கும்.

மதுரகவி. காரை எம்.பி. அருளானந்தன்.

வடிவமைப்பு: மு.கதிரவேலு

ம் செங்கற்படையானே...!
ன் அன்பைத் தந்தருள்வாயே....!!
த்திப்போரும் ஊடக அனுசரணையாளர்களும்


ஆடவர் பெண்களுக்கான ஆடை வகைகள், சிறுவர் சேட்டிங் சூட்டிங் வகைகள் பெற்றுக்கொள்ள
அபிராமி ரெக்ஸ்
பிரதான வீதி, சங்கானை.
முத்துமாரி புடவையகம் அன் பான்சி ஹவுஸ்
பிரதான வீதி, பண்டத்தரிப்பு.

பலசரக்குப் பொருள்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
மகாலட்சுமி பல்பொருள் வாணிபம்
மடத்துப் பிள்ளையார் கோயிலடி, தொல்புரம்.

RT
ரான்ஸ்போட் சேவிஸ்
உரிமையாளர்: இ.தேவராஜா
சிலம்புப் புளியடி, சங்கானை.

திரிப்பாகங்கள், டையின்ற்
ளைப் பெற்றுக் கொள்ள
த்தினம் கட்டடப் பொருள்
விற்பனை நிலையம்
: தரன் ரேடர்ஸ்
ான வீதி, சங்கானை.
லி வீதி, யாழ்ப்பாணம்.

விதுஷா கிறீம் ஹவுஸ்
பிரதான வீதி, சங்கானை.
ஸ்பெஷல் கிறீம் வகைகள், பழரசங்கள் ஓடருக்கு குறித்த நேரத்தில் குறித்த காலத்தில் செய்து கொடுக்கப்படும்.

பலசரக்கு பொருள்கள், மரக்கறி வகைகள், பழவகைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
ரவி ஸ்ரோர்ஸ்
நிற்சாமம், சங்கானை.

A.M.S.
பல்பொருள் வாணிபம்
தொட்டிலடி, சங்கானை.

திருமண வைபவங்கள், கலை விழாக்கள் நிகழ்வுகளுக்கு ஒழுங்கு செய்ய
GK ரவல்ஸ்
16/ங, அன்னை திரேசா வீதி, ரம்பைக்குளம், வவுனியா.
உரிமையாளர்:- சு.மகேந்திரன்.

தமான உணவு வகைகள்
கால நேரத்தில் பெற்றுக் கொள்ள
யா உணவகம்
ான வீதி, சங்கானை.

தளபாடங்கள், கூரை வேலைகள், கதவு, அலுமினியம் பிற்றிங் வேலைகள் ஓடருக்குச் செய்கொள்ள
சுதன் தச்சுத் தொழிலகம்
(அரசாங்க உத்தரவு பெற்றது)
உரிமையாளர்: த.சுதன்
நிற்சாமம், சங்கானை.
தொ.பே.0776594625

உதயன்
கட்டடப்பொருள் விற்பனையகம்
59, பிரதான வீதி, சங்கானை.

திருமண வைபவங்கள், விசேட நிகழ்வுகளுக்கு குறித்த நேர காலத்திற்கு ஒழுங்கு செய்து தரப்படும்.
சிறிமுகி என்ரபிறைஸ்
உரிமையாளர் கு.குணசிறி
ஆஸ்பத்திரி வீதி, சங்கானை.

ஆடவர், சிறுவர், பெண்களுக்கான ஆடை வகைகள், சேட்டிங் சூட்டிங் வகைகள் பெற்றுக்கொள்ள
புதிய அபிராமி ரெக்ஸ்
கிருஸ்ணா ரெக்ஸ்
பிரதான வீதி, சங்கானை.

மான நுட்ப வேலைகளுக்கு
தர்சினி
ட இயந்திரத் தொழிற்சாலை
கோயிலடி, சங்கானை.
யாளர்: வ.திருநாவுக்கரசு
0779576705

பலசரக்குப் பொருள்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள
சின்னவன்
பல்பொருள் வாணிபம்
பிரான்பற்று வீதி, சங்கானை.

சீனியர்
இரும்புத் தொழிற்சாலை
நிகரகோயிலடி, சங்கானை.
சகல விதமான டிசைன்களில் கேற்வகைகள், கிறில்கள் குறித்தநேரத்தில் செய்துகொடுக்கப்படும்

பத்மராஜா அன்சன்ஸ்
நகைத் தொழிலகம்
பிரதான வீதி, சங்கானை.
தொ.பே.:0776002584, 0776687022

பலசரக்குப் பொருள்கள், பழ வகைகள், மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
ஸ்ரீமுருகன் பல்பொருள் நிலையம்
பிரதான வீதி, சங்கானை.

ப் பொருள்கள், பழவகைகள்,
ப் பொருள்கள் சில்லறையாகப்
பெற்றுக்கொள்ள
ளையார் ஸ்ரோர்ஸ்
ளையார் கோயிலடி,
சாமம், சங்கானை.

சகலவிதமன உணவு வகைகள் ஓடருக்கு குறித்த கால நேரத்தில் பெற்றுக் கொள்ள
மகேஸ்வரி உணவகம்
ஆஸ்பத்திரி வீதி, சங்கானை.

அழகுசாதனப் பொருள்கள், பாடசாலை உபகரணங்கள், காகிதாதிகள், பலசரக்குப் பொருள்கள் பெற்றுக்கொள்ள
லக்ஷி பான்சி அன் புக் சென்ரர்
நிற்சாமம், சங்கானை.

இராசையா
ரான்ஸ்போட்
நிற்சாமம், சங்கானை.
உரிமையாளர்:- இ.யோகச்சந்திரன்.

துவிச்சக்கரவண்டி உதிரிப்பாகங்கள், மின் உபகரணப்பொருள்கள், மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
கணபதி ஹாட்வெயர்ஸ்
கீரிமலை வீதி, தொட்டிலடி
சங்கானை. 0776365983

வைபவங்கள், கலை விழாக்கள்
வுகளுக்கு ஒழுங்கு செய்ய
தன் ரவல்ஸ்
லை வீதி, சங்கானை.
ளர் : ச.சோதிலிங்கம்(மணியம்)

வீரகத்திப் பிள்ளையார்
ரான்ஸ்போட் சேவிஸ்
உரிமையாளர்: செ.அரியதாசன்
ஆறுமுகம்வீதி, கந்தரோடை, சுன்னாகம்.

சிறிவேந்தன் (N.K.S)
வியாபார நிலையம்
பழவகைகள், தானிய வகைகள்

பிள்ளையார்
ரான்ஸ்போட் சேவிஸ்
உரிமையாளர்: த.இராசநாயகம்
மல்லாகம் வீதி, சங்கானை.

கேற், கிறில் வகைகள் விரும்பிய டிசைன்களில் செய்துகொள்ள
றமேஸ் வெல்டிங் வேக்ஸ்
தொட்டிலடி வீதி, தொட்டிலடி, சங்கானை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செலிங்கோ ஆயுள் காப்புறுதி நிறுவனத்தின் நெல்லியடிக்கிளை 02 இன் வாடிக்கையாளரான மித்தில்கரை துன்னாலை மேற்கைச் சேர்ந்த இளையதம்பி கதிரவேற்பிள்ளையின் அகால மரணத்தினை அடுத்து ஐந்து இலட்சத்து ஆயிரத்து எண்ணூற்று இருபது ரூபா காசோலையை அவரது மனைவியான திருமதி கதிரவேற்பிள்ளை லீலாவதியிடம் கிளையின் முகாமையாளர் வி.பாஸ்கரன் கையளிக்கிறார். அருகில் சிரேஷ்ட விற்பனை நிறைவேற்று அதிகாரியான கே.குக னேசன், கிளையின் விற்பனை நிறைவேற்று அதிகாரி வி.குகரூபன் ஆகியோர் உள்ளனர். (த)



பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் பாரதியார் பல்கலைக்கழகத்துடன் இணைப்பு பெற்று ஆரம்பிக்கின்ற ஊடகப் பட்டப் படிப்பின் தொடக்க நிகழ்வு கடந்த 27 ஆம் திகதி அன்று நடைபெற்றபோது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை உரையாற்றுகிறார். அருகில் யாழ். மறைமாவட்ட குரு முதல்வர் அருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம், பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் இயக்குநர் அருட்திரு. ரூபன் மரியாம்பிள்ளை மற்றும் நிகழ்வில் கலந்து கொண்டவர்கள். (த)



வல்வெட்டித்துறை மக்கள் வங்கியின் ஜயஸ்ரீ வெற்றியாளருக்கான பரிசளிப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி ஜோசப் மற்றும் வங்கி முகாமையாளர் எஸ்.சர்வானந்தன் ஆகியோர் பரிசு பெற்றவர்களுடன் காணப்படுகின்றனர். (த-253)

# வெளிநாட்டு வாடிக்கையாளருக்காக ஹமீடியாவின் Envoy Mansion



ஹமீடியா நிறுவனம் தன்னுடைய புதிய Envoy Mansion கிளை நிறுவனத்தை இல 18, பகத்தலவீதி, கொழும்பு 03 இல் அமைந்துள்ள புதுப் பொலிவு பெற்ற பங்களாவில் திறந்து வைத்துள்ளது.

இந்த அழகிய பங்களாவில் ஹமீடியாவின் உயர்தர முதன்மை வியாபார நாமமான உணதிணிதூ தாயரிப்புகளும் புகழ்பெற்ற பல சர்வதேச தயாரிப் பு களும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இது வெளிநாட்டு வாடிக்கையாளர்கள், விசேடமாக சுற்றுலாப் பயணிகள் மற்றும் வியாபார நோக்கில் வருகை தரும் உயர்மட்ட வர்த்தகர்கள் ஆகியோரை மையப்படுத்தி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தமது தோற்றத்திற்கு மெருகூட்டும் விதத்தில் உயர் தரம், சர்வதேச வடிவமைப்பு ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் கொடுப்பவர்களுக்கு ஏற்ற தெரிவாக என்வோய், FH போன்ற ஹமீடியாவின் பிரத்தியேக தயாரிப்புகளும் சர்வதேச தயாரிப்புகளான Van Heusen, Park Avenue, Allen Soily ஆகியவையும் இத்தாலிய வடிவமைப்புக்களான Cardini, Xcuss, Andrew போன்றவையும் இங்கு காணப்படுகின்றன.

அதிஉயர் பதவி வகிப்பவர்கள் அணிவதற்குப் பொருத்தமாக கம்பீரத்தையும் மிடுக்கையும் தரும் வடிவமைப்புகள் இவை. ஆடைகள் மட்டுமின்றி ஆண்களின் அணிகலன்களான தரம் வாய்ந்த பாதணிகள், கழுத்துப் பட்டிகள், 'கப் லிங்ஸ்' போன்றவற்றுடன் ஜேர்மன் தொழில்நுட்பத்தில் விசே டமாகத் தயாரிக்கப்பட்ட வெப்பத்தை உட்புக விடாத ஜக்கெட்டையும் இங்கு பெற்றுக் கொள்ள முடியும். விருந்து வைபவங்கள், உயர்மட்ட வணிக நிகழ்ச்சிகள், கேளிக்கை விழாக்கள் போன்ற அனைத்து தேவைகளுக்கும் ஏற்ற தெரிவுகள் என்வோய் மென்சனில் உள்ளன. (த)

## சியெட் மைல் XL டயர் அறிமுகம்





இந்தியாவின் அதி நவீன டயர் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி அதி உயர் செயற்பாடு மிக்க டயர் வகையொன்றை சியெட் களனி டயர் நிறுவனம் தயாரித்துள்ளது. பஸ்கள் மற்றும் லொறிகளின் அதி கூடிய பயன்பாட்டைக் கருத்தில் கொண்டு இந்த டயர் வகை உருவாக்ககப்பட்டுள்ளது.

18 PR வகையைச் சேர்ந்த இந்த டயர் 'சியெட் மைல் XL' என பெயரிடப்பட்டுள்ளது. மரம், மணல், பயிர்வகைகள், சீமேந்து எனப் பாரம் கூடிய பொருட்களைக் கொண்டு செல்லும் கனரக வாகனங்களைக் கருத்திற் கொண்டே இது விசேடமாக வடிவமைக்கப் பட்டுள்ளது.

சியெட் களனி நிறுவனத்தின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் உப தலைவர் ரவி தத்லானி இது பற்றிக் கூறுகையில் '' புதிய சியெட் மைல் XL இன் வழுக்கிச் செல்லாத தன்மையானது அதன் நீடித்த மைல் பாவனையை மேலும் உறுதி செய்கின்றது. சந்தையில் உள்ள ஏனைய வகை டயர்களுடனான போட்டித் தன்மையை இது அதிகரிப்பதோடு பொருளாதார சிக்கனத் தெரிவையும் வழங்குகின்றது என்றார்.

சியெட் மைல் XL இன் அறிமுகமானது செயற்பாடு, அதி கூடிய மைல்கள் ஓட்டம் என்பனவற்றின் எல்லைகளையும் அதிகரிக்கின்றது.

## இலங்கை வங்கியின் 73 ஆவது ஆண்டுவிழா

இலங்கை வங்கியின் 73 ஆவது ஆண்டு நிறைவையொட்டி இலங்கை வங்கி சுன்னாகம் கிளையில் விசேட நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. கிளை முகாமையாளர் பொ.பாலகுமார் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் இலங்கை வங்கி வடமாகாண உதவிப் பொது முகாமையாளர் கே.ஈ.டி.சுமணசிறி பிரதம அதிதியாகவும் வடமாகாண செயற்பாட்டு முகாமையாளர் எஸ்.என்.மாணிக்கசிங்கி சிறப்பு அதிதியாக வும் கலந்து கொள்வார்கள்.

சுன்னாகம் கிளையில் நீண்டகாலம் கடமை புரிந்து ஓய்வு பெற்றவர்களை பாராட்டிக் கௌரவித்தல், சிறுவர் சேமிப்புக் கணக்குகளைப் பேணுபவர்களுக்கான பிறந்தநாள் பரிசில் வழங்

கல் என்பனவற்றுடன் மாலை 6 மணி வரை நீடித்த வங்கியின் கருமபீட அங்குரார்ப் பண நிகழ்வும் இடம் பெறும். (த)

## வெளிவந்து விட்டது Science Today

உயர்தரக் கணித, உயிரியல் மாணவர்களுக்கான பல்கலைகழக துறைசார் வல்லுநர்களின் ஆக்கங்கள் குறிப்பாக மாதிரி வினாத் தாள்களை உள்ளடக்கி வெளி வந்துள்ளது. இலங்கையில் அனைத்து பிரதேசங் களிலும் பெற்றுக் கொள்ளலாம்.

## கறுப்பு தேயிலை உற்பத்தி வீழ்ச்சி

இந்த ஆண்டின் முதல் ஐந்து மாத காலத்தில் சர்வதேச கறுப்புத் தேயிலை உற்பத்தி கடந்த ஆண்டை விட 57.55 கோடி கிலோ சரிவடைந்துள்ளது.

இது கடந்த ஆண்டின் இதே காலத்தில் 64.74 கோடி கிலோவாக இருந்தது. இந்த ஆண்டு ஏற்பட்ட பருவ நிலை மாற்றத்தால் கறுப்புத் தேயிலை விளையும் முக்கிய நாடுக ளில் அதன் விளைச்சல் குறைந்துள்ளது.

# கொழும்பில் சர்வதேச பிளாஸ்டிக் கண்காட்சி

இலங்கையின் முதலாவது சர்வதேச பிளாஸ்டிக் தொழில் கண்காட்சியான SRILANKA PLAST கொழும்பில் உள்ள இலங்கை கண்காட்சி மற்றும் மாநாட்டு (SLECC) மண்டபத்தில் 2012 ஆகஸ்ட் மாதம் 10, 11 மற்றும் 12 ஆம் திகதிகளில் இடம் பெறவுள்ளது.

இலங்கை பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் நிறுவனத்துடன் இணைந்து, என்டர் பிரைஸிங் பெயார்ஸ் இந்தியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனம் இந்த SRI LANKA PLAST தொழில் கண்காட்சியினை ஏற்பாடு செய்துள்ளது. இந்நிகழ்வுக்கு இலங்கை மத்திய சுற்றாடல் அதிகார சபையுடன் இணைந்து, இந்தியாவின் மத்திய பிளாஸ்டிக் பொறியியல் தொழில் நுட்ப நிறுவனம் அனுசரணை வழங்குகின்றது.

இத்தொழில் கண்காட்சியில் இந்தியா, சீனா, தாய்வான், கொரியா, இத்தாலி போன்ற பலநாடுகளில் இருந்து வருகை தரும் 100 இற்கும் அதிகமான நிறுவனங்கள் தமது உற்பத்திகளை காட்சிப்படுத்தவுள்ளன.

இயந்திர சாதனங்கள், உள்ளீடுகள் மற்றும் துணைப் பொருள்களில் தற்போது ஏற்பட்டுள்ள முன்னேற்றம் தொடர்பான விடயங்கள் இங்கு காட்சிப்படுத்தப்படுவதுடன் இயந்திர சாதனங் கள் நேரடியாக பார்வையாளர் களுக்கு [illegible] [illegible] தொழில் மற்றும் வணிக அமைச்சினால் அனுசரணை வழங்கப்படுகின்ற புதிய தொழில் முயற்சியாளர்களுக்கான ஆலோசனை மற்றும் வழிகாட்டல் சேவையும் இங்கு இலங்கை பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் நிறுவனத் தினால் நடத்தப்படும்.


SRILANKA PLAST தொழில் கண்காட்சியின் குறிப்பிடத்தக்கதொரு விடயமாக, பிளாஸ்டிக் மீள் சுழற்சியாக்கல் தொடர்பான விசேட 'கருத்திட்ட அரங்கு' (Theme Pavilion ) அமைந்திருக்கும். பொது மக்களின் நன்மை கருதி மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் ஏற்பாடு செய்யப்படும் மேற்படி கருத்திட்ட அரங்கானது பிளாஸ்டிக் பொருட்களை மீள்சுழற்சியாக்குவதற்கு பயன்படுத்தவல்ல புதிய தொழில் நுட்பங்களையும் காட்சிப்படுத்தும்.

பிளாஸ்டிக் பொருள்களை மீள்-சுழற்சி செயன்முறைக்குள் உட்படுத்து வது குறித்தும், வீடுகளில் பாவித்து விட்டு வீசப்படும் பிளாஸ்டிக் பொருட்களை தரம்பிரிக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் பார்வையாளர்களிடையே இந்த விஷேட அரங்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும்.

தொழில் கண்காட்சி நடைபெறும் ஏனைய பகுதியானது வர்த்தக துறைசார் பார்வையாளர்களுக்கென பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்டிருக்கும் என்ற போதிலும் கருத்திட்ட அரங்குப் பகுதி பொதுமக்கள் பார்வையிடும் பொருட்டு திறந்திருக்கும்.

தொழில் கண்காட்சி ஏற்பாட்டாளர்கள் கருத்துத் தெரிவிக்கையில், ''இலங்கையில் தற்போது வருடம் ஒன்றுக்கு சுமார் 175,000 மெற்றிக் தொன் பிளாஸ்டிக் பயன்படுத்தப்படுவதுடன், சுமார் 800 பிளாஸ்டிக் உற்பத்தியாளர்கள் சிறிய மற்றும் நடுத்தர துறையில் ஆதிக்கம் செலுத்துகின்றனர். இலங்கையின் பிளாஸ்டிக் கைத்தொழில் துறை மிக விரைவில் 15 முதல் 20 வீதம் வரையான வளர்ச்சியை எட்டுமென எதிர்பார்க்கின்ற நிலையில், இந்தக் கேள்வியை எதிர்கொள்வதற்கு எம்மிடம் இருக்கின்ற ஒரே வழி புதிய உற்பத்தி வசதிகளை ஏற்படுத்தலும் உற்பத்தி இயலளவை அதிகரிப்பதுமே ஆகும்'' என்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




5 மாவட்டங்களிலும் பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

# ஈழத்தவருக்கு உதவாத கருணாநிதி 'டெசோ' மாநாட்டை நடத்துவதா?

## பழ. நெடுமாறன் சீற்றம்



இலங்கையில் நடந்த இனப்படுகொலைக்குஇலங்கை அரசும், மத்திய அரசும், மத்திய அரசுக்கு உறுதுணையாக இருந்த தி.மு.கவும் தான் பொறுப்பேற்க வேண்டும் என தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஈரோட்டில் நடைபெற்ற நிகழ்வில் பிரபாகரன் தமிழர் எழுச்சியின் வடிவம் என்ற நூலை வெளியிட்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உலகத் தமிழர்களிடம் தி.மு.க. தலைவர் கருணாநிதி பகிரங்கமாக மன்னிப்புக் கேட்ட பின்புதான் டெசோ மாநாட்டை நடத்த வேண்டும்.

முள்ளிவாய்க்கால் சம்பவத்தில் ஒரேநாளில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொலை செய்யப்பட்டனர். இக்கட்டான நிலையில் ஈழத் தமிழர்களுக்கு உதவாத கருணாநிதி இப்போது டெசோ மாநாடு நடத்துவது ஏன்? இந்த மாநாட்டிற்கு உலகம் முழுவதிலும் இருந்தும் தமிழர் தலைவர்கள் வருகை தரவுள்ளனர் என்று கருணாநிதி கூறி வருகிறார்.

முள்ளிவாய்க்கால் சம்பவத்தின்போது கருணாநிதி நாடகம் நடத்திய போது இவர்கள் எங்கே இருந்தார்கள் என்று தெரியவில்லை. விரைவில் தமிழீழ நாடு உருவாகும் என்று அவர் தெரிவித்தார். (3)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

வலி. வடக்கு ஜூலை 31

நல்லூர் முருகன் உற்சவ காலத்தையொட்டி நல்லூர் இளம் கலைஞர் மன்றம், தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கையம்மன் ஆலய தேவஸ்தானத்தின் ஆதரவுடன் வருடாந்தம் நடத்தும் தெய்வீக இசையரங்கில் எட்டாம் திருவிழாவான இன்று நல்லூரில் அமைந்துள்ள துர்க்கா மணி மண்டபத்தில் திருமதி விக்கினேஸ்வரி நரேந்திரனின் பாட்டுக்கச்சேரி பக்கவாத்தியம் சகிதம் மாலை 6.45 மணிக்கு நடைபெறவுள்ளது. (3-86)

***

வலி. வடக்கு ஜூலை 31

நல்லூர் ஆலய வருடாந்த உற்சவத்தையொட்டி இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் வருடாந்தம் நடத்தும் ஆன்மீக சிந்தனையும் சமய சொற்பொழிவும் கலை நிகழ்வுகள் நிகழ்ச்சிகளில் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் இன்று பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறவுள்ள நிகழ்வில் சிறப்புச் சொற்பொழிவாக ''முருக வழிபாட்டில் அருணகிரிநாதர்'' என்னும் பொருளில் எஸ். பாலச்சந்திரன் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். தொடர்ந்து திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச் சங்க அறநெறிப் பாடசாலை, மாதகல் காந்திஜீ அறநெறிப் பாடசாலை, அரியாலை ஹீதுரவழி பிள்ளையார் அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (3-86-7)

# சமய சந்திதிகளில்

யாழ்ப்பாணம், ஜூலை 31

சாவகச்சேரி- நுணாவிற்குளம் அருள் மிகு முருகன் ஆலயப் பெருந்திருவிழாவில் இன்று முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும், நாளை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (3)

* * *

குப்பிளான் கடற்கரை கற்பக விநாயகர் ஆலய வருடாந்த பெருந்திருவிழாவில் தேர்த்திருவிழா ஓகஸ்ட் முதலாம் திகதியும், தீர்த்தத் திருவிழா 2 ஆம் திகதியும் நடைபெறவுள்ளன.

இந்த ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா கடந்த 23 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானமை குறிப்பிடத்தக்கது. (3-78)

* * *

சிலாபம், முன்னேஸ்வரர் ஆலய, வடிவாம்பிகா சமேத முன்னைநாதஸ்வாமியின் பெருந்திருவிழா ஓகஸ்ட் நாலாம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 28 தினங்கள் நடைபெறவுள்ளது.

இவ்வாலயத்தின் தேர்த்திருவிழா ஓகஸ்ட் 30 ஆம் திகதி வியாழக்கிழமையும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெற இருக்கின்றது. (3)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 31

அனலைதீவு நயினாகுளம் கூழாவடியுறை பூர்ணாதேவி புஷ்கலாதேவி சமேத ஹரிஹர புத்திரர் ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழாவில் தேர்த்திருவிழா இன்று முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து நாளை புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (3-14)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 31

உரும்பிராய் காளி அம்பாள் என விளங்கும் காமாட்சி அம்பாள் ஆலய வருடாந்த பெருந்திருவிழாவில் இன்று முற்பகல் 10.30 மணிக்கு தேர்த்திருவிழா இடம்பெறவுள்ளது. (3)

* * *

அனலைதீவு ஐயனார் கோயிலின் வருடாந்தப் பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா இன்று நடைபெறவுள்ளது. (3-257)

* * *

அளவெட்டி, கணேஸ்வரன், குருக்கள் கிணற்றடி விநாயகப்பெருமானின் தேர்த்திருவிழா இன்று நடைபெறவுள்ளது. (3)

## 'மலரும் மலர்கள்' நூல் நிலையம் திறப்பு

நவாலி, ஜூலை 31

ஆனைக்கோட்டை முள்ளியில், யு.என்.டி.பி.யின் அனுசரணையுடன் 'மலரும் மலர்கள்' நூல் நிலையத் திறப்பு விழாவும் மாணவர்களுக்கு விளையாட்டுப் பொருள் வழங்கும் நிகழ்வும் கடந்த வெள்ளிக்கிழமை ஆனைக்கோட்டை ஆதவன் முன்பள்ளியில்இடம்பெற்றன.

வலி.தென்மேற்கு, சண்டிலிப்பாய் பிரதேச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் நிரஞ்சலா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர்கலந்து கொண்டு நாடாவை வெட்டிநூல்நிலையத்தைத் திறந்து வைத்தார். இந்த நிகழ்வில்கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் உமாபாலன், ஆனைக்கோட்டை கிராம சேவையாளர் ஏ. நிசாந்தன், யு.என்.டி.பி. முன்னணிப் பொறுப்பாளர்சதீஸ்,ஆனைக்கோட்டை மாதர் கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (3-100)


## Vacancy

Receptionist wanted for our establishment.

**Requirements:**
1) Only female.
2) English language must
3) Age limit 30

Salary will be decided during interview on 01.08.2012 at 10.00 am.
by Chief executive officer
R. Ajanthini



**Thisaikaddi(Pvt)Ltd.(PV82703)**
**Model Visa Advising Center**
**37, Sivagurunathar lane,**
**Brown Road, Jaffna.** Contact no: 021 221 9016
(21083)(5-6-7)

## கண்ணீர் அஞ்சலி



எமது சண்டிலிப்பாய் கோட்ட யா/ உயரப்புலம் குணபாலன் வித்தியாலய அதிபர் திரு.நா.தனபாலசிங்கம் அவர்களின் அன்புத் தாய்

திருமதி **சின்னத்தங்கச்சி நாகரத்தினம்**

03.07.2012 அன்று இறைபதம் அடைந்தமை குறித்து அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கோட்டக்கல்விப்பணிப்பாளர்,
அதிபர்கள், அலுவலர்கள்,
சண்டிலிப்பாய் கல்விக்கோட்டம்

(21025)(6-7-8)

## T.V மலிவு விற்பனை

யாழ். நகரில் எங்குமில்லாத மலிவு விலையில் Sony (Japan) Wega Flat TV கள் BZ 14" - 10000/= 21" - 12500/=, 25" - 14000/= 130 x வகைகள் - 1500/=, ரேடியோ கசெற் - 2000/=
தொடர்புகளுக்கு : 077 0440570
சோனி ரேற்ட் சென்ரர் (கொமர்ஷல் வங்கி எதிரில்) 56, K.K.S வீதி, சுன்னாகம்
(21092)(6-7-8)

## கடை விற்பனைக்கு

மன்னார் நகரில் பொலிஸ் நிலைய வீதியில் அமைந்துள்ள 3 மாடிக்கடை விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு : 077 8421359, 023 3231216
(சி/1780)(6-7-8)

## வீடு விற்பனைக்கு

பிரதான வீதி, அராலி மேற்கு வட்டுக்கோட்டையில் அமைந்துள்ள வாசிகசாலைக்கு எதிரே உள்ள 33/4 பரப்புக்காணி அதனோடு சேர்ந்த வீடும் விற்பனைக் குண்டு.
தொடர்புகளுக்கு : 077 9051514
(21160)(6-7-8)

## ஸ்ரீ சக்தி கல்லூரி (Sri Sakthi College)



தரம் 01 தொடக்கம் O/L வரையான சகல பாடங்களும் கற்பிக்கப்படும்.
உடன் தொடர்புகளுக்கு :
024 4900944, 077 9250933
(யோகன் ஆசிரியர்)
விலாசம்:
இல.98, [illegible] வீதி, தோணிக்கல், வவுனியா
(16927)(6-7-8)

## காணி விற்பனைக்குண்டு

கொக்குவில், சபாபதி ஒழுங்கையில் 6 பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு : 077 5329104, 011 2365633



மிருசுவில் படித்த மகளிர் திட்டம் 'துர்க்காபுரம்'
ஸ்ரீஞான துர்க்கை அம்மன் ஆலய அலங்கார உற்சவம்

அலங்கார உற்சவம் ஆனது ஆடிமாதம் 9ஆம் நாள் (24.07.2012) செவ்வாய்க்கிழமை காலை 8.00மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. 01.08. 2012 புதன்கிழமை 9ஆம் நாள் திருவிழாவாகிய தேர்த் திருவிழா மிகவும் சிறப்பாக நாளை நடைபெற இருக்கிறது. விசேடமாக ஆலயத்தின் வாக்களிக்கும் தாயானவள் ஸ்ரீஞானதுர்க்கை அம்மனின் தெய்வீக அருட்கலையுடன் கூரிய வாள்களின் மீது ஏறிநின்று துர்க்காதேவியுடன் சேர்ந்து வீதி உலாவரும் காட்சியும் இடம்பெறும். எனவே அம்பிகையின் பக்த அடியார் கள் அனைவரும் பங்கு கொண்டு எல்லாம் வல்ல ஞான துர்க்கை அம்மனின் பாதார விந்தத்தினை தொழுது திரு வருள் பெற்று நல்வாழ்வு வாழும் வண்ணம் அழைக்கின் றோம்.

'இறைபணியே இன்பப் பணி'

ஆலய தர்மகர்த்தா
சிவத்திரு.சி. நவரத்தினம் ஐயா.

## அனுசரணை

ரூபா பன்முக வர்த்தகர் (சகோதரர்கள்) 104ஏ, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

ஸ்ரீவிக்கினேஸ்வரா களஞ்சியம் (சகோதரர்கள்) கண்டி வீதி, சாவகச்சேரி.

(சி/2009)(5-6-7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு விற்பனைக்கு

உரும்பிராய் - கோப்பாய் வீதியில் ஞானவைரவர் கோயிலுக்கு அருகில் நான்கு பரப்புக் காணியில் அமைந்துள் வீடு விற்பனைக்குண்டு

தொடர்பு: 071 8285 786

(இ/2011) (45.6.7)

## உடனடி தேவை

யாழ்நகரில் இயங்கும் சன்யூட் நிறுவனத்துக்கு ADஅனுமதிப்பத்திரமுடைய சாரதி உடன் தேவை

தொடர்பு: 077 3565 607

(21080) (45-6-7)

## வீடு வாடகைக்கு

இல. 70/2, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள சகல வசதிகளுடன் கூடிய புதிய வீடு வாடகைக்குண்டு.

தொடர்பு: 077 0778 346, 021 4923 297

(21085) (6.7.45)

## தேவை

03 பேர் கொண்ட சிறிய குடும்பதிற்கு இரவிலும் தங்கி நின்று வேலை செய்யக் கூடிய பெண் தேவை.


தொடர்பு: 077 6277 332

(21086) (45.6.7)

# மரண அறிவித்தல்

## செல்லையா நடராசா (பத்தர்)

(கிளிநொச்சி நடராசா- விக்னேஸ்வரா நகைமாளிகை உரிமையாளர்)



சங்கானையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாக வும் கொண்ட செல்லையா நடராசா (28.07.2012) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான சடாசிவம் - அன்னம்மா தம்பதியரின் மருமகனும், தங்கபூபதியின் அன்புக்கணவரும், சற்குணதேவி (சந்திரா - லண்டன்), யோகேஸ்வரன் (இந்தியா), மகேஸ்வரன் (லண்டன்), விக்னேஸ்வரன் ஆச்சாரி (ஆங்கில ஆசிரியர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மனோகரி, பவானி, ஜெயந்தி ஆகியோரின் மாமனும், ஜனனி அஞ்சி, அருள்றாஜ், நவீன், லக்ஸ்மணன், சரண்ஜன், காசிகா, கிரிஜன், துளஷிகா, தர்ஷிகா, ஜனோசிகா ஆகியோரின் பேரனும், ஏய்மினின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.07.2012) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சங்கானையில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சங்கானை கரச்சி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாகலிங்கம் சுவாமிகள் வீதி,
சங்கானை. (21163 (6.7.45)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## தொலைபேசி இணைப்பு விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 31

திருநெல்வேலி, கல்வியங்காடு போன்ற பகுதிகளுக்குத் தொலைபேசி இணைப்பு வசதிகள் அதிகரிக்கப்படவுள்ளன.

இந்தஇணைப்பை அதிகரிப்பதற்கென இந்தப் பகுதியில் புதிதான இம்சா பரிவர்த்தனை அமைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப் பட்டது.

திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தி மற்றும் கல்வியங்காடு முத்திரைச் சந்தி போன்ற பகுதிகளில் இந்தப் பரிவர்த்தனைகள் அமைக்கப்பட்டுள்ளன என்று ரெலிக்கொம் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இந்தப் பரிவர்த்தனை ஊடாக இணைப்பு வசதிகள் அதிகரிக்கப்படவுள்ளதோடு அதற்கான நெற் வசதிகளும் ஏற்படுத்தப்படவுள்ளன என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-17)

## தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் வடபிராந்தியத்தின் கீழ் வரும் அனைத்து திட்டங்களிலும் தற்காலிக பொறியியல் உதவியாளர் (மின்) (Engineering Assistant- Electrical) சேவை பெறுவதற்கான கேள்வி கோரப்படுகின்றது

மேற்படி சேவையை வழங்குவதற்குத் தகுதியான விண்ணப்ப தாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதியுடையவர்கள் எதிர்வரும் 03.08.2012 வெள்ளிக்கிழமை அன்று சுயவிவரக் கோவையுடனும் மற்றும் கல்விச் சான்றிதழ் களுடனும் ஏனைய தகுதிச் சான்றிதழ்களுடனும் பிராந்திய காரியாலயம்,தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை, கண்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு நேர்முகப் பரீட் சையின் பொருட்டு சமுகம் தரவும்.

நிபந்தனைகள்

1. இவ் வேலையானது சாதாரணமாக காலை 08.00 மணி தொடக்கம் 17.00 மணி வரையாகும். பிராந்திய முகாமையாளர், திட்ட முகாமையாளர், மற்றும் பொறியியலாளர் ஆகியோரின் பணிப்புக்கமைய இவ்வேலை நேரங்களில் மேலதிகமாக சேவையாற்ற வேண்டும்.

2. இவ் வேலையானது வேலை நாள்களிலும் பிராந்திய முகாமையாளர், திட்ட முகாமையாளர், மற்றும் பொறியியலாளர் ஆகியோரின் பணிப்புக்கமைய விடுமுறை நாள்களிலும் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

3. சேவையை வழங்குபவர்கள் தேவையான உடலாரோக்கியம் சிறந்த மனநிலை உடையவராகவும் இருக்கவேண்டும்.

4. சேவையை வழங்குபவர்கள் தமிழ், ஆங்கிலத்தில் பூரண அறிவுடன் அலுவலக வேலைகளை சிங்கள மொழியில் கையாளும் தகைமையும் அத்துடன் NDES,NDT,HNDE மற்றும் NCT போன்ற பாடநெறிகளை இலங்கை தொழில்நுட்ப கல்லூரியில் அல்லது திறந்த பல்கலைக் கழகத்தில் அல்லது அங்கீகரிக்கப் பட்ட கல்லூரிகளில் வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

5. நீர்ப்பம்பிகள், மின்வலு இயந்திரங்கள் Panel Board மற்றும் ஏனைய மின்வலுவுடன் அல்லது எரிபொருள் வலுவுடன் தொடர்புடைய இயந்திரங்களை கையாளுவதில் முன் அனுபவம் விரும்பத்தக்கது.

6. முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப் படும்.

7. மேற்படி சேவையை வழங்குவதற்கு அனுமதிக்கப்படும் நபர்கள் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையில் நிரந்தர நியமனமோ அல்லது சமயா சமய அடிப்படை நியமனத்திற்கோ உரிமை கோரமுடியாது.

8. மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளில் மாற்றங்களை செய்வதற்கும் மேலதிகமாக நிபந்தனைகளை இணைப்பதற்கும் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு உரிமையுண்டு

பிராந்திய காரியாலயம்
தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை
கண்டி வீதி, யாழ்ப்பாணம்

(சி/2012)(5-6-7)

விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### அமரர்

## தவபாலன் கிரிதரன் (கபிலன்)

(கொழும்பு பல்கலைக்கழக கணினி, விஞ்ஞானப்பிரிவு மாணவன் - 2 ஆம் வருடம்)

மலராய் மண்ணில் :-20.07.1989

மலையாய் விண்ணில் :-01.07.2012

கடந்த 01.07.2012 அன்று இறைபதம் அடைந்த எங்கள் அன்புச் செல்வம் அமரர் தவபாலன் கிரிதரன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (31.07.2012) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குடும்பத்தினர்.

வதிரி வீதி, உடுப்பிட்டி. (சி/2008)(2-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபாகரனின் படத்தை விற்கத் தடை

## பொலிஸார் மீது சீமான் காட்டம்

ஈழத்தில் தங்கள் மண்ணின் விடுதலைக்காகவும், அரசியல் சம உரிமைக்காகவும் போராடிய விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனுடைய படத்தை விற்பதற்கு காவல்துறை தடை செய்கிறது என்றால், பொலிஸ் மக்களைக் காக்கும் துறையா அல்லது ஆட்சியாளர்களின் ஏவல் துறையா என்று சீமான் கண்டனம் தெரிவித்தார்.


ஆதம்பாக்கத்தில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் செந்தமிழன் சீமான் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கேள்வியெழுப்பினார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

ஈழத்தில் தங்கள் மண்ணின் விடுதலைக்காகவும், அரசியல் சம உரிமைக்காகவும் போராடியவர்கள் விடுதலைப் புலிகள்.தங்கள் மக்களின் துயரை நிரந்தரமாகத் துடைக்க, தம்மையே அழித்துக் கொண்டு போராடிய தியாகிகள் விடுதலைப் புலிகள். அவர்கள் எம்மக்களுக்காக அழுதவர்கள் அல்லர், அவர்களின் அழுகையை நிறுத்துவதற்காக உயிர்நீத்தவர்கள்.

அப்படிப்பட்ட உன்னதமான ஒரு விடுதலைப் போராட்ட இயக்கத்தின் தலைவர் எனது அண்ணன் பிரபாகரன்.அவருடைய படத்தை விற்பதற்கு பொலிஸ் தடை செய்கிறது என்றால், பொலிஸ் மக்களைக் காக்கும் துறையா அல்லது ஆட்சியாளர்களின் ஏவல் துறையா என்று கேட்கிறேன்.

> ஈழத்தில் தங்கள் மண்ணின் விடுதலைக்காகவும், அரசியல் சம உரிமைக்காகவும் போராடியவர்கள் விடுதலைப் புலிகள்.



அவருடைய படத்தை விற்பதற்கு பொலிஸ் தடை செய்வது நீடித்தால் ராஜீவ் காந்தி, சோனியா படங்களை அகற்றுவோம். விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதான தடையை மேலும் இரண்டு ஆண்டுகள் நீடித்துள்ளது இந்திய மத்திய அரசு.

எத்தனை தடைகள் போட்டாலும் விடுதலையை நாம் தொடர்ந்து பேசுவோம், அதற்காக எமது மக்களின் ஆதரவை முழுமையாகத் திரட்டுவோம். இவ்வாறான தடைகளால் ஈழத் தமிழினத்தின் விடுதலை போராட்டத்தை முடக்கிடவும் முடியாது, அதற்கான ஆதரவு சக்திகளாக உள்ள எம்மை அடக்கவும் முடியாது.

நாம் ஜனநாயக வழியில் அரசியலை முன்னெடுக்கின்றோம், எங்களைச் சீண்டாதீர்கள், இவ்வாறான நடவடிக்கைகளால் சட்டம் ஒழுங்குப் பிரச்சினையை உருவாக்காதீர்கள். இந்தியா உள்ளிட்ட நாடுகள் கொடுத்த உதவியால் எமது விடுதலைப் போராட்டம் அழிக்கப்பட்டது. எமது மக்கள் ஒன்றே முக்கால் லட்சம் பேர் கொல்லப்பட்டார்கள். ஈழத் தமிழினம் இனப்படுகொலைக்கு ஆளாக்கப்பட்டது-என்றார்.

## இருளில் மூழ்கும் வீதி

ஆனைக்கோட்டை மூத்த விநாயகர் ஆலய பின்வீதியிலுள்ள முக்கிய சந்தி கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக இருளில் மூழ்கியுள்ளது.

இந்த சந்திக்கருகில் உள்ள மின் கம்பத்தில் நீண்டகாலமாக இரவு வேளையில் மின்விளக்கு ஒளிர்ந்து கொண்டேயிருந்தது. பின்னர் இது திடீரென நிறுத்தப்பட்டு ஒரு வருடங்களைக் கடந்த நிலையிலும் மின்விளக்கு பொருத்தப்படாமையினால் இந்தப் பகுதி இருளில் மூழ்கியுள்ளது.

இது விடயமாக வலி. தென்மேற்கு பிரதேச சபையினருடன் தொடர்பு கொண்ட போது யாராவது வீடுகளிலிருந்தோ அல்லது வர்த்தக நிலையங்களிலிருந்தோ மின்சாரம் வழங்கினால் மின்குமிழினைப் பொருத்தி விடலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதே வேளை அந்த வீதியிலுள்ள ஏனைய மின் கம்பங்களில் பிரதேச சபையினரால் மின்குமிழ் பொருத்தப்பட்டு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3-100)

# படையினர் - பொதுமக்கள் இடையே வாதரவத்தையில் நேற்றுப் பதற்றம்

## விபத்தைத் தொடர்ந்து சம்பவம்


கொழும்பு, ஜூலை 31

புத்தூர், வாதரவத்தை பகுதியில் நேற்று பொதுமக்களுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே திடீரெனப் பதற்றம் ஏற்பட்டது. சிறிது நேரத்தின் பின்னர் நிலைமை கட்டுக்குள் வந்தது.

தம்முடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட பொதுமக்களை இராணுவத்தினர் படம் பிடித்ததனால் ஏற்பட்ட முறுகல் நிலையே பதற்றத்துக்குக் காரணம் என்று நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

இளைஞர் ஒருவர் செலுத்தி வந்த மோட்டார் சைக்கிள் ஒன்றும் கன்ரர் ரக வாகனம் ஒன்றும் விபத்துக்குள்ளானதைத் தொடர்ந்து இந்த முறுகல் நிலை ஏற்பட்டது என்று மக்கள் கூறினர்.

''விபத்து நடந்த இடத்திலிருந்து கன்ரர் வாகன்த்தை நகர்த்தி எடுத்துச் செல்வதற்கு இராணுவத்தினர் உதவி செய்தனர். கன்ரர் சாரதி தப்பிச் செல்ல உதவுகிறார்கள் என்று மக்கள் சந்தேகப்பட்டதால் வாக்குவாதம் ஏற்பட்டது'' என்று சாட்சி ஒருவர் தெரிவித்தார்.



விபத்தில், கன்ரர் வாகனம் மோட்டார் சைக்கிளின் மீது ஏறிச் சென்றிருந்ததாகவும் ஆனால் மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர் குதித்துத் தப்பி விட்டார் என்றும் பார்த்தவர்கள் கூறினர். மட்டுவில் அம்மன் கோயிலுக்கும் வண்ணாத்திப் பாலத்துக்கும் இடையில் இந்த விபத்து நடந்தது. விபத்தில் சிக்கிய வாகனம் தென்னிலங்கைப் பதிவு எண்ணைக் கொண்டிருந்தது.

விபத்து நடந்த இடத்துக்கு விரைந்த படையினர் கன்ரர் வாகனத்தை பொலிஸார் வர முன்னர் அங்கிருந்து செல்ல உதவினர் என்பதே மக்களின் குற்றச்சாட்டு. இதனை அடுத்தே அவர்கள் படையினருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

உடனே, ''படையினர் எம்மை படம் பிடித்தனர். அந்த இடத்தில் கூடியிருந்தவர்களை மிரட்டும் பாணியில் அவர்கள் அப்படி நடந்து கொண்டனர்'' என்று ஒருவர் தெரிவித்தார். எனினும் மக்கள் எதிர்ப்புக் காட்டியதைத் தொடர்ந்து படையினர் அங்கிருந்து விலகிச் சென்றுவிட்டனர். பின்னர் சம்பவ இடத்துக்குச் வந்த பொலிஸார் இரு வாகனங்களையும் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்றனர். (உ-86)

# 'தமிழீழம்' என்ற இலக்கில் தொடர்ந்து பயணிப்போம்

## உலகத் தமிழ் அமைப்புக்கள் உறுதிமொழி

ஈழத் தமிழர்களின் ஒரே அரசியல் அபிலாசையான சுதந்திரமும், இறைமையுள்ள தமிழீழம் என்ற இலக்கை வெல்வதற்கான பயணத்தில் தொடர்ந்து உறுதியுடனும், அர்ப்பணிப்புடன் பயணிக்கவும், அதன் பாற்பட்ட அரசியல், பொருளாதார மற்றும் சமூக செயற்பாடுகளில் ஒன்றிணைந்து செயற்படவும் உலகளாவிய தமிழ் அமைப்புக்கள் உறுதி பூண்டுள்ளன.

நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் ஒன்று கூடிய பல்வேறு நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் அரசியல் அமைப்புக்ககளின் பிரநிதிதிகள் கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெற்ற மாநாட்டின் நிறைவின் போது இந்த முடிவை ஏகமனதாக மீள வலியுறுத்தின.

ஆறு தசாப்தங்களுக்கு மேலாக இலங்கை அரசு தமிழ் மக்களை அழித்தும், அவர்களின் பூர்வீக நிலங்களைப் பறித்தும், அவர்களின் பண்பாடு மற்றும் பொருண்மிய வளங்களைச் சிதைத்தும் வருகின்ற செயற்பாடுகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இந்த நிலையில், தமிழர்களின் அரசியல் அபிலாசையை சர்வதேச சமூகத்திடமும், ஏனைய சக்திகளிடமும் அழுத்திச் சொல்லவேண்டிய முக்கிய தருணமாக இது அமைகின்றது.

தமிழர்களின் அரசியல் பேரம் பேசும் சக்தியை தாயகத்திலும், புலத்திலும் வலுப்படுத்தவும், சிங்கள அரசு முன்னெடுத்துள்ள இன விரோதச் செயற்பாடுகளுக்கு கடிவாளம் போடவும், இறைமையுள்ள தமிழீழத்தை அடைவதற்கான அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியது அவசியம் என்றும் அந்த மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

மேற்குறித்த செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்காக, இந்த மாநாட்டில் கலந்து கொண்ட அமைப்புக்கள் அனைத்தும் புரிந்துணர்வுடன் ஒன்றுபட்டு செயற்படுவதற்கு உறுதி பூண்டுள்ளன.

# அரச அலுவலகங்களில் மின்சாரம் விரையமாவதைத் தவிருங்கள்

## அரச அலுவலகங்களுக்கு கடிதம் மூலம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 31

அரச அலுவலகங்கள் மின்சாரத்தைப் பயன்படுத்தி தண்ணீரைச் சூடாக்கும் போது தேவையான அளவு தண்ணீரை மட்டும் சூடாக்கி பயன்படுத்த வேண்டும்.

வீண்விரயம் செய்யாது நீரைப் பாதுகாக்க வேண்டும்.

ஜனாதிபதியின் செயலாளர் லலித்வீரதுங்க நாடளாவிய ரீதியில் உள்ள சகல அரச நிறுவனங்களையும் கடிதம் மூலம் கோரியுள்ளார்.

தேசிய சக்தி பேணல் எனும் தலைப்பில் எழுதிய கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அலுவலகங்களில் உத்தியோகத்தர்களற்ற வேளைகளில் சகல மின் உபகரணங்களதும் இயக்கத்தை துண்டித்து வைக்கவேண்டும்.

தேவையற்ற மின்விளக்குகளை அணைத்து இயற்கை ஒளியை கூடுமானவரை பயன்படுத்த வேண்டும். காலை நேரங்களில் அலுவலகத்தின் ஜன்னல்களைத் திறந்து வைத்து இயற்கையான காற்றோட்ட வசதிகளைப் பயன்படுத்த வேண்டும். தேவையான நேரங்களில் மட்டும் காற்று சீராக்கியை பயன்படுத்த வேண்டும்.

அலுவலகத்தில் இருந்து வெளியேற சுமார் அரை மணி நேரத்திற்கு முன்னர் காற்று சீராக்கிகளை அணைக்க வேண்டும்.

கணினிகள், அச்சியந்திரங்கள், நிழற்படப் பிரதியெடுக்கும் இயந்திரம் முதலியவற்றை பயன்படுத்தாத நேரங்களில் அவற்றின் ஆளிகளை அணைத்து விட வேண்டும்.- என்றுள்ளது.

இதன் பிரதிகள் நாடளாவிய ரீதியில் உள்ள சகல ஆளுநர்கள், பிரதம செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள் திணைக்கள தலைவர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. (ம-41)

## சமயப் போட்டிகள்

நவாலி, ஜூலை 31

ஆனைக் கோட்டை இந்து சமய விருத்திச் சங்கத் தினர், சைவ சமயத்தை வளர்க்கும் நோக்குடன் அந்தப் பகுதியிலுள்ள நான்கு பாடசாலைகளுக்கிடையே சைவ சமயப்பண்ணிசை மனனம், செய்முறை பேச்சுப் போட்டிகள் என்பனவற்றை ஆனைக் கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையில் நடத்தியுள்ளனர்.

இந்தப் பகுதியிலுள்ள நான்கு பாடசாலைகள் பங்கு பற்றிய இந்தப் போட்டிகளில் குறிக்கப்பட்ட நேரங்களுக்குள் தமது போட்டிகளை முடித்து வெற்றி பெற்ற மாணவர்களுக்கு, அடுத்த மாதம் நடைபெறும் பெருவிழாவில் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. (3-100)

# அருணலு பரிசில் வழங்கல்

தென்மராட்சி,ஜூலை 31

கொமர்ஷல் வங்கியின் சாவகச்சேரி கிளையில் 5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கான அருணலு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கும் நிகழ்வு நாளை புதன்கிழமை காலை 9.30 மணிக்கு வங்கி மண்டபத்தில் நடைபெறும்.

கடந்தவருட 5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்று வங்கிக் கிளையில் கணக்கு வைத்துள்ள 23 மாணவர்களுக்கே அருணலு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

வங்கிக் கிளை முகாமையாளர் செ.விஜயராஜா தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகத் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தனும் கௌரவ விருந்தினராக கொமர்ஷல் வங்கியின் வட மாகாண பிராந்திய முகாமையாளர் ஸ்ரீபத்மநாதன் ரஜீவனும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் த.ஸ்ரீஸ்கந்தராஜாவும் கலந்து கொள்வர். (ம-9)

> கடந்தவருட 5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்று வங்கிக் கிளையில் கணக்கு வைத்துள்ள 23 மாணவர்களுக்கு அருணலு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்வாய் வேவிலந்தை மு[…]



# தேர்த்திருவிழா சிறப்புமலர் - 31.07.201[…]

தமிழர் வாழ்வோடு நெருங்கிய தொடர்புகொண்டிருக்கும் மாரி அம்மன் வழிபாடு தமிழ் கூறும் நல்லுலகெங்கும் பரவிக் காணப்படுகின்றது. இந்த வகையில் வடமராட்சியிலுள்ள மிகப்பெரிய ஆலயங்களுள் ஒன்[…] அல்வாய் வேவிலந்தை முத்துமாரியம்மன்கோயில் நீண்ட கால வரலாற்றையுடையது. இன்று இந்தக் கோயில் பழம் பெருமையோடு புதிய பொலிவும் சிறப்பும் பெற்று நாடிவரும் நலிந்தோர்க்கு நல்லருள் பாலிக்கும் ஆல[…] அமைந்துள்ளது.

இந்த ஆலயம் அம்மன் தானே, விரும்பி வந்துறைந்த பதியாக அமைந்தமையை வரலாறு உரைத்து நிற்கின்றது. அல்வாய் என்ற ஊரிலே இற்றைக்கு இருநூறு வருடங்களுக்கு முன்னர் வீரமாப்பாணர் அடியினிலே வந்த […] வேலருக்கு ஒரு மகள் இருந்தாள். அவள் வள்ளி நாச்சி என்ற இயற்பெயர் கொண்டவளாவாள். அவள் விதவையாக வாழ்ந்து வெண்பட்டே அணிந்து வந்துள்ளாள். வசதிபடைத்த வள்ளிநாச்சி உடைச்சி என்றும் அழைக்கப்பட்டுள்[…] இவள் ஆண்டுதோறும் தோணியேறி ஆலவாயில் அமர்ந்திருக்கும் மதுரை மீனாட்சியைத் தரிசிக்கப் போவதுண்டு.

ஒரு தடவை மதுரைக் கடை வீதியில் அற்புதமான அழகார்ந்த ஓர் அம்மன் விக்கிரகச் சிலைகண்டு அவ்வம்மனை விலை கொடுத்து வாங்கி, தான் உடுத்தியிருந்த வெண்பட்டுச் சேலைக்குள் மறைத்துக்கொ[…] தோணியேறி வள்ளிநாச்சி அல்வாய் வந்தடைந்தாள். தமது நாற்சார வீட்டில் புனிதமான இடத்தில் அம்மன் சிலையை வைத்து பூவிட்டு, விளக்கேற்றி வழிபட்டுவந்தாள். சில மதங்கள் போக தான் இறப்பதற்கு முன் அம்ம[…] திருத்தலம் ஒன்றில் எழுந்தருளச் செய்ய வேண்டும் என மனதில் எண்ணியபடி வாழ்வைக் கழித்துக் கொண்டிருந்தாள்.

## ஆலய வரலாறு

ஒரு நாள் அம்மாளே என்று கூறி வணங்கிவிட்டு அம்மை கண்ணுறங்கிய வேளையில் ''வள்ளி கவலைப்படாதே உங்களுடைய அந்தக் காணியில் வேம்பும் இலந்[…] பின்னிப் படர்ந்திருக்கிறது. அதன் கீழ் என்னை வைத்து மாலையில் விளக்கேற்றிவா மற்றதெல்லாம் நான் பார்க்கிறேன்'' கனவுரைத்த அந்த அழகான கிழவியை விழி[…] காணவில்லை. கனவு ஊரெல்லாம் பரவி வள்ளியின் வீட்டில் ஊரே நிறைந்தது. வேவிலந்தைக் காணியில் கொட்டில் ஒன்று கட்டி அம்மனை வைத்துப் பூசை ப[…] வருவது என்று தீர்மானமாயிற்று. அதன்படி முத்துமாரி என்ற திருநாமத்துடன் அந்த வேப்பமரக் கொட்டிலில் லோகமாதா கொலுவிருந்து அருள்பாலிக்கலா[…] அன்றிலிருந்து அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் என அழைக்கப்படுகின்றாள். வள்ளி நாச்சியின் காலத்தின்பின் அவரது அடிவந்தவர்கள் பராமரிப்பாளர்களாய் இருந்திருக்கிறார்கள். 1876 ஆம் ஆ[…] அப்பரம்பரையில் உதித்த நமசிவாயம் வேலுப்பிள்ளையை ஊர்மக்கள் மணியகாரனாக ஏற்றுக்கொண்டமையும் மகாசபை, தர்மகாத்தா சபையென இரண்டு சபைகள் உருவாகி இருந்தமையும் உறுதிவாயிலாக அ[…] கிடக்கின்றது. தொடர்ந்து தம்பிரான் அப்பா என்ற பெரியாரும் பூலோகன் போன்றவரும் கர்ப்பக்கிருக மண்டபத்தை திராவிடசிற்பக்கலை மிளிர பொழிகற் திருப்பணி செய்ய நிதிசேர்த்து முன்னின்று உழைத்தார்கள்.

அம்பாளின் திருத்தலம் இன்னும் சிறப்பாக விளங்க வேண்டுமென்ற நன்னோக்கம் நிர்வாகத்திடமும், ஊர்மக்களிடமும் இருந்தபடியால் ஆலயம் பொதுமக்களின் சொத்தாக்கப்படவேண்டும் என்ற உ[…] தழைவிட்டிருந்தது. அம்பிகையின் பக்தரான உயர்திரு வ. ஆறுமுகம் உபாத்தியார் தலைமையில் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் ரீ.ஆர். இலக்க வழக்கை நடத்தியது. அந்த வழக்கில் கோயில் உரிமைக்காரர் ச[…] உயர்திரு மு. முருகுப்பிள்ளையவர்கள் தோன்றி ஆலயம் சட்டப்படி பொதுமக்கள் சொத்தாக்கலுக்கு சம்மதமளித்து பெரிய மனதோடு நடந்துகொண்டமை மனங்கொள்ளப்பட வேண்டியது.

இதன்பின்னர் அம்பாள் காலத்துக்கு காலம் தனது தலம் சிறக்கவும் திருப்பணிவேலைகள் தொடரவும் பொருத்தமானவர்களை அழைத்துக்கொள்வதைக் கண்டு ஊரவர் பெருமிதம் கொள்வர்.

அம்பாளுக்கு ஆடிப்பூரணையைத் தீர்த்தோற்சவமாகக் கொண்டு 15 நாள்கள் வருடாந்த மகோற்சவம் நடைபெற்று வருகின்றது. பதினைந்தாம் நாள் ஆடிப்பூரணையில் அம்பாள் ஊரெல்லாம் உலாப்போந்தும் இந்[…] சமுத்திரத்தில் சமுத்திர தீர்த்தத்தை அதிகாலையில் நிறைவு செய்து அதனைத் தொடர்ந்து மதியம் ஆலயத்தில் ஈசான மூலையில் இயற்கை ஊற்றாகத் தோன்றிய முத்துத் தடாகத்தில் தீர்த்தமாடுவதுடன் தீர்த்தோற்சவம் இ[…] நிறைவு பெறும். அம்பாளின் திருவிழாக் காலத்தில் நடைபெறும் பக்தோற்சவம், திருவிளக்குப் பூசை, சுமங்கலிப் பூசை, வரலஷ்சுமிப் பூசை வசந்தோற்சவம், வேட்டைத் திருவிழா, இரதோற்வசம் தீர்த்தோற்சவம் குறிப்பிட[…] விஷேட உற்சவங்கள் எனலாம்.

அம்பிகையின் திருவருளால் சித்திரத்தேர் உருவாக்கப்பட்டு 2001 ஆம் ஆண்டு முதல் தேர்த்திருவிழா அன்று பவனிவரும் காட்சி கண்கொள் ளாக்காட்சியாகும். இந்த வரிசையில் 2011 ஆம் ஆண்டு விந[…] சுப்பிரமணியர் ஆகியோருக்கும் தனித் தனித் தேர்கள் செய்யப்பட்டு இரதோற்சவத்தில் தேர்கள் பவனிவரும் காட்சி அருளாட்சி சூழலை வெளிப்படுத்து[…] காணப்படுகிறது.********************************

கிருபா
லேணர்ஸ்
(அரச அங்கீகாரம் பெற்ற
சாரதி பயிற்சிப் பாடசாலை).
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 4353





Ph : 021-3207437
Cell : 077-7210206
ஸ்ரீ சுசீலா
ஆபரண மாளிகை
(916 KDM) தங்க நகைகள்
மொத்தமாக கிடைக்கும்.
நெ. 239, பிரதான வீதி, பருத்தித் துறை.







அம்பாள்
பல்பொருள்
வாணிபம்
தரமான பொருள்கள்
மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

K.T.R பூம்புகார் ரேடேர்ஸ்
K.T.R வெல்டிங் சென்ரர்
உங்கள் இல்லங்களுக்கான கேற், கிறில்
என்பன புதிய வடிவங்களில்
பெற்றுக்கொள்ளவும் வாகனங்களுக்கான
கவட் மூன்று நாள்களில் செய்து
கொள்ளவும் நாடவேண்டிய ஸ்தாபனம்
K.T.R வெல்டிங் சென்ரர்,
வியாபாரி மூலை வீதி (அல்வாய் நாவலடிச்சந்திக்கு
அருகில்), பருத்தித்துறை.
தொடர்புகளுக்கு:- 0778728766, 0770778383

BAJAJ
கணேசன்
மோட்டோர்ஸ் (பஜாஜ்)
டேவிட் பீரிஸ் மோட்டார்க் கம்பனியின்
முச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள்
அசல் உதிரிப் பாகங்களின்
அங்கீகரிக்கப்பட்ட விற்பனை முகவர்
இல.1 - 3, பருத்தித்துறை வீதி,
நெல்லியடிச் சந்தி, நெல்லியடி.
தொ.பே.0777049364

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

## வேவிலந்தையாளுக்கு இன்று தேர்த்திருவிழா



*''நெஞ்சமே கோயில் நினைவே சுகந்த மன்பே
மஞ்சனனீர் பூஜைகொள்ள வாராய் பராபரமே''*

அடியேனுடைய மனமே கோயிலாகவும் அடியேன் சிந்தனையே பரிமள திரவியங்களாகவும், அடியேன் அன்பே திருமஞ்சன நீராகவும் கொண்டு அடியேன் செய்யும் பூஜையினை ஏற்றுக்கொள்ளவாராய் பராபரமே என்று அம்பிகையினை வேண்டுகின்றார் தாயுமான சுவாமிகள், இத்தகைய அடியேன் போலவே எமது ஈழமணித்திருநாட்டின் வடபால் விளங்கும் யாழ். மாவட்டத்தின் வட மராட்சிப் பகுதியில் அலைமோதும் கடலையுடைய அல்வாய் பெரும் பிரதேசத்தில் வேம்பும் இலந்தையும் சேர்ந்து விளங்கும் வேவிலந்தைப் பதியிலே கோயில் கொண்டுள்ள பெருமாட்டியான முத்துமாரித் தாயை நாமும் போற்றிப் பாடுவோம்.

இத்தகைய பெரும்பதியில் அன்று உடைச்சி நாச்சியாரால் கொட்டிலில் தொடக்கப்பட்ட எம் அம்பிகையின் வழிபாடு பின்பு ஊர்மக்களால் மடாலயமாக தொடக்கப்பட்டு பின்பு படிப்படியாக வளர்ச்சிகண்டு ஆகம முறையில் அமைந்த தேவிக்கு அடியார்கள் ஒன்றிணைந்து மூர்த்தி தல சிறப்புக்கள் வாய்ந்த ஆலயமாக அதுவும் இன்று ஈழத்தில் புகழ்பூத்த சக்தி ஆலயங்களுக்கு நிகராக அன்னையின் ஆலயத்தை உயர்த்தினர் என்றால் அது மிகையாகாது. அருள் பொழியும் முத்துமாரியான அன்னைக்கு தூபி, இராஜகோபுரம், மணிமண்டபம், பூங்காவன மண்டபம், நவக்கிரகம் என்பன அமைத்ததோடு முருகன், பிள்ளையார் எம்பெருமாட்டி ஆசியோருக்கு சித்திரத்தேர்களும் அமைத்து இன்று அன்னைக்கு முன்னே அவளின் குமாரர்கள் சித்திரத்தேரில் பவனிவர பின்னே அம்பிகை தனது தேரில் ஆண்கள் ஒருபுறமும் பெண்கள் மறுபுறமும் வடம்பிடிக்க ஆயிரமாயிரம் அடியவர்கள் புடை சூழ அம்பிகை அவர்களுக்கு தன் கடைக்கண் பார்வையினால் அருள் சுரக்கும் அற்புதக் காட்சியை நாம் காண்கின்றோம்.

அடியார் அனைவரும் வேண்டும் வரம் கொடுக்கும் வேவிலந்தையாளாக விளங்கும் அம்பிகை அடியவர்களக்கு பொழியும் அருள் மழையினால் ஈழத்தின் பலபகுதிகளில் இருந்தும் அன்னையிடம் சரணடையும் பக்தர்கள் ஏராளம் பேர். எம் புலம்பெயர் உறவுகள், எங்கிருந்தாலும் அன்னையின் கடைக்கண் பார்வையில் படாதோர் யாருமில்லை. அத்தகைய முத்துமாரிக்கு இன்று இரதோற்சவம். வாருங்கள் நாமும் வடம்பிடித்து அவளின் அருள் மழையில் நனைந்து இவ்வையத்துள் வாழும் வகையது காண்போம். ''மூர்த்தி தலம் தீர்த்தம் முறையால் தொடக்கினார்க்கோர் வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே''

ந.தேவராஜா, அதிபர், நெல்லியடி மெ.மி.த.க.பா. கரவெட்டி, பரிபாலன சபை உறுப்பினர்.

## தேரேறி வருகின்றாள் தேவி



ஆத்தாள் அண்டமெல்லாம் பூத்தாள் பூத்ததுபோல் புவனம் பதின் நான்கையும் காத்தாள் மாதுளம் பூ நிறந்தாள் அந்த அபிராமவல்லி எம் அவ்வைச்ஷேத்திரத்தில் வீற்றிருந்து அருளாட்சி செய்கின்றாள். அந்த அன்னைக்கு இன்று இரதோற்சவம். தாய்த் தெய்வமாக தரணியில் வாழும் அத்தனை உயிர்களுக்கும் தாயாக என்றும் அருளை அள்ளி வழங்கும் அபிராமியாக அல்வையில் வேம்பும் இலந்தையும் கொண்ட திருப்பதியில் வேவிலந்தை முத்துமாரியம்மனாக தேடிவரும் அடியவர்க்கு கேட்கும் வரமளித்து காப்பவள் எம் அன்னை.

இத்தகைய அன்னையின் ஆலயத்தில் ஆண்கள் ஒருபுறம் பெண்கள் இன்னொரு புறம் வடம்பிடிக்க முன்னே மூத்த கணபதியின் சித்திரத்தேர் அசைய அதன் பின் கலியுக வரதனான முருப்பெருமான் வள்ளி தெய்வானையும் புறப்பட அவர்களை வழிநடத்தி அன்னையாக அடியவரின் அரோகரா ஒலியுடன் பயணிக்கும்காட்சி அற்புதமானது. இந்த ஊனக்கண்கள் இரண்டுமே அக்காட்சியைக் காண போதாது. அத்தகைய அன்னையின் வடம்பிடிப்போம் வாரீர் எம் ஆலயத் திருப்பணியில் அனைத்து அடியவர்களும் பெருமளவு பங்களித்தமையால், இன்று அம்பாள், முருகன், பிள்ளையாருக்கு சித்திரத்தேர் அமைத்தோம். மணிமண்டபம், மணிக்கோபுரம் என அத்தனையும் கண்டு மன நிறைவுடன் அம்பிகையின் ஆலயத்தினை அடியவர்கள் வியக்கும் வண்ணம் அழகில் உயர்த்தினோம். உரிய யாகங்கள், நித்திய நைமித்திய கிரியைகள் அனைத்துமே உயர்நிலை பெற்று ஏனைய ஆலயங்களுக்கும் வழிகாட்டியாக திகழும் எம் அன்னையின் வடம்பிடித்து அவள் அடிபணிந்து வையத்துள் வாழ்வாங்கு வாழ்வோம் என வாழ்த்துகின்றேன்.

சி. கணேசமூர்த்தி, தலைவர்,ஆலய பரிபாலன சபை

## பிரதான குருவின் ஆசிச்செய்தி



அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகியாக விளங்கும் அன்னை ஆதிபராசக்தி அகிலத்து உயிர்களுக்கெல்லாம் தாயாக விளங்குபவள் அத்தகைய அன்னை அல்வாய் பதியிலே வேம்பும் இலந்தையும் சேர்ந்த சோலையில் தொன்று தொட்டு மடாலயமாக தோன்றி இன்று மூர்த்தி தலம் தீர்த்தம் என்ற சிறப்புக்களுடன் உயர்நிலை பெற்று விளங்கும் புனித தலங்களுள் ஒன்றாக விளங்குகின்ற வேவிலந்தைப் பதியிலே கோயில் கொண்டு விளங்குகின்றாள்.

ஈழத்து சக்தி ஆலயங்களில் தொன்மையும் புதுமையும் அற்புதங்களும் பலகொண்டு. என்றும் அருளாட்சி புரியும் அன்னைக்கு இன்று இரதோற்சவம். அத்தகைய அன்னைக்கு அவர்தம் பரிவார தெய்வங்களுக்கும் சித்திரத்தேர்களை கொண்டு முன்னே கணபதியும், அதன்பின்னே வள்ளி தெய்வானையுடன் முருகப்பெருமானும் செல்ல ஆண்களும் பெண்களும் இருபக்கமும் இணைந்து வடம்பிடிக்க அம்பிகை தனது பிரமாண்டமான சித்திரத்தேரில் பவனிவரும் காட்சி அதியற்புதமானது. ஈழத்து அனைத்து சைவ உள்ளங்களுக்கும் மனக்கண்களில் காட்சிதரும் அன்னையின் புகழ்பாடி அவள் புகழ்பரப்பி அன்னையின் கடைக்கண் பார்வையிலேயே அனைத்தையும் பெற்று ஆனந்தக்கடலில் இன்புற்றிருப்போர் அன்னையின் அடியினை சரணடைந்தால் அதிக வரம் பெறலாம். அன்னையின் தேரிலே நாமும் வடம் பிடித்து அவளின் அருட்கடாட்சத்தினைப் பெறுவோம் என ஆசிகூறி அமைகின்றேன்.

''முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒருநாளும் தீங்கில்லையே''

சிவ சிவகுமாரக்குருக்கள், ஆலய பிரதம குரு

## ஆசிச்செய்தி



அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மனுடைய தோர்த் திருவிழா ஆடி மாத செவ்வாயில் இன்று வருவது மிகவும் சிறப்பு அன்னை உலகில் உள்ள அடியவர்களுடைய பீடைகள் நீங்கி சுபீட்சமாக வாழ்வதற்கு தீர்க்க ஆயுளும் தீர்க்க சுமங்கலிகளாகவும், கன்னிப்பெண்கள் மாங்கல்ய தோஷம் நீங்கி, சிறுவர்கள் வித்யா கடாச்சம் பெற்று பெரியவர்கள் தொழில் துறையில் லக்மி கடாச்சம் பெற்று அனைவரும் உஷ்ண சம்பந்தமான வியாதிகள் நீங்கி வேப்பிலைக்காரியை தரிசிப்பதனால் பெரும் புண்ணியம் செய்த அடியவர்களாய் வாழ்வதற்கு அம்பிகையினுடைய கடைக்கண் பார்வையினால் திருவருள் கிடைக்க சரீர உதவி, நிதியுதவி, பொருளுதவி செய்த அனைவருக்கும் பரிபாலன சபையிருக்கும், உபயகாரர்களுக்கும் அம்பிகையினுடைய திருவடித் தாமரைகளை வணங்கி ஆசி கூறுகிறேன்.

''மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்''

சதா.சிவ.ச.ரேஸ்வரக்குருக்கள்
(அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன், லண்டன் விம்பினி ஈழ பதீஸ்வரர் ஆலய குரு)

## வேவிலந்தையில் கோலாகலம்



ஈழமணித்திருநாட்டில் சிறப்புப்பெற்று விளங்கும் வடமராட்சியிலே புதுமைவாய்ந்த ஆலயங் களிலே புகழ்பூத்து விளங்குபவள் அல்வை வேவிலந்தை முத்துமாரி. வேம்பும் இலத்தையும் ஒருங்கே ஒன்று சேர்ந்து விளங்கும் வேலங்கை பதியினிலே ஆனந்தமாய் அறிவாய் அமுகமாய் அருளை மாரி போல் வழங்குபவள் நம் முத்துமாரி தாயவள். எழில் மிகு சூழலில் அமைந்துள்ள இந்த ஆலயத்தில் எழுந் தருளியிருக்கும் அம்பாளின் தரிசனத்தை பெற்று ஆன்மிக திருப்தியடைகின்றனர் பத்தகோடிகள். அகிலாண்ட கோடியும் அரவணைத்து காத்திடும் மகா சக்தி அன்னை முத்துமாரி பரிவார மூர்த்தி களுடன் சித்திர தேரில் பவனி வரும் காட்சியை அடியேனாகிய நான் காணப்பெற்றது பெரும் பாக்கியம். ஆலய மகோற்சவங்களிலே சிறப்புறப் பெற்று விளங்கும் தேர்த்திருவிழா இனிதே நிறைவேறிட எல்லாம் வல்ல அன்னை முத்துமாரித் தாயின் பாதார விந்தங்களை இறைஞ்சி நிற்கின்றேன்.

''சக்தி சக்தி சக்தி என்றோது'' சக்தி சக்தி சக்தி என்போர் சாகார் என்றோது.

வே. பரராசசிங்கம், பரிபாலனசபைச் செயலாளர்.

## அல்வை முத்துமாரி அம்மன் தேரேறி வருகிறாள்



அண்ட சராசரங்களை ஆளும் அம்பிகை ஆன்மாக்களை உய்விக்கும் பொருட்டு பஞ்சகிருத்தியங்களை மேற்கொள்ளுகிறாள். இத் தொழிற்பாட்டினை விளக்குவனவாகவே ஆலய மகோற்சவங்கள் விளங்குகின்றன. இந்த வகையில் அல்வாய் வேவிலந்தைப் பகுதியில் அமர்ந்து அருள்பாலிக்கும் முத்துமாரி யம்மன் இன்று தேரேறி பவனி வருகிறாள். அம்பிகை இப்பதியில் அமர்ந்தருளி வேண்டுவார்க்கு வேண்டும் வரங்களை வாரி வழங்குகின்றாள். உடற்பிணி நீக்குவது மட்டுமன்றி உளக்குறை நீக்கி மண்ணுள்ளோர் இன்புற்று வாழ வழிகாட்டுபவள், காலத்துக்கு காலம் தன் அடியவர்கள் மூலம் ஆலய நிர்மாண வேலைகளை சிறப்புறச் செய்தவள், அடியவர்களின் மனதில் தெய்வீக ஆசையை எழுப்பும் சூழலை ஆலயத்தில் உருவாக்கியுள்ளாள். சித்திரத்தேரை உருவாக்கியுள்ளாள். ஆலயச் சூழலில் கல்விச்சாலை, அன்னதான மண்டபம், கல்யாணமண்டபம் என்பவற்றை உருவாக்கியுள்ளாள். நான்கு திசைகளிலும் கேட்கும் வண்ணம் மணியோசையை எழும்பும் மணிக் கோபுரத்தை அமைப்பித்துள்ளாள். கோடான கோடி மக்கள் திரண்டுவந்து அவள் அருள் பெற்றுக்கொள்கின்றனர். அந்த அம்பிகையானவள் இன்று சித்திரத் தேரில் ஏறிவந்து அடியவர்களின் அக இருளை அழித்து அருளை வாரிவழங்கியுள்ளாள். அத் தேரின் வடம் பிடிக்க வாரீர். நாமெல்லாம் அவள் அருள் பெற்று இன்புறுவோமாக.

ஆ. சிவாநாதன், அதிபர்- யா/ வல்வை சிவகுருநாதர் வித்.

## வடம்பிடித்து வாழ்வு பெறுவோம்



வடமராட்சி அல்வாயம்பதி எழில் கோலம் கொள்ளும் திருநாள் இன்றாகும். மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பவை ஒருங்கே அமையப்பெற்ற சிறப்புடைய முத்துமாரித்தாய் இன்று நந்தன வருடத்துக்குரிய தேரேறி திருக்காட்சியருளுகின்றாள். ஏழுபிறப்புக்களில் யாம் அறிந்தோ அல்லது அறியாதோ செய்த வல்வினைகளையெல்லாம் தனது தேரின் வடம் பிடித்து இழுத்த உடனே நீக்கியருளும் சக்தி படைத்த நாளாகும். இன்று இதயக் கமலத்திலே தாயாரை எழுந்தருளச் செய்து இவ்வுலக வாழ்விற்கு வேண்டிய சகல அருளையும் பெற்று விடலாம். வாழ்வு என்பது மேடுபள்ளம், இன்பம், துன்பம் நிறைந்தது - வாழ்க்கைத்தேர் தெய்வீக அருளுடன் ஒரே நிலையில் உருள இந்நாளில் தாயாரை வேண்டுவோம். நிம்மதியான வாழ்வு வேண்டுவோம். கருவறை வீதியை வலம்வரும்வேளை தொல்லைகளகன்று சாந்தியும் சமாதானமும் நிலைக்க பிரார்த்திப்போம். ''வாழ்க முத்துமாரி திருவடிகள்''

சி.கா. கமல்நாதன், அகில இலங்கை சைவப்புலவர்.

## அன்னையின் வடம்பிடித்து அருளாட்சி பெறுவோம்



அல்வாய் வேவிலந்தைப் பதியில் அமர்ந்து அண்டசராசரங்கட்கெல்லாம் அருள்மழை பொழிந்து வரும் அன்னை ஸ்ரீமுத்துமாரி அம்மனின் தேர்த்திருவிழா இன்றாகும்.

இன்று அம்பிகையுடன் விநாயகர் முருகனும் சித்திரத்தேர்களில் பவனிவரும் காட்சி மெய்யுணர்வூட்டுவதாய் அமைந்துள்ளது. மும்மலங்களால் பீடிக்கப்பட்ட நம் அழுக்குகளை களைய சித்திரத்தேர்களில் அம்பிகை, விநாயகர், முருகன் பவனிவருவது நம் அனைவருக்கும் ஆனந்தமளிக்கின்றது. இந்தச் சித்திரத்தேர், தேர்மாடம் உருவாக ஒரு கோடிக்கு மேல் அள்ளித் தந்த நல்லுள்ளங்களை அம்பிகையாகவே கருதி தலைவணங்குகின்றேன்.

அம்பிகையைச் சரணடைந்தால் அதிக வரம்பெறலாம் எனும் உண்மையை மெய்யடியார்கள் பலர் வாழ்க்கையில் கண்டுணர்ந்துள்ளனர், கன்னியர் வாழ்வு பெற்றுள்ளனர். காளையர் மெய்யுணர்வுபெற்றனர். பவனிவரும் தேரின் வடம் பிடித்து உயர்ந்தோர் பலர். வளம் பெற்று வளர்ந்து உயர்ந்தோர்பலர், உள்த்தூய்மை பெற்று நன்மனிதனானோர் பலர். நாமும் நம் மூர்க்கத்தனம் அழிய, ஒழிய நன்மனிதராக அம்பிகையின் தேர் வடம் பிடிப்போமாக. தேர் விழா சிறக்க மெய்யடியார் மனம் பூரிக்க மனதார வாழ்த்துகின்றேன்.

நா. சந்திரசேகரம்,
ஆலய பரிபாலன சபை,பொருளாளர்.

விழா

மது பேபி நீட்ஸ்
& மொபைல் சொப்
குழந்தைகள், தாய்மார்களுக்குத் தேவையான அனைத்துவிதமான பொருள்கள், பிறந்தநாள் பரிசுப் பொருள்கள் மற்றும் தொலைபேசி, அதன் உதிரிப்பாகங்களையும் தேவையான பொருள்களை ஓடர் மூலமும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.
பிரதான வீதி, நெல்லியடி.
தொ.பே.0776333210

ஈஸ்வரன் நகை மாளிகை
Easwaran Nagai Maligai
அல்வாய் வீதி, மாலிசந்தி,
தொ.பே.இல.021 491 3540
உரிமையாளர்:- தங்கராசா விமலேஸ்வரன்

விண் மீன்
கட்டட விவசாயப் பொருள்களுக்கும் மாபிள் மண்ணெய் முதலிய பொருள்களுக்கும் நாடவேண்டிய முதலிடம்
பருத்தித்துறை, யாழ்ப்பாண பிரதான வீதி, நெல்லியடி.


பருத்தித்துறை தொடர்புகளுக்கு
Tel : 02122 63248
077 555 2973

பிள்ளையார் ஹாட்வெயார்
கட்டடப் பொருள்கள், மின்சாரப் பொருள்கள், கைத்தொலைபேசிகள், உதிரிப்பாகங்கள், துவிச்சக்கரவண்டி உதிரிப்பாகங்கள்.
நாவலடி, நெல்லியடி.
தொ.பே.077

ஜமுனா
பல்பொருள் வியாபாரம்
யாழ் - பருத்தித்துறை
பிரதான வீதி, நெல்லியடி.
தொ.பே.021 226 3970

அல்வாய் முத்துமாரி அம்மன் சன சமூக நிலையமும் அல்வாய் இந்து வாலிப சங்கமும் அன்னதான சபையும்
தொ.பே.
077 2844871

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கொடிகாமம் அருள்மிகு ஸ்ரீ மஹா லாவண்ய காளி அம்பாள் திருக்கோயில்

# தேர்த்திருவிழா சிறப்பு மலர் 31.07.2012



## ஆலய குருவின் ஆசிச் செய்தி

உலகமெலாம் வியாபித்து நிற்கும் தாயுள்ளமான எமது லாவண்ய தாயாருக்கு இந்த வருடம் முதன்முறையாக கொடியேற்றம் நடைபெற்று இன்றைய தினம் இரதோற்சவ பெருவிழா நடைபெறுகின்றது. இந்த வேளையில் கனவாகத் தோன்றி நனவுலகில் உருவெடுத்து பக்தர்கள் வேண்டுவன வேண்டி அருளாட்சி புரிகின்ற எமது தாயாரின் அருளானது எமது மக்கள், அடியவர்கள் அனைவருக்கும் கிடைக்க எம்பிரானை பிரார்த்திக்கின்றேன்.

சுபமஸ்து

ஆலயகுரு. பிரமஸ்ரீ ஜெ.மயூரசர்மா

## பிரார்த்தனை உரை
## தேரில் பவனி வரும் லாவண்ணிய காளியம்பாளின் அருட் செயல்கள் சொல்லில் அடங்காது.

கொடிகாமம் பகுதியில் தென்னஞ்சோலையின் நடுவே நாவல்மர நிழலில் வீற்றிருந்த காளிகா பரமேஸ்வரி தனக்கு பெருங்கோயில் வேண்டும் என உரிமையுடன் தன்னை ஆதரித்த திரு. திருமதி துரைராசா தவமணி (ஜேர்மனி) யிடம் சென்று தோற்றம் கொடுத்து அவர்களை கொண்டே பெரும் கோயிலை கட்டுவித்து இன்று லாவண்ணியா காளியம்பாளாக மந்திர சிம்மாசனத்தில் எழுந்தருளி தன்னிகரில்லா தேவியாக அருள் பாலிக்கிறாள். அற்புதக் கோயிலாக அம்பாள் ஆலயம் அமைத்து சென்ற ஆண்டு 33 ஓம குண்டங்களோடு கூடவே மகா கும்பாபிஷேகமும் அருள் விழாவாக நிறைவு செய்யப்பட்டு மீள இந்த ஒரு வருடத்தில் கொடிமரம், அன்னதான மண்டபம் மேலும் சில சிற்ப வேலைகள் நிறைவு செய்யப்பட்டு முதலாவது மகோற்சவம் நிகழ்வது அம்பாளின் பெருங்கருணையாகும். இன்று தேர் ஏறி அருட் பவனிவரும் அம்பாள் அருட் செயல்கள் சொல்லில் அடங்காது. இது தென்மராட்சி மக்கள் செய்த புண்ணியமே ஆகும். தர்மகர்த்தா குடும்பத்துக்கும், உபயகாரர்களுக்கும் அடியவர்களுக்கும் லாவண்ணிய அம்பாளின் அருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

ஆலய அறங்காவலர்

பிரம்மஸ்ரீ கை.ஜெயந்திரநாத சர்மா

## ஆலய வரலாறு

இயற்கை வளமும் எழில் மிகு தெங்குச் சோலைகளும் நிறைந்த கொடிகாமம் பதிதனிலே கோயில் கொண்டு அருளாட்சி புரிகின்ற அழகு சுந்தரியாக விளங்கும் லாவண்யத் தாயார் இற்றைக்கு 70 வருடங்களுக்கு மேற்பட்ட பாரம்பரியத்தினை உடையவள். தவமணி அவர்களின் தந்தையாரினால் சிறு குடில் அமைத்து வழிபாடு இயற்றப்பட்டு கிராமியத்தின் ஆகமம் சாரா வழிபாட்டுடன் ஆரம்பிக்கப்பட்டு கலைகள், பொங்கல்கள், மடைகள் என வழிபாடுகள் இயற்றப்பட்டுப் பின்னர் தவமணியின் தந்தையின் காலத்துக்கு பின்னர் இவர் அப்பணியினை தொடர்ந்து வருங் காலங்களில் அந்நிய தேசம் சென்று வாழும் சூழ்நிலை ஏற்பட்டது. இதனால் இங்கு காணப்பட்ட இவருடைய உறவுகள் இவர்களின் உதவியுடன் இவ்வழிபாடு நடத்தி வந்தனர். இங்கு நாவல் மரநிழலில் அதன் பொந்தினில் இன்று வரைக்கும் வெள்ளை நாகம் ஒன்று குடிகொண்டுள்ளதுடன் ஆலயத்தில் இன்று வரை அது உலா வருவதனை பலரும் அவதானிக்கின்றனர். இவ்வாறு இருக்கும் வேளையிலே ஒரு முறை ஜேர்மனியில் வாழும் தவமணியவர்கள் அன்னையின் அருட் பார்வையினால் அவர் கனவில் தோன்றி இன்ன இடத்தில் தான் கோயில் கொள்ள வேண்டும். எனவே அழகுடன் கூடிய சிறிய கோயில் அமைக்க வேண்டும் என கேட்டுக் கொண்டதற்கு அமைவுக்கும் அமைவாக ஆகமமுறைப்படி பெருங்கோயில் அமையப்பெற்று இலங்கையில் முதன் முதலாக அம்பாளுக்கு 33 உத்தமோத்தம குண்டங்களுடன் கூடிய மஹா கும்பாபிஷேகம் நடத்திவைக்கப்பட்ட பெருமைக்குரிய கோயிலாக மிளிக்கின்றது. அதன் தொடர்ச்சியாக இந்த வருடம் முதலாவது கொடியேற்ற நிகழ்வு நடைபெற்று இன்றைய தினம் தாயார் தேரில் உலாவருகின்ற காட்சி கண்கொள்ளாக் காட்சியாக அமைவதனை உணர்ந்து என் மனம் ஆனந்தமடைகின்றது. அன்னையின் திருவருளை ஏற்றி பாடுகிறேன். அவளின் அருள் அனைவருக்கும் கிடைப்பதாக.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

தர்மகர்த்தா

துரைராசா - தவமணி குடும்பம்



## பிரதம குருவின் ஆசிச் செய்தி

கொடிகாமம் மக்கள் செய்த புண்ணியம் ஸ்ரீ மஹா லாவண்ணியா காளியம்மன் திருக் கோயில் தரிசனம். கொடிகாமத்தில் ஸ்ரீ மஹா லாவண்ணிய காளியம்பாள் கருணையால் லாவண்ணியமான அழகுத் திருக்கோயிலாக கலைக்கூடமாக தெய்வீக பொலிவுடன் விளங்குவது இந்த ஆலயம். அழகு திருவுருவம் காளியம்பாள் மூலாலயத்தில் பெரும் தோற்றத்துடன் வலம்புரி விநாயகர், வள்ளி தெய்வ நாயகி, முருகன் பரிவார தேவர்களாக மிளிர ஸ்ரீ சக்கர நாயகியின் உலகமோ என வியக்கும் வண்ணம் இந்திய சிற்ப கலைஞர்களின் கைவண்ணத்துடன் அம்பாளின் அற்புத திருவுருக்கள் பல ஆலய சுற்று பிரகாரத்தில் அமைத்து பொலிவுற அமைந்துள்ளது. கும்பாபிஷேகம் நிறைவேறி ஒருவருடத்தில் முதலாவது மகோற்சவம் சிறப்பாக ஆடிமாத புண்ணிய விரதங்களை உள்ளடக்கி நிகழ்வுற, விழா பொலிவுகண்டு அம்பாள் தேரில் பவனி வருவது பெரும் பேறு ஆகும். தேரில் பவனி வரும் ஆத்தாளை, அபிராமி தேவியை, லாவண்ணிய சொரூபமாக தரிசித்து அருள் பெறுவோம்.

கலாநிதி து. கு.ஜெகதீஸ்வரக்குருக்கள்


## தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்

**Sekaran Graphic Digital Printing**

கச்சாய் வீதி, கொடிகாமம்.
021 3219437,
0779405802, 0772269997

**சிவகஜன் பதிப்பகம்**
சந்தை வீதி, கொடிகாமம்.
021-2050303, 0777682131

**சிறி வெற்றிலைக்கடை**
(மார்க்கட் உட்புறம், கொடிகாமம்)

**Abi Net Com**
Market Lane, Kodikamam
021 2050304, 0774582129

**கண்ணகை சேவிஸ் நிலையம்**
பருத்தித்துறை வீதி, கொடிகாமம்.
0774378950

**உதயகுமார் களஞ்சியம்**
இல.01, சந்தை உட்புறம், கொடிகாமம்.

**துரை மோட்டோர்ஸ்**
கண்டி வீதி, கொடிகாமம்.
021 2050307

**சாந்தன் எலெக்ரிசியன்**
சந்தை வீதி, கொடிகாமம்.
021 2050305, 0778448024

**அருன் ஹாட்வெயர் அன் மல்ரிடேரஸ் அருன் மோட்டோர்ஸ்**
பெரிய நாவலடி, கண்டி வீதி, கொடிகாமம்.
0776424517, 0775920521

**சகானா மல்ரி சொப்**
யாழ் வீதி, கொடிகாமம்.
077 6082232


## நிகழ்வுகள்:

31.07.2012 தேர் மு.ப 10.30 மணி

01.08.2012 தீர்த்தம் மு.ப. 11.00 மணி

02.08.2012 பூங்காவனம் பி.ப 5.00 மணி

சிறப்பு நிகழ்வு: "நல்லூர் ராகம்ஸ்" இன்னிசை நிகழ்வு

03.08.2012 வைரவர் மடை பி.ப 6.00 மணி

(13969) (10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

E.S.P. நாகரத்தினம் அவர்களின் அன்புத் தாய்

திருமதி பேரம்பலம் மாணிக்கம் (E.S.P)

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது அழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(சி/21083) (2.6.7)

பாடசாலைச்சமூகம். யா/யாழ்.இந்து மகளிர் கல்லூரி.

# கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனத்தின் பணியாளர் செல்வி சுஜித்தா கனகசபாபதி அவர்களின் அன்புப் பேர்த்தி இராமுப்பிள்ளை தங்கம்மா அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது அழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(சி/21083) (2.6.7)

பங்காளரும் பணியாளர்களும், ம.இராஜநாயகம் அன்கோ பட்டயக் கணக்காளர்.

# அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல்

தென்மராட்சி, ஜூலை 31

சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயான அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு சாவகச்சேரி நகராட்சி மன்றக் கேட்போர் கூடத்தில் நடைபெறும் என மன்றச் செயலாளர் சு. புத்திசிகாமணி அறிவித்துள்ளார்.

(16-9)

# 31 ஆம் நாள் நினைவு மலர்



மண்ணில்
14★ 04★ 1942

விண்ணில்
01★ 07★ 2012

## அமரர் செல்லர் இராசையா

ஆலம் விழுதுகள் போல் அரவணைத்திருந்த
எங்கள் குடும்ப விளக்கே எங்கள் அப்பா
உங்களை எங்கள் வீட்டுத் தளத்தில் கால்
பதிக்க விடாத கொடிய நோய் உங்களை
கொடுகரத்துப் பிடியுடன் கொண்டு
சென்றதென்னவோ அப்பா! உற்றவர் அயலவர் உங்கள்
மரணச் செய்தி கேட்டுத் திடுக்கிட்டனர்
திக்கிட்ட திசையில் திகைத்து நின்றோம் நாமும் அப்பா!
மீண்டும் எம் வீட்டில் உறைவிடமாய் எம் உள்ளத்தில்
உறைந்திருப்பீர்! என வேண்டி எம் ஆறாத்துயரத்தில்
பங்கு பற்றி நேரிலேயும்
வெளி நாட்டிலும் உள் நாட்டிலும்
தொலை பேசி மூலம் எமக்கு ஆறுதல் புரிந்த அனைவருக்கும்
எம் மனமகிழ்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு SR என்னும்
உங்களின் புகழ் மலர்ந்திருக்கவும் உங்களின் ஆன்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!


துயரில் ஊறும் அவரது குடும்பத்தினர்.

கற்பகப்பிள்ளையார்
கோயிலடி, உடுவில் கிழக்கு.

T.P.0775009281

(21169) (2-7-6)

# 6 ஆம் மாத நினைவு நாளும் 37 ஆவது பிறந்தநாளும்



அன்னைமடியில்
31★ 07★ 1975

ஆண்டவனின் அணைப்பில்
18★ 02★ 2012

அதிகாலையில் என்னைத் தேடுகின்றவர்கள் கண்டடைவார்கள். நீதிமொழி 8:17

## சிங்கராசா றஞ்சித் மரியதாஸ் (இந்திரன்)

ஊர் போற்றும் உத்தமனாய்
சிகரத்தின் இருப்பிடமாய் இருந்த
எங்கள் உயிர் தம்பியே இந்திரா!
எம் பாச விளக்கே இந்திரா, நீ பிரிந்து
ஆறு மாதம் ஓடி விட்டன உன் பிரிவு எங்களை வாட்டுகிறது.
இன்று உன் பிறந்தநாள் எம் பிறந்தநாள் பரிசு என்னவோ! உனக்காகத்
தினமும் எம் கண்களில் வழியும் கண்ணீர் துளிகள் தான் ஐயா
எங்கள் கண்களில் வழியும் கண்ணீர் துளிகள்
எங்கள் நெஞ்சை நனைத்தாலும் அழியாது உன் நினைவுகள்.

உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

(21092) (2-7-6)

என்றும் உன் நினைவோடு
தாய், மனைவி, பிள்ளைகள், அக்காமார்,
அண்ணன்மார், அண்ணிமார், மச்சான்மார்,
பெறாமக்கள், மருமக்கள் மற்றும் உறவினர்கள்

சி.சந்திரன்,
11/1, பழைய பூங்காவீதி,
யாழ்ப்பாணம்.
0779337103




#9, குமார வீதி, நல்லூர்
யாழ்ப்பாணம் -021 2229191

Junior Diploma

சிறுவர்களின் எதிர்காலத்திற்கு தேவையான அடிப்படை கணினி பயிற்சிகள்

தற்பொழுது பதிவுகள் நடைபெறுகின்றன.
பயிற்சி பற்றிய விளக்கங்களுக்கு மாணவர்களுடன் பெற்றோரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(சி/2020) (2-6-7)

# கண்ணீர் அஞ்சலி



திருமதி
இராஜேஸ்வரி
இரத்தினசபாபதி

எமது வாழ்வக நிர்வாக சபை அங்கத்தவர் திரு. இ. சுத்தானந்தன் அவர்களின் அன்புத் தாய் திருமதி. இராஜேஸ்வரி இரத்தினசபாபதி அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்ளும் அதே வேளை, துயர் சுமந்து நிற்கும் திரு. சுத்தானந்தன் மற்றும், குடும்ப உறவுகளுடன் நாமும் இணைந்து கொள்கின்றோம்.

வாழ்வக சமூகத்தினர்,
சபாபதிப்பிள்ளை வீதி,
சுன்னாகம்.

(சி/2017) (3.6.7)

# மரண அறிவித்தல்

திருமதி **இரத்தினசபாபதி** (அப்பாத்துரை)

**இராஜேஸ்வரி** (ராசாத்தி)



கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினசபாபதி இராஜேஸ்வரி நேற்றுமுன்தினம் (29.07.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா - இரத்தினசபாபதியின் அன்புமனைவியும், ஜெகதீஸ்வரன் (ஆசை), சுத்தானந்தன் (சிறி), சந்திரலீலா (வவி), சந்திரமோகனா (மாணா), சத்தியானந்தன் (ராசன்), சந்திரகாந்தா (காசினி), கிருபானந்தன் (ஈசன் - பிரான்ஸ்), காலஞ்சென்ற சந்திரவசந்தி ஆகியோரின் பாசமிகு தாயும், இராஜேஸ்வரி (வசந்தி), சாவித்திரி (ராசாத்தி), செல்வராசா (திருமுருகன் ஹாட் வெயார்), பத்மநாதன் (பிள்ளையார் ஸ்ரோர்ஸ்), தர்மலதா (ஓய்வு நிலை ஆசிரியர், யா/வேம்படி மகளிர் கல்லூரி), கோபிநாதன் (கோபி, இளவரசி காலணியகம், சுன்னாகம்), குமுதா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், உமாசுதன் (புத்தளம்), கணேசுதன் (ஆஸ்திரேலியா), பிரமிளா (லண்டன்), கஜீந்தா (லண்டன்), கிருஷ்ணமேனன், சாந்தமேனன், ராஜிப்பிரபா (கண்டி), பிரசாத் (லண்டன்), தனுசா (கனடா), ஜனனி (கனடா), ஜெகனி (கனடா), றிசோகரன், தசாகரன் (இந்தியா), ஜீவாகரன், டல்ஷினி, அபிஷேக், ஷிபிஷேக் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார். நிஷோத்திரா (புத்தளம்), அக்ஷயா (கனடா), யாதவி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பூட்டியமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.07.2012) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சீக்கோ லேன், உப்புமடம் சந்தி,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

(21155) (6-8-14)

தகவல்:
குடும்பத்தினர்.

# Vacancies

## Sewalanka Foundation

## Jaffna District Office

We are looking for committed, self-motivated and energetic individuals to fill the following vacancies on contract basis.

**Project Coordinator**

***Essential qualification, Experience & Skills***

- A degree from a recognized University in Social Science or related field or 3 years experience as Project Coordinator in a NGO/Private sector.
- Possess knowledge in Social Mobilization and experience working with Community based organizations.
- Good command in English.
- Communication and Report writing skills.
- Computer skills.
- License to ride Motor Cycle.

**Monitoring & Reporting Officer**

***Essential qualification, Experience & Skills***

- A degree from a recognized University in Social Science or related field or 3 years' experience as a Monitoring and Reporting Officer in a NGO/Private sector.
- Good knowledge in English
- Skills in Monitoring, conducting evaluation, obtaining feedback and follow up on the impacts.
- Excellent Communication Skills.
- Computer skills.
- License to ride Motor Cycle.

**Please Note:-**

- Salaries for the above posts are negotiable.
- Closing date of application will be 06/08/2012.
- Candidates who do not possess the required qualification are advised to refrain from making applications.
- Only shortlisted candidates will be called upon for the interview.
- Canvassing will be treated as a disqualification.
- Please submit your CV to the under mentioned address together with an approx. 300 word essay on how your previous work experience will assist in full filling the above post applied for;

The HR & Administrative Officer,
Sewalanka Foundation,
54/2, Palaly Road,
Kondavil.

Or


by fax or email to:
Fax No: 021 222 9850,
email: Jaffna.hr@sewalanka.org

(சி/2018) (2-6-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 30ஆம் ஆண்டு நினைவஞ்சலி.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி.



மலர்வு 21 * 03 * 1925

உதிர்வு 10 * 08 * 1982



மலர்வு 10 * 02 * 1937

உதிர்வு 01 * 07 * 2012

### சுவக்கீன் அந்தோனிப்பிள்ளை
(ஐயாத்தம்பி)

ஐயா நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்த ஆண்டு முப்பது ஓடி மறைந்தாலும். உங்கள் சிரித்த முகம் எங்கள் மனக்கண்ணில் என்றென்றும் மறையாது நிலைத்து நிற்கும்

### அந்தோனிப்பிள்ளை மேரி திரேசா

அம்மா ஐயாவின் வழியைப் பின் தொடர்ந்து சென்று இன்றுடன் 31நாள்கள் சென்றுவிட்டன. ஐயா சென்றபின் 30 ஆண்டுகளாக அவர் நினைவுகளோடு எங்களுடன் இருந்து எங்களை வழிநடத்தி வாழவைத்த உங்கள் அன்பும் அரவணைப்பும் பாசமும் எங்கள் கண்களை குளமாக்குகின்றது.

நீங்கள் இருவரும் மறைந்தாலும் எங்களுடனேயே இருக்கின்றீர்கள் என்ற நினைப்புடன் உங்கள் இருவரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

எங்கள் தாயாரின் மரணச் செய்தி கேட்டு நேரிவந்து கலந்து கொண்டும், தொலைபேசி மூலமும் எங்களுக்கு ஆறுதல் சொன்ன உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மற்றும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டு எங்கள் துயரத்திலும் பங்கு கொண்ட சதா சகாய அன்னை சனசமூக நிலையத்து நிர்வாகிகளுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (31.07. 2012) செவ்வாய்க்கிழமை எங்கள் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேரியோசேப்(மகன்)
அமலபத்திமா(மருமகள்) } Bahrain
வியோனிசா-(பேர்த்தி) } (பாஹ்றென்)
மற்றும்
மகள் குடும்பத்தினர்

சதா சகாய மாதா கோயிலடி,
துன்னாலை வடக்கு, கரவெட்டி.

(சி/2015)(5-6-7)

## உளப்பூர்வமான அஞ்சலிகள்

### திருமதி மாணிக்கம் பேரம்பலம்



எங்கள் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் அபிவிருத்திப் பணிகளுக்குத் தம்மாலான பங்களிப்பினை மனமுவந்து நல்கிவரும் உயர்திரு. பேரம்பலம் நாகரத்தினம் (ஈ.எஸ்.பி) அவர்களின் அருமைத் தாயாரான திருமதி மாணிக்கம் பேரம்பலம் அவர்களின் பிரிவினால் வாடும் அவரின் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எங்கள் முடிமன்னருடன் கூடிய வித்தக விநாயகப் பெருமானை வேண்டிநிற்கின்றோம்.

யாழ்ப்பாணம்
தேசிய கல்வியியற் கல்லூரிச் சமூகம்,
கோப்பாய்.

(21087) (3.6.7)

## கண்ணீர் அஞ்சலி



லயன் நாகரத்தினம் (P.M.J.F)
அவர்களின் தாய்
திருமதி மாணிக்கம் பேரம்பலம்
அவர்களின் பிரிவால்
துயருற்றிருக்கும் அவரது
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா இறைவன் திருவடி
நிழலில் இளைப்பாற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
சங்கிலியன் மன்றம், சனசமூகநிலையம், நல்லூர். (21085) (45.6.7)

## கண்ணீர் அஞ்சலி

எமது மன்ற பணிப்பாளர்சபை அங்கத்தவரும் முன்னணி வர்த்தகரும்,சமூகசேவையாளருமான E.S.P. நாகரத்தினம் அவர்களின் அன்புத் தாயார்



திருமதி
### மாணிக்கம் பேரம்பலம்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல நடராஜப் பெருமானை பிராா்த்திக்கிறோம்.

தலைவர், பணிப்பாளர்சபை,
மன்ற அங்கத்தவர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள்
வர்த்தக தொழிற்துறை மன்றம், யாழ்ப்பாணம்.

(சி/2013)(5-6-7)


# இப்போது விற்பனையில்

## விற்பனையாகும் மரபுரிமைகள்



நம் மத்தியில் புழக்கத்தில் இருக்கும் வெண்கலப் பொருள்கள் அதிக விலைக்கு விற்பனையாகின்றன. இவற்றை தெற்கிலிருந்து வரும் வியாபாரிகளுக்கு விற்பனை செய்து கொள்வதனூடாக எமது பண்பாட்டையும், வரலாற்றையும் விற்பனை செய்து கொள்கின்றோம் எனும் விழிப்புணர்வு எவர் மத்தியிலும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

## கடவுளைக் காப்பாற்றுங்கள்!



ஆலய விக்கிரகங்களில் அநேகமானவை ஐம்பொன் கொண்டுதான் வடிவமைக்கப்படுகின்றன. இந்த ஐம்பொன் மிகவும் பெறுமதி வாய்ந்தது என்பது யாவரும் அறிந்ததே. இத்தகைய பெறுமதி வாய்ந்த விக்கிரகங்களே திருடர்களின் இலக்காகவுள்ளன.

## சுடர் ஒளி வாரமலர்

இப்போது புதன் மலராக
வெளியாகின்றது என்பதை வாசகர்களுக்கு
அறியத்தருகின்றோம்.!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவஞ்சலி

முதலாம் ஆண்டு — 2ஆம் ஆண்டு





அன்னைமடியில் 01.11.1948 — ஆண்டவன்அடியில் 12.08.2011

**ஆறுமுகம் தனபாலசிங்கம்**
(சோதிலிங்கம் சுவாமிகள்)

அன்னைமடியில் 23.07.1927 — ஆண்டவன் அடியில் 21.09.2010

**ஆறுமுகம் தங்கராசம்**

எம் உயர்வுக்காக உதிரம்
கொடுத்து வளர்த்தீர்கள்
நாம் உயர்ந்த வேளை நீங்களோ
எம்மை விட்டு மறைந்தீர்கள்
ஆண்டுகள் பல சென்றாலும் உம்
நினைவுடனேயே நாம் வாழ்வோம்
உங்கள் ஆத்ம சாந்திக்காக ஆண்டவனை
ஆயிரம் முறை பிரார்த்திக்கின்றோம்.

புகையிரத வீதி,
இணுவில் கிழக்கு.

(21199)(5-6-7)

குடும்பத்தினர்.


## கால்நடைகளைப் பதிவு செய்யவும்

யாழ்ப்பாணம்,ஜூலை31

வளர்ப்பு மாடுகளை எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் கால்நடை அபிவிருத்தித் திணைக்களத்தில் பதிவுசெய்து அவற்றுக்கான காதுப் பட்டியைப் பெற்றுக்கொள்ளுமாறு வேலணை, தீவகம் தெற்கு பிரதேச செயலர் மஞ்சுளா தேவி சதீசன் அறிவித்துள்ளார்.

கடந்த 25ஆம் திகதி வேலணைப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற விவசாயக் குழுக் கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட மேற்படி தீர்மானத்துக்கு அமைய அன்றைய தினத்திலிருந்து எதிர்வரும் 25ஆம் திகதி வரையிலான காலப் பகுதிக்குள் கால்நடைகளைப் பதிவுசெய்து அவற்றுக்கான காதுப் பட்டிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் காதுப் பட்டி இல்லாத மாடுகளை கட்டாக்காலி மாடுகளாகக் கருதி பிரதேச செயலகத்தால் பிடிக்கப்பட்டு ஏலத்தில் விடப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.


# பணிநிலை வெற்றிடம்

**(1) கணக்குப் பதிவாளர் - பெண்கள்**
(கணினி அறிவு இருத்தல் வேண்டும், முன் அனுபவம் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்)

**(2) விற்பனையாளர் - ஆண்கள்**
(மின்சாரப் பொருள்கள் தொடர்பான அறிவு மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்)

30.07.2012 - 02.08.2012 வரை முற்பகல்
10.00 - 12.00 மணிக்குள் நேரில் சமுகம் தரவும்

**செல்வா எலக்ரிக்கல்ஸ்**
இல. 21, பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தி.
தொலைபேசி .இல : 077 7642771

(21104)(6-7-8)

# ஆறாம் ஆண்டு நினைவினிலே...



மண்ணில் 08 ★ 08 ★ 1977
விண்ணில் 08 ★ 08 ★ 2006

அமரர் **இரத்தினவேல் அகிலன்**

திதி : சதுர்த்தி

எங்கள் குடும்பத்து ஒளிவிளக்கே நீமறைந்து
சென்றதுவோ ஆறாண்டு சென்றதனிலே இன்று
பொங்கும் துயரணைந்து வாடுகின்றோம் அகிலா
பொன்மகனே உன்னை இனியென்று காண்போம்

156, கச்சேரி நல்லூர் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்
(21102)(6-7-8)

குடும்பத்தினர்



# மரண அறிவித்தல்

## நாகலிங்கம் ஆறுமுகம்



யாழ். மத்தியூஸ்வீதியைப் பிறப்பிடமாகவும் யாழ். மடம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் ஆறுமுகம் 28.07.2012 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் -நாகம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும் அருந்ததியின் (ராசாத்தி) அன்புக் கணவரும் சுப்பிரமணியம் மகேஸ்வரி, வசந்தா, செல்வராசா (ஆவிஸ்), வேலாயுதம், ராசகுலேந்திரன் (குட்டி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் றஞ்சித்குமார் (றஞ்சித்- வைற்கவுஸ் ஊழியர்), றமேஸ்,ராஜ்குமார் (குமார்), நிசாந்தினி (சசி), உஷாந்தினி (சோபா), பிரதீபன் (ராசவன்), ஆகியோரின் பாசமிகு தந்தையும் அனுஷா, நிரோ, அமுதா, தர்ஷினி, யூஜின் ஆகியோரின் அன்பு மாமனும் சின்னமணி, பவளயோகினி, காலஞ்சென்ற மனோன்மணி மற்றும் ராணி, விமலராசா, தெய்வேந்திரராசா ஆகியோரின் மைத்துனரும், றொஜீவன், றதீபா, கனுஷா, கனிஸ்ரா, பிரியா, செரினா, கஜீபன், அபிதா, சாருக்கான், சுஜீபன், ரித்திகா, சானு ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.07.2012) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

432/2, மடம் வீதி,
யாழ்ப்பாணம்.

(21162)(5-6-7)

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குமரையா வெற்றிக்கிண்ணம் ஊரெழு றோயல் வசமானது



யாழ்ப்பாணம், ஜூலை 31

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன், யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் நடத்திய ஈ.கே. குமரையா ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்தை ஊரெழு றோயல் தன் வசமாக்கியது.

குறித்த உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் நேற்றுப் பிற்பகல் 4 மணியளவில் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் களம் இறங்கியது.

ஏற்கனவே பல சுற்றுப் போட்டிகளில் இவ்விரு அணிகளுமே இறுதிப்போட்டிகளில் அண்மைக்காலங்களில் மோதிக்கொண்டதால் அந்த அனுபவத்தை அடிப்படையாக வைத்து இரு அணி வீரர்களும் புதிய வியூகங்களுடன் இந்த இறுதிப் போட்டியில் விளையாடினர். இதனால் போட்டி பரபரப்பாக அமைந்து பார்வையாளர்களுக்கு விருந்தளித்தது.

முதல் பாதி ஆட்டத்தில் இரு அணி வீரர்களும் எதிரணி கோல் கம்பத்தை நோக்கி பந்தை நகர்த்தி சென்ற போது கோல் பெறும் முயற்சிகள் தோல்வியிலேயே முடிவடைந்தன. பின்னர் இரண்டாம் பாதி ஆட்டத்தில் எப்படியும் கோல் அடித்துவிட வேண்டும் என்ற உத்வேகத்தோடு இரு அணியினரும் தமது முழுத் திறனையும் வெளிப்படுத்தி மோதிக் கொண்டன. இந்த நிலையில் இரண்டாம் பாதி ஆட்டத்தின் 36 ஆவது நிமிடத்தின் றோயல் விளையாட்டுக்கழகத்தின் முன்னணி வீரர் சசிகரன் அபாரமாக தன் அணிக்கு ஒரு கோலைப் பெற்றுக்கொடுத்தார். அதன் பின்னர் பதிலடியாக மயிலங்காடு ஞானமுருகன் அணியினரும் கோல் ஒன்றை அடித்தனர். எனினும் 'எல்லை கடந்த நிலை' என நடுவர் தீர்ப்பளித்ததால் அது கோலாக கணிக்கப்படவில்லை. இந்த நிலையில் ஆட்ட நேர இறுதியில் 1:0 என்ற கோல்க் கணக்கில் ஞானமுருகனை வீழ்த்தி சம்பியன் கிண்ணத்தை ஊரெழு றோயல் சுவீகரித்துக்கொண்டது.

இறுதிப்போட்டியில் சிறந்த வீரர்களாக றோயல் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த தர்மகுலநாதன் (வெள்ளை), ஞானமுருகன் அணியைச் சேர்ந்த சேகர் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத் தலைவர் தேசமானிய இ.ஆனல்ட் தலைமையில் நடைபெற்ற இந்த இறுதிப்போட்டியில் யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்த சங்கத்தின் முன்னாள் செயலாளர் ஜி.ஆர்.இராஜசிங்கமும், சிறப்பு விருந்தினராக சுங்கத் திணைக்கள உத்தியோத்தரும், ஈ.கே. குமரையாவின் புதல்வருமான கே.இரவீந்திரனும் கலந்துகொண்டு வெற்றியீட்டியோருக்கு பரிசில்களை வழங்கிக் கௌரவித்தனர். (ங-23-130)

## நெடுந்தீவுக் கழகங்களுக்கான உதைபந்தாட்டம்



நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான பிரதேச செயலக வெற்றிக் கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி கடந்த வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நெடுந்தீவு சீக்கிரியாம்பள்ளம் மைதானத்தில் இடம்பெற்றது.

தொடரின் முதல் போட்டியாக சென். ஜோன்ஸ் விளையாட்டு கழக''ஏ'' அணியை எதிர்த்து உதயசூரியன் விளையாட்டுக் கழக''பி''அணி மோதிக் கொண்டது. இதில் சென். ஜோன்ஸ் விளையாட்டுக் கழக ''ஏ''அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது போட்டியில் சென்.அன்ரனிஸ் யுத் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஐக்கிய தீப ''பி'' அணி மோதிக்கொண்டது. இந்தப் போட்டியில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு கோலினைப் பெற்றதனால் ஆட்டம் சம நிலையில் முடிவுற்றது. (த-23)

## பத்மேஸ்வரன் வெற்றிக் கிண்ணம்; பரபரப்பான ஆறு ஆட்டங்களின் முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 31

கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழகம், கழகத்தின் முன்னாள் வீரர் அமரர் பத்மேஸ்வரன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தும் 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களும் அவற்றின் முடிவுகளும் வருமாறு,

முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் நாச்சிக்குடா சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து வட்டக்கச்சி இளம்தளிர் விளையாட்டுக்கழகம் மோதிக் கொண்டது. இதில் நாச்சிக்குடா சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகம் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவதாக இடம் பெறவிருந்த ஆட்டத்தில் லக்கிஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வலைப்பாடு சென். ஆன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவிருந்த போதும், வலைப்பாடு சென்.ஆன்ஸ் விளையாட்டுக்கழகம் மைதானத்துக்கு சமுகம் தராமையினால் லக்கிஸ்ரார் விளையாட்டுக்கழகத்துக்கு வெற்றி வழங்கப்பட்டது.

மூன்றாவதாக இடம் பெற்ற ஆட்டத்தில் பூநகரி நண்பர்கள் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கிளிநொச்சி உதயதாரகை விளையாட்டுக்கழகம் மோதிக் கொண்டது. இதில் கிளிநொச்சி உதயதாரகை விளையாட்டுக்கழகம் 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

நான்காவதாக இடம் பெறவிருந்த ஆட்டத்தில் முரசு மோட்டை விளைபூமி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக்கழக அணி மோதவிருந்தது. எனினும் வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக்கழக அணி போட்டிக்கு சமுகம் தராமையினால் முரசு மோட்டை விளைபூமி விளையாட்டுக்கழகத்துக்கு வெற்றி பெற்ற அறிவிக்கப்பட்டது..

ஐந்தாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் உருத்திரபுரம் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஸ்கந்தபுரம் ஸ்கந்தா விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் உருத்திர புரம் விளையாட்டுக்கழக அணி 2 :0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.

இறுதியாக இடம்பெற்ற ஆட்டத்தில் உருத்திரபுரம் சந்திரோதயா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கிராஞ்சி சென்.தாரகை விளையாட்டுக்கழகம் மோதிக் கொண்டது.

இதில் இரண்டு அணியினரும் தலா ஒரு கோலைப் பெற்றதினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது . வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் உருத்திரபுரம் சந்திரோதயா விளையாட்டுக்கழகம் 3:1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது. (ங-23)



வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் மாவட்ட அணிகளுக்கு இடையே நடைபெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியில் மாகாண மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்ற கிளிநொச்சி மாவட்ட அணியினருடன் வடமாகாண விளையாட்டுத் துறைப் பணிப்பாளர் சி.அன்ரனிதத்துரை கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அதிகாரி சதானந்தன் மற்றும் விளையாட்டு அலுவலர்களும் காணப்படுகின்றார்கள். (86)

## 'பரா' ஒலிம்பிக் கரப்பந்தாட்டம்; தேசிய அணித் தெரிவுக்கு பயிற்சி



வவுனியா , ஜூலை 31

விசேட தேவையுடையவர்களுக்கான கரப்பந்தாட்ட தேசிய அணிக்கு வடக்கு மாகாண வீர வீராங்கனைகளையும் இணைத்துக் கொள்வதற்கான இரு நாள் பயிற்சிகள் அண்மையில் வவுனியா மாவட்டத்தில் இடம்பெற்றது.

அடுத்த வருடம் மலேசியாவில் இடம்பெறவுள்ள விசேட தேவை உடையவர்களுக்கான 'பரா' ஒலிம்பிக் போட்டிகளில், மாற்றுத் திறனாளிகள் களத்தில் இருந்தபடி விளையாடும் கரப்பந்தாட்டப் போட்டிகளில் (சிற்றிங் வொலிபோல்) பங்குபற்றவுள்ள இலங்கை அணிக்கான வீரர்களையும், வீராங்கனைகளையும் தெரிவு செய்வதற்காகவே இந்தப் பயிற்சி முகாம் இடம் பெற்றது.

வவுனியா மாவட்ட ஹன்டிக்ஹப் இன்ரநஷனல் நிறுவனத்தின் 'அனைவருக்குமான விளையாட்டு' எனும் தொனிப்பொருளில் இடம்பெற்ற இந்தப் பயிற்சி முகாமில் அகில இலங்கை விசேட தேவையுடையோருக்கான கரப்பந்தாட்டச் சங்கத்தின் தலைவரும், இலங்கை கரப்பந்தாட்டச் சங்கத்தின் உப தலைவருமான விக்கிரம சிங்க தலைமையில் கொழும்பில் இருந்து வருகை தந்த தேசிய அணிப் பயிற்சியாளர்கள் இந்தப் பயிற்சி முகாமில் கலந்து கொண்டவர்களுக்கான பயிற்சிகளை வழங்கினர்.

இந்தப் பயிற்சி முகாமில் கிளிநொச்சி , முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த விசேட தேவையுடைய வீர, வீராங்கனைகளும், விசேடதேவையுடையவருக்கான தேசிய அணியில் ஏற்கனவே உள்ள வீரர்களுமாக சுமார் 50க்கும் மேற்பட்டோர் பங்குபற்றினர் .

பயிற்சி முகாமின் நிறைவில் தேசிய அணியில் இடம் பெற்றுள்ள வீர, வீராங்கனைகளுக்கிடையிலான 'சிற்றிங் வொலிபோல் ' காட்சிப் போட்டி ஒன்றும் இடம்பெற்றது.

இந்தப் பயிற்சியிலும், போட்டியிலும் விசேட தேவையுடையவர்கள் உற்சாகத்துடன் ஈடுபட்டனர்.

இதேவேளை இந்தப் பயிற்சி முகாமில், தேசிய அணியில் இடம்பெற்று சர்வதேச போட்டிகளில் பங்குபற்றிய மாற்றுத் திறனாளிகளான கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பி.மலர்விழி, எ.மேரிஅனிற்றா ஆகியோரும் வருகை தந்து பயிற்சிகளில் ஈடுபட்டனர். (ங-400)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பளுதூக்குதலில் சாதனை

லண்டன் ஒலிம்பிக்கில் மகளிர் 53 கிலோ எடை பளு தூக்குதல் போட்டியில் கஜகஸ்தான் வீராங்கனை ஸல்பியா சின்ஷென்லோ தங்கம் வென்று உலக சாதனை படைத்தார்.

லண்டன் ஒலிம்பிக் போட்டியின் மூன்றாம் நாளான நேற்று மகளிர் 53 கிலோ எடை பளுதூக்குதல் போட்டி நடைபெற்றது. போட்டியில் 'ஸ்னாட்ச்' பிரிவில் 95 கிலோ, 'கிளீன் அன்ட் ஜெர்க்' பிரிவில் 131 கிலோ என்று மொத்தம் 226 கிலோ எடையைத் தூக்கியதன் மூலம் தனது பழைய உலக சாதனையை (225 கிலோ) முறியடித்து கஜகஸ்தான் வீராங்கனை சின்ஷென்லோ புதிய உலக சாதனை படைத்தார்.

'ஸ்னாட்ச்' பிரிவில் 96 கிலோ, 'கிளீன் அன்ட் ஜெர்க்' பிரிவில் 123 கிலோ என்று மொத்தம் 219 கிலோவைத் தூக்கி தைவானின் ஸசிங் வெள்ளிப் பதக்கத்தையும், 'ஸ்னாட்ச்' பிரிவில் 99 கிலோ, 'கிளீன் பிரிவில்' 120 கிலோ என்று மொத்தம் 219 கிலோவைத் தூக்கி மால்டோவாவின் கிறிஸ்டினா இவோ வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர். (5)




## ஒலிம்பிக் பதக்கப் பட்டியல்

30.07.2012

LONDON 2012

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| சீனா | 7 | 4 | 2 | 13 |
| அமெரிக்கா | 3 | 5 | 5 | 13 |
| இத்தாலி | 2 | 4 | 2 | 8 |
| பிரான்ஸ் | 2 | 1 | 3 | 6 |
| தென்கொரியா | 2 | 1 | 2 | 5 |
| கஜகஸதான | 2 | 0 | 0 | 2 |
| ஆஸதிரேலியா | 1 | 1 | 1 | 3 |
| பிரேசில் | 1 | 1 | 1 | 3 |
| ஹங்கேரி | 1 | 1 | 1 | 3 |
| நெதர்லாந்து | 1 | 1 | 0 | 2 |

# தங்கம் 4

லண்டன் ஒலிம்பிக் துப்பாக்கி சுடுதல் 'ஸ்கீட்' பிரிவில் அமெரிக்க வீராங்கனை கிம்பெர்ளி ரோட் உலக சாதனையை சமன் செய்து தங்கப்பதக்கம் வென்றார்.

ஒலிம்பிக் துப்பாக்கி சுடுதலில் பெண்கள் ஸ்கீட் பிரிவு ஆட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இறுதிப் போட்டிக்கு தகுதியான 6 நாட்டு வீராங்கனைகள் இதில் கலந்து கொண்டனர்.

இறுதிப் போட்டியின் முடிவில் அமெரிக்க வீராங்கனை கிம்பெர்ளி ரோட் 99 புள்ளிகள் பெற்று தங்கப்பதக்கம் வென்றார். அவர் தகுதிச் சுற்றில் 74 புள்ளிகளும், இறுதிப் போட்டியில் 25 புள்ளிகளும் பெற்றார்.

தங்கப் பதக்கத்தை வென்றதன் மூலம் கிம்பெர்ளி, அமெரிக்காவின் புதிய சாதனை மங்கையாக உருவெடுத்துள்ளார்.

அவர் 1996ஆம் ஆண்டு அட்லாண்டா மற்றும் 2004 ஆம் ஆண்டு ஏதென்ஸ் ஒலிம்பிக்கில் 2 தங்கப்பதக்கமும், 2000 ஆம் ஆண்டு சிட்னி ஒலிம்பிக்கில் வெண்கலமும், 2008 ஆம் ஆண்டு பீஜிங் ஒலிம்பிக்கில் 'ஸ்கீட்' பிரிவில் வெள்ளிப்பதக்கமும் வென்றிருந்தார்.

இதன் மூலம் தொடர்ந்து 5 ஒலிம்பிக்கில் தனிநபர் பிரிவில் பதக்கம் பெற்ற முதல் அமெரிக்கர் என்ற மகத்தான சிறப்பை பெற்றிருக்கிறார்.

91 புள்ளிகள் பெற்ற சீன வீராங்கனை நிங் வெய் வெள்ளிப்பதக்கமும், 90 புள்ளிகள் பெற்ற சுலோவேகியா வீராங்கனை டங்கா பார்டேகோவா வெண்கல பதக்கமும் பெற்றனர். (5)

# அமெரிக்க வீராங்கனை சாதனை



மகளிருக்கான 100 மீற்றர் பட்டர்பிளை நீச்சல் போட்டியில் அமெரிக்க வீராங்கனை 55.98 செக்கன்களில் நீந்தி முடித்து புதிய சாதனை படைத்தார்.

விளையாட்டு திருவிழாவான ஒலிம்பிக் போட்டி லண்டனில் நடைபெற்று வருகின்றது. மகளிருக்கான 100 மீற்றர் பட்டர்பிளை நீச்சல் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் பந்தய தூரத்தை 55.98 செக்கனில் கடந்து அமெரிக்காவைச் சேர்ந்த டானா வால்மர் புதிய உலக சாதனை படைத்து தங்கம் வென்றார்.

இதற்கு முன்பு 2009 ஆம் ஆண்டு சுவீடனைச் சேர்ந்த சாரா 56.06 செக்கனில் கடந்ததே சாதனையாக இருந்தது. இந்தச் சாதனையை 3 ஆண்டுகளுக்கு பின்பு வால்மர் முறியடித்துள்ளார்.

400 மீற்றர் மகளிர் பிரீஸ்டைலில் பிரான்ஸ் வீராங்கனை மூபாத் தங்கம் வென்றார். அவர் 4 நிமிடம் 01.45 வினாடியில் கடந்து புதிய ஒலிம்பிக் சாதனை படைத்தார்.

ஆண்களுக்கான 100 மீற்றர் பேக்ஸ்டிரோக் நீச்சலில் தென்னாபிரிக்க வீரர் வான்டர் தங்கம் வென்றார்.

4x100 மீற்றர் தொடர் நீச்சலில் பிரான்ஸ் ஆண்கள் அணி தங்கம் வென்றது.

.(5)

# குதித்தவர் ராணியல்ல.

ஒலிம்பிக் தொடக்க விழா நிகழ்ச்சியின் போது பரசூட்டிலிருந்து குதித்தது பிரிட்டன் ராணி எலிசபெத் இல்லையென்றும் அவர் பிரபல காமெடி நடிகர் எனவும் புதிய தகவல் வெளியாகியுள்ளது.

2012 ஆம் ஆண்டிற்கான ஒலிம்பிக் போட்டிகள் பிரிட்டன் தலைநகர் லண்டனில் நடைபெற்று வருகிறது. இதன் தொடக்க விழா மிகப்பிரம்மாண்டமாக நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் சுட்டிக்காட்டும் படியாக அமைந்தது ராணி எலிசபெத் ஹெலிகாப்டலிருந்து பரசூட் மூலம் குதித்தது தான்.

இந்த ஒலிம்பிக் தொடக்க விழா நிகழ்ச்சிகளுக்கான வீடியோ சமீபத்தில் வெளியானது. அதில் ராணி எலிசபெத்தை ஜேம்ஸ் பாண்ட் நாயகன் டானியல் கிரேக் அழைத்து செல்கிறார். இருவரும் ஒலிம்பிக் தொடக்க விழா நிகழ்ச்சியைக்காண ஹெலிகாப்டரில் பறக்கிறார்கள்.

விழா மைதானம் வருகையில் டானியல் கிரேக்கும், ராணி எலிசபெத்தும் ஹெலிகாப்டரிலிருந்து பரசூட் மூலமாக குதிப்பார்கள். பின்னர், ராணி மைதானத்திற்கு வந்து உரையாற்றுவது போல காட்சிகள் அமைக்கப்பட்டிருக்கும்.

இதில் ராணி எலிசபெத்தும், டானியல் கிரேக்கும் பரசூட்டிலிருந்து குதிப்பது போன்ற காட்சிகள் உண்மை இல்லை. இவர்களுக்கு பதிலாக கேரி கேனரி (ராணி எலிசபெத்) என்பவரும் மார்க் சுட்டன் (டானியல் கிரேக்) என்பவரும் குதித்துள்ளனர்.

(5)



# அந்தப் பெண் யார்



ஒலிம்பிக் தொடக்க விழாவில் இந்திய அணியினருடன், அடையாளம் தெரியாத மர்மப் பெண் ஒருவர் வந்தது சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

பிரட்டன் தலைநகர் லண்டனில், 30 ஆவது ஒலிம்பிக் போட்டி நடைபெற்று வருகிறது. இதில் இந்தியா சார்பில் 81 பேர் பங்கேற்கின்றனர். ஆரம்ப விழாவில் இந்தியா சார்பில் மொத்தம் 40 வீரர், வீராங்கனைகள், 11 நிர்வாகிகள் மட்டுமே கலந்து கொண்டனர்.

மல்யுத்த வீரர் சுஷில் குமார் மூவர்ண கொடியை கையில் ஏந்தியபடி இந்திய அணிக்கு தலைமை தாங்கி முன்னால் வர, சானியா மிர்சா உள்ளிட்டவர்கள், பின் தொடர்ந்து வந்தனர்.

அதேநேரம், இந்திய அணிக்கு சற்றும் சம்பந்தம் இல்லாத, சிவப்பு சேர்ட், நீல நிறத்தினால் ஜீன்ஸ் அணிந்த பெண் ஒருவர், எவ்வித அடையாள அட்டையுமின்றி, சுஷில் குமார் அருகில் நடந்து வந்தார். இவர் யாரென்று இந்திய வீரர், வீராங்கனைகள் உட்பட யாருக்கும் தெரியவில்லை.

இது குறித்து இந்திய அணித்தலைவர் முரளிதரன் ராஜா கூறுகையில், அணி வகுப்பின் போது அந்த பெண், இந்திய அணியினரை மைதானம் வரை அழைத்து வருபவர் என்று எதிர்பார்த்தோம். ஆனால், கடைசி வரை கூடவே வந்தார். அந்தப் பெண் அப்படி வர வேண்டிய அவசியமே இல்லை. இவரை எப்படி உள்ளே அனுமதித்தனர் என்று தெரியவில்லை.

இதேபோல, அடையாளம் தெரியாத ஆண் ஒருவரும், வீரர்களுடன் வர முற்பட்டார். ஆனால் அவரை, மைதானக்குள் நுழையவிடவில்லை. வீரர்கள் அணிவகுப்பில் இப்படி நடந்தது பெரிய அவமானம்.

இந்த பிரச்சினை குறித்து ஒலிம்பிக் நிர்வாகத்திடம் தெரிவித்துள்ளோம். ஏனெனில், வீரர்கள், வீராங்கனைகள், பயிற்சியாளர்கள் மற்றும் அணி தொடர்புடைய நிர்வாகிகள் மட்டுமே செல்வது தான் அணிவகுப்பு என்றார்.

மேலும் அவர் கூறுகையில், இந்திய வீரர்கள் தங்கியுள்ள இடத்தில் 10 வினாடிக்கு ஒருமுறை தொலைக்காட்சி காணொளி பதிவு உள்ளது என்றும் அப்படியிருந்தும் இதுபோல நடப்பது துரதிஷ்டவசமானது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மர்மப் பெண் யார்:

ஆரம்ப விழாவின் போது, மர்மப் பெண் இந்திய அணியினர் உள்ள பகுதியில் அங்கும், இங்கும் பதை பதைப்புடன் அலைந்து திரிந்துள்ளார். இதை, இந்திய ஊடகத்தைச் சேர்ந்தவர்கள் பார்த்து, அணியினரிடம் தெரிவிக்க முயற்சித்தனராம். கடைசியில் எப்படியோ அணிவகுப்பில் புகுந்துள்ளார். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தீவுகளுக்கு வெற்றி

குப்தில் 95 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுக்க நியூஸிலாந்து அணி முதலாவது இன்னிங்ஸில் சகல இலக்குகளையும் இழந்து 351 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பந்து வீச்சில் சுனில் நரைன் 5 இலக்குகளைக் கைப்பற்றினார்.

நியூஸிலாந்துடனான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 9 இலக்குகள் வித்தியாசத்தில் அபார வெற்றியைப் பெற்றுள்ளது. கெய்ல் இரண்டாவது இன்னிங்ஸில் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி இந்த வெற்றியைப் பெற்றுக் கொடுத்தார்.

மேற்கிந்தியத்தீவுகளுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள நியூஸிலாந்து அணி டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது. முதலாவது டெஸ்ட் ஆட்டம் கடந்த புதன் கிழமை ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூஸிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

குப்தில் 95 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுக்க நியூஸிலாந்து அணி முதலாவது இன்னிங்ஸில் சகல இலக்குகளையும் இழந்து 351 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பந்து வீச்சில் சுனில் நரைன் 5 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய மேற்கிந்தியத்தீவுகள் அணி கெய்ல், பவலில் சதத்தின் உதவியுடன்சகல இலக்குகளையும் இழந்து 522 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. கெய்ல் 150, பவல் 134 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் மார்டின் 3 இலக்குகளைக் கைப்பற்றினார். 171 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் துடுப்பெடுத்தாடி நியூஸிலாந்து அணி ஐந்தாம் நாள் மதியபோசன இடைவேளையுடன் சகல இலக்குகளையும் இழந்து 272 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது. பிரன்டன் மக்கலம் 84 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றுக் கொடுத்தார். ஆரம்பத்தில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடியிருந்தாலும் பின்னவரிசை தடுமாறியதால் 102 ஓட்டங்களையே மேற்கிந்தியத்தீவுகளுக்கு வெற்றியிலக்காக நிர்ணயிக்க முடிந்தது.

பந்து வீச்சில் மேற்கிந்தியத்தீவுகள் சார்பில் ரோச் 5, நரைன் 3 இலக்குளையும் கைப்பற்றினர். 102 ஓட்டங்களை வெற்றியிலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடத் தொடங்கிய மேற்கிந்தியத்தீவுகள் அணி கெய்லின் அதிரடியான துடுப்பாட்டத்தின் மூலம் 19.3 பந்துப் பரிமாற்றங்களில் ஓர் இலக்கினை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. கெய்ல் ஆட்டமிழக்காமல் 49 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 8 பவுண்டரிகள் அடங்கலாக 64 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

ஆட்டநாயகனாக தொடரில் 8 இலக்குகளை சரித்த நரைன் தெரிவானார்.





திருநெல்வேலி அபான்ஸ் கிளையில் இன்று மட்டும்

மிகமிக குறைந்த ஆரம்ப பணத்தை செலுத்தி 21 வர்ண தொலைக்காட்சி பெட்டி ஒன்றை பெற்றுக் கொள்ளுங்கள்

5 வருட உத்தரவாதம்

1700/= பணத்தை செலுத்தி தொலைகாட்சி பெட்டி ஒன்றை பெற்று கொள்ளுங்கள் உடன் நாடுங்கள் இன்று மட்டும் திருநெல்வேலி அபான்ஸ் காட்சியறைக்கு

269, பலாலி வீதி, கந்தர்மடம்

021 2220242

(சி/2025) (3.14)



**Australian 5 Years Family Visa**

* We have entered into international colaboration
* The advising fees has reduced as half of the payment.
  1. Age limit 54 yrs. Either for husband or wife.
  2. Own Property
  3. "PR" Of Australia.
* With simple neccessary requirments.

Why are you waiting?
Visit us,
Thisaikaddi (pvt) Ltd. (PV82703)
Model visa Advising Center,
37, Sivagurunathar lane,
Brown Road, Jaffna.
Contact No:- 0212219016



**ACCA**
**Registration & Exemption**

HNDA,HNDM, பல்கலைக்கழக பட்டதாரிகளுக்கான பதிவு, பாடவிலக்களிப்புகள் தொடர்பான கருத்தரங்கு புதன்கிழமை (01.08.2012) நாளை மு.ப 10.00 மணிக்கு இல.7, பலாலி வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் தொழில்நுட்ப நிறுவனத்தில் பதிவுகள் மற்றும் பாடவிலக் களிப்புகள் அலகால் நடத்தப்படவுள்ளது. ஆர்வமுடையவர்கள் கலந்து பயன் பெற்றுக் கொள்ளவும்.

**Enrolment Payment- 200/=**

ACCA
Jaffna Technical Institute (JTI)
(Approved Learning Provider)
T.P-0215670345 (21182) (3.14) e-mail-jtiedu@gmail.com



**Semester 3** தொடர்ந்து 10 வருடங்களாக BIT பட்டக்கற்கை நெறியில் முன்னணியில்...

Commences on 11-08-2012 Saturday

By R.Kumaran-B.Sc.
TP: 0776577359

புதிய கல்வியாண்டிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன
74. சபாபதி லேன், யாழ்ப்பாணம்
பல்கலைக்கழக வீதியிலிருந்து 200 m
(21089)

MIS BIT Academy


## மரண அறிவித்தல்

### செபமாலை அருளானந்தன் (ஜெயம்)



பலாலியைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வதிவிடமாகவும் கொண்ட செபமாலை அருளானந்தன் (ஜெயம்) (03.07.2012) செவ்வாய்க்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செபமாலை (அதிபர்)- அஞ்சலீனா (ஆசிரியர்) தம்பதியரின் இளையமகனும், மேரி மல்லிகா (ஆசிரியர், சென்.பற்றிக்ஸ் கல்லூரி), அருட் பிரகாசம் (தவம்- இத்தாலி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஜோன் அரியதாஸ், ஆன்றெபேகா ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், ஆன்ஸ்ரென், வாரிசா (இத்தாலி) ஆகியோரின் அன்புச் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (19.07.2012) வியாழக்கிழமை ஜேர்மனியில் நடைபெற்றன. அங்கிருந்து கொண்டு வரப்பட்ட அவரின் அஸ்தி இன்று (31.07.2012) செவ்வாய்க்கிழமை பி.ப. 3.00 மணிக்கு அன்னாரின் சகோதரியான திருமதி யோண்மல்லிகாவின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு சுன்னாகம் புனித அந்தோனியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சந்தை தெற்கு வீதி,
சுன்னாகம்.

தகவல்
ஜோன் அரியதாஸ்

(21168) (3.6.14)

## ஊதுகுழல் கொண்டு செல்லத் தடை

ஆட்டங்கள் நடைபெறும் அரங்குகளுக்கு ஊதுகுழல்களை எடுத்துச் செல்வதை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் தடைசெய்துள்ளது.

அரங்கிலுள்ள பார்வையாளர்களின் சௌகரியத்தையும், பாதுகாப்பையும் கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் விடுத்த அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பாண்ட் இசைக் கருவிகளுக்கு இந்தத் தடை விதிக்கப்படவில்லை எனவும் இந்த விதிகள் இன்று முதல் அமுல்படுத்தப்படும் எனவும் ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் தெரிவித்துள்ளது. (5)


2012- தரம்: 5 மாணவர்களுக்கான மாபெரும் கருத்தரங்கு

யாழ். பூபாலசிங்கம் புத்தகசாலையின் அனுசரணையோடு

இலங்கையின் தொடர் சாதனை படைத்துவரும் வெற்றித்தேர்வு வளவாளர்களால் நடத்தப்படுகின்ற புலமைப்பரிசில் பரீட்சைக்கான

**இலவச இறுதிக்கருத்தரங்கு**

01.08.2012 (புதன்கிழமை) காலை:08.30 மணிக்கு

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில்

எதிர்பார்க்கை வினாக்களும், சிறப்புக்கையேடும் வழங்கப்படவுள்ளதால் அனைத்து மாணவர்களையும் கலந்து கொண்டு வெற்றித்தேர்வு 100 பேருக்கான கௌரவிப்பு விருதினை வெல்லுமாறு கேட்டுக்கொள்கின்றோம். இருக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் ஆசனங்களில் முன் கூட்டியே இடம்பிடியுங்கள்.

கையேட்டிற்கு மட்டும் ரூபா- 150.00 செலுத்துங்கள்.

தொடர்புகளுக்கு:
யாழ். பூபாலசிங்கம் புத்தகசாலை
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். பஸ்நிலையம் அருகில்)
0212221637, 0212226693,
0776505036.

(சி/2024) (3.14)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 31.07.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.